VISIT…

நுனிப்புல்

1.

ஓம் நமோ நாராயணாய

நீ என் அருகினில் இருப்பினும்
உன்னை என்னுள் உணராதவரை
உன்னை தேடுதல் ஒரு தேவை

மனதெல்லாம் ஒருவிதமான சந்தோசம். சின்ன அமைதியும், சில்லென்ற காற்றும், காற்றின் ஓசையும் வாசனின் கண் இமைகளை மூடியவாறே வைத்து இருந்தன. வாசன் அந்த அற்புதமான நிகழ்வினை ரசித்தபடியே அவரது தோட்டத்தில் சாய்ந்து இருந்தான்.

வாசன் இருபத்திரண்டு வயது இளைஞன். அவனது கிராமத்தின் பெயர் குளத்தூர். இந்த அழகிய கிராமம் தமிழகத்தின் தெற்கில் அமைந்து இருந்தது. 150 வீடுகள் கொண்டதாய் தெருக்கள் மிகவும் அழகாக அமைக்கப்பட்டு கிராமம் மிகவும் அற்புதமாய் இருந்தது. கிராமத்தின் தெற்கில் ஒரு கோவில், வடக்கில் ஒரு கோவில், கிழக்கில் ஒரு கோவில் மற்றும் மேற்கில் ஒரு கோவில் என கோவில்கள் சூழ்ந்த கிராமம் பாதுகாப்பாக இருந்தது. நாணல் கோட்டை என்னும் நகரத்தில் இருந்து தினமும் இரண்டு பேருந்துகள் ஏழு முறை ஊருக்குள் வரும். விவசாயம் ஊரின் பிராதன தொழில்.

5 வகுப்புவரை கொண்ட ஒரு பள்ளி. 4 கி.மீ தொலைவில் உள்ள சோலையரசபுரத்திற்குத்தான் 12 வரை படிக்கச் செல்ல வேண்டும். மக்கள் கூடிப் பேச பொதுவாய் ஒரு திண்ணை. மரங்களும் செடிகளும் வண்ண வண்ண மலர்களும் பூத்து இருந்தன. தண்ணீர் நிரம்பிய குளம் இரண்டு இருந்தன. செம்மையான, செழிப்பான கிராமம், தெற்கில் கரிசல் மண்ணும், வடக்கில் செவந்த மண்ணும் கொண்டதாய் இனம் பிரித்து இருந்தது.

'வாசன், வாசன்' யாரோ அழைக்கின்ற சப்தம் கேட்டு, தன் தியானம் கலைத்து, வந்து நின்ற பெரியவரைப் பார்த்து வணக்கம் சொல்லியவாரே எழுந்தான். 'வாசன், என்ன மாலை நேர உறக்கமா?' என்றார் பெரியவர் வினாயகம். 50 வயது மதிக்கத்தக்க பெரும் தனக்காரர், தாராள மனம் உடையவரும் கூட. திருமண பந்தம் என்ற ஒன்றை அறியாதவர். தனி மனிதனாகவே வாழ்ந்து கழித்துக் கொண்டு இருப்பவர். இவருக்கு ஒரு சகோதரர் மட்டும் உண்டு.

'வாங்க அய்யா, உட்காருங்க' என அங்கு இருந்த கட்டிலை எடுத்துப் போட்டான் வாசன். 'இளநீர் கொண்டு வரேன்யா' என்று வந்தவருக்கு இளநீர் வெட்டி வருவதற்காக சென்றான்.

'என் கேள்விக்கு பதில் இல்லையா' என்று இளநீரை வாங்கியவாரே கேட்டார் பெரியவர். நாம் கேட்பதை கேட்போம் பதில் வந்தால் வரட்டும் என வாழும் மக்கள் உள்ள உலகில், ஒரு விசயம் கேட்டு அந்த விசயம் விவரம் அறிய ஆசைப்படுபவர் வினாயகம்.

சிரித்தான் வாசன். 'அய்யா நான் அமைதி தேடி அமர்ந்திருந்தேன், மாலை நேர உறக்கம் எல்லாம் ஒண்ணும் இல்லை அய்யா' என்ற வாசகம் வினாயகத்திற்கு மிகவும் ஆச்சர்யமாக இருந்தது.

'அமைதி தேடியா?' புருவம் ஏறிட புரியாமல் விளித்த வினாயகம் விழித்தார். 'என்ன ஆச்சர்யமா கேட்கிறீங்க அய்யா, உங்களிடம்... என்கிட்ட எதையோ தேடுவது போலே எனக்கு தெரியுது' வாசன் வாக்கியம் முடிக்கும் முன் இடைமறித்தார் வினாயகம். 'வாசன் என்னப்பா எல்லாம் அறிந்தவன் போலே பேசற, அமைதி தேடுறேன்னு சொல்ற, உன்கிட்ட ஏதோ எதிர்பார்க்கிறேன்னு சொல்ற... ம், உண்மைதான் வாசன், உன் தோட்டம் எல்லாம் விலைக்கு தரியா?' தறிகெட்டு வந்து விழுந்த வார்த்தைகள்! தடுமாறிப்போனான் வாசன். தந்தையிடம் கேட்காமல் நம்மிடம் ஏன் கேட்கிறார் என சந்தேகமாய் அவரை நோக்கினான்.

'என்ன வாசன், என்ன பதில் சொல்லப்போற, உங்க அப்பாகிட்ட சொன்னா

உன்கிட்ட கேட்கச்சொல்வார்' என விசயம் அறிய வேதனைப்பட்டார் வினாயகம். நிலைகுலைந்த வாசன், 'என்ன அய்யா திடீரென என் தோட்டத்தை விலைக்கு கேட்கறீங்க' கருத்து அறிய கவலையுற்றான்.

வினாயகம் அவனை உற்று நோக்கியவாறே 'பதில் சொல்வேன்னு பார்த்தா, என்கிட்ட வினா கேட்கிற்' என்றவாரே ' இந்த கரிசல் மண்ணை எனக்கு கொடு, அதே அளவு என் செவல நீ எடுத்துக்கோ, சம்மதமா? பெரியவரின் வார்த்தைகள் பெரும் புதிராகவே இருந்தன. வாசன் அமைதியாய் அடம்பிடித்தான்.

'வாசன் நீ அமைதி தேடு, நான் வேண்டாம்னு சொல்லல, அதுக்குன்னு வார்த்தை பேசாம இருந்து அமைதி காத்தேன்னு வைச்சிக்கோ அப்புறம் வெளிச்சம் உனக்கும் இல்ல, எனக்கும் இல்ல, இப்பவே இருட்டிருச்சி' அவசரப்பட்டார் வினாயகம். வாசன் தன்னை ஆசுவாசபடுத்திகொண்டான்.

'சரி, இருங்க அய்யா, கதவை அடைச்சிட்டு வரேன், பேசிக்கிட்டே போகலாம், யோசிச்சு சொல்ற விசயத்த, யோசிக்க கூட நிமிசம் இன்றி யாசிக்கிறது என்ன தர்மமோ' என கூறியவாரே கதவை இழுத்து சாத்தினான். கதவு சாத்தப்பட்ட வேகத்தில் காற்றுக்கு வேதனை இருப்பது சப்தத்தில் தெளிவாக தென்பட்டது.

அவர்கள் நடந்தனர். வாக்கியங்கள் பரிமாறப்பட்டன. வார்த்தைகள் விட்டுகொடுக்கப்பட்டன. வினாயகம் கண்களில் பெரிய கருணை தென்பட்டது. இனி சிரமம் இல்லை என தோன்றியது அவருக்கு. ஊர் எல்லை தொடுவதற்கும் தன் உள்ளத்தில் உள்ளதை எல்லாம் வாசனிடம் கொட்டி முடிப்பதற்கும், வாசன் எதையும் சிந்தாமல் தன் எண்ணத்தில் சேகரித்து வைப்பதற்கும் மிகச் சரியாக இருந்தது.

வாசன் தன் வீடு நோக்கி நடந்தான். இருட்டுத் தெரியவில்லை. ஊரெல்லாம் ஒரே வெளிச்சமாக இருந்தது. 'வாசா தோட்டவேலை முடிஞ்சதா' என சேட்டூர் கிராமவாசி ராஜன் கேட்டார். 'முடிஞ்சதுண்ணே, இந்த பக்கம் என்ன இன்னைக்கு' எ ன தானும் கேட்டு வைத்தான். 'அது இல்லப்பா, இங்க ஆட்களை வேலைக்கு கூட்டிட்டு போகலாம்னு வந்தேன், இந்த ஊரு ஆட்கள் நல்ல வேலை

செய்வாங்களே அதான்' என ஊரின் பெருமை சொன்ன அவரை பார்த்து 'பார்ப்போம்' என அனுப்பிவிட்டு நடந்த வாசனை நோக்கி குழந்தைகள் குதூகலித்து சத்தம் போட்டு வந்தனர்.

வாசன் தினமும் இரவு 7 மணிக்கு அங்கு கூடி விளையாடும் குழந்தைகளுக்கு கதை, கவிதை சொல்வது வழக்கம். வீடு சென்று வருவதாக சொல்லிவிட்டு அவர்களை புத்தகம் கொண்டுவந்து படிக்கச் சொல்லி நகர்ந்தான். தாய் என்ன சொல்வாரோ என யோசனை அதிகமாக இருந்தது.

வாசன் வீட்டின் வாசலில் ஏறியதும், 'என்னப்பா இவ்வளவு நேரமா? பொழுது சாயும் முன்னே வீடு வர்ரதுதானே?' என தாய் ராமம்மாள் வாசனை செல்லமாக கடிந்து கொன்டு, வந்ததும் வராததுமா கதை சொல்ல போறேன்னு போகாத, சாப்பிட்டு போ என வார்த்தைகள் வீசினார். வாசன் நேசித்தார். 'சரிம்மா' என்றவாறே ' அப்பா இன்னும் வரலையாம்மா என கேட்டான் வாசன். 'வரலைப்பா' என்றாள் தாய். பதிலில் ஒருவிதமன சலிப்பு தென்பட்டது.

வாசனின் தாய் 3ம் வகுப்பு வரைதான் படித்து இருந்தார். தோட்டத்து வேலை மற்றும் வீட்டு வேலையென வாழ்க்கையில் தன்னை ஒடுக்கி கொண்டவர். முதல் வாசன், இரண்டாவது தேவகி.

வாசன் சுருக்கம் பற்றிய கவிதை வாசிக்கலானான்.

"ஏழு வார்த்தைகளில்
எழுதபட்ட ஒவ்வொரு திருக்குறளில்
கருத்துக்கள் பரந்துகிடக்கும்
விவரிக்கமுடியாத சுருக்கம்
நடந்து செல்லும் தூரம்
அடையும் காலம் விட
பரந்து செல்லும் தூரம்
அடையும் காலம்
விவேக விஞ்ஞானத்தின் சுருக்கம்

ஒரு மைல் கல் தொலைவில்
கத்தியும் செல்லாத சப்தம்
கடல் தாண்டி சென்றடையும்
கண்ணுக்கு உட்படாத சுருக்கம்
இலக்கணம் தாங்கிய
மரபு கவிதை
கருத்துக்கள் தாங்கிய
புதுக்கவிதை போய்
வந்த ஹைக்கூ
வார்த்தைகளின் சுருக்கம்
பதினைந்து பிள்ளைகள்
கொண்ட குடும்பம்
ஒரு பிள்ளையொடு ஒடுங்கிபோனது
நிலத்தின் சுருக்கம்
அட விரிந்து பரந்த உள்ளம்
கொண்ட மனிதன் மனது
எதனின் சுருக்கம்?"

'கவிதை புத்தகம் எடுத்து படிக்க ஆரம்பிச்சிட்டியா' என அம்மா அவனை சாப்பிட வரச் சொன்னார்.

வாசனின் தந்தை வியாபரம் செய்பவர். 5வது வரை படித்து இருந்தார். தோட்டத்தில் விளையும் காய்கறி பொருட்கள் காலை மாலை என பக்கத்து கிராமத்து நகரத்து கடைகளுக்கு விற்பனை செய்பவர். அவர் பலரை அறிந்து வைத்து இருந்ததால் வாசனை அவர் வியாபாரத்திற்கு ஒருபோதும் அனுப்புவது இல்லை. தந்தையின் பெயர் ராமமூர்த்தி.

'நான் அப்பா வந்ததும் வந்து சாப்பிட்டுக்கிறேன்' என வெளியே நடந்தான் வாசன். அம்மா வார்த்தைகளை இறைந்தார் 'கேளுப்பா' இது தாய், 'வரேன்மா' இது வாசன். வாசனுக்கு இன்னும் பெரியவரின் வாசகம் பெரும் யோசனையாக

இருந்தது. வாசன் குழந்தைகளுக்கு ஒரு சின்ன கதை சொன்னான். கவிதையின் விரிவாக்கம் அது. மனிதாபிமனம் என்ற சொல்லின் விதை அன்று குழந்தைகளின் நெஞ்சில் விதைக்கபட்டது.

'என்னம்மா வாசன் கதை சொல்லிட்டு இனியும் வரலையா' என்றவாறே ராமமூர்த்தி வீட்டினில் நுழைந்தார். வாசன் வீடு நுழையும் போதெல்லாம் ராமமூர்த்தி காத்து இருப்பதில்லை. ராமமூர்த்தி வீடு நுழையும் போதெல்லாம் வாசன் வீட்டில் இருப்பதில்லை. இது அவர்களிடையே ஒரு மாலை நேர ஒப்பந்தமாக இருக்கும்.

'வரேன்னு சொல்லிட்டு சாப்பிடாமகூட வெளியில போனான், இன்னைக்கு தோட்டத்திலே இருந்து தாமதமாகத்தான் வந்தான். அது சரி, என்னங்க இன்னைக்கு வியாபரம் எப்படி' என்றவளிடம், 'இன்னைக்கு நல்ல வியாபரம்தான்' என கூறி பணத்தை எடுத்து பத்திரபடுத்த சொன்னதுடன் கிணற்று அடிக்கு முகம் அலம்ப சென்றார்.

வாசனின் வீடு ஊருக்கு தெற்கே இருந்தது. கிழக்கு பார்த்த வாசல். சின்னதாய் வரவேற்பு அறை. பெரியதாய் ஒரு அறை. தனி தனி அறைகளாய் பூஜை அறை ஒன்று, சமையல் அறை ஒன்று. மாடியில் மூன்று அறைகள். வீட்டின் பின்புறம் சின்னதாய் தோட்டம். ஒரு கிணறு. வாசன் தினமும் காலையில் கிணற்றில் தன் முகம் பார்க்கும் வழக்கம் உண்டு. சலனமில்லாத நீரினை ரசிக்க ஆரம்பித்து இரவு தூங்கும்முன் வரை அமைதியினை ரசிக்க நினைப்பவன்.

வாசன் வந்தான். 'அப்பா இப்பதான் வந்தீர்களா, சாப்பிடலாம்பா' என்றான் வாசன். உணவு பரிமாறப்பட்டது. சாப்பிடும்போது ராமமூர்த்தி எப்போதும் பேசுவதில்லை. என்ன தேவையோ அதை கேட்கவே பேசுவார், மற்றபடி விவாதங்களில் ஈடுபட விரும்புவதில்லை. வாசன் இதை நன்கு அறிவான். உண்டு முடித்ததும் 'அப்பா வினாயகம் பெரியவர் நம்ம தோட்டத்தை விலைக்கு கேட்டார் அதாவது கரிசல எடுத்துக்கிட்டு அதே அளவுக்கு செவல எடுத்துக்க சம்மதமான்னு சொன்னார்'. ராமமூர்த்தி தான் சாப்பிட்ட உணவு ஜீரணமாகும் முன்னர் தன் மகன் பேச்சை கேட்டதும் இவை இரண்டையும் எப்படி ஜீரணிப்பது என அயர்வுற்றார்.

'வாசா நீ என்ன பதில் சொன்ன' என கேட்டார். தன்னை கலந்து ஆலோசித்து முடிவுதனை சொல்லவேண்டிய அவசியம் இல்லை என எண்ணினாரோ என்னவோ உணராமல் தன் மகனை கேட்டார். 'நான் உங்களை கேட்டு சொல்றதா சொல்லியிருக்கேன்' என அவனது தந்தையின் முக்கியத்துவம் சொன்னான் வாசன்.

'நான் கேள்விபட்டேன் அவரு அங்கு இருக்கிற நிலத்தை எல்லாம் விலைக்கோ இல்லை மாற்றுக்கோ கேட்டுக்கிட்டு இருக்காருனு' என்றார் தந்தை. 'அவரும் கணேசன் நிலத்தை மாத்திட்டேன்னு சொன்னாருப்பா. என்ன விசயத்திற்கு இப்படி செய்றீங்கனு கேட்டேன் ஒண்ணும் பதில் இல்லை, நாளைக்கு பேசுவோம்னு போய்ட்டார். நம்ம வடக்கு நிலம் ஒட்டி இருக்க காசி நிலம் கூட தர சம்மதம்னு சொல்லிட்டதா சொன்னார்' வாசன் வாக்கியம் நீண்டு கொண்டே போனது. வாசன் கூறிய விசயத்தில் இருந்து இந்த நிலத்தை விற்றுவிடுவோம் என சொல்லாமல் சொல்லும் வாசகம் போல் இருந்தது.

'அதான் எனக்கும் புரியலப்பா, ஏகப்பட்ட நிலம் வைச்சிருக்கார், எதுக்கு கரிசல் நிலம் வேணும்னு கேட்கிறார்னு தெரியல விவரம் சொன்னாலாவது சரி செவல் கிடைக்குதுனு விடலாம். சரி பேசிபாரு என நிலமாற்றம்தனை சம்மதம் தந்து விட்டது போல கூறினார். 'என்ன சொல்றீங்க இதே பூமியில விளையற விளைச்சல் செவல்ல விளையுமா, இது தனிமதிப்புனு சொல்வீங்களே' என குறுக்கே பேசிய தாய் நிலம் மாற சம்மதிக்கமாட்டாள் என பட்டது வாசனுக்கு.

'யோசிக்க வேண்டிய விசயம்தான் ஆனா நிலத்துக்கு நிலம் பணமும் தந்தா வேணாம்னு சொல்ல வேணாம்னு நினைக்கிறேன். உழைக்கிற உழைப்பை உண்மையாகவும் உறுதியாகவும் உழைச்சா பலைவனத்துல கூட பசுமை புரட்சி செய்யலாம்ல' என்றார் தந்தை.

'அப்படின்னா பெரியவர்கிட்ட நாளைக்கு பேசி எல்லாம் முடிச்சிருவோம்' என மகன் கூறுவதை தந்தை ஆமோதிப்பதை கண்டு தாய் வெகுண்டாள். 'என்னங்க சிலருக்கு அவரு கேட்டாருன்னு பணம் அதிகம் வாங்கி நிலமாத்துரது சரியில்லை,

என்னதான் இருந்தாலும் அது நாம பாடுபடுற பூமி' தாய் விட்டு கொடுப்பதாய் இல்லை.

சிலருக்கு சில விசயங்கள் சரியோ தவறோ பிடித்து விடுகிறது மாற்றங்கள் அவசியம் எல்லை என பழைய விசயங்களில் ஊறிப்போய் புதிய விசயம் திணிக்கப்படுவதை அறவே வெறுக்கிறார்கள். இதன் அர்த்தம் எப்படி வேண்டுமானாலும் இருக்கலாம்.

'வாசா உன் அம்மாவை நீ சம்மதிக்க வை அப்புறம் இது பத்தி பேசலாம்' தன்னால் பேசுவதில் ஒரு உபயோகம் இல்லை, மனைவியையும் பேசி புரிய வைத்து ஒரு முடிவுக்கு கொண்டுவர எண்ணமில்லாதவராக அவரது பேச்சு இருந்தது. தாய் யோசிக்கலானார்.

வாசன் உறங்கிப் போனான். தந்தையும் களைப்பில் கண் அயர்ந்தார். தாய் உறக்கம் பிடிக்காமல் விழித்தே இருந்தார். இரவு வந்துவிட்டால் உறங்கி விடவேண்டும். பிரச்சினைகள், சந்தோசங்கள் எல்லாம் ஒதுக்கி வைத்துவிட்டு உறங்கிட வேண்டும். எதுவுமே செய்துவிட முடியாத நிலையில் இரவு இருக்கையில் உறக்கம் தவிர்ப்பது தேவையில்லாத ஒன்று.

முடிவுக்கு வந்ததாய் தாயும் உறங்கிப் போனாள். காலை பொழுது விடிந்து இருந்தது. `அம்மா, அம்மா' தாயை எழுப்பிவிட்டான் வாசன். தாயும் உறக்கம் தெளியாதவாறே `என்னப்பா அதுக்குள்ளாற பொழுது விடிஞ்சிருச்சா' என எழுந்தார். `என்னம்மா சரியா தூங்கலையா' என வருத்தமாக கேட்டு வைத்தான் வாசன். 'அதெல்லாம் ஒண்ணுமில்லப்பா' என தாய் மறைத்தாள்.

வீடு பெருக்கி, வாசல் தெளித்து, கோலம் இட்டு, காலை அடுப்பு பற்ற வைத்து காபி போட்டு தந்தாள் தாய். காலை உணவோடு மதிய உணவும் தயார் செய்தாக வேண்டும். இவையெல்லாம் செய்து கொள்ள வேலைக்குச் செல்லும் பெண்கள் சலித்து கொள்ளும் காலம் இன்றைய காலம். சோம்பேறித்தனம் அதிகமாகி போனதன் விளைவு இது. அதற்காக ஆண்கள் செய்து வந்த முறை சரி என சொல்லிவிடமுடியாது. சேர்ந்து வாழும் வாழ்க்கை முறையை சேர்ந்தே

ஏற்றுக்கொண்டவர்கள் செயல்களிலும் பங்கு கொண்டு உதவி செய்து வந்தால் இவையெல்லாம் எந்த ஒரு பெண்ணுக்கும் சுமையாக தெரியாது. அது சரி, எந்த காலத்தில்தான் பெண்கள் வேலை செய்யவில்லை. தாய் தோட்டத்திற்கு செல்ல தயார் ஆகி இருந்தாள். தாய் என்ன முடிவு எடுத்து இருக்கிறாள் என தெரிந்து கொள்ள ஆசைபட்டான் வாசன்.

'நிலம் பத்தி என்ன உன்னோட அம்மா என்ன முடிவு பண்ணி இருக்கா' என்றவாரே தந்தை வீட்டுக்குள் நுழைந்தார். 'உங்க விருப்பபடியே செய்ங்க' வாசன் சற்றும் எதிர்பார்க்கவில்லை இந்த பதிலை தாயிடம் இருந்து. யோசனையாய் இருந்தவனுக்கு என்ன சொல்வதென்று தெரியாமல் 'என்னம்மா சொல்ற, உனக்கு ஆட்சேபனை எதுவும் இல்லையா, நேத்து முடியாத மாதிரி பேசின' என்றான் வாசன். 'நல்ல யோசிச்சு யோசிச்சு பார்த்தேன், நீங்க சொல்றது சரியென பட்டுச்சு' தாய் சம்மதம் வசனுக்கு பெரும் மகிழ்ச்சியாய் இருந்தது. 'அதிசயமா இருக்கே, நல்ல முடிவுதான் எடுத்து இருக்கே' என தன் மனைவியை பாராட்டினார் தந்தை. வேலைக்கு ஆட்கள் அழைத்துவிட்டு தோட்டம் நடக்கலனார்கள் தாயும் மகனும். தந்தை வியாபாரம் செய்திட கிளம்பினார்.

தோட்டம் வந்ததும், 'தம்பி கத்தரிக்காய் நல்ல வந்து இருக்குப்பா, அதை நாளைக்கு பிடுங்கச் சொல்லனும்' என்ற அம்மாவின் பேச்சை கேட்டு 'சரி அம்மா' என்றான் வாசன். 'ஆமா தோட்டம்தான் மாத்த போறோமே, இதெல்லாம் எப்படிபா சாத்தியம்' தாய் விளங்காமல் கேட்டார். 'அதெல்லாம் உடனே கொடுக்க வேண்டியது இல்லை அம்மா' இப்போ மாத்தி வாங்கிருவார், அடுத்த விளைச்சல் நாம போடாம அவரோட நிலத்தில நாம பண்ணனும்' வாசன் விளங்கபடுத்தினான். தாய்க்கு நிம்மதியாய் இருந்தது. வேலைக்கு வருபவர் எல்லாம் வந்து சேர்ந்தனர். களை எடுக்கபட்டது.

வெயில் சற்று அதிகாமக காணப்பட்டது. வேலை புரிவோர் களைப்புடன் காணப்பட்டனர். களைப்பு தீர பேசியவாறே வேலை செய்வது வழக்கம். ஊரெல்லாம் மெல்லப்படும்.

'பெரியவரு ஊரில் இருக்கறவங்க நிலம் எல்லாம் வாங்கிட்டாராம்லே'

சிவத்தம்மாள் ஆரம்பித்து வைத்தாள். `குடும்பம் இல்லாதவருக்கு இது தேவைதானா? அவரு தம்பி புள்ளைங்க இங்கு என்ன வந்து வாழவா போகுது' என ராசாத்தி தன் பிரச்சினை போல கவலைப்பட்டார். `விவசாயம் செழிப்பா இருக்கு, வேண்டாததுக்கு அவர் தம்பி வேற பணம் தரார், நீங்க எதுக்கு இப்படி அங்கலாய்கிறீங்க' என முனியம்மாள் வழக்கு முடிக்க ஆசைப்பட்டார்.

`இந்த தோட்டத்தை கூட விலைக்கு வாங்க போறாராம்லே' வடிவு வருத்தமாய் கேட்டார். `இனி நாம எல்லாம் கரிசல் பக்கம் வரவேண்டியது இல்லாம போய்ரும்' மனசெல்லாம் மிகவும் சஞ்சலபட்டது போன்று ராசத்தி கூறினார்.

`என்னத்த சொல்ரது, அப்பாவும் மகனும் முடிவு பண்ணிட்டாங்க, அதுல நாம எதுக்கு தடையா இருக்கனும்னு நானும் சரின்னு சொல்லிட்டேன்' ராமம்மாள் சொல்லி முடிக்கும் முன்னே, `அப்ப நான் நினைச்சது சரிதான்' என ராசாத்தி தன் திறமையை பாராட்டிகொண்டார்.

இன்னும் சிறிது காலம்தான் இங்கு வேலை எல்லாம் என எண்ணியவாறே அன்றைய பொழுது கடந்தது. வாசன் வினாயகம் பெரியவரை பார்த்து வருவதாக தாயிடம் கூறிவிட்டு நடக்கலானன்.

2.

ஊரின் பொது கட்டிடத்தில் சிலர் அமர்ந்து விவாதம் செய்து கொண்டு இருந்தனர். யார் யார் என்ன பேசுகிறார்கள் எனத் தெளிவாக கெட்கவில்லை வாசனுக்கு. ஆடுகள் இங்கும் அங்குமாக ஓடிக்கொண்டு இருந்தன. கட்டி போட்டு இருக்கலாம். சிறுவர்கள் விளையாடிக் கொண்டு இருந்தனர். ஊரின் இளவட்ட பெண்கள் கோவில் நோக்கி சென்று கொண்டு இருந்தனர். இளைஞர்கள் ஆலமரத்தின் நிழலில் அமர்ந்து `சீட்டு' விளையாடி கொண்டு இருந்தனர். கிராமம் களையுடன் இருந்தது.

வாசன் பொது கட்டிடத்தின் அருகாமையில் நடந்தான். `வினாயகம் எல்லாத்தையும் பெரிய தொழிற்சாலைக்கு வித்துட்டு, தன் அண்ணனோட சென்னை போறானாமே' என காத்தமுத்து தாத்தா தடுமாறி பேசிய பேச்சு இரைச்சலைத் தாண்டி வாசன் காதில் விழுந்தது.

வில்லங்கம் பிடித்த முத்துராசு எழுந்தான், `ம்... நிலத்தை மாத்தி வாங்கிட்டாருல, எல்லா செய்வாரு, நீயும் தான ஒரு காணி நிலத்தை நாலு காசை பார்த்து பல்லிளிச்சி கொடுத்த' என பல் இல்லாத காத்தமுத்து தாத்தாவை திட்டினான்.

கண்ணையன் முத்துராசுவை பார்த்து, `ராசு, உனக்குதான் எந்த சொத்தும் இல்ல, பிறகு எதுக்கு அநாவசியமா பேசற' அதட்டினார். வாசன் கடக்க மனம் இன்றி நலம் கூறிவிட்டு கடக்கலானான். விவாதம் நீண்டு கொண்டே இருந்தது.

வினாயகம் பெரும் விவாதப்பொருளானார். அவரால் பலர் ஆதாயம் அடைந்தனர். தரிசாக இருந்த நிலம் கூட பெரும் பரிசு பொருளாக மாறி இருந்தது. நடக்காத காரியம் நடந்து கொண்டு இருந்தது. நல்ல வேளையாக விருப்பம் இல்லாத பலருக்கு அங்கு நிலம் இல்லாமல் இருந்தது. வாசன் பெரியவரின் வீடு அடைந்தான்.

வாசனை கண்டதும் வினாயகம் வரவேற்றார். பெரியவரின் வீடு பெரிதாக இருந்தது. வடக்கு வாசல். இருபுறமும் திண்ணைகள். வாசலில் கண் திருஷ்டி படம். வாசல் கடந்ததும் பெரிய வரவேற்பு அறை. அங்கே அவரது தாய் தந்தையரின் படம் வரவேற்றுக் கொண்டிருந்தது. வலது புறமாய் பூஜை அறை. பெரியவர் பூஜை அறையில் தியானம் செய்வது வழக்கம். நல்லதோர் சமையல் அறை, கிழக்கு பார்த்து கொண்டு இருந்தது. இரண்டு மாடிகள் கொண்ட மாளிகை எனலாம். ஒருபுறம் தங்குவதற்கு வசதியும், மறுபுறம் தானியங்கள் சேமித்து வைக்க வசதியும் கொண்டு இருந்தது. வண்ணத் தொலைகாட்சி பெட்டி, குளிர் சாதனப் பெட்டி, கழிவறை என சகல வசதியுடன் கிராமத்தில் நகர வாழ்க்கை கூடியதாய் அமைந்து இருந்தது. வீடினை பராமரிக்க, சிவகாமியும், அவரது கணவர் பாண்டியும்

நியமிக்கப்பட்டு இருந்தார்கள்.

'வா தம்பி, உட்கார் என்ன வேலை எல்லாம் நல்லபடியா முடிஞ்சுருச்சா, வீட்டுல பேசினியா, நல்ல முடிவோடதான வந்து இருக்க' என அன்புடன் கேட்டார் பெரியவர். 'உங்க விருப்பம் போலவே ஆகட்டும் அய்யா, விவரங்கள் சொன்னீங்கள்னா நல்லா இருக்கும்' நிலத்தின் மாற்றத்திற்கு சம்மதம் தெரிவித்தான் வாசன். பெரியவர் முகம் மலர்ந்தது. 'அது இருக்கட்டும் தம்பி, தோசை இருக்கு சாப்பிடு, பேசிக்கிட்டே சாப்பிடுவோம்' என அழைத்தார் பெரியவர்.

'வேணாம் அய்யா, தோட்டம் பத்தி பேசிட்டு போகலாம்னு வந்தேன்' என தான் வந்த விவரம் கூறினான் வாசன். 'ரொம்ப சந்தோசமா இருக்கு தம்பி, ஏன் ஒரு வாய் சாப்பிட்டு பேசலாமே' என மறுபடியும் அழைத்தார். மறுத்த வாசனிடம், 'சரி உன் விருப்பம்'என்றவாறே ' நிலத்துக்குச் சமானமா நிலம், கிணறு சகிதமா செவல்லுல உங்க மாமா பொன்னுராஜ் நிலம் பக்கமா இருக்க நிலம் எடுத்துக்க, வடக்கு பக்கம் கூட உங்க சித்தப்பா வேலன் நிலம் இருக்குதான, உன்கிட்ட சொன்னபடியே அதே நிலத்தை மாத்தி தந்துரேன் என்ன சம்மதம்தானே, இப்போவாவது வா சாப்பிடலாம்' என முடித்தார். சம்மதம் கூறினான் வாசன்.

'நிலம் தர மறுத்தவங்களுக்கு ஒரு ஏக்கருக்கு இவ்வளவு பணம்னு கூட கொடுத்தேன் நிலமும் தந்து, அதே மாதிரி உனக்கும் அந்த அளவு பணம் தந்துருரேன்' என விவரித்தார். எவ்வளவு பணம் என கேட்கத் தோணவில்லை வாசனுக்கு. சரி எனத் தலையாட்டினான், நன்றியுடன் கைகூப்பினான். தங்கைக்கு இந்த பணம் உதவியாக இருக்கும் என சின்னதாய் கணக்கு போட்டான், கணக்கு கேட்காமலே.

தனக்கு ஒரு சந்தேகம் இருப்பதாக வாசன் கூறியதை கேட்டதும், 'சொல்லுப்பா, தாராளமா கேளு' என கூறினார். 'அய்யா வர வழியில, காத்தமுத்து தாத்தா நீங்க இந்த நிலம் எல்லாம் வாங்கி பெரிய தொழிற்சாலைக்கு வித்துட போறதா சொன்னாரு, அவர்கிட்ட எதுக்கு விவரம் கேட்டுகிட்டு அப்படின்னுட்டு உங்ககிட்ட கேட்கலாம்னு வந்துட்டேன்யா' என வாசன் சொன்னதை கேட்டதும்

வினாயகம் சிரித்தார்.

'பரவாயில்லையே, அனுபவம் வந்துட்டா இப்படியும் சிந்திக்கலாமுன்னு சொல்றாரோ, இனி ஊர் எல்லாம் இதைதான் பேசும், தம்பி அவர் பேசினதுல ஒரு உண்மையும் இல்லப்பா' என மறுப்புத் தெரிவித்தார். வாசனுக்கு சந்தேகம் தீர்ந்தாலும் கேட்டு இருக்ககூடாதோ என தோன்றியது. வாப்பா சாப்பிடலாம் என அழைத்தார். வாசன் மறுக்கவில்லை.

சாப்பிட்டு கொண்டு இருக்கும்போதே தொலைபேசி அழைத்தது. தொலைபேசியை எடுத்த சிவகாமியின் கணவர் பாண்டி, அய்யா , சின்னவரு பேசறார் என கூறியதும், சாப்பிடுவதை நிறுத்திவிட்டு, வணக்கம் சொல்லி பேச ஆரம்பித்தார். 'எல்லாரும் நல்லா இருக்காங்களா?, நலம் விசாரித்தார். 'ஓ அடுத்த மாதமா, என்ன விஷேசம்' என புரியாது கேட்டார். 'அதுக்கென்ன, நீ இங்க வரனுமா, நான் பார்த்து தோதான ஆளா அனுப்புறேன், உனக்கு எதுக்கு வீண் சிரமம்' என்றார். எதிர்முனையில் பேசியவர் என்ன கேட்கிறார் என யூகிக்க முடிந்தது. 'சரி, உன் இஷ்டம், வா' என கூறியதில் இருந்து எதிர்முனையில் இருப்பவர் தான் வந்துதான் அவ்விசயம் செய்யவேண்டும் என விருப்பப்படுவது தெளிவாக தெரிந்தது. சிறிது இடைவெளிக்கு பின்னர், வாசனை பார்த்தவாறு, 'நானா, இங்கு வந்து எல்லாம் பேசிக்கலாம், அப்போ சொன்னேன், வாங்க பேசலாம்' என கேட்பவருக்கு தக்க பதில் தராமல் பெரியவர் கூறியது வாசனை சற்று சங்கடபடுத்தியது. உணவு உண்டு முடித்ததும் தொலைபேசியில் பேசியவரை பற்றி விசாரிக்காமல் விடைபெற்று கொள்வதாய் கூறினான் வாசன். 'தம்பி, என் தம்பி அடுத்த மாசம் இங்க வரான்' அதுக்குள்ள எல்லாம் முடிஞ்சிட்டா நல்லா இருக்கும்' என கூறினார். 'நாளைக்கே நம்ம நிலம் மாத்தி தந்துரேன்யா' என வாசன் விடைபெற்றான்.

தற்போது பொது கட்டிடத்தில் நிறைய நபர்கள் அமர்ந்து இருந்தனர். வாசனின் மாமா பொன்னுராஜும் இருந்தார். வாசனின் ஒரே தாய்மாமன் அவர். அதிகம் படிக்கவில்லை. விவசாயம் தொழில். பக்கத்து ஊரில் உள்ள வியாபாரி மகள் கமலாவை கல்யாணம் பண்ணி, அவருக்கு 19 வயதில் மாதவி என்னும் மகள் மட்டும் இருக்கிறாள். மிகவும் நல்ல மனிதர்.

`என்ன மருமகனே' அவர் வாசனை அப்படித்தான் அழைப்பது வழக்கம். `என்ன இந்த பக்கமா இருந்து வர' என்றவரிடம், பெரியவர் வீட்டுக்குப் போய்ட்டு வரேன் மாமா' என வாசன் முடிக்கும் முன்னர், `தோட்டத்தை தூக்கி கொடுத்திட்டியா, எல்லாம் திராணியில்லாதவனுங்க, பெரியவரை தலையில போடனும்' முத்துராசு கத்தினான். அங்கிருந்தவர்கள் முத்துராசுவை கண்டித்தனர். வாசனின் மாமா முத்துராசுவை கண்டித்தார், முத்துராசு வாய் மூடினான்.

`மருமகனே, நாளைக்கு தோட்டத்துல கொஞ்சம் வேலை இருக்கு, வர முடியுமா? என்றதும், சரி மாமா என கூறினான். கிளம்ப எத்தனித்தவனிடம், விவரம் வீட்டுக்கு வந்து பேசரேன்னு அவனை வழி அனுப்பினார். முத்துராசு முனங்கினான்.

`என்ன சொல்ற', என பொன்னுராஜ் முத்துராசுவிடம் கேட்டார். `உன் மருமகன் அந்த வினாயகத்துக்கு கையாளு, நீ மருமகன்னு கொஞ்சரத நிறுத்து' என கூறியதை கேட்டதும், `ராசு, யாரை பத்தி என்ன பேச்சு பேசற, நாளைக்கு, என் மகள கட்டிக்கிற போறவன், மரியாதை இருக்கட்டும்' என கடிந்து கொண்டார்.
`நீ கனவு காணவேண்டியதுதான், அவன் பட்டணத்து பொண்ணை கல்யாணம் பண்ணிக்குவான் அப்ப தெரியும் உன் ஆனந்த கண்ணீரு' விடவில்லை முத்துராஜ். கோபமானார் பொன்னுராஜ். `உங்க அம்மாவும் அப்பாவும் உன்னை பெத்ததோட சரி, போனப்பறம், பாவம்னு உன்னை வளர்த்தேன்ல, கல்யாணம் கட்டினவளோட சேர்ந்து உருப்படியா வாழாம, சொன்னதை கேட்காம பொண்டாட்டி புள்ளைங்கள கவனிக்காம ஊரு வம்பு இழுத்துட்டு திரியற, வள வளன்னு பேசறத நிறுத்து' என வருசமெல்லாம் சொல்வதை திருப்பிச் சொன்னார் பொன்னுராஜ். முத்துராசு அமைதியாகிப் போனான். இருவரும் நாளை வேலைக்கு ஆள் தேட கிளம்பினர்.

முத்துராசு பொன்னுராஜுவின் சினேகிதன். எதிர்மாறான குணம் உடையவன். நான்கு பையன்களுக்கு தந்தை அவன். இருவருக்கு திருமணம் முடித்து வைத்து இருந்தான். பொறுப்பற்று திரிந்தாலும் தோட்ட வேலைகள் செய்து குடும்பம் நடத்தி வருகிறான். முதல் பையன் வெளியூரில் வேலை பார்ப்பதால் மற்ற மகன்களை கவனிக்கும் பொறுப்பு இல்லை அவருக்கு. கூலி வேலைகள் செய்தே

காலம் கடத்தியவன். ஊரில் அவனிடம் சண்டை போடாதவர்களே இல்லை எனலாம். பொன்னனுராஜுவின் மரியாதைக்காக இன்னும் முத்துராசு திடமாக வாழ்ந்து வாய் சவடால் விட்டு கொண்டு இருந்தான். நாட்கள் நகர்ந்து கொண்டு இருந்தன.

3.

வினாயகம் சிதறி கிடந்த நிலங்களை எல்லாம் விற்றுவிட்டு ஒரே இடத்தில் தொடர்ச்சியாக கரிசல் காடு எல்லாம் வாங்கி கொண்டார். வினாயகமும், அவரது நண்பர் சாரங்கனும் பேசி கொண்டு இருந்தனர் புதிய நில பரப்பில். 'நீ நினைச்ச மாதிரியே நம்ம ஊர்க்காரங்க எல்லாம் உனக்கு நிலம் மாத்தி தந்துட்டாங்க, பணம் இருக்கற இடத்தில எதையும் சாதிக்கலாம்னு நிரூபிச்சிட்ட' சாரங்கன் சொன்னதும் 'சொல்ரது சரிதான், நான் எதுக்கு வாங்குரேன், என்ன காரணத்துக்கு வாங்குரேன்னு கூட கேட்காம மாத்தி தந்துட்டாங்க, இதெல்லாம் இலகுவான காரியமா, சொல்லு' வினாயகம் திருப்பி கேட்டார். 'பணம்னு சொல்லிட்டேன்லே' பதில் பட்டென்று வந்தது சாரங்கனிடம் இருந்து. 'பணம்தான்னு சொல்லிடமுடியாது, ஆனா அதுவும் ஒரு காரணமா இருக்கலாம், அவ்வளவுதான்' வினாயகம் வித்தியாசபட மறுத்தார்.

சாரங்கன், சிறு வயது நண்பர். இருவரும் நெருங்கிய நண்பர்கள். சாரங்கனுக்கு இரண்டு பெண் குழந்தைகள், இருவருக்கும் திருமணம் முடித்தாகி விட்டது. மிகவும் நல்ல படிப்பினை படிக்க வைத்து இந்த கிராம வாழ்க்கையை விட்டு நகரத்திற்கு அனுப்பி வைத்துவிட்டார். பண்டிகை, திருவிழா காலங்களில் மட்டுமே அவர்கள் வருவார்கள். தன் மனைவியோடு மிகவும் சந்தோசமான வாழ்க்கையை வாழ்ந்து வந்தார்.

'என்ன சிம்மராசா ஓட்டபந்தயத்திற்கு பயிற்சி எடுத்துட்டு இருக்கியா' என வேகமாக ஓடிவரும் சிம்மராசுவை நோக்கி சாரங்கன் கேட்டார். சிம்மராசன் மூச்சு வாங்கியபடியே 'அய்யா, பட்டணத்தில் இருந்து சின்ன அய்யா வந்து இருக்கார், அதை சொல்லத்தான் ஓடோடி வந்தேன்' சிம்மராசன் சற்று இளைப்பாறினான். 'அடடே, மணி பத்து ஆயிருச்சா, பேருந்து சரியான நேரத்தில வந்து இருக்கு

போல, சாரங்கா வீட்டுக்கு வரியா இல்லை, உங்க வீட்டுக்கு போறியா' என சாரங்கனை கேட்டதும் 'அதென்ன அப்படி கேட்டுட்ட, வீட்டுக்கு வந்து உன் தம்பிய பார்க்க வேணாமா, சேர்ந்தே போவோம்' என சிம்மராசுவையும் அழைத்து கொண்டு நடந்தனர்.

'அவர் மட்டும் வந்துருக்காரா, இல்லை குடும்பத்தோட வந்து இருக்காரா' சாரங்கன் கேட்டவுடன், 'சின்ன அய்யா, சின்ன அம்மா அப்புறம் பொண்ணு வந்துருக்காங்க' 'அப்படின்னா அருண் வரலையா' சாரங்கன் கேட்டார். 'இல்லைங்க அய்யா' சிம்மராசு கூறிவிட்டு, அய்யா நீங்க வீட்டுக்கு போங்க, நான் ஆட்டையும் மாட்டையும் நிழல்லே கட்டி போட்டு வரேன்' ஒதுங்கினான்.

சேகர், வினாயகத்தின் ஒரே தம்பி. சென்னையில் துணிக்கடை வியாபாரம் நடத்தி வருபவர். அருண் மற்றும் பாரதி என இரண்டு வாரிசுகள். அருண் துணிக்கடையில் தலைமையாளாரக இருந்து தந்தைக்கு வியாபாரத்தில் பெரும் உதவி புரிந்து வருகின்றான். பாரதி மருத்துவ துறையில் பயின்று வருகிறாள். வினாயகமும் சாரங்கனும் வீடு அடைந்தனர்.

சேகரைக் கண்ட வினாயகம் புன்முறுவல் இட்டு தாமதத்திற்கு வருத்தம் தெரிவித்து கொண்டார். 'பிரயாணம் எல்லாம் நல்லபடியா இருந்ததா' என விசாரித்தார். 'நல்லா படிக்கிறியாம்மா' மகளும் தலையாட்டினார். அமர்ந்து பேசிக் கொண்டு இருந்தனர், அருண் அங்கேயே இருந்துவிட்டதாக கூறினார் சேகர். குளிச்சிட்டு சாப்பிடலாம் என அழைப்பு விடுத்தார் வினாயகம். சாப்பிட்டு நல்லா ஓய்வு எடுங்க, ஒரே அலைச்சலா இருக்கும்' என சாரங்கன் கூறினார். சாரங்கனை பார்த்து சேகர், 'வீட்டுல எல்லாரும் நலமா இருக்காங்களா? 'நல்ல நலம்' சாரங்கனிடம் உரையாடல் தொடர்ந்தார். தாயும் மகளும் வணக்கம் தெரிவித்துவிட்டு களைப்பு தீர குளிக்கச் சென்றனர்.

'நிலம் எல்லாம் மாத்தி முடிச்சிட்டீங்களா அண்ணே?, எப்போ பெரிய தொழிற்சாலைக்கு வித்துட்டு எங்களோட சென்னை வரப் போறீங்க? யார்கிட்டயாவது தொடர்பு பண்ணினீங்களா?' சேகர் பேசியதை கேட்டு, என்னது தொழிற்சாலைக்கா? வினாயகம் சொல்லவே இல்லையே' புரியாமல் கேட்டார்

சாரங்கன். வினாயகம் மவுனமாக இருந்தார். 'நெருங்கிய நண்பருன்னு சொல்றீங்க, உங்களுக்கு கூடத் தெரியாதா? சேகர் ஆச்சர்யமாக கேட்டார். 'என்ன அண்ணே, யார்கிட்டயும் இந்த விபரம் சொல்லலையா, என்ன சொல்லி நிலம் மாத்தி வாங்கினீங்க' சேகர் கேள்விகள் கேட்டதும் வினாயகம் 'பிறகு விவரமா பேசலாம் தம்பி, இப்போ போய் குளிச்சிட்டு வா சாப்பிடலாம்' என பதில் சொல்லமுடியாது தவித்தார், பக்கத்தில் நண்பர் வேறு. 'இதோ வரேன்' என கிளம்பினார் சேகர்.

'என்ன இது வினாயகம், இப்படி ஒரு எதிர்பாரா முடிவை நீ எடுப்பேன்னு நான் நினைக்கவே இல்லை, கேட்டப்ப எல்லாம், எல்லாம் நல்லதுக்குத்தான்னு சொல்வ, இதுதான் நல்லதா? ஊர்க்காராங்க எல்லாம் என்ன நினைப்பாங்க? சாரங்கன் வினாயகத்தை பேசவிடாமல் பேசிக்கொண்டே போனார். வினாயகம் மனம் வாடினார். 'சாரங்கா, என் தம்பிகிட்ட இந்தமாதிரி ஒரு எண்ணம் இருக்குறதா முன்னால சொன்னது உண்மைதான், ஆனா என் மனசு
மாறிருச்சு காலப்போக்கிலே, அவன் அதையே நினைச்சிகிட்டு இருந்தா நான் எப்படி சமாதானம் சொல்லமுடியும், நீயே சொல்லு. அவன் என்னை அவனோட வந்து இருக்க சொல்றான், எனக்கு இந்த ஊர்தான் என் உயிர்ன்னு வாழ்ந்துட்டு இருக்கேன். இவ்வளவுதான என்னை நீ புரிஞ்சிகிட்டது' என சொன்ன வினாயகம் பாத்து சாரங்கன் தனக்கு வாசன் சொன்ன ஒரு வினாடி கவிதை யாபகம் வருவதாக சொல்லி கவிதை வரிகள் சொன்னார்.

வார்த்தைகளை சொல்லும் முன்னர்
எழுதுகோல் வரையும் முன்னர்
கற்றதெல்லம் மறந்து
கவனம் சிதறும் முன்னர்
பாவப்பட்ட ஜீவன் கண்டு
காணாததாய் செல்லும் முன்னர்
வேலை மறந்து வீண்
பொழுது கழிக்கும் முன்னர்
ஒரு வினாடி சிந்தியுங்கள்
உங்களினுள்

கடமை கருணை வீரம்
அன்பு அறிவு ஒழுக்கம்
எல்லாம் கூடிய ஒரு
உன்னத ஆத்மா
வளர்ந்து கொண்டிருக்கும்
பட்டு போக விடாதீர்.

வினாயகம் சிரித்தார், வாசனோட பழகி பழகி கவிதை எல்லாம் பாட ஆரம்பிச்சிட்ட. கவிதையின் கடைசி வரிகள் கேட்ட பாரதி தன் பெரியப்பாவிடம், 'பெரியப்பா கவிதையை திருப்பிச் சொல்ல சொல்லுங்களேன்' என கேட்டதும் சாரங்கன் அச்சு பிறழாமல் சொன்னார். ரசித்தாள் பாரதி. வாசன் எழுதிய கவிதை என சாரங்கன் கூறிட கேட்டதும் பாரதி கவிதைகள் படித்திட வேண்டும் என கேட்டாள். 'வாசனை இன்னைக்கு இங்க 1 மணிக்கு வரச்சொல்லி இருந்தேனே யாபகம் இருக்கோ என்னமோ அவனுக்கு, அவன் வந்ததும் கேட்கலாம் என பெரியவர் கூறியதை கேட்டு முகம் மலர்ந்தாள் அகமும் சேர்ந்து. அவர்கள் சிறு வயதில் ஒரே பள்ளியில் படித்தவர்கள்.

சாப்பாடு பரிமாறப்பட்டது. 'சிவகாமி சாப்பாடு என்றால் தனி ருசிதான்' என பாராட்டியவாறே மனைவியை மறந்து சாப்பிட்டார் சேகர். 'மனைவியும் சிவகாமியின் சாப்பாட்டினை பாராட்டினார். கணவன் மனைவி இருவரது எண்ணங்களும் ஒரே மாதிரி இருந்துவிட்டால் இருவர் இருவராக தெரியப்போவது இல்லை. வரிகளுக்காக எழுதப்படும் "ஈருடல் ஓருயிர்" உண்மையாக்கப்படும்.

சிறிது நேரம் ஓய்வு எடுக்கப் போவதாக கூறிச் சென்றனர் மகளும் தாயும். தாயின் பெயர் சரோஜா. சரோஜா வீட்டு பெண்மணி. கணவருக்கும் குழந்தைகளுக்கும் தன் வாழ்வினை அர்ப்பணித்தவர். அவர்களே உலகம் என வாழ்ந்து வருபவர். இவர் பிறந்தது வளர்ந்தது எல்லாம் சாத்தூர். குளத்தூரின் மாப்பிள்ளை அமைந்தது பெரிய அதிசயம். கல்யாணத்தின் போது எதுக்கு அண்ணன் கல்யாணம் பண்ணிக்கல என கேட்டவர்களுக்கு பதில் சொல்லி சொல்லியே பெரும்பாடாகி போனது. 25 வருட காலங்களுக்கு பின்னோக்கிபோனால் தான் இதன் காரணம் என்னவென்று தெரியும்.

சேகருக்கு விவசாயத்தில் ஈடுபாடு இல்லை. ஓரளவு படித்ததும் நகரங்களில் வேலை பார்த்தும், கிராமத்தின் அழகை ரசிக்க பிடிக்காமலும் பழகிப் போனார். இப்படித்தான் சரோஜா பழக்கம் ஆனார். சாத்தூருக்கும் குளத்தூருக்கும் முடிச்சி அப்படித்தான் பின்னப்பட்டது. காதலை சம்மதம் பெற வைத்ததே பெரியவர்தான். சரோஜா குடும்பத்தின் மூத்த மருமகளானார். நேரம் மெல்ல கடந்து கொண்டு இருந்தது. செல்வ செழிப்போடு குடும்பம் சிறப்புற்று வாழ்ந்தது, வாழ்ந்து கொண்டும் இருக்கிறது.

'அண்ணே, அப்போ கேட்டதுக்கு பதில் சொல்லுங்க' என ஓய்வு எடுக்க விருப்பம் இன்றி ஓயாமல் கேட்டார் சேகர். 'தம்பி, அப்படி ஒரு எண்ணம் இருந்தது என்னவோ உண்மைதான், ஆனா முதன்முதலா ஒருத்தர்கிட்ட நிலத்தை வாங்கும்போது என் எண்ணமெல்லாம் அடியோட மாறி போயிருச்சி, நான் அதனாலதான் சென்னைக்கு வர இத்தனை வருசமா தள்ளி போட்டுட்டு வந்தேன், எல்லாம் நல்லபடியா முடிஞ்ச நிலையில சென்னைக்கு வர விருப்பமும் இல்லை தம்பி, தப்பா எடுத்துக்க வேணாம்' வேண்டினார் வினாயகம். 'அப்படின்னா நீங்க எங்களோட வரவேப்போறதில்லை' கடந்த பன்னிரண்டு ஆண்டுகளாக கேட்டதையே கேட்டுகொண்டு இருந்தார். நிலம் இருக்கு, அது சரி செய்யனும் இது சரி செய்யனும்னு காலம் கடத்தீட்டீங்க' வருசம் எண்ணியபோது வாழ்க்கை பாதி கடந்தது உரைத்தது சேகருக்கு. 'உங்க விருப்பம்' என அண்ணனை அவர் போக்கில் விட்டார் சேகர். வாசன் பெரியவர் வீட்டு வாசலில் நின்றான்.

வாசன் வீட்டுக்கு யாரோ வந்து இருப்பதை கண்டான். வீட்டின் வாசலில் செருப்புகளின் எண்ணிக்கை வீட்டில் இருப்பவரை அடையாளம் காட்டும். 'சின்னவரு வந்து இருக்காங்க' சிவகாமியின் கணவர் பாண்டி சொன்னார். பிறகு வரலாம் என கிளம்ப நினைத்தவன் சொல்லிவிட்டு செல்லலாம் என வாசற்கதவை தட்டும் முன் 'அடடே வாசா, சொன்ன நேரத்திற்கு சரியா வந்துட்டியே, செவல் பக்கம் போய்ட்டு வரியா, உள்ளே வா' என அழைத்தார் வினாயகம். 'அய்யா நான் சாயந்திரம் வரேன், நீங்க சின்ன அய்யாவோட பேசிட்டு இருங்க' என கிளம்ப எத்தனித்தவனிடம் 'அட என்ன அவசரம், வந்தது வந்துட்ட வாங்கிட்டு போ தம்பி, உட்கார் என இருக்கை காட்டினார். 'வேறு வழியின்றி வினாயகம் காட்டிய

இருக்கையில் அமர்ந்தான் வாசன்.

'யாரு இது நம்ம வியாபாரி பையனா?' இரண்டு வருசம் முன்னால பார்த்தது எப்படிப்பா இருக்க, அம்மா, அப்பா எல்லாம் நல்லா இருக்காங்கல' தங்கச்சி கூட மதுரையில மருத்துவ கல்லூரியிலே படிக்கிறதா கேள்விபட்டேன்' என நலம் விசாரித்தார். 'ஆம்' என தலையாட்டியவனிடம் பணம் கொண்டு வந்து சரியா இருக்கான்னு எண்ணி பார்த்துக்கோப்பா' என வினாயகம் தந்தார். எண்ண சங்கடபட்டுக் கொண்டே 'சரியா இருக்கும் அய்யா' என நழுவ நினைத்தான். பணம் எண்ணிட வேண்டிய இடத்தில் எண்ணிவிட வேண்டும், இல்லையெனில் எண்ணம் எல்லாம் குளறுபடியாகி விடும் தவறு இருபக்கமும் இருந்தால். வினாயகம் விடவில்லை. 'தம்பி எண்ணிட்டு சரியா இருக்கான்னு பாத்து சொல்லு' என்றதும் சாரங்கன் வாங்கி இங்க கொண்டா நான் எண்ணித் தரேன் என வாங்கினார். சரியாக இருந்தது. 'தம்பி சொன்னமாதிரி எண்ணாமலே இருந்து இருக்கலாம்' சேகர் சிரித்தார். எல்லாம் சரியாக இருக்கும் வரை வடக்கு மேற்காகவும் இருக்கலாம், கிழக்கு தெற்காகவும் இருக்கலாம், தவறில்லை. சரியில்லையெனப்பட்டுவிட்டால் இருக்கிற இடறல் எல்லாம் பேரிடியாக வந்து முடியும். சரிபார்த்தல் சரியென வாசன் தலையாட்டினான்.

தலையாட்டும் பழக்கம் நம்மில் மொழி தோன்றா முன்னர் வந்த ஒன்று. சைகைகளும் உடல் அசைவுகளும் விசயங்கள் பரிமாறக் கொள்ளத் தேவைபட்டிருந்தன. இன்றைய காலகட்டத்தில் மொழி இருப்பினும் நமது உடல் அசைவுகள் நிலை எடுத்துக்காட்டும் அற்புத கண்ணாடியாய் விளங்குகிறது. கிளம்ப இருந்த வாசனிடம் சேகர் ஒரு கேள்வி கேட்டார்.

'வாசன் என் கூட சென்னை வர முடியுமா?' சேகரின் கேள்வி வாசனை வாட்டியது. மறுப்பினை தெரிவிக்க வாசன் மறுபடியும் தலையாட்டினான். 'வரமுடியுமா, இல்லை முடியாதா வாய் திறந்து பதிலை சொல்லுப்பா' சேகர் காரண காரியங்கள் ஏதும் சொல்லாமல் கேட்டார்.

'இப்ப இருக்கற சூழ்நிலையில எப்படி வரமுடியும்னு தெரியலை அய்யா, ஆனா எத்தனை நாளைக்கு அங்க வரனும், என்ன விபரம்னு சொன்னீங்கன்னா,

யோசிச்சி சொல்றேன் அய்யா' என்றான் வாசன். யோசிக்கிறதுக்கு என்ன இருக்கு தம்பி, அங்க இருக்குற என் கடையில நிர்வாகம் பண்றதுக்கு நல்ல நம்பிக்கையான ஆள் வேணும், சரி நம்ம கிராமத்தில இருந்து கூப்பிட்டு போகலாம்னு ஒரு யோசனை வந்தது, அதனாலதான் கேட்டேன். எப்படியும் இந்த ஊருல இருந்துதான் ஒருத்தரை கூட்டிட்டு போகனும், நம்ம ஊருக்காரங்களுக்கு உதவுன மாதிரியும் இருக்கும் உண்மையாவும் இருப்பாங்க' தனது எண்ணம் சொன்னார் சேகர்.

'தம்பி, வாசனை எதுக்கு கூப்பிட்டு போகனும்னு நினைக்கிறே, அவனுக்கு இங்க நிறைய வேலை இருக்கு, அவனை எல்லாம் வெளியூருக்கு எல்லாம் அவங்க வீட்டுல அனுப்ப மாட்டாங்க' அண்ணன் வினாயகம் கூறியதை கேட்டதும் சேகர் சற்று மனவருத்தம் அடைந்தவராக 'அண்ணே, நீங்களும் வரமாட்டீங்க, அவனையும் வரவிட மாட்டீங்க, உங்களுக்கே நல்ல இருக்கா' என கடிந்து கொண்டார்.

'அது இல்ல சேகர் தம்பி, வாசன் இந்த ஊரை எல்லாம் விட்டுட்டு எங்கயும் வரமாட்டான், அதைதான் அண்ணன் சொல்ல வந்தார்' என சாரங்கன் தன் நண்பனுக்கு ஆதரவாக பேசுவதை கேட்டதும் சிரித்தார் சேகர். 'எந்த காலத்திலதான் அவரை விட்டுக்கொடுத்து பேசி இருக்கீங்க, நல்ல நட்பு' 'அய்யா, எனக்கு கொஞ்சம் வேலை இருக்கு, சாயந்திரம் வந்து பேசறேன் அய்யா' என கிளம்பினான்.

'பெரியப்பா கவிதை புத்தகம்...' என பாரதி சொன்னதும், 'வாசா, நீ எழுது வைச்சி இருக்குற கவிதைகள் எல்லாம் சாயந்திரம் வரும்போது கொண்டு வா' என பெரியவர் சொன்னதும், 'அய்யா அது எனக்கு தோணுறதை எழுதி இருப்பேன், எதுக்கு அய்யா இப்ப' வாசன் கேட்டதும், 'அது என் மகளுக்கு வேணும்பா' என சேகர் கேட்டார். சென்னைக்கு வரலைன்னாலும் கவிதை புத்தகமாவது வந்து கொடு' என வருத்தம் கலந்த தொனியில் பேசினார் சேகர். 'சரிங்க அய்யா, அப்பாகிட்ட கேட்டு சொல்றேன், என் முடிவுல எதுவும் இல்ல' என வாசன் கூறியதும் சாரங்கன், 'தம்பி கவிதை புத்தகம் கூட அப்பா கிட்ட கேக்கனுமா' என நமட்டு சிரிப்பு சிரித்தார். வாசனும் சிரித்துக் கொண்டே 'சென்னைக்கு போறத

சொன்னேன் அய்யா' என்றான். வினாயகம் வேதனை அடைந்தார். மதிய நேரத்து உறக்கம் கண்ணில் சுற்றியது.

கவலைகள், துன்பங்கள், துயரங்கள் மனதில் நுழையத்துடிக்கும் முன்னர் கண்கள் மூடி சிந்தனை வேறு பக்கம் திருப்பிக்கொன்டால் மனம் இலகுவாகும், ஆனால் பிரச்சினைகள் பிரச்சினைகளாகவே இருக்கத்தான் செய்யும். யார் யாருக்கு என்ன என்ன பிரச்சினைகள்! பிரச்சினை இல்லையே என அது ஒரு பிரச்சினையாக கருதிக்கொண்டு கவலைபடுபவர்களும் உண்டு. கூறும் அளவுக்கு கவலைகள் மனிதன் மனதில் குடி புகுந்து விட்டது. கவலையை வெல்பவர்கள் வாழ்வில் வெல்கிறார்கள். வாசன் வீடு அடைந்தான்.

4.

பணத்தை பத்திரமாக பத்திரபடுத்தி விட்டு புதிய செவல் நோக்கி நடந்தான் வாசன். வாசனுக்கு இந்த புதிய தோட்டம், புதிய இடம் பழகிய இடங்கள். சித்தப்பா தோட்டமும் மாமா தோட்டமும் அருகில் இருந்ததால் அவன் இங்கு வந்து வேலை செய்து இருந்து இருக்கிறான், மேலும் பெரியவருக்கு உதவிகள் புரிய எத்தனை முறை இங்கு வந்து இருக்கிறான். எனினும் தோட்டத்தின் எல்லை பரப்பு எல்லாம் கற்றுக்கொள்ள வேண்டும், வளர்ந்த செடிகள், உயர்ந்த மரங்கள் வாசனை நோக்கி வித்தியாசமாக பார்த்தன. மாற்றங்கள் நேரும்போதெல்லாம் தடுமாற்றங்கள் தவிர்க்க முடியாதவை. தடுமாற்றத்தில் தவறிப்போய் விடாத மனிதர்கள் முன்னேற்றம் அடைகிறார்கள். அம்மாவிடம் சென்றான் வாசன்.

'அம்மா, பணம் வாங்கி வீட்டு அலமாரியில பத்திரமா வைச்சிட்டு வந்து இருக்கேன், பெரியவரோட தம்பியும், மனைவியும் அவங்க பொண்ணும் வந்து இருக்காங்கம்மா' வாசன் கூறியதை கேட்டதும், 'ஓ எப்படி இருக்காங்கப்பா, ரெண்டோ, மூணோ வருசத்துக்கு ஒருதரம்தான் வராங்க, ஆமா அந்த பாரதி பொண்ணு எப்படி இருக்கு, பேசினியா' அம்மாவுக்கு பாரதி என்றால் மிகவும் பிடிக்கும். அவளது அன்பு கனிந்த வார்த்தைகள், பிறரை நேசிக்கும் பண்பு என பாரதியினை எப்பவுமே தனி மரியாதையுடன் தான் அம்மா பார்த்து வந்தாள். 'நம்ம தேவி மாதிரி இருக்காம்மா, என் கவிதை புத்தகம் படிக்க கேட்டா, சாயந்திரம்

தரேன்னு சொல்லி இருக்கேன்' என்றான் வாசன்.

'அம்மா, என்னை சேகர் அய்யா சென்னைக்கு அவர் கடையில வேலைக்கு கூப்பிட்டாரும்மா, எனக்கு போக விருப்பம் இல்லம்மா, தோட்டம், வீடு, கவிதைன்னு வாழ்க்கை பழகி போச்சுல்ல அம்மா' என அம்மாவின் முடிவை எதிர்பார்க்காதவனாய் கூறினான். 'நல்ல சேதிதானப்பா, நாலு காசு இந்த வயசுல சம்பாதிக்காம, எந்த வயசுல சம்பாதிக்க போற? உடனே சரின்னு சொல்ல வேண்டியதுதானப்பா' அம்மா அறிவுரை மொழி கூறினாள். வாசன் மறுப்பு தெரிவித்தவாறே, அம்மா தேவியத்தான் வெளி ஊருல படிக்க அனுப்பிட்டீங்க, என்னையாவது இங்க உங்ககூட இருக்க விடலாம், நிலம் வியாபாரம் இதெல்லாம் இருக்குறப்ப எதுக்கும்மா' வாசன் வார்த்தைகள் தேடினான்.

'இதபத்தி எல்லாம் எதுக்குப்பா, நீ கவலைப்படற, இந்த ஊருல ஆட்களை வைச்சி நாங்க பார்த்துக்கிறோம், நீ கூப்பிட்டவங்களுக்கு மரியாதை நிமித்தமாவது வரேன்னு சொல்லு, வாசல் கதவு தட்டுற மகாலட்சுமிய வேணாம்னு சொல்லாத' தாயின் காசு தேடுதலின் தேவையை உணர்த்தினார். இந்த ஊருல சம்பாதிக்க முடியாததா, உங்களுக்கு பணிவிடை செய்துகிட்டு இங்க வர காசுல சந்தோசமா இருக்கலாம் அம்மா' வாசன் மனம் போராடியது.

வாய்ப்புகள் வரும்போது அதனை எடுத்துக்கொண்டு தகுந்த முறைப்படி முயற்சி செய்து செயல்படும் மனிதர்கள் வாழ்வில் வெற்றிபெறுகிறார்கள். வந்த வாய்ப்பை பற்றி கொண்டு தனது முன்னேற்றத்திற்கு வேறு முயற்சிகள் எடுக்காமல் இருப்பவர்கள், அதே வாய்ப்பிலேயே தங்களை அமிழ்த்தி, பிற வாய்ப்புகளின் கதவினை அடைத்துவிட்டு அப்படியே இருக்கிறார்கள். வாசன் தடுமாற்றம் கண்ட தாய், 'பேசாம வரேன்னு சொல்லிட்டு வந்து வேற வேலையா பாருப்பா' தாய் வாசன் சாப்பிடவில்லை என்பதை மறந்து இருந்தாள்.

வாசன் முடிவெடுக்க முடியாது திணறினான். பணம் தேவை, எந்த அளவுக்கு தேவை என வரையறுக்கப்பட்டு இருந்திருந்தால் பரவாயில்லை. எல்லை வரையறுக்கப்படாத தேவை அது! சென்னை சென்றாலும் தேவை அதிகரிக்கும்! வாசன் யோசித்தான், தாயின் மனம் நேசித்தான்.

'முடியாது அம்மா, உங்களை விட்டு போக முடியாது அம்மா' வாசன் வாக்கியம் முடிக்கும் முன்னர் 'உனக்கு விதிச்சபடி நடக்குற, நான் என்னத்த சொல்ல' மகன் மனதை காயப்படுத்த விருப்பம் இன்றி மதிய சாப்பாட்டினை எடுத்து வைத்தார் தாய். வாசனுக்கு பசிக்க ஆரம்பித்தது.

எல்லாம் தீர்மானத்தின் பேரில்தான் நடக்கிறது. தலை எழுத்து என்பது எழுதப்படாத எழுத்து. எதிர்காலத்தில் நாம் வாழ்ந்து இருக்கிறோம், இறந்த காலத்தில் நாம் வாழ்ந்து இருந்ததை போல. எல்லாமே தீர்மானிக்கப்பட்டது என்று வீணாக அமர்ந்து கொள்ள நினைத்தால் அதுவும் தீர்மானிக்கப்பட்டு இருக்க வேண்டும். மிகவும் பைத்தியகாரத்தனமாக இருக்கும் இந்த வாசகம், ஆனால் அதுதான் உண்மை! நிறைய பேருக்கு புரிவது இல்லை, புரிந்து கொண்டால் வருத்தம் எதுவும் இல்லை. கொலை செய்பவனும் திருடுபவனும் அவனுக்கு அப்படித்தான் தீர்மானிக்கப்பட்டு இருக்கிறது என அந்த விசயங்கள் செய்து அதை நியாயப்படுத்த முடியுமெனில் சட்டமும் இப்படி செய்தால் இப்படித்தான் தண்டனை என நியாயப்படுத்தி கொண்டு இருக்கும். இது எழுதப்படாத நியதி, இதை விதி என சொல்வதற்கில்லை. இப்படித்தான் நடக்கும் எனில் அப்படித்தான் நடக்கும், அதை மாற்றிகாட்டுகிறேன் என ஒருவர் முனைந்தால் அவர் மாற்றிகாட்டுவார் என தீர்மானிக்கப்பட்டு இருக்கும்.

இது ஒரு எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்தி விடாதா எனில் அப்படி இருப்பின் அப்படியேதான் நடக்கும். நம்பிக்கையில்லாதவர்களுக்கு, உடைந்து போய் தவிக்கும் உள்ளங்களுக்கு எல்லாம் தீர்மானத்தின் பேரில் நடக்கிறது என தெரிந்தால் ஒடுங்கிப்போய் விடமாட்டார்களா? இல்லை, இல்லை ஒடுங்கவேண்டுமென இருந்தால் ஒடுங்குவார்கள், உயரவேண்டுமென இருந்தால் உயர்வார்கள். அதனால்தான் நிமிடங்கள் வாழப் பழகி கொள், வருடங்கள் என்ன, யுகங்கள் கைக்கு எளிதாக வரும். வாசன் சாப்பிட்டு முடித்து இருந்தான்.

5.

மாலை நேரம் நெருங்கியது. இனி தொலைக்காட்சி பெட்டிக்குள் மனிதர்கள்

தங்களை தொலைத்து கொள்ளும் காலம்! நிஜ உறவுகளை விட நிழல் உறவுகளுக்கு முக்கியத்துவம் எதற்கு? தங்களை சுற்றி நடக்கும் விசயங்கள் திரை வடிவம் பெறுகிறபோது மனிதர்கள் ஒன்றி போய் விடுவதுண்டு. நிழலில் நிஜம் தொலைக்கிறார்களா? சரியென விட்டுவிடலாம். நிஜத்தில் நிழல் தேடுவதை நினைத்துப் பார்க்கிறார்களா? மிகவும் வருந்தக்க விசயம்! உறவுகளை பற்றி சொல்லப்படும் விசயம் எல்லாம் மனிதர்களுக்கு மிகவும் உரைக்கின்றன. உணர்வுகளுக்கு அடிமையாகிப்போனதின் விளைவு இது. இது தவறு இல்லை... உறவுக்குள் இதனால் விரிசல்கள் விழாதவரை.

வாசன் தான் எழுதி வைத்து இருந்த கவிதை தாள்களை எல்லாம் தேடினான். அவைகளை சீராக அடுக்கினான். 'அம்மா, பெரியவர் வீட்டு வரைக்கும் போய்ட்டு வரேன்மா' இனி அவன் வீடு வர வெகு நேரமாகும். கதை கேட்பதற்கும் படிப்பு சொல்லத்தரவேண்டி காத்திருக்கும் குழந்தைகள் தாண்டி வர நேரம் ஆகும். 'சீக்கிரம் வாப்பா' அம்மாவின் தின வாய்ப்பாடு.

'அய்யா இந்தாங்க கவிதை புத்தகம்' என அடுக்கப்பட்ட தாள்களை பத்திரமாக கொடுத்தான் பெரியவரிடம். அவரும் 'வெறும் தாள்களை தந்துட்டு கவிதை புத்தகம்னு சொல்றியே' என சிரித்தார். தனியாக இருக்கும்வரைக்கும் அவை தாள்கள், ஒன்றாக சேர்க்கப்பட்டு கவசம் போன்று ஒரு அட்டை தந்துவிட்டால் அவை புத்தகம். 'ஒவ்வொரு கவிதைக்கும் ஒரு தொடர்பு இருக்குங்க அய்யா, அதனால தாளா இருந்தாலும் அது புத்தகம் தான் அய்யா' வாசன் வார்த்தைகள் எளிமையாக இருந்தன. எண்ணங்களால் ஒன்று சேரும் மனிதர்கள் பிரிந்து இருப்பினும் இணைந்து இருப்பர்.

'பாரதி, பாரதி இந்தாம்மா கவிதை புத்தகம்' என அவளிடம் கொடுத்தார். 'தம்பி, முடிவு எடுத்தாச்சா? என சேகர் கேட்டதும் 'இல்லைங்க அய்யா, அவ்வளவு தூரம் வரமுடியாது அய்யா' முடிவாக சொன்னான் வாசன். பெரியவர் முகம் பிரகாசம் ஆனது. 'உன் விருப்பம்' என கூறிவிட்டு தான் தனது நண்பன் குரு வீட்டுக்கு சென்று வருவதாக கிளம்பினார். ஒன்று இல்லை என தெரிந்ததும் அதனை பற்றி கவலைப்படாமல் மற்றொன்றை பற்றிட முயற்சி எடுத்தல் சுகம். கிடைக்காத ஒரு பொருளுக்கு இருக்கிற ஆயுளை போக்குவதில் என்ன லாபம். 'ரொம்ப நல்ல

சேதியாக சொன்ன தம்பி' மனதில் பட்ட சந்தோசம் சொன்னார் பெரியவர்.
'வாசா' பாரதி அழைத்தாள். 'ரொம்ப நன்றி, கேட்டதும் கொண்டுவந்துட்ட' பாரதியின் தாய் தேனீர் கொண்டு வந்தார். 'இல்லை வேணாம் அம்மா' வாசன் கூறியதும் 'எடுத்துகோப்பா என தானும் ஒன்றை எடுத்துகொண்டு உபசரித்தார்' பெரியவர். 'அருணோடதான் எப்பவும் சுத்திகிட்டே இருப்ப, இப்ப என்னடான்ன அங்க வான்னு சொன்னா வரமாட்டேங்கிற' தாய் அலுத்துக்கொண்டாள். 'வாசன் தானம்மா ரொம்ப நல்லா படிக்கிற பையன், எதுக்கு மேல படிக்காம விட்டுட்டேன்னு கேட்டப்பவெல்லாம், படிக்க பிடிக்கலன்னு சொல்லிருவான்' பாரதி தனது இறந்த காலங்களின் நிகழ்வுகளை சொன்னாள். 'விவசாயம் பார்க்கனும்னு விருப்பத்தில படிக்காமா விட்டுட்டான்' என பெரியவர் கூறினார். வாசன் தேனீர் அருந்தினான். தனது கவிதைகள் நேசிக்கும் சாரங்கன், தனது எண்ணங்களில் அலையாய் அடிக்கும் பெரியவர் இவனுக்கு நண்பர்கள். இவனது வயதுக்கு உட்பட்ட நண்பர்கள் இருக்கிறார்கள், ஆனால் அனைவரும் வேறு வேலைகள், படிப்பு என கிராமம் விட்டு வெளியேறி விட்டனர், சிலருக்கு நேரம் இருப்பதில்லை.

தனது கவிதையை விரும்பி கேட்டு படிக்கும் பாரதியை நினைத்து சந்தோசபட்டான். ஒரு சின்னதாய் பாராட்டு மனிதனுக்குள் பட்டாம்பூச்சியாய். தேனீர் அருந்தி கொண்டு இருக்கும்போது பாரதி நான்கு வரிகள் வாசித்தாள் வாசனின் கவிதைகளில் இருந்து.

"பிறரிடம் காதல் வயப்படுவதும்
பிறரால் தான் காதலிக்கப்படுவதும்
கடைநிலையில் இருக்கும் மனிதனுக்கும்
கண்மூடித்தனமான சந்தோசம் தரும்"

'என்ன நீ காதல் கவிதை எல்லாம் எழுதுவியா?' பாரதியின் கேள்வியில் வாசன் வெட்கிப்போனான். 'எழுதுவேன், எதற்கு ஆச்சர்யமா கேட்கிற' 'பேசிட்டு இருங்க' பெரியவர் மாடி ஏறிப் போனார்.

'உனக்குத்தான் காதல்னா பிடிக்காதே' பாரதியின் கேள்விக்கு வாசன்

தலையாட்டினான். 'இல்ல, மூணு வருசம் முன்ன வந்தப்போ, என்கிட்ட சொன்னதான' பாரதி மறக்கவில்லை இன்னமும். 'நீ எதுக்கு கேட்டேன்னு தெரியாது, நீ கேட்டதால நான் பதில் சொன்னேன்' வாசன் சொன்னதும் பாரதி சொன்னாள். 12 வயசில நகர வாழ்க்கை. 'கிராமத்தில் இருந்து எதுக்கு போனோம்னு இருந்தது, இப்போ எல்லாம் பழகிபோச்சு, அப்பா சொந்த ஊருக்கு வரனும்னா ஆயிரம் தடவை யோசிக்கிறார்' இது இரண்டாவது முறை தான் வந்து இருப்பது என நினைவு படுத்தினாள் பாரதி. 'படிப்பு எல்லாம் இருக்கும், இங்க வந்து என்ன செய்ய போற, நல்லமுறையில படிச்சி ஒரு நல்ல மருத்துவரா வந்தா இந்த ஊருக்குதான பெருமை' வாசன் கூறியதும், 'தேவகி கூட பெரிய மருத்துவரா வருவா' என்றதும் 'ம்ம், தேவி மருத்துவரா ஆயிட்டா இந்த சுற்றுவட்டதில இருக்குற எந்த ஏழைக்கும் பணம் தந்துதான் நோய் தீர்க்கனும்னு கவலை இல்லை' எதிர்கால எண்ணம் சொன்னான்.

பெரியவர் இறங்கி வந்தார். நாளை தான் வாங்கி இருக்கும் நிலம் சுற்றி வேலி போட ஏற்பாடு செய்யவேண்டும் என வாசனிடம் கூறிவிட்டு கோவிலுக்கு கிளம்பினார். வாசனும், 'கவிதை படிச்சிட்டு எப்படி இருக்குன்னு, சொல்லுங்க' என கூறிவிட்டு கிளம்பினான். பாரதி தன் தாயிடம் 'அம்மா நான் வாசன் வீட்டுக்கு போய்ட்டு வரேன்மா' என அனுமதி கேட்டாள்.

காலை புலர்ந்தது. அம்மா பாரதியை பற்றியே இன்னும் பேசிக்கொண்டு இருந்தாள். 'ஊருல இருந்து வந்த பொண்ணு, ராத்திரின்னு கூட பாக்காம என்னை பாக்க ஆசையா வந்துட்டாளே' மனைவியின் பேச்சை கேட்ட தந்தை 'தூங்க விடாம அதுதான் நேத்து பூரா சொல்லிட்டு இருந்த, காலையில எழுந்ததும் மறுபடியுமா?' 'மகராசி எப்பவும் நல்லா இருக்கனும்' என வாழ்த்தியவாறே தோட்டம் செல்வதற்கான ஆயத்தங்களும், வீட்டு வேலைகளையும் முடித்து கொண்டு இருந்தார் ராமம்மாள்.

சேகரை வழியில் பார்த்தான் வாசன். நலம் விசாரித்தான், பின்னர் பேசினான். 'அய்யா, என் சித்தப்பா பையன் சுந்தரனை கேட்டு சொல்லலாம்னு இருக்கேன், உங்க கூட வரதுக்கு' 'ஓ தாரளமா, முத பையன் தான, கேட்டு இன்னைக்கு வந்து சொல்லுப்பா' சேகர் சந்தோசமானார். 'உன் கவிதைகளை பத்தியும் உங்க அம்மா

அப்பாவை பத்தியும் நேத்து எங்க வீட்டுல பாரதியோட சொற்பொழிவுதான், நல்ல கவிதை எழுதுறப்பா ஒரு வரி இன்னும் யாபகத்தில வந்து வந்து போகுது எனக்கு. "இறந்த காலங்களை எரித்து விடுங்கள் அது உங்களை ஓயாமல் சுடுகிறது எனில்" பேசாம புத்தகமா வெளியிடலாமே' சேகர் கூறியதை கேட்டு சிரித்தான் வாசன்.

'புத்தகம் போட்டு, கவிதை படிச்சி நாடு திருந்தும்னு இருந்தா எப்பவோ மாறி இருக்குமே அய்யா' வாசனின் பேச்சை கேட்ட சேகர் சொன்னார் 'உலக மாற்றத்தினை கொண்டு வர வெறும் கவிதையால முடியாது தான், ஆனால் உனது அறிவு பலரை சென்று அடையும், பலருக்கு புது விசயங்கள் புரியும், எத்தனையோ விசயங்கள் சொல்லப்படாமல் புதைந்து போய் இருக்கு வாசன்' சேகரை உற்று பார்த்தான். பெரியவர் போலவே சின்னவரும் பேசுகிறார், ஆச்சர்யமாக இருந்தது அவனுக்கு. சேகரிடம் அதிகம் பழக்கம் இல்லை. அவரை பற்றி அவன் நிறைய அறிந்திருக்க வாய்ப்பும் இல்லை. சிறிது நேரம் பேசிவிட்டு தனது தம்பியிடம் கேட்டு சொல்வதாக அவர் சொன்ன மேலும் சில விசயங்களை பற்றி சிந்தித்து கொண்டே நடக்கலானான்.

எந்த விசயம்தான் புதிது இந்த உலகில். எல்லாமே இங்கே இருந்து எடுக்கப்பட்டது தானே, கீதை சொன்னது, கீதைக்கு யார் சொன்னது. சிந்தனை பண்ணுபவனுக்கும் செயல் புரிபவனுக்கும் மூலபொருட்கள் இங்குதானே இருந்து கிடைத்தன. எழுதப்பட்ட விசயங்கள் இருக்கிற நிகழ்வுகளை பற்றித்தானே பின்னப்பட்டன. வித்தியாசமான நோக்கத்தின் பார்வையில்தானே புதிய கண்டுபிடிப்புகள் உருவாகின. தேவைகள் ஏற்படும்போதெல்லாம் தீர்க்க வேண்டிய நிர்பந்தம் இருந்தது, தேவைகளை ஏற்படுத்திக்கொண்டதால் அதனையும் தீர்த்துவைக்க வேண்டிய சிந்தனை மேலோங்கி இருந்தது. பலவிதமான முன்னெற்றங்கள் இன்னும் நடந்து கொண்டே இருக்கும், இந்த தேவைகளும் தேடுதலும் குறையாதவரை.

சித்தப்பா வேலன் தோட்டம் சென்றான் வாசன். வாசனின் தந்தையின் இரண்டு சகோதர்களில் இளைய சகோதரர். தந்தையோடு பிறந்த இரண்டு சகோதரிகளும் உண்டு. சுந்தரனைத் தேடினான் வாசன். சுந்தரன் தக்காளி செடிக்கு தண்ணீர் பாய்ச்சி கொண்டு இருந்தான். வயது 21. இந்த வருடம்தான் இளநிலை பட்ட

படிப்பு கணக்கியலில் முடித்து இருந்தான். சுந்தரனுக்கு ஒரு சகோதரன் கனகராஜ். அவனது வயது 18. பொறியியல் கல்லூரியில் முதலாம் ஆண்டு படித்து வருகிறான். சுந்தரன் விடுதியில் தங்கி படித்து வந்ததால் விடுமுறைக்கு வரும்போதெல்லாம் தந்தைக்கு உதவியாய் சிறு சிறு வேலைகள் செய்வது உண்டு. இன்னும் வேலைக்கு செல்வதா, மேற்கொண்டு படிப்பதா என ஒரு முடிவும் இல்லாமல் நாட்களை கழித்து கொண்டு இருந்தான். வாசன் சுந்தரனிடம் விபரங்கள் சொல்ல ஆரம்பித்தான்.

சுந்தரன் வாசனை கருணையுடன் கலந்த ஆச்சர்ய பார்வைப் பார்த்தான். 'என்ன வேலை ஏதுன்னு விவரம் கேட்டியா? அவரு துணிக்கடைகள் வைச்சிருக்கார் தெரியும், துணி கிழிக்கச் சொன்னா என்ன பண்றது' படித்தவர்களிடம் இருக்கும் கௌரவம். 'துணி கிழிக்க எல்லாம் கூப்பிடுவாரா என்ன' வாசன் சொல்லிகொண்டே, 'பாத்தி நிறைஞ்சிருச்சு, தண்ணிய திருப்பி விடு' என எது செய்தாலும் செய்யும் தொழிலில் கவனம் வேண்டும் என சுட்டிக்காட்டினான். சொந்த வேலையாதலால் தண்ணீர் பாய்ச்சி கொண்டு இருந்தான் சுந்தரன். தண்ணீரை திருப்பியவாறே 'நீ போகவேண்டியது தான, படிக்கத்தான் போகமாட்டேன்னு சொல்லிட்ட, இப்பவாச்சும் இந்த மாதிரி நல்ல வாய்ப்பை பயன்படுத்தலாம்ல', வாசனை கடிந்தான் சுந்தரன்.

'எனக்கு தெரிஞ்சதெல்லாம் இந்த கிராமம், பக்கத்து நகரம், திருவிழா அப்புறம் தோட்டம், கொஞ்சமாய் பழகி போன தமிழ் அவ்வளவுதானடா, அவங்க வைச்சிருக்கிற கடையில வேலை பார்க்குற அளவுக்கு என்கிட்ட புத்தி வசதி இல்லை, அதைவிட எனக்கு விருப்பம் இல்ல, நீ போக விருப்பம் இருந்தா இன்னைக்கு அவர பாத்து விசாரிச்சிக்கோ, இல்லை நீ வரலைன்னா நானே சொல்லிடுறேன்' வாசன் கூறியதை கேட்ட சுந்தரன், 'நானே பேசிக்கிறேன், சில விசயங்களை நேரடியா பேசினாதான் சரிப்பட்டு வரும், எதுக்கும் ஒரு தடவை எங்க அப்பாவை கேட்டுக்கிறலாம் அவரு நீ போகாம என்னை எதுக்கு போக சொல்றேன்னு ஆயிரம் கேள்வி கேட்பார் ஏதோ உன்னுடைய வாழ்க்கையில நான் குறுக்கே வந்த மாதிரி' கலகலவென சிரித்தான் சுந்தரன். சிரித்தான் வாசன். 'உனக்கு விருப்பம் இருக்கு, வழி விடனும் அவ்வளவுதான, நீ இங்கேயே இரு,

நான் போய் கேட்டுட்டு வரேன்' வாசன் நகரும் முன்னர், 'நான் போறேன், நீ இதை கவனி' என நடந்தான் சுந்தரன். எத்தனை காலம் இங்கு வந்து தண்ணீர் பாய்ச்சி இருப்பான் வாசன். இவன் பார்த்து வளர்ந்த மரங்கள். தொலைவில் சுந்தரன் சித்தப்பாவிடம் பேசிக்கொண்டு இருப்பதும் அருகில் வேரு இருவர் நிற்பதும் தெரிந்தது.

திரும்பினான் சுந்தரன். வாசன் ஆவலாய் கேட்டான், 'சம்மதமா' சுந்தரன் சிரித்து கொண்டே, 'எங்க அப்பா ஒண்ணு சொல்ரதுக்குள்ள, கூட வேலை செஞ்சுட்டு இருக்குற ராசு அண்ணன் சொல்றார் 'உன்னை பத்தி வருத்தப்படவேணாமாம், அதிர்ஷ்டமாம் எனக்கு, இதை போய் எதுக்கு அப்பாகிட்ட கேட்கறே, எந்த பேருந்து எப்படி போகும்னு கேட்டு பட்டணம் போறதுக்கு வழி பாருன்னு, அவர் பையன எப்படி அனுப்பி வைச்சாரோ அதுமாதிரி என்னை அனுப்பனும்னு அவரு அப்பாகிட்டே சொன்னதும், அப்பாவும் யோசிக்காம தாராளாம போய்ட்டு வாப்பான்னு சொல்லிட்டார். உன் விருப்பம் இல்லாம போகவேணாம்னு சொன்னார், உடனே இந்த முத்துராசு என்ன சொன்னார் தெரியுமா' வார்த்தைகள் நிறுத்தினான் சுந்தரன்.

வாசன் சொன்னான், 'என்ன சொல்லியிருப்பார், நான் பாரதியை கல்யாணம் பண்ணுவேன்னு பேசி இருப்பார், நம்ம பொன்னுராஜ் மாமா என்கிட்ட இதை பத்தி முன்னமே பேசிட்டார்' எனச் சொன்னதும் சுந்தரன் திகைத்தான். 'என்னடா முழிக்கிற, இதுதானா இல்லை புதுசா வேறு பொண்ணை பத்தி சொன்னாரா?' சுந்தரன் சொன்னான் 'சரிதான் சொன்னது, எதுக்கு இப்படி சொல்றார், நாளைக்கு பெரிய பிரச்சினை வராதா?' வாசன் சிரித்துக்கொண்டே, 'வம்பு பேசுரதுதான அவர் வழக்கம். பிரச்சினை எல்லாம் வராது, சரி செய்ய வைக்கிறேன்' உறுதியாகச் சொன்னான் வாசன்.

சுந்தரனிடம் சிறிது நேரம் பேசிவிட்டு வாசன் தன் தோட்டம் நடந்தான். மாமாவிடம் இந்த விசயத்தை பேசியாக வேண்டும். விளையாட்டான வார்த்தைகள் சாதாரணமானது அல்ல. எண்ணங்கள் மனிதனை உருக்குலையவும் செய்யும், உறுதிபடவும் செய்யும். வீணான கற்பனை வாழ்க்கை மிகவும் சுவராஷ்யமாக இருக்கும், உண்மை வாழ்க்கை அப்படி இல்லை. சுற்றத்தார், நண்பர்கள் என

அனைவரையும் சமாளித்துச் செல்ல வேண்டிய விசயம். கிராமத்தில் இப்போதெல்லாம் திருமண முறைகள் சர்வ சாதாரணமாக மாறி வருகிறது. உறவுக்குள் பெண்ணும் மாப்பிளையும் எடுக்கும் வழக்கம் மாறிபோனது. ஒரு ஆணை பெண்ணுடன் சம்பந்தபடுத்தி பேசுவது மிகவும் எளிதானதாகி போனது வாழ்க்கைமுறையில். பேசுபவர்களுக்கு தெரியுமா, எவ்வளவு வலி வலிக்கும் அந்த இதயங்களுக்கு.

வாசன் பாரதியை ஒருபோதும் திருமண நோக்கத்திலோ, காதல் நோக்கத்திலோ பார்த்தது இல்லை, யாரையும் காதலித்ததும் இல்லை. தோட்டத்தில் வேலைகள் நடந்து கொண்டு இருந்தன. குழந்தையை ஓடி சென்று தூக்கும் தாயை கண்டு "அழுதபோதா அம்மா வருவாள்" கவிதையை அன்றுதான் எழுதினான் வாசன். மாமா வந்தார். பேசினான். கவிதை எழுதியபோது கலங்கியிருந்த கண்கள் இந்தமாதிரி பேச்சுக்களால் கலங்கி இருக்கிறது என மாமா நினைத்தார். 'என்ன கண்ணு கலங்கி இருக்கு, இதுக்கா மனசு கஷ்டபடற, அவனை பத்தி தான் தெரியுமே, தான் தோன்றித்தனமா பேசுவான், நான் சொல்லிவைக்கிறேன், இனிமே உன்னை பத்தி எதுவும் பேசமாட்டான்' என ஆறுதல் சொல்வதாய் சொன்னார் பொன்னுராஜ் மாமா. 'அதெல்லாம் ஒன்னும் இல்ல மாமா, பெரியவரை பத்தி தெரியும், சேகர் அய்யா காதுல விழுந்து தப்பா போய்ரகூடாதுல மாமா' பிரச்சினைக்கு முற்று புள்ளி வைக்கபட்டது. பிரச்சினை இனிமேல் பேச்சால் வரப்போவது இல்லை.

பெரியவர் நேற்று சொன்னது வாசனுக்கு யாபகம் வந்தது. "மாமா, பெரியவர் காட்டுக்கு சுத்தி கல் போடனும்னு சொன்னார், நாளைக்கு போய் சொல்லிட்டு வந்தா இன்னும் இரண்டு வாரத்தில கொண்டு வந்து போட்டுருவாங்க, நீங்களும் வந்தா வேலை சுலபமா இருக்கும், வேற வேலை இருந்தா பரவாயில்லை, நானே போய்ட்டு வரேன்' 'மருமகனே, நீ எதுக்கு தனியா போற, நானும் வரேன், முத பேருந்துக்கு போனோம்னா, பத்து மணிக்குள்ளாற வந்துரலாம்' என கூறிவிட்டு வேலைகள் செய்ய சென்றார். பொதுவாக மணி 3 ஆனதும் அவரவர் வீடு செல்வது வழக்கம். வாசன் தோட்டத்தில் மாலை வரும் வரை வேலை செய்து கொண்டோ, கவிதை எழுதி கொண்டோ இருப்பான். தனியாய் இருந்த தோட்டம் அவனுக்கு,

இப்போதைய தோட்டம் ஒருபுறம் சித்தப்பா மறுபுறம் மாமா. சுந்தரன் வந்தான். 'நேரா நான் போய் அவர்கிட்ட பேசிட்டு பிறகு வீட்டுல வந்து உன்னை பார்க்கிறேன், துணி கிழிக்க சொன்னார்னு வைச்சிக்கோ, உன்னை கிழிச்சிருவேன், நீ வரலையா' என விளையாட்டாய் எச்சரிக்கை செய்துவிட்டு போனான் சுந்தரன். வாசன் சுந்தரனின் மனம் அறிவான். 'கொஞ்ச நேரம் கழித்து வரேன், நீ நல்லபடியா பேசிட்டு வா' என வாசன் அனுப்பினான்.

6.

சுந்தரன் சிறியவரை கண்டு விபரம் கேட்கலானான். சிறியவர் எல்லா விபரமும் கூறியதும் அவனுக்கு மட்டற்ற மகிழ்ச்சி. தங்குவதற்கு வீடு, சென்று வர வாகன வசதி என வசதிகள் கேட்டு மிக சந்தோசப்பட்டான். பின்னர் சேகர் கூறியது அவனுக்கு கலக்கமான சந்தோசம் தந்தது. கணக்கு வழக்குகள் பார்க்க வேண்டுமாம், ஒரு தனி கடையை நிர்வகிக்க வேண்டுமாம், ஆடிப்போய்விட்டான் சுந்தரன். அவர்கள் பேசிக்கொண்டெ இருந்தனர். நேர்முகத்தேர்வு, விண்ணப்பம் அனுப்பாத ஒருவருக்கு நடந்து கொண்டு இருந்தது.

வாசன் கண்ணையனை பார்க்க சென்றான். 'உள்ள வா என அவனை அழைத்தார் கண்ணையன், 'இருக்கட்டும் அண்ணே, நாளைக்கு நானும் மாமாவும் முத பேருந்துக்கு நாணல் கோட்டை வரைக்கும் போய்ட்டு வர வேண்டி இருக்கு, நீங்க அப்பாவுக்கு உதவியா இருந்து, கத்தரிக்காய் மூடை, தக்காளி பழம் எல்லாம் இரண்டாவது பேருந்துக்கு பத்திரமா அனுப்பி வைச்சிருங்க, ராசு அண்ணன் மாமா தோட்டம் பாத்துக்குவாராம்' என்றதும் 'சரி ஒரு வாய் காபி குடிச்சிட்டு போ, நான் பார்த்துகிறேன், ஆளுக எல்லாம் அம்மா சரிகட்டிப் போவாங்கள' கண்ணையனிடம் 'ஆமாம்' என கூறிவிட்டு அன்பினை தவிர்க்கமுடியாது காபியை வாங்கி குடித்துவிட்டு நடந்தான் வாசன்.

'அது யாரு, நல்லையன் பேரன் வாசுவா' காத்தமுத்து தாத்தா அழைத்தார். வாசனுக்கு ஆச்சர்யமாக இருந்தது. எப்போதும் பொது கட்டிடத்தில் இருப்பவர் அவரது வீட்டில் இருக்கிறாரே. 'ஆமா தாத்தா, வாசுதான், என்ன இன்னைக்கு

மந்தைக்கு போகலையா' வாசன் கேட்டான். ஒவ்வொரு ஊருக்கும் ஒரு மந்தை இருக்கும், மனிதர்கள் கூடி இருப்பதால் அது மனிதர்களின் மந்தை. 'போகலப்பா, என்னமோ இன்னைக்கு இங்கயே இருக்கனும்னு போல இருந்திச்சி, அதான் காலையில இருந்து எங்கயும் போகலை' தடுமாறி தடுமாறி பேசினார் தாத்தா.

80 வயது மதிக்கதக்கவர். வாசனின் தாத்தாவுக்கு நெருங்கிய நண்பர். இவரது மனைவி காலமடைந்து பதினெட்டு மாதங்கள் ஆகிறது. 6 செல்வங்களை, மகன்கள் 3, மகள்கள் 3, பெற்றெடுத்தவர். செல்வம் எனில் விட்டு போய்விடுமோ? அனைவரும் இப்போது இந்த ஊரில் இல்லை. அவர்களுக்கென அமைந்த வாழ்க்கையினை கொண்டு வெவ்வேறு நகரங்களுக்கு சென்று விட்டனர். தனது பிள்ளைகள் அழைத்தும் இவரும் இவரது மனைவியும் இந்த ஊரை விட்டு செல்லாமல் இங்கேயே வாழ்ந்தனர், இப்போது தனி ஆளாய் இவர். முதியோர் இல்லம் சென்று வாழும் அளவுக்கு இன்னும் கிராமம் முன்னேறவில்லை. இவர் தனது மனைவியின் நினைவாய் தனக்கென வைத்து இருந்த அந்த சிறிய நிலத்தைகூட தற்போதுதான் வினாயகத்துக்கு விற்று விட்டார், வந்த பணத்தை கடைசி மகளுக்கு சின்னதாய் சங்கிலி செய்து போட்டு விட்டார். தனது மனைவியின் ஆசையாம். 'கடைசி புள்ளைக்கு ஒரு சங்கிலி போட்டுரனும், நாம கட்டையில போறதுக்குள்ள' இதைச் சொல்லி மூன்றே வாரத்தில் மறைந்த மனைவியின் சோகம் அவரை வாட்டியது. முதுமையில் இல்லாதா துணை வறுமையினை விட கொடியது, வசதி இருப்பினும்!

'என்ன தாத்தா, சொல்லுங்க' அவர் அமரந்து இருந்த கட்டிலில் அமர்ந்தான் வாசன். அவனது முதுகில் தடவியவாறே, 'இந்த வீடு என் பேருலதான் இருக்கு, எல்லாத்தையும் பிரிச்சி கொடுத்துட்டேன், இங்க இருந்து வாழாம எல்லாத்தையும் குத்தக்கைகு விட்டுட்டு அப்புறம் எல்லாத்தையும் வித்துட்டு போய்ட்டாங்க என் புள்ளைங்க, நீ இந்த வீட்டை உன் காலா காலத்துக்கு உன் சொத்து மாதிரி பாதுகாத்து வரனும், உள்ள வா பத்திரம் இருக்கற இடம் காட்டுறேன்' தடுமாறி பேசி, தடுமாறி எழுந்தவரை கைத்தாங்கலாக பிடித்து, 'இப்ப அதுக்கு என்ன தாத்தா' என மறுத்தவனை உள்ளே அழைத்து காண்பித்தார். சுவரெல்லாம் அவரது மனைவி குழந்தைகள், பேரன் பேத்திகள் படங்கள். வாசன் பலமுறை படங்கள்

பார்த்து இருப்பான், இன்று விக்கித்து நின்றான். இவ்வளவு பாசமாக இருப்பவர் தன்னிடம் எதற்கு தர வேண்டும், கேட்டான். 'தாத்தா, இவங்கள்ள யார்கிட்டயாவது தரலாமே தாத்தா' வேணாம்னு சொல்லிட்டாங்கப்பா, இது என்ன அரண்மனையா அவங்க வந்து பங்கு போடரதுக்கு' பொக்கை வாய் காட்டி சிரித்தார். வாசன் நிறைய நேரம் பேசிக்கொண்டு இருந்தான், தன்னை தேடி வந்த மலர்வண்ணனிடம், 10 வயது சிறுவன், வருவதற்கு நேரமாகும் என சொல்லச் சொன்னான். 'சாப்பிடகூட வராம அப்படி என்ன பேச்சு' கடிந்து கொண்டே, சுந்தரனும், பாரதியும் வந்ததாக அம்மா சொன்னாள். நேரம் இரவு 11 தாண்டி இருந்தது! வாசன் சாப்பிடாமல் நேராக மாடிக்கு சென்றான். வானத்தில் ஒரெ ஒரு நட்சத்திரம் வெகு பிரகாசமாய் மின்னியது.

'வாசா, வாசா' அம்மா எழுப்பினார். தான் தாயிடம் மறந்து போய் இருந்தான் சொல்வதற்கு. விரைவாக எழுந்து அம்மாவிடமும் அப்பாவிடமும் விபரம் சொல்லிவிட்டு மாமா வீட்டுக்கு கிளம்பிப் போனான் வாசன். மாமா தயாராக இருந்தார். இருவரும் கிளம்பினர். சரியாக 6.00 மணிக்கு முதல் பேருந்து ஊருக்குள் வந்தது. வெள்ளை நிறம். அழுக்கில்லாமல் புதிதாய் குளித்து இருந்தது போல் இருந்தது. இருக்கைகள் கிழிசல் இல்லாமல் இருந்தது. பின்புறம் 6 இருக்கைகள் கழற்றி எடுக்கப்பட்டு இருந்தன, விவசாயத்து மூட்டைகள் ஏற்றி செல்வதற்கு அவை மிகவும் வசதியாய் இருந்தது. சாலைகள் சீராக இருந்த காரணத்தால் பேருந்து இந்த ஊரின் சாலையை தொட்டதும் சந்தோசமாக ஓடி வரும். சாலைகள் பழுதுபட்டுவிட்டால், பெரியவர் வினாயகம் தானாகவே முன்வந்து சாலை சீரமைப்பு பணியினை செய்துவிடுவார், ஊர்மக்களும் அவருக்கு ஆதரவாக இருந்து அப்பணியினை செய்ய உதவி புரிவார்கள். பேருந்து பயணம் மிகவும் சொகுஷு பயணமாக இருக்கும், அந்த ஊரில் இருந்து நகரத்தின் சாலை தொடும் வரை. இருவரும் ஏறி அமர்ந்தனர்.

நாளை மறுநாள் சென்னைக்குச் செல்லவேண்டும் என சுந்தரன் தன் தந்தையிடம் கூறியதால், தந்தை அதற்கான ஏற்பாடுகளை செய்ய சொல்லி இருந்தார், இன்னும் ஒருநாள் மட்டும்தான் இருக்கிறது. கல்லூரியில் போட்டு திரிந்த ஆடைகள், காலணிகளை எல்லாம் தயார் செய்து வைத்து கொண்டு இருந்தான். இனி இந்த

கிராமம் பற்றிய நினைவு நமக்கு தேவை இல்லை என எண்ணியவனாக இருந்த தனது பொருட்களையெல்லாம் மொத்தமாக கட்டி பரண் மேல் போட்டு வைத்தான். நகர வாழ்க்கையின் கனவிலேயே நேற்று இரவினை கழித்தான். சேகர் அய்யா கூறியபடி அவர்கள் செல்லும் புகைவண்டியில் தனக்கும் ஒரு பயண சீட்டு வாங்கிட வேண்டி நாணல்கோட்டை செல்ல நினைக்கையில், `அம்மா, நான் ஊருக்கு போறதுக்கு பயண சீட்டு வாங்கனும், வாங்கிட்டு வறேன்மா' என்றதும், `வாசனுக்கு எவ்வளவு நல்ல மனசுப்பா, நம்ம நிலம் எல்லாம் அவனே பாத்துகிறான், இப்போ உனக்கு ஒரு வேலையும் அவனால வந்துருச்சு' என வாசனை பாராட்டியவாறே, `வாசனை கூட்டிட்டு போய்ட்டு வா' என்றார். `சரிம்மா, என்றவன், வாசன் வீடு போனான்.

சுந்தரனை பற்றி மாமாவிடம் சொன்னான் வாசன். மாமாவும் `இதுக்குதான் படிக்கனும், படிச்சி இருந்தா நம்பிக்கை தானா வரும், நீ சொன்னா கேட்டாதான, அவனாவது அங்க போய் முன்னேறட்டும், எவனாச்சும் 1100 மதிப்பெண்கள் எடுத்துட்டு படிக்க வேணாம்னு வீட்டுல இருப்பானா, எல்லாம் உன் அப்பாவும் அம்மாவும் தர செல்லம் உனக்கு மருமகனே' என மாமா வாசன் அந்த மாவட்டத்திலேயே முதல் மாணவனாக வந்ததை நினைவு கூறினார். வாசன் சொன்னான் `நிர்பந்தத்தின் பேரில் வாழும் வாழ்க்கை நிம்மதி தராது மாமா, அதனாலதான் இந்த வாழ்க்கையை நான் தேடிக்கிட்டேன்' சிரித்தார் பொன்னுராஜ் மாமா `எல்லா விசயத்துக்கும் பதில் வைச்சு இருக்க'. மாமாவும், வாசனும் 7.30 மணிக்கெல்லாம் கடையை அடைந்தனர். நல்ல கல்லாக பார்த்து விலை பேசிவிட்டு, ரசீது வாங்கி கொண்டு கிளம்பினர். `முருகப்பன் கடையில வடையும் காபியும் குடிச்சிட்டு ஒரு சில பொருட்கள் வாங்கிட்டு போவோம்' என மாமா கூறியதை மறுக்காமல் குடித்துவிட்டு கிளம்பினர். மணி 8.15.

சுந்தரன், வாசன் நாணல்கோட்டை போனதை தெரிந்துகொண்டு தாமதிக்காமல் கிளம்பினான். மாரிமுத்து வாத்தியார் சொன்னதை நினைவில் கொண்டு இந்த பகுதிக்கு ஒரு பயண சீட்டு கிடைக்கும் என நம்பி 7.30 மணி பேருந்துக்கு பயணமானான். சுந்தரன் விளக்கு பகுதியில் இறங்கி புகைவண்டி நிலையம் நோக்கி சென்றான். அவனது அத்ரிஷ்டம் அவனுக்கு பயண சீட்டு

கிடைக்கவில்லை. சரியென அங்கிருந்து நேரடியாக பேருந்து நிலையம் சென்று சென்னைக்கு செல்லும் பேருந்து ஒன்றில் பதிவு சீட்டு வாங்கி விட்டு திரும்பினான். மணி 9.00. சுந்தரன் பேருந்தில் ஏறினான். மாமாவும் மருமகனும் அதே பேருந்தில் ஏறினார்கள். சுந்தரன் எல்லா விபரமும் சொன்னான். வாசன் சந்தோசப்பட்டான் 'உன்னால முடியும்டா என தட்டி கொடுத்தான்'. மாமா சுந்தரனுக்கு தைரியம் கலந்த அறிவுரை சொன்னார். 'பொறுப்பா இருந்து வேலைய கவனிச்சு நல்ல பெயர் வாங்கு' பேருந்து ஊர் எல்லை அடைந்தது.

7.

ஊரில் கொட்டு சத்தம் கேட்டது. 'காத்தமுத்து தாத்தா இறந்துட்டாராம்' இடியென விழுந்த அந்த விசயம் கேட்டு வாசன் கலங்கிப் போனான். "எது எப்படி நடக்க வேண்டுமோ அது அப்படியே நடக்கும்" துடித்து போனான். பைகளை மாமாவிடம் கொடுத்துவிட்டு, அவர் வாங்கினாரா என்று கூட பார்க்காமல் தாத்தாவின் வீடு நோக்கி ஓடினான் வாசன். 'உன் படத்தை தானய்யா தலைமாட்டில வைச்சிருந்தாரு, இன்னும் எந்திரிக்கலைன்னு பூட்டாத வாசக்கதவை நான் திறக்கையிலே, இப்படி பொணமா கிடக்காரு' பேச்சி பாட்டி வாசனை கண்டு, வைத்த ஒப்பாரி கேட்டு நொறுங்கி போனான் வாசன். தாத்தா ஆசையாய் ஒருமுறை தன் மனைவியுடன் நின்று ஒரு திருவிழா பொழுது வாசன் போட்ட வள்ளி திருமண நாடகத்தில் எடுத்த படம். முருகனோடு நிற்கிறமாதிரி இருந்ததாம் தாத்தாவுக்கு. வாசனுக்கு அப்போது 16 வயது தான் இருக்கும். சுவரில் அவர் அதனை ஒருபோதும் மாட்டி வைத்தது இல்லை. தாத்தாவின் கால்களில் விழுந்தான். 'இன்னும் அவரு பையன், பேர புள்ளைக எல்லாம் வரல, வந்ததும்தான் காரியங்கள் செய்யனும்' ஒரு மனிதரின் வாழ்வு முடிந்து போனது. வேலைகளை போட்டுவிட்டு வாசன் அம்மா, அப்பா அனைவரும் அங்குதான் இருந்தனர். ஊரில் இந்தமாதிரி விசயம் நடந்தால் ஊர் மக்கள் வேலையை நிறுத்தி விடுவார்கள் அது காலம் காலமாக தொடரந்து வரும் ஊர் வழக்கம்.

நேற்றுதானே பலமணி நேரம் பேசிகொண்டு இருந்தோம், நினைக்க நினைக்க வாசன் அழுகையை அடக்கமுடியாமல் தோற்றுப்போனான். அப்பா வந்தார் 'வாசா, ஆகிற காரியங்களை கவனி என எழுப்பினார். பெரியவர் வினாயகம்

வாசனை தனியாய் அழைத்து போனார். இரவு நெருங்கி கொண்டு வந்தது. இனி 2 மகன்களும், ஒரு பொண்ணும் வர வேண்டும், வருவதற்கு இரவு மணி 10 ஆகிவிடும். வாழும்போது உடன் இருந்து கவனிக்க தெரியாதவர்கள் இறந்தவுடன் வழி அனுப்பிட வந்தால் என்ன வராவிட்டால் என்ன. எரிக்கப்படாமல் காத்தமுத்து தாத்தாவின் பூத உடல் காத்துக்கொண்டு இருந்தது.

வாசன் தாத்தா சொன்னதையே நினைத்து கொண்டு இருந்தான். இறுக்கமாகி போனான் வாசன். வாசன் தன் தந்தையிடமும், பெரியவரிடமும் மட்டும் தாத்தாவின் ஆசையை சொல்லி இருந்தான். அவர்களிடம் அதை பற்றி இந்த தருணத்தில் எதுவும் பேசவேண்டாம் எனவும் கூறிவிட்டான். காலையில் உடலை எடுக்க வேண்டி ஊரின் பெரியவர்கள் பேசிக்கொண்டார்கள்.

வந்த அவரது மகன்கள் எல்லாம் தாத்தாவின் உறவுக்காரர் வீடுகளில் சென்று அயர்வில் உறங்கிப் போனார்கள். தாத்தாவின் மகள்களும் மருமகள்களும் அவரிடமே அழுதுகொண்டு இருந்தார்கள். பெண்களுக்கு தெரியும் வேதனைகளும் சோதனைகளும், ஆண்கள் நடந்தது நடந்துவிட்டது இனி நடக்கவேண்டியதை பார்ப்போம் என சென்றுவிடுவார்கள். மணி 2 ஆனது. வாசன் அந்த சிறிய வீட்டில் இடப்பட்ட பந்தல் தாவாரத்தில் அமர்ந்து இருந்தான். கதைகள் பேசிக்கொண்டும், உறங்காமல் இருப்பதற்கு அவ்வப்போது வழங்கப்பட்ட தேனீரும், காபியும் அருந்திகொண்டு வயதானவர்கள் இங்கும் அங்கும் அல்லாடிக் கொண்டு இருந்தார்கள். மரணம் பழகிபோன ஒன்று. சுகமான விசயங்களைப் போன்று துக்கமான விசயங்களும் தவிர்க்க முடியாதவை, அனைவருக்கும் தெரியும். பரிதாபமும், ஆதங்கமும் மட்டுமே எஞ்சி நிற்கும். தெரிந்து கொண்டுதானே இந்த வாழ்க்கையை ஒவ்வொருவரும் வாழ்ந்து கொண்டு இருக்கிறோம்.

முத்துராசு வந்தான். 'வாசு, போய் தூங்குப்பா, போக வேண்டிய வயசு வந்துருச்சு, போய் சேர்ந்துட்டாரு, எல்லாரும் ஒருநாள் போக வேண்டியவங்கதான், நல்ல ராஜ வாழ்க்கை வாழ்ந்தவர், தங்கமான மனுசர், இன்னும் கொஞ்ச காலம் இருந்து இருக்கலாம்' அதிகாரமாய் வில்லங்கமாய் பேசும் ராசு அண்ணனா இது என வாசன் அவரைப் பார்த்தான். 'ம்ம், இல்ல அண்ணே, உறக்கம் பிடிக்கல' என்றதும் ராசு காபி எடுக்க போனான்.

மரணம் ஒரு மனிதனை உலுக்கி எடுத்து விடும். நாம் எல்லாம் இறந்து போய்விடுவோம் என்ற எண்ணம் மட்டும் மேலோங்கி இருக்குமெனில் ஒருவரும் ஒன்றும் செய்ய முடியாது. சாகப்போகிற வாழ்க்கைக்கு எதற்கு இப்படி சலனபடனும் என மனது அடித்து கொள்ளும். இதனால்தான் எல்லாம் விதிப்பயன் என நாட்கள் நகர்ந்து கொண்டு இருக்கிறது.

முத்துராசு 'இந்தாப்ப, காபியாவது குடி' என தந்துவிட்டு நகன்றான். வாசன் காலையில் சாப்பிட்ட வடை காபியோடு சரி. வேண்டாம் என மறுக்காது வாங்கி பக்கத்தில் இருந்தவரிடம் தந்தான். வாசனது தாத்தா இறந்தபோது வாசனுக்கு வயது பத்து, பாட்டியும் ஓரிரு வருடத்தில் காலமானார். அப்போது அழுதுகொண்டு இருந்தவர்களையெல்லாம் அதிசயமாய் பார்ப்பான். 'சாமிகிட்ட போய்ட்டாங்க' வாசனுக்கு அப்படித்தான் சொல்லி இருந்தார்கள். இப்போதெல்லாம் வாசன் அப்படியெல்லாம் நினைப்பது இல்லை. சிறுவர்களிடம் அது போல சொல்வதும் இல்லை. மரணத்தின் விவரம் சொல்வான். 'அப்படின்னா சாமி' என கேட்கும் குழந்தைகளிடம் உதடு மட்டும் பிதுக்குவான். "உணர்ந்த நிலையில் நான் இல்லை, உங்களுக்கு உணர்த்த" என்பது போல், 'இருக்கார்' என கூறிவிட்டு அமைதியாகி போவான். கடவுளை பற்றி யாராவது பேசினால் அமைதியாகிப் போவான் வாசன்.

அழுகை சத்தம் குறைந்ததாய் இல்லை. ஒருவர் ஒருவராய் வந்து அழுதுகொண்டே இருந்தார்கள். ஒவ்வொருவரும் ஒரு கதை சொல்லி சொல்லி அழுது கொண்டு இருந்தார்கள். வாசன் கண்கள் குளமாயின. 'தாத்தா எனக்கு மகனாக, நீ எனக்கு மகனாக பிறந்து வரனும் தாத்தா' என அழுகையுடன் வந்த சத்தம் வாசனை உலுக்கியது. "இறந்தவர் பிறப்பரோ" வரிகள் ஓடியது மனதில். துக்கத்திலும் சந்தோசத்திலும் நமக்கே தெரியாமல் விழுகின்ற வரிகள் கவிதைத்துவமாக ஒருவேளை தெரியலாம், எண்ணங்களின் வெளிப்பாடுதானே கவிதை. வீட்டின் சுவர் வெறித்தவாறே ஒரு சுவரில் சாய்ந்தான்.

இதயம் பல நொறுங்கச் செய்து
இயற்கை எய்துவார்
செயற்கை மருத்துவம் இருந்தும்

உதயம் காண மறுத்திடுவார்
புண்ணியம் பல சேர்த்து இருந்தும்
மந்திரங்கள் பல கற்று இருந்தும்
மரணம் என்னும் ஒன்றை வென்றிடார்
இந்த உலகம் மாயை என்றே உழன்றிடுவார்...

பிறப்பவர் இறப்பது
பிஞ்சு மலருக்கும் தெரியும்
இறப்பவர் பிறப்பது
எவருக்கு இங்கு வெளிச்சம்
கடவுளின் அவதாரம் எல்லாம்
இறத்தலின் பிறப்பு எனின்
யுகம் வேண்டுமோ மறுபிறப்புக்கு...

அதிகாலையான பொழுது இன்னும் நேற்றைய தினமாகவே இருந்தது வாசனுக்கு.

காரியங்கள் நடந்து கொண்டு இருந்தன. ஊர் இளவட்டங்கள் இங்கும் அங்குமாக ஓடி கொண்டு இருந்தார்கள். ஊரை விட்டு எங்குமே போயிராத தாத்தா இன்று போயே விட்டார். கோவில்கள் திறக்கப்படவில்லை.

`நாளைக்கு கிளம்பனும் அண்ணே' சொன்ன சேகரை பார்த்து `சரி, போய்ட்டு வா' என சொன்னார் பெரியவர். அவரையும் சோகம் தாக்கி இருந்தது. `அடிக்கடி வரமுடியலைன்னாலும், வருசத்திற்கு ஒருமுறையாவது வந்துட்டுப் போ, ஒரேயடியா இப்படி அங்கேயே இருக்காத' சேகர் சரியென சொன்னார். இப்படித்தான் பெரியவர் சொல்வதுண்டு, வேலை காரணமாக எப்போதாவதுதான் வருவார் சேகர். பெரியவரும் சென்னைக்கு சென்றதில்லை இதுவரை.

வாசன் பெரியவர் வீட்டுக்கு வந்தான். அவன் உறங்காமல் அழுது இருந்ததால் முகம் சற்று வீங்கி இருந்தது. மயான கரைக்கு சென்று குளித்துவிட்டு வந்தான். கோவில்கள் திறக்கப்பட்டன. `அய்யா, தாத்தாவோட வீடு பத்தி காரியம் முடிஞ்சப்பறம் பேசலாம்னா, நாளைக்கே அவரோட இரண்டு மகனுங்க

கிளம்பனுமாம், ஏதோ முக்கிய வேலை இருக்காம், அதனால இன்னைக்கு இரவே பேசி முடிச்சிருவோம், நாளைக்கு எங்களை கேட்காம எப்படி செய்தீங்கன்னு பிரச்சினை வரும்' சொன்னான் வாசன். `அதெல்லாம் ஒன்னும் பிரச்சினை வராது தம்பி, நிலம் என்ன அவங்கள கேட்டா எனக்கு வித்தாரு, சரி நீ சொல்ற மாதிரியே பேசி முடிச்சிரலாம்' சொன்னார் பெரியவர். சேகர் `வாசா நாங்க நாளைக்கு கிளம்பறோம், அண்ணனுக்கு எப்பவும் போல உறுதுணையா இருப்பா' பேசும்போதெ நா தழுதழுத்தது சேகருக்கு. தலையாட்டினான் வாசன்.

பாரதி வாசனிடம் பேசவேண்டும் என கூறினாள். வாசன் அமர்ந்தான். `அவரோட மரணம் உன்னை பாதிச்சிருச்சா, முகமெல்லாம் வீங்கி இருக்கு, தூங்கவே இல்லையா' `இல்லை' என்ற வாசனை பாவமாக பார்த்தாள். பாரதிக்கு தாத்தா பழக்கம் இல்லை, ஒரு சில மணி நேரம் அங்கு வந்து இருந்துவிட்டு வீடு திரும்பி விட்டாள். இன்று காலையில் தாத்தாவை தூக்கி செல்லும்போது வந்தாள். `உன் கவிதை தாளெல்லாம் பிரதி எடுத்து வைச்சிருக்கேன், எல்லாம் நல்லா இருந்தது' என அவனது கவிதையெல்லாம் எடுத்து வர உள்ளே சென்றாள். சேகரும் பெரியவரும் ஒரு சில விசயங்கள் பற்றி உரையாடி கொண்டு இருந்தார்கள். பாரதியின் அம்மா எல்லாம் எடுத்து வைத்து கொண்டு இருந்தார்.

பாரதி வந்து கவிதை தாள்களை தந்தாள். பத்திரமாக வாங்கி வைத்தான் வாசன். `இனி இரண்டு வருசம் படிப்பு இருக்கு, அதுக்கப்பறம்தான் ஊருக்கு வருவேன், அதுக்குள்ளாற முடிஞ்சா இந்த இருநூறு கவிதைகளையும் சின்ன புத்தகமா போட்டு உனக்கு அனுப்பி வைக்கிறேன்' நன்றி சொல்லிவிட்டு கிளம்பினான் வாசன். துக்கமும் துயரமுமாய் இருந்தது வாசனுக்கு. மரணம் என ஒன்று நிகழ்ந்துவிட்டால் மற்ற விசயங்கள் தொடர்ந்து நிறுத்தப்பட வேண்டுமா என்ன, ஊர் தனது நிலைக்கு திரும்பி கொண்டு இருந்தது.

சுந்தரனை பார்த்தான் வாசன். சுந்தரன் `என்னடா நீ இப்படி இடிஞ்சி போய்ட்ட, ராத்திரியெல்லாம் அங்கேயதான் இருந்தியாம் என்னடா ஆச்சு உனக்கு' சுந்தரன் சொல்ல சொல்ல மறுபடியும் அழுதே விட்டான் வாசன். `வாசு, என்னடா' பதறினான் சுந்தரன். வந்த அழுகையை நிறுத்திக் கொண்டே `எல்லாம் எடுத்து வைச்சிட்டியா, நாளைக்கு சாயந்திரம் எத்தனை மணிக்கு கிளம்பனும் சொல்லு,

நான் கூட வரேன்′ வாசன் சொன்னான். `5 மணிக்கு போகலாம்னு இருக்கேன், உனக்கு மனசு சரியில்லாம இருக்கு, நீ இரு நானா போய்க்கிரேன், சின்னவர் முகவரி எல்லாம் எடுத்து வைச்சிருக்கேன் அவங்க ரயில்ல வர்றதுக்கும் நான் போய் அங்க சேர்றதுக்கும் சரியா இருக்கும், நீ கவலைபடாதடா′ வாசன் மனம் தேற்றினான் சுந்தரன். தான் வருவதாக சொன்னான் வாசன்.

வெளி உலக வாழ்க்கை தெரியாமல் வாழ்ந்துவிட்ட வாசனை எண்ணும்போது சங்கடமாக இருந்தது சுந்தரனுக்கு. தனது தங்கை படிக்கும் கல்லூரிக்காவது சென்று இருக்கிறானா அதுவும் இல்லை. நாணல்கோட்டை அதுதான் அவன் மிகவும் தொலைவாக சென்ற ஊர். சிலநேரங்களில் அப்பாதான் தங்கையை கொண்டு சென்று விடுவது, ஏதாவது தேவை என்றால் அவர்தான் போய் பார்த்து விட்டு வருவார், அம்மா கூட சென்று இருக்கிறார். கூட பொன்னுராஜ் மாமாவும் செல்வார். அவரது மகளும் அங்குதான் படிக்கிறாள்.

இந்த கிராமம் எத்தனை வல்லுநர்களை உருவாக்கி இருக்கிறது, எத்தனை வல்லுநர்களை உருவாக்கி கொண்டு இருக்கிறது. விவசாயம் இனி வரும் காலங்களில் இந்த ஊரில் யார் பார்ப்பது? விளைச்சல் இருந்தும் தண்ணீர் வசதி இருந்தும் இருக்கின்ற இந்த கிராமத்தின் நிலை இதுவெனில் வறண்ட பகுதி கிராமங்களை என்னவென்று சொல்வது. கூலி வேலைக்கு வெளி ஊருக்கெல்லாம் செல்லும் மனிதர்கள் வாழும் கிராமம் இப்போது, இனிமேல்?

மதியவேளையில் வாசன் முதன்முதலாக அன்றுதான் உறங்கினான். சாயந்திரமாக பாரதி வாசன் வீடு வந்தாள். வீட்டில் இருந்த அம்மா அவளை வரவேற்றாள். உட்கார்ந்தாள் பாரதி, வரகு திரித்து கொண்டு இருந்த அம்மா, நிறுத்திவிட்டு `இரும்மா காபி போட்டுட்டு வரேன்′ என எழுந்தாள். `இல்லம்மா இப்போதான் குடிச்சிட்டு வரேன், வாசன் நிறைய கவலைபட்டுட்டு இருக்கார், காலையில பாத்தப்ப முகமெல்லாம் வீங்கி இருந்தது, வீட்டுக்கு வந்துட்டாரா′ என தாயிடம் அவரது மகனை பற்றி மரியாதையுடன் பேசினாள். இதுதான் முறை. `ராத்திரியெல்லாம் தூங்காம இப்போ வந்து தூங்கிட்டு இருக்கான், நேத்து அவர்கிட்டதான் பேசிட்டு 11 மணிக்குதான் வந்தான் இன்னைக்கு அவர் போனதும் ஏதோ ஆனமாதிரி இருக்கான், தூங்கி எழுந்தா சரியாயிரும் எப்பவும்

ஒரு விசயத்துக்கும், இன்னொரு விசயத்துக்கும் இடைவெளி கொடுத்தா பிரச்சினை இருக்காதும்மா′ வாசனது அம்மாவின் தெளிந்த வார்த்தைகளை பாரதி கண்கொட்டாமல் பார்த்து கொண்டே இருந்தாள். `அம்மா நாளைக்கு ஊருக்கு போய்ட்டு வறோம், உங்களை பாத்துட்டு சொல்லிட்டு போக வந்தேன்′ என கிளம்ப இருந்தவளிடம், தோட்டத்தில் விளைந்து இருந்த சில பொருட்கள் கட்டி தந்தார். `அம்மா எல்லாம் எடுத்து வைச்சிட்டாங்க′ வேண்டாம் என மறுத்தாள். பின்னர் ஏனோ வாங்கி கொண்டாள். வாசன் இன்னும் உறங்கிகொண்டு இருந்தான்.

8.

வாசனை அம்மா எழுப்பிவிட்டார். வாசன் உறக்கம் கலையாமல் இருந்தான். 'பெரியவர் உன்னை கூப்பிட்டு வரச்சொன்னாராம் தம்பி, என்னான்னு பாத்துட்டு வந்து சாப்பிடு' என அம்மா சொன்னதும் உறக்கம் கலைந்தது. 'சரிம்மா' என முகம் அலம்பிக்கொண்டு கிளம்பினான். சில நாட்களாக கிணற்றில் முகம் பார்க்க மறந்து இருந்தான்.

பெரியவரின் வீடு அடைந்தான். பெரியவரும் சாரங்கனும் இவனுக்கு காத்து இருந்ததை போல 'வாசா, வா போய் இந்த விசயம்தனை பேசிட்டு வந்துரலாம்' என அழைத்து கொண்டு கிளம்பினார். தாத்தாவின் வீட்டில் இப்போது ஒரு சின்னதாய் விளக்கும் அதற்குமேல் அவருடன் கூடிய அவரது மனைவி படம் மாட்டப்பட்டு இருந்தது. பெரியவர் கட்டிலில் அமர்ந்தார். வாசன் நின்றான். மூன்று மகன்களை அழைத்து வரும்படி சொன்னார். மூவரும் முடி இறக்கி இருந்தார்கள்.

மணிக்குமார், சிவகுமார், முத்துகுமார் தாத்தா குமாரர்களை பெற்று இருந்தார். 'தம்பி மணி, இங்க வந்து உட்கார்' என அவரை அருகில் உட்கார வைத்து தாத்தாவின் விருப்பம் சொன்னார். 'எல்லார்கிட்டயும் கலந்து பேசிட்டு முடிவு என்னனு சொல்லுப்பா' பெரியவர் சொன்னதும் சிறிது நேரம் யோசித்தான் மணி. மற்றவர்களும் அருகில்தான் இருந்தனர். அனைவரும் வாசனை பார்த்தனர். வாசன் ஒன்றும் பேசாமல் நின்றான். சிறிது நேரம் அமைதி நிலவியது. 'இப்ப வந்து இதை பேசினது தப்புதான், இதுக்கு ஒண்ணும் அவசரம் இல்ல இப்ப' என மணியிடம்

கூறிவிட்டு மற்ற விசயங்கள் பார்க்குமாறு கூறினார். 'அய்யா அது எல்லாம் ஒன்னும் இல்ல, அவரு விருப்பப்படியே தம்பிகிட்ட கொடுத்துருவோம், எப்படியும் இதை பத்தி பேசித்தான் ஆகனும், இது அவருக்குனு இருந்த ஒண்ணு, அவர் அப்படி விருப்பபட்டு இருந்தா அதை மாதிரிதான் செய்யனும்' முத்துகுமார் சொன்னதும் யாருமே மறுப்பு சொல்லாமல் இருந்தார்கள். மணி வாசன் கைகளை பற்றி கொண்டான். பேசமுடியாமல் தவித்தான். மணிக்குத் தெரியும் இங்கு தனியாய் கிடந்து தவிக்கும் உள்ளங்களுக்கெல்லாம் அவனே ஆறுதல். சாரங்கன் அங்கு நடந்ததை பார்த்து கொண்டு 'இங்க இருக்கற பொருட்கள் எல்லாம் நீங்க எடுத்துட்டு போங்க, வீடு வீடாக இருக்கட்டும்' சொன்ன சாரங்கனை பார்த்து சிவகுமார் 'இல்லை மாமா, அப்படியே இருக்கட்டும், எதுவும் நாங்க எடுக்க வேண்டியது இல்லை' என்றான்.

இறந்ததும், பணத்துக்கும் இடத்துக்கும் பிள்ளைகள் அடித்து கொள்ளும் வாய்ப்பினை காத்தமுத்து தாத்தா யாருக்கும் தரவில்லை. வயது ஆகிறது என தெரிந்ததும் எல்லாம் சரியாக செய்துவிட்டார். எவர் வழியிலும் குறுக்கே நிற்கவில்லை அவர். எதை அவர்கள் செய்யவேண்டுமோ அதை செய்து விட்டு போகட்டும் என சுயமாக ஊரின் உதவியுடன் வாழ்ந்துவிட்டார். இனி இந்த வீடு வெறிச்சோடிதான் இருக்கும். சிறிது நேரம் அங்கேயே இருந்துவிட்டு பெரியவரும் சாரங்கனும் கிளம்பினார்கள். வாசன் அங்குதான் இருந்தான் இன்றும்.

சுந்தரன் இன்று கிளம்ப வேண்டிய அவசரத்தில் என்ன செய்வதென தெரியாமல் அமர்ந்து இருந்தான். அவன் நினைத்து கூட பார்க்கவில்லை இந்த வாய்ப்பு. 'எல்லாம் எடுத்து வைச்சிட்டேன்மா' என கூறிவிட்டு அம்மாவுடன் தோட்டம் சென்றான். வாசன் அங்கு இருந்தான். 'டேய், என்ன நீ இப்படி காரியம் பண்ணிட்ட, அது அவனுங்க வீடு, அவனுங்க சொத்து உனக்கு எதுக்குடா இவ்வளவு அக்கறை, அவர் என்ன வந்து பார்க்கவா போறாரு' சுந்தரன் இடித்துரைத்தான். அமைதியாக இருந்தான் வாசன். 'இப்படி ஏண்டா இன்னும் பழமையில ஊறி கிடக்க, நாளைக்கு இப்படி யாரவது என் பேத்திய கட்டிக்கோன்னு சொன்னா அதை நீ செய்வியா இன்னும் ரொம்ப வயசானவங்களுக்கு நீ தான் உதவி பண்ணிட்டு வர அப்படிங்கிறதை மறந்துராத,

பெரியவர் என்னடான்னா நீயே கதின்னு கிடக்கார் அதுல அந்த சாரங்கன் வேற' சுந்தரன் சொல்லால் எரித்தான். 'உதவின்னு கேட்டு வந்தா செய்றேன் அவ்வளவுதான்டா, அவங்களை ஒண்ணும் நான் சொந்தம் கொண்டாடலை நீ பேசற மாதிரி எல்லாம் யாரும் அவ்வளவு சுலபமா பேசமாட்டாங்க' வாசன் குரல் தோய்ந்து இருந்தது. 'நீ போய் நல்ல முறையில முன்னேறு, இந்த மண்ணோட வாழ்க்கை என்னோட இருக்கட்டும், தேவை இல்லாம மனசு குழப்பாத' வாசன் கூறியதை கேட்டு, 'சரி 3 மணிக்குள்ள வீட்டுக்கு வந்துரு' என சுந்தரன் நடந்தான். சுந்தரன், வாசன், பாரதி, சேகர், சரோஜா மற்றும் பெரியவர் பேருந்தில் ஏறி நாணல்கோட்டை அடைந்தனர். மணி மாலை 6.15. இன்னும் காத்தமுத்து தாத்தா வாசன் மனதில் நிழலாடி கொண்டு இருந்தார்.

விளக்குப் பகுதியில் பெரியவர், சேகர், சரோஜா மற்றும் பாரதி இறங்கி கொண்டனர். வாசன் சுந்தரனை சென்னை செல்லும் பேருந்தில் அனுப்பி வைத்துவிட்டு புகைவண்டி நிலையம் வருவதாக கூறினான். சென்னை வந்ததும் தன்னுடன் தொடர்பு கொள்ளுமாறு சுந்தரனிடம் கூறி சென்றார் சேகர்.

'இன்னும் அரை மணி நேரம் இருக்கு எனக்கு, நீ வேணும்னா அவங்களப் போய் அனுப்பி வைச்சிட்டு வீட்டுக்கு போடா' சுந்தரன் கூறினான். 'அவங்களுக்கு எட்டு மணிக்குத்தான ரயில், இரு கொஞ்ச நேரம் கழிச்சி போறேன்' என அடக்கமான பெட்டியை எடுத்து கொண்டு பேருந்து நிலையத்தில் இருக்கும் ஒரு கடையில் அமர்ந்தார்கள். சென்னை நகரம் பற்றி விவரித்து கொண்டு இருந்தான் சுந்தரன். 'இந்தாடா, இதை பத்திரமா வைச்சிக்கோ' என ஒரு தாளினுள் இடப்பட்ட 1000 ரூபாயினை சுந்தரனிடம் தந்தான் வாசன். 'அப்பா எல்லாம் தந்துட்டார், உனக்கு செலவுக்கு உபயோகப்படும் வேண்டாம்டா' மறுத்தான் சுந்தரன். 'வாங்கிக்கோடா' வாசன் சுந்தரனின் கைகளில் திணித்தான். ஒவ்வொருமுறை அவன் ஊருக்கு வரும்போதெல்லாம் கொஞ்சம் பணம் கொடுத்துதான் அனுப்பி வைப்பான் வாசன். இந்தமுறையும் அவன் மறக்கவில்லை. சுந்தரன் வேண்டாம் என சொன்னாலும் வேறு வழியின்றி வாங்கிக் கொள்வான். 'உலகத்தை புரிஞ்சிக்கோடா' சுந்தரன் மீண்டும் சொன்னான். 'உலகத்தையே ஒரு நாலு சுவருக்குள்ள தொலைகாட்சி மூலமா கொண்டுவந்துட்டாங்க, எத்தனை கதைகளும், படங்களும், புத்தகங்களும்

நாம் சந்திக்கும் மனிதர்களும் உலகம் பத்தி நமக்கு சொல்லிகிட்டு இருக்கு, நாம பார்க்குற விதம்தாண்டா உலகம், இதுல என்ன புரிஞ்சிக்கிட வேண்டி இருக்கு' வாசன் எப்போதுமில்லாமல் புதிதாய் சுந்தரனுக்கு இன்று சொன்னான். 'என்னடா தீடீருனு புதுசா என்னமோ சொல்ற, தாத்தா உன் உடம்புக்குள்ளாற புகுந்துட்டாறா' கலகலவென அவனுக்கே உரிய பாணியில் சிரித்தான் சுந்தரன். 'உனக்கு என்னோட வம்பு பேசறதே வழக்கமா போச்சுடா, நேரம் ஆகுது போய் ஏறி உட்காரு' என அவனை பேருந்தில் ஏற்றிவிடும் முன் ஆரத்தழுவினான் வாசன். சுந்தரன் கைகள் எடுத்து முதன் முறையாக வாசனை வணங்கினான், அவனது கண்களில் நன்றி சிறு துளிகளாய் தெறித்தது.

விளக்குப்பகுதியில் இறங்கி நடந்து கொண்டு இருந்தபொழுது 'அம்மா, ஒரு நிமிசம் அந்த கடையில சாமி படம் வாங்கனும்' பாரதி சொன்னாள். 'பூஜை அறை முழுக்க சாமி படம் நிரப்பி வைச்சிருக்க, இப்போ இதை எங்க கொண்டு போய் வைக்க' என அம்மா சொல்ல, 'வாங்கிக்கோம்மா' என பெரியவர் கடையின் அருகில் சென்றார். எத்தனை சாமி படங்கள். மாரியம்மனிலிருந்து காத்தாலம்மன் வரை. அதிகம் கடவுளை கொண்டு வாழும் குலம் நாம். ஊரில் நன்றாக ஒருவர் வாழ்ந்து அவர் செயற்கரிய செயல் செய்தாலும் செய்யாவிட்டலும் வாழ்ந்த வாழ்க்கைக்காக ஊர் தெய்வங்களாய் எத்தனை பேர் வணங்கப்படுகிறார்கள். ஊர் குட்டி தெய்வங்கள் ஊரை பாதுகாத்து வருவதாய் எவ்வளவு நம்பிக்கை. பாரதி சாமி படங்களைத் தேடிக்கொண்டு இருந்தாள்.

'அதோ அந்த நாராயணனோட நிற்கிற லக்ஷ்மி படம் எடுத்து தாங்க' பாரதி கடைக்காரரிடம் விலை கேட்காமல் படம் கேட்டாள். நாரயணனும் லக்ஷ்மியும் நின்று கொண்டு அருள்பாலிப்பது போன்று இருந்த ஒன்றரை அடி நீளமும் அகலமும் உடைய படம். 'இந்தாம்மா' என வெறும் காகிதத்தில் கட்டிய கடைக்காரரிடம் 'அதோ அந்த மஞ்சள் காகிதத்தில கட்டுங்க' என்றாள். 'அதுவும் காசுதான்மா' என்றவரிடம் 'பரவாயில்லை, கட்டுங்க' என்றாள். பணம் கொடுத்துவிட்டு புகைவண்டி நிலையம் அடைந்தனர்.

வாசன் சுந்தரனை அனுப்பிவைத்துவிட்டு புகைவண்டி நிலையம் நோக்கி நடந்தான். இவர்களை அனுப்பிவிட்டு வீடு போக கடைசி பேருந்தை தவற

விட்டுவிடுவோம் என தெரிந்தது. வாசனை கண்டதும் 'என்னாப்பா உன் தம்பிய அனுப்பி வைச்சிட்டியா' பெரியவர் கேட்டார். 'அனுப்பி வைச்சிட்டேன்யா, அந்த பேருந்து அம்பத்தூர்தான் போகுமாம் அதனால அவன் நீங்க இருக்குற இடத்துக்கு நேரா வந்துரதாகவும், அவனுக்கு நீங்க எக்மோர்ல காத்துட்டு இருக்க வேண்டாம்னு சொல்ல சொன்னான்யா' வாசன் மூச்சு வாங்கிகொண்டே பேசி முடித்தான். 'ஓ நல்லதா போச்சு' என சேகர் கூறினார்.

பாரதி வாசனிடம் வந்தாள். 'இந்தா' என தான் வாங்கிய படத்தை தந்து கொண்டு, 'உனக்கு பிடிக்கலைங்கிறதுக்காக எந்த மூலையிலும் தூக்கி போட்டுராத' என்றாள். வாசன் புரியாமல் 'எதுக்கு இது' என்றான். 'உனக்கு தரணும்னு தோணிச்சி, வாங்கினேன், வாங்கிக்கோ' என தந்தாள். பாரதியை மூவரும் பார்த்து கொண்டு இருந்தனர். வாசன் பெரியவரை பார்த்தான், அவரது முகத்தில் தவழ்ந்த புன்னகையை பார்த்து கொண்டு நன்றி சொல்லி வாங்கி கொண்டான். அவர்களை அனுப்பிவிட்டு வாசனும், பெரியவரும் நடக்க ஆரம்பித்தனர். 'அது என்னன்னு தெரியுமா?' என கேட்டார் பெரியவர். வாசன் 'தெரியலை அய்யா' என்றவன் ஒரு ஓரமாய் கிழித்தான். பெரியவர் அவனது முகத்தில் ஓடிய ரேகைகள் பார்த்தார்.

9.

ரயில் மெதுவாக நகர ஆரம்பித்தது. பாரதி, சரோஜா, சேகர் மூவரும் ரயில் பெட்டியின் மத்தியில் உள்ள இருக்கைகளில் அமர்ந்து இருந்தனர். அவர்களுடன் இரண்டு முதியவர்களும் ஒரு பொண்ணும் அமர்ந்து இருந்தனர். முதியவர்களுக்கு கீழ் இருக்கையில் படுப்பதற்கு இடம் கிடைக்கவில்லை, முதியவரின் வேண்டுகோளுக்கிணங்க, சேகர் இடம் மாற்றி கொண்டார். செல்கின்ற பயணத்தில் சுகம் இருந்தால்தான் நிம்மதி இருக்கும். முதியவர்களுக்கு நிம்மதியாக இருந்தது.

'வாசனுக்கு கொடுக்கத்தான் படம் வாங்கினியா?' அம்மா கேட்டார். 'ம்ம்' என தலையாட்டினாள் பாரதி. பாரதியின் தாயும் தந்தையும் காதலித்து திருமணம் புரிந்தவர்கள். எதையும் அவர்கள் பெரிதாக பாரதியின் நடவடிக்கைகளில் சட்டை செய்ததில்லை. விளக்கம் கேட்பார்கள், அதோடு விட்டு விடுவார்கள். 'என்ன

காரணம்னு தெரிஞ்சிக்கலாமா?' தாய் மறுபடியும் சாமி படத்தை பற்றிக் கேட்டார். 'கொடுக்கணும்னு தோணிச்சி, கொடுத்தேன் அம்மா, திடீர்னு வாங்கினதுதானே அந்த இடத்தில கடை இல்லாம இருந்ததுன்னா நான் வாங்கி இருக்கமாட்டேன் அம்மா' பாரதியின் பேச்சு எதற்கு வாங்கினாள் என அவளுக்கே தெரியாதது போல் இருந்தது. அம்மாவும் புன்னகைத்து கொண்டே, 'காரணம் இல்லாமவா வாங்கினே' என்றதும் 'வாங்கனும்னு தோணீச்சி வாங்கினேன்னு சொல்றா, அதைவிட என்ன காரணம் நீ எதிர்பார்க்கிற' என அப்பா மகளுக்கு ஆதரவாக பேசினார். 'காரணம் இருக்கும்' என அம்மா அமைதியாய் கேட்டார்.

மூவரும் மிகவும் அமைதியாய் பேசிகொண்டது அவர்களுக்கு மட்டுமே தான் கேட்டு இருக்க வேண்டும். மற்ற மூவரும் இவர்களது பேச்சில் கவனம் கொள்ளாது இருந்தனர் என்பது அவர்கள் வேறு விசயங்கள் உரையாடி கொண்டு இருந்ததில் தெரிந்தது.'வாசனுக்கு கடவுள் பிடிக்காதும்மா, அதனால ஏதோ தோணிச்சி வாங்கிட்டேன்' பாரதியின் பதில் கேட்டு அம்மா அதற்கு மேல் சாமி படம் பற்றி பேச விரும்பவில்லை. ரயில் வேகமாக போய் கொண்டு இருந்தது.

'இது என்னது, சாமி படம் வாங்கி தந்துருக்காங்க' என வாசன் கூறியதும் பெரியவர் 'நான்கூட வாங்கறப்ப ஊருக்கு கொண்டு போகத்தான்னு நினைச்சேன், இனிமேலாவது உனக்கு கடவுள் பற்றி பேச தோணட்டும்னு கொடுத்து இருக்கலாம்' என்ற பெரியவரை பார்த்து வித்தியாசமாக பார்த்தான் வாசன். 'சாமி படம் பார்த்துட்டே இருந்தா சாமி பத்தி பேச தோணுமா அய்யா' என்றான். 'இருக்கலாம்' என்றார் பெரியவர். வாசன் அமைதியாய் படத்தை பையில் வைத்தான்.

பெரியவர் கடவுள் பற்றிய விசயத்தை வாசனிடம் விவாதித்தது இல்லை. திருவிழா சமயங்களில் கூட வாசன் உதவிகள் புரிவானே தவிர சாமி பற்றி பேசவே மாட்டான். கோவிலுக்குள் நுழைவான், ஒரு ஓரமாக நின்று கொள்வான். ஆராதனை முடிந்து தீபம் வரும்போது, வணங்கிவிட்டு ஒதுங்கி கொள்வான். கடவுள் எதிர்ப்பு கொள்கையிலும் சரி, கடவுள் ஆதரவு கொள்கையிலும் சரி தன்னை அவ்வளவாக அவன் ஈடுபடுத்தி கொண்டதில்லை. பேருந்து ஊருக்கு செல்லும் சாலை தொட்டது. இறங்கி கொண்டார்கள். இனி நடந்து தான்

செல்லவேண்டும். இருள் சூழ்ந்து இருந்தது. செல்லும் வழியில்தான் மயானம் இருந்தது.

பெரியவர் தான் வாங்கிய நிலம் பக்கத்தில் உள்ள பக்கத்து ஊர்க்காரர்கள் நிலமும் வாங்க வேண்டும் என கூறினார். இன்னும் கொஞ்ச தூரம் வாங்கினார் எனில் அடுத்த ஊர் பகுதி வந்துவிடும். வாசன் என்ன காரணம் என கேட்கவில்லை. மயானத்தின் அருகில் நெருங்கினர்.

மயானத்தின் அருகில் வந்ததும் வாசன் கண்களை மூடினான். தாத்தாவின் கண்கள் இவனது கண்களுக்குள் வட்டமிட்டது. பெரியவரின் கைகளை பற்றினான். 'என்ன வாசா பயமா இருக்கா?' வாசன் பதில் ஏதும் பேசவில்லை, அவனது கைகள் வேர்ப்பதையும் வெப்பமாவதையும் பெரியவர் உணர்ந்தார். உணர்வுகள் நரம்புகள் மூலம் கடத்தப்படும், நரம்பியல் மண்டலம் மனித வாழ்வின் புதிர்களை மொத்தமாய் உள்ளடக்கி வைத்து இருக்கிறது. செல்களில் உள்ள கரு விசயம்தனை உள்ளடக்கிய ஒரு ரகசிய இடம். இயற்கையாய் அமைந்து இருக்கிறதெனில் எப்படி இப்படி, சிவப்பு ரத்த அணுக்களுக்கு கரு இல்லையாம்! இடத்திற்கேற்ப வாழ்வதற்கு தானே மாறிக்கொள்ளும் தத்துவம் வந்தது எப்படி? சில விசயங்கள் இனியும் விளங்காமால், விளக்கப்படாமல் இருக்கிறதே! வாழ்வின் சூட்சுமம் அறிய முயற்சிகள் தொடர்ந்து கொண்டேதான் இருக்கிறது.

'என்ன வாசா உடம்பு சூடாகுது, கை வேர்க்குதே' பெரியவர் சொன்னதும் வாசன் கைகள் விடுவித்தான். நடக்கமால் நின்றான். 'வா தம்பி, என்ன இது சுடுகாட்டுக்கு பக்கத்தில வந்ததும் ஏதோ பிரமை பிடிச்சவன் போல பேசமாட்டேங்கிற' கண்கள் திறந்த வாசன் தான் நடக்காமல் நிற்பதை உணர்ந்தவனாய் 'ஒன்றும் இல்லை அய்யா' என்றான். கைகள் வேர்த்து இருப்பதை பார்த்து துடைத்துக் கொண்டான். உடல் நடுங்க ஆரம்பித்தது. 'அய்யா தண்ணி வேணும்' வாசன் கேட்டவுடன் தன்னுடன் வைத்து இருந்த தண்ணீர் எடுத்து தந்தார் பெரியவர். பெரியவர் எப்பொழுதும் தன்னுடன் ஒரு பையில் குடிக்க தண்ணீர் எடுத்து செல்வது வழக்கமாகவே கொண்டு இருந்தார். சுத்தம் அற்ற தண்ணீரால் நோய்கள் அதிகம் பரவுவது உண்மை. முழுவதுமாய் கட்டுபடுத்தமுடியாவிட்டாலும் தண்ணீர் சுத்தம் பெரும் அளவு நோய்தனை கட்டுபடுத்த உதவும். குடித்தான் வாசன், இனியும் அதே

இடத்தில் நின்று கொண்டு இருந்தான். சிறிது நேரம் அமர்ந்துவிட்டு செல்லலாம் என கூறினான், தனக்கு கையும் காலும் வலிப்பதாக கூறிகொண்டே சற்று தள்ளி அமர்ந்தான். பெரியவர் என்ன நடக்கிறது என புரிந்து கொள்ளமுடியாமல் தானும் அமர்ந்தார்.

'என்னப்பா திடீருன்னு' பெரியவர் அவனது நாடி பிடித்து பார்த்தார். எதுவும் அவ்வளவு எளிதாக சொல்லிகொண்டு வருவது இல்லை, உருவாகும் கருவில் இருந்து கொண்டு போகும் மரணம் வரை. இப்போதெல்லாம் கருவினை சேமித்து வைத்தும், பொம்மை செய்து விளையாடுவதுபோல் நோயில்லாமல் எந்த விதத்தில் வேண்டுமோ அதுபோல குழந்தையினை தேர்வு செய்து விஞ்ஞானத்தின் விவரிக்க முடியாத எல்லைக்குள் நுழைந்து கொண்டு இருக்கிறோம், எல்லாம் இங்கு முன்னமே இருந்ததுதான், எடுத்து சொல்லி அதை செய்து காட்டியதும் விஞ்ஞான எல்லை விரிந்து கொண்டதாய் ஒரு எண்ணம். வாசன் உடல் சூடாகிகொண்டெ வருவதை உணர்ந்தார் பெரியவர். 'வாசா, வீட்டுக்கு போவோம் எழுந்து நட' பெரியவர் அவனது கைகள் பற்றி தூக்கிட முனைந்தார். 'கொஞ்ச நேரம் அய்யா' என்றான். கண்களை மீண்டும் மூடினான். காற்று கொஞ்சம் வேகமாக வீசத் தொடங்கியது. மழை வருவதுபோல் இருந்தது. 'மழைக்காத்து அடிக்கிற மாதிரி இருக்கு தம்பி, வீட்டுக்கு போயிரலாம்' பெரியவர் வாசனை அழைத்து செல்வதற்கு ஆயத்தமானார்.

வாசன் கேட்டான் 'எதுக்கு பெரியவங்களை எரிக்கிறாங்க, சின்னவங்களை புதைக்கிறாங்க' அவனது கேள்வியினை கேட்டதும் ஒன்றும் விளங்காதவராய், 'வாழ்ந்து முடிச்சவங்களை எரிச்சி காற்றோட காற்றா கலந்துர வேணும்னும், வாழ்ந்து முடிக்காதவங்களை மண்ணில விதை போல புதைச்சி மீண்டும் அவங்க பிறந்து வாழனும் அப்படிங்கிறது ஒரு ஐதீகம், என்னப்பா தீடீர்னு காய்ச்சல் அதிகமாகிட்டே போகுது தம்பி மயான காத்து உடம்புக்கு ஆகாது' தெரிந்த பதில் கூறியவாரே பெரியவர் எழுந்தார். 'நீங்க வாழ்க்கை வாழ்ந்து முடிச்சீட்டீங்களா' கேட்டவன் மயங்கி தரையில் விழுந்தான். பதறிப் போனார் பெரியவர். வாசன்தான் நடக்கலாம் என சொன்னான். இல்லையெனில் பெரியவர் ஆட்கள் அனுப்பி வாகனம் ஏற்பாடு செய்து இருப்பார். இப்போது என்ன செய்வது என புரியாமல்

தவித்தார்.

இளம் வயது குழந்தைகள் முதற்கொண்டு முதியவர்கள் வரை உபயோகப்படுத்தும் "நடக்கும் தொலைபேசி"யின் உதவி இப்போது பெரியவருக்கு புரிந்து இருக்கும். மாற்றங்கள் வர வர நம்மையும் மாற்றி கொண்டே இருக்க வேண்டும் நல்ல விசயங்களில் மட்டும். 'நாராயணா' பெரியவர் அழைத்தார். எதிர்பாராத விசயங்கள் நடைபெறும் போது தைரியமாக செயல்படுபவர்கள் வெற்றி பெறுகிறார்கள். மிகவும் சங்கடமான சூழலிலும் வளர்ந்து சாதிக்கும் மனிதர்கள்தான் சாமர்த்தியசாலிகள். படிக்க தெருவிளக்கு கூட இல்லாமல் சாதித்த மனிதர்களை விட பஞ்சு மெத்தையில் கணிப்போறியுடன் தவழும் மனிதர்கள் சாதிக்க முடியாமல் தவிப்பது ஏன்? உறுதிப்பாடும் உழைப்பும் இருப்பவன் உயர்ந்து கொள்கிறான். பெரியவர் சுற்றி சுற்றி பார்த்தார்.

மணி பத்து நெருங்கிக் கொண்டு இருந்தது. அனைவரும் படுத்து இருப்பார்கள். 'நாராயணா' மறுபடியும் அழைத்தார் பெரியவர். இறைவன் இருக்கிறான் எனில் எப்படி வருவான்! மனித உருவில் கடவுள்கள் தோன்றியதாய் பாட்டி சொன்ன கதைகள் பறை சாற்றும் இதிகாசங்கள், புராணங்கள்!!! பசிப்பவனுக்கு கிடைக்கும் ரொட்டிதான் அவனுக்கு கடவுள் என சொல்லி சென்ற ஞானிகள். மனிதனுக்கு உதவி தேவைப்படும் சமயத்தில் உதவும் மனிதன்தான் கடவுள் என உணர்த்தும் பலரது உரையாடல்கள், எப்படி வருவான் நாராயணன்! தாமதிப்பதில் அர்த்தம் இல்லை என உணர்ந்தார் பெரியவர். இரவில் தோட்டத்திற்கு செல்பவர் யாரேனும் வரமாட்டார்களா இருளில் கண்களை விளக்கு போல மாற்றி எட்டும் தூரம் வரை தேடினார். ஒரு பத்து நிமிடம் நடந்தால் ஊர் கண்ணுக்கு தெரியும்.

கிராமத்தில் வேகமாக தூங்கிவிடுவார்கள், தொலைகாட்சி வந்ததும் உறங்கும் நேரம் குறைந்து போனது. வாசனது முகத்தில் தண்ணீர் தெளித்தார் பெரியவர். உடல் சில்லென்று இருந்தது. வேர்த்து கொட்டி இருந்தது. வாசன் விழித்தான். சுய நினைவு அற்று போனதை உணர்ந்தான். 'வாசா' 'ம்ம்' என பெரியவரை பார்த்தான் வாசன். 'மயங்கி விழுந்துட்ட' என என்ன நடந்தது என கூறினார். தலை கனமாக இருந்தது, கிறு கிறுவென சுத்துவது போல இருந்தது வாசனுக்கு. சமாளித்துக் கொண்டவனாய் மெதுவாக எழுந்தான். மயானத்தை மறுபடியும் பார்த்தான்

வாசன். பெரியவர் 'நடந்துருவியா, முடியலைன்னா சொல்லு இன்னும் கொஞ்ச தூரம் தள்ளி உட்காந்துட்டு போகலாம்' என்றார். 'வீட்டுக்கு போய்ருவோம் அய்யா' என நடக்கலானார்கள். வாசனுக்கு உடல் மீண்டும் சுட ஆரம்பித்தது. வீடுகள் தெரிய ஆரம்பித்தன.

வெளிச்சம் இல்லாமல் இருந்தது. மின்சாரம் இல்லாமல் இருக்கலாம். அடிக்கடி மின்சாரம் இல்லாமல் போய்விடும் கிராமங்கள்தான் எத்தனை. நன்றாக காற்று வீசும், மழை பெய்யும் இந்த கிராமத்தில் இருளில் வெளிச்சம் இல்லாமல் இருப்பது சில நேரங்களில் கடினமாக இருந்தது. எரியும் விளக்குகள் கண்டுபிடித்தவன் கண்டுபிடித்த கண்டுபிடிப்புகள் எத்தனை எத்தனையோ. சிந்திக்கும் மனிதர்களே வாழ்வில் சிறப்பு அடைந்தார்கள். மெதுவாக நடந்து ஊருக்குள் நுழைந்தார்கள்.

பெரியவர் வாசனை அவனது வீட்டில் சென்று விட்டார். மின்சாரம் இல்லாத விளக்கு எரிந்து கொண்டு இருந்தது. வாயிலில் அமர்ந்தான் வாசன். அப்பாவும் அம்மாவும் வந்தனர். பெரியவர் வாயிலில் நின்று கொண்டு இருந்தார்.

வாசன் வாந்தி எடுக்க ஆரம்பித்தான். பெரியவர் அவனது தலையை பிடித்து கொண்டார். அம்மா பதற்றம் கொண்டார். `கடவுளே, மகனுக்கு என்ன ஆச்சு' என வந்தவரிடம் `பித்தமா இருக்கும்னு நினைக்கிறேன்' என்றார் பெரியவர். பெரியவர் நடந்ததை வாசன் தந்தையிடம் சொல்லவும் வாசன் முகம் அலம்பிக் கொண்டு வரவும் மின்சாரம் வந்து விளக்கு எரிந்தது.

ஓய்வு எடுக்குமாறு வாசனிடம் கூறிவிட்டு காய்ச்சல் மருந்து இருந்தால் தரச் சொன்னார் பெரியவர். காலையில் மருத்துவரிடம் சென்று பார்த்துக் கொள்ளலாம் என வாசன் எதற்கு நம்மை "நீங்க வாழ்ந்து முடிச்சீட்டீங்களா" என கேட்டான் என சிந்தித்தவாறே நடந்தார்.

வாசன் வீட்டினுள் சென்று உடைகள் மாற்றினான். `என்ன தம்பி செய்து, சரியா நீ சாப்பிடல, சரியா நீ தூங்கல அதான் எல்லாம் ஒன்னா சேர்ந்து வந்து உன்னை வதட்டுது' என அவன் தந்தை கூறினார். அம்மா கசாயம் எடுத்து வந்தார். `நாணல்கோட்டையில எதுவும் சாப்பிட்டியா' என அம்மா கேட்டார். `தோசை

சாப்பிட்டோம் அம்மா' என்றான். `அதான் உடம்புக்கு ஆகலை' அம்மா வைத்தியர் ஆனார். அவனது தலையில் தைலம் தேய்த்து மருந்து தந்தாள் அம்மா.

நல்ல வேளை பேய் அடித்தது என யாரும் அங்கு பேசவில்லை. கிராமத்தில் இது போல் வந்துவிட்டால் மாந்திரீகம் என்ற பெயரில் மந்திரித்து விடுவார்கள். வேப்ப மரத்து இலையை காட்டி பேய் விரட்டுவதாக சொல்லி வைப்பார்கள். இன்னும் ஒரு சில கிராமங்களில் நடந்து கொண்டுதான் இருக்கிறது. இது போன்ற செயல்களில் ஈடுபடக்கூடாது என கிராமத்து மக்களுக்கு எச்சரிக்கை தந்துவிட்டார் பெரியவர் பல வருடங்களுக்கு முன்பு. வாசன் வைத்து இருந்த பையில் நாராயணன் படம்! அம்மா ஆச்சர்யமாக அதனை எடுத்து தன் கணவரிடம் காண்பித்தார். காய்ச்சல் குறைந்து கொண்டு இருந்தது.

11.

சுந்தரன் சென்ற பேருந்து நடைபாதை கடையில் நின்றது. அவன் இறங்கி சென்று கடையில் காபி குடித்தான். `தம்பி எப்ப சென்னை போகுமாம் இந்த வண்டி, இவ்வள மெதுவா ஆமை மாதிரி ஊர்ந்து வருதே' என பக்கத்தில் இது நேரம் வரை அமர்ந்து வந்த சக பயணி சலித்து கொண்டார். `காலையில 7 மணிக்கு போய் சேருமாம், வேணும்னா வானத்தில நீங்க பறந்து போறது' என அவரை பார்த்து சொன்னான் சுந்தரன் அவருக்கும் ஒரு காபியை வாங்கி தந்தவாறே. நன்றியுடன் காபியை வாங்கி கொண்டு `பறக்கற வசதி இருந்தா, ஓசி காபி வாங்கி குடிப்பேனா' என பதில் சொன்னார். தொழில் விசயமாக சென்னை செல்வதாகவும், அங்கு ஓரிரு நாட்கள் தனது சகோதரரின் வீட்டில் தங்கிவிட்டு திரும்ப இருப்பதாகவும் தன் கதை சொன்னார். இவரை கேட்டோமோ என இருந்தது சுந்தரனுக்கு.

பேருந்து ஓட்டுநரிடம் `அண்ணே, இந்த வண்டி எப்போன்னே ஆமையா மாறிச்சு என இவர் கேட்கிறாரு' என அவரை கைகாட்டினான். உடனே அவர் `தம்பி நடப்பா, வண்டி கிளம்ப போகுது' என அவனை உள்ளே தள்ளினார். பேருந்து ஓட்டுநர் சுந்தரனை வித்தியாசமாக பார்த்து ஏதோ சொன்னார். சுந்தரன் அதை

கேட்கவில்லை போலும். இருக்கையில் அமர்ந்து கொண்டான். `என்ன தம்பி, நீ வம்பு பிடிச்சவனா இருப்ப போலிருக்கே' என்றார். `இப்போ என்ன நடந்து போச்சு, காபி குடிச்சா நல்ல தூக்கம் வருமாம், தூங்கிட்டு வாங்க சென்னை வந்துரும்' என்றான். எத்தனை மனிதர்கள் இங்கும் அங்குமாய் அழைகிறார்கள். பணம்தான் வாழ்வின் பெரும் தேவையாய் இருக்கும்வரை வாழ்க்கை பற்றிய சிந்தனையும் கடவுள் பற்றிய எண்ணமும் அறவே தேவை இல்லாத ஒன்றாகி இருக்க வேண்டும், ஆனால் அப்படி இல்லை. ஒவ்வொரு சாரரும் ஒவ்வொரு விதமாய் அணுகிக்கொண்டு இருக்கிறார்கள் வாழ்க்கை முறையை. வறுமையில் வாடும் குழந்தைகள் கோடி என இருந்தாலும் உலகம் எப்படி தோன்றியது என பல கோடி செலவில் ஆராய்ச்சி நடந்து கொண்டுதான் இருக்கிறது. மறுப்பதற்கில்லை. பேருந்து அதி வேகமாக செல்ல ஆரம்பித்தது. `இப்ப பார்த்தீங்களா வேகத்தை' சுந்தரன் சொன்னதும் `எங்கயும் மோதாம ஒழுங்கா போனா சரி' என்றார். சுந்தரனுக்கு என்ன சொல்வதென தெரிவதில்லை. எதையுமே சீர் தூக்கி பார்த்து கொள்ளத் தெரியாத உலகம் உள்ள மக்கள். குறைகள் சொல்லிக்கொண்டே வாழ்ந்து பழகிப்போனதின் விளைவு இது.

பாரதிக்கு மனது என்னவோ செய்தது. அவளால் தூங்கமுடியவில்லை. இன்னும் ஒரு சிலர் விளக்கு போட்டுக்கொண்டு படித்து கொண்டு இருந்தனர். இங்கு பெரியவர்கள் உறங்க வேண்டி இருந்ததால் விளக்கு அணைக்கப்பட்டது. வாசன் தான் கொடுத்த படத்தை பத்திரமாக வைத்து இருப்பானோ, மாட்டானோ என கவலை பட ஆரம்பித்தது அவளது மனது. ரயில் நின்றது. அருகில் விளக்கு போடப்பட்டது. தனது கைப்பையில் வைத்து இருந்த வாசனது கவிதையை எடுத்தாள். கடவுள் பற்றி எழுதிய ஒரு கவிதை படித்தாள். கடைசி வரிகள் மீண்டும் மீண்டும் படித்தாள்.

எல்லாம் கடந்து உள்ளவன்
எல்லை இல்லாதவன்
தவத்தினால் வருகை தந்தவன்
வரம் எல்லாம் அள்ளி தந்தவன்
வெறும் காட்சிகளாய் கதைகளாய் இன்று

உதவ ஒருத்தரும் இல்லை
என வருந்தியபோது
ஒருத்தர் வந்தார் கடவுள் போல
யரோ சொன்னது காதில் விழுந்தது
கடவுள் மனிதராய்
மனிதர்களே கடவுளாய்.

படம் தந்து அவனை காயப்படுத்தி விட்டோமோ என பட்டது அவளுக்கு. இரவு விடியுமா என இருந்தது அவளுக்கு.

12.

வாசன் அமைதியாக உறங்கினான். அம்மா இரவில் எழுந்து எழுந்து பார்த்துக்கொண்டாள். பொழுது விடிந்தது. வாசன் சற்று தெளிச்சியாக இருந்தான். அம்மா வாசனை பார்த்து 'இப்ப எப்படி இருக்குப்பா?' என்றாள். 'அசதியா இருக்குமா, ஆனா பரவாயில்லை' தெளிந்தவன் போல பேசினான் வாசன். 'இன்னைக்கு வேலை எதுவும் செய்ய வேண்டாம், வீட்டில இருந்து ஓய்வு எடுத்துக்கோ, நான் போய் ராசாத்திகிட்ட ஆட்களை கூட்டிட்டு போய் பருத்தி எடுக்க போக சொல்லிட்டு வரேன்' என கிளம்பிய தாயிடம் 'காட்டுக்கு நீங்க போகலையாம்மா?' 'நீ இப்படி இருக்க, மனசு கேட்கலை நானும் வீட்டுல இருக்கலாம்னு இருக்கேன்பா' என்றாள் தாய். 'எனக்கு ஒண்ணும் இல்லமா' என்றான் வாசன். அப்பா 'உனக்கு நல்லா இருந்தாலே நீ கவலைபடறமாதிரி நினைப்பா உன் அம்மா, இப்ப சொல்லவா வேணும்' என்றதும் ஒன்றும் பேசவில்லை வாசன்.

'என்னப்பா திடீருன்னு நாராயணனும் லக்ஷ்மியும் சேர்ந்து இருக்கற படம் வாங்கி இருக்க' படம் யாபகம் வந்தவளாய் கேட்டாள். 'அது அந்த பாரதி பொண்ணு தந்ததுமா' 'அப்பா அதை பூஜை அறையில மாட்டிவைச்சிட்டாருப்பா' என்றார் தாய். ம்ம் என தலையாட்டினான் வாசன். 'உனக்குதான் கடவுளை பத்தி பேசினா

எதுவும் பேசமாட்டியே' என்று கூறியவாறே அம்மா ராசாத்தியிடம் சொல்ல சென்றாள். அப்பா வியாபர விசயமாக வெளியில் கிளம்பினார். இன்று அவர் வீட்டுக்கு வரும்போது நிச்சயம் வாசன் வீட்டில் இருப்பான். அம்மா ராசாத்தியிடம் சொல்லிவிட்டு வந்தாள். ராசாத்தியும் கூடவே வந்தாள். 'இதுல நாலு பேருக்கு சாப்பாடு இருக்கு, வள வளன்னு பேசிட்டு இருக்காம வேலைய நல்லபடியா முடிங்க' என அம்மா ராசாத்தியிடம் கூறினாள். தண்ணிப்பானையை யாரிடமாவது கொடுக்க சொல்லிவிட்டு கிளம்பினாள் ராசாத்தி.

சிறிது நேரம் கழித்து பெரியவர் வாசன் வீடு வந்தார். பெரியவரை தேடித்தான் அனைவரும் செல்வார்கள். அவர் இந்த மாதிரி தருணங்களில்தான் மற்றவரை தானாகவே சென்று பார்ப்பார். பெரியவரைக் கண்டதும் 'வாங்க அண்ணே, உட்காருங்க' என்றார் தாய். 'இருக்கட்டும்மா, தம்பி இப்ப எப்படி இருக்கான்' என்றவரிடம் 'இப்ப தேவலை, மாடியில தான் இருக்கான், இதோ வர சொல்றேன் அண்ணே' என்றாள். 'இருக்கட்டும், நானே போய் பார்த்து பேசிட்டு வரேன்' என மாடிப்படிகள் ஏறி சென்றார் பெரியவர். வாசன் படித்துக் கொண்டு இருந்தான். 'உடல்நிலை எப்படிப்பா' என்றவர் 'என்னப்பா பெரிய புத்தகமா இருக்கு' என புத்தகத்தின் அளவினை பார்த்து சொன்னார். வாசன் பெரியவர் வந்து இருப்பதை கண்டதும் புத்தகத்தை மூடிவிட்டு 'வாங்க அய்யா, உடம்புக்கு நல்லா இருக்கு அய்யா, சொல்லிவிட்டு இருந்தா நானே வந்து இருப்பேனே' என எழுந்தவாறே சொன்னான். 'உட்காருப்பா, ஆங்கிலத்தில இருக்கே புத்தகம் என்ன புத்தகம்' என கேட்டார். வாசன் அது பார்மகாலஜி எனவும் மருந்து எவ்வாறு உடலில் வேலை செய்வதை விவரிக்கும் புத்தகம் எனவும் கூறினான். 'தங்கச்சியோட புத்தகம் அய்யா, நேரம் கிடைக்கறப்ப மருத்துவ சம்பந்தமான புத்தகங்களும் படிப்பது உண்டு அய்யா' என்றான். 'கல்லூரிக்கு போகாம பல விசயங்கள் படிக்க ஆசைபடற' என சிரித்தார். பெரியவரும் அமர்ந்தார். அம்மா தின்பண்டங்களும், தண்ணீரும் கொண்டு வந்து வைத்தார். காபி போட்டு வருவதாக சென்றார்.

'பக்கத்து ஊர்காரங்க கிட்ட இருக்கற நிலத்தை பேசலாம்னு இருக்கேன், இரண்டு நாள் கழிச்சி போவோம்' என்றார். 'சரி' எனச் சொன்னான் வாசன். 'ஏன் எதுக்குனு என்கிட்ட கேட்கமாட்டியா' என்றவர் 'இந்த நிலபரப்புல ஒரே ஒரு செடிக்கூட்டம்

வளர்க்க போறேன், இந்த பக்கத்தில இருந்து பார்த்தா அந்த பக்கம் வரைக்கும் ஒரே கடல் மாதிரி இந்த செடி பச்சை பசேல்னு இருக்கும்' என்றவரிடம் 'அது என்ன செடி அய்யா' என்றான். 'கேள்வி கேளுன்னு சொன்னதும் கேட்கற' என்றவர் 'அது மருத்துவம் முக்கியத்துவம் வாய்ந்த செடி, கரிசல் மண்ணுல மட்டும்தான் விளையும், செடி வளர்ந்து வரதுக்கே ஆறு மாசம் ஆயிரும் மூணு அடி உயரம்தான் வளரும், பூ காய் அப்படின்னு வர மூணு மாசம் ஆகும், ஆக மொத்தம் ஒரு வருசம் கிட்டத்தட்ட ஆகும், இதை உணவுக்கு பயன்படுத்த முடியாது' என்று விளக்கியவரிடம் 'இதனால என்ன லாபம், எங்க விதை கிடைக்கும்' என்றான் வாசன். 'இது ஸ்ரீவில்லிபுத்தூர் மலைச்சாரலில அபூர்வமா கிடைக்கும், எந்த வேளாண்மை அலுவகத்திலும் கிடைக்காது, லாபம் என்ன அப்படின்னு சொன்னா மனிதர்களுக்கு விலங்குகளுக்கு பறவைகளுக்கு நோய் வராம பாதுகாக்கும் தன்மை இதுல இருக்கு' வாசன் யோசித்தான் 'அப்படின்னா முதன் முதலா கொஞ்சம் வாங்கி முயற்சி பண்ணி இருக்கலாம், இந்த மண்ணுக்கு எப்படி வருதுன்னு பார்த்துட்டு, நிலங்கள் வாங்கி இருக்கலாமே, யார் யோசனை சொன்னது உங்களுக்கு அய்யா' என்றான் வாசன். 'சில வருடங்களுக்கு முன்னால, கனவில் கடவுள் நாராயணன் வந்து சொன்னார்' பெரியவர் வார்த்தை கேட்டதும் கலகலவென சிரித்துவிட்டான் வாசன். பெரியவர் ஏன் அவன் சிரித்தான் என கேட்காமல் 'இந்த செடியோட வேர், இலை, பூ, காய் எல்லாம் மருத்துவ குணம் வாய்ந்தது' என்றார். சிரித்த வாசன் சிரிப்பை இன்னும் நிறுத்தவில்லை. பெரியவர் 'வாசா' என்றார், அம்மா காபி கொண்டு வந்து வைத்தாள்.

பெரியவரை வித்தியாசமாக பார்த்தான் வாசன் சிரிப்பை நிறுத்தியவாறே. 'காபி எடுத்துக்கோங்க அண்ணே' என சொல்லிவிட்டு நகர்ந்தாள் அன்னை. 'எதுக்கு இப்படி சிரிப்பு' பெரியவர் கேட்டார். வாசன் சொன்னான் 'நீங்க சொன்னதை கேட்டதும் எனக்கு சிரிப்பு வந்தது' பெரியவர் வாசனை பார்த்தார். 'உனக்கு கடவுள் பற்றி பேச விருப்பம் இல்லைன்னா சொல்லு, நான் பேசலை, அதுக்காக இப்படி என் கனவுல வந்த விசயத்த உதாசீனப்படுத்த வேண்டாம்' பெரியவர் சற்று வருத்தம் கலந்த தொனியில் பேசினார். கோபம் வராமல் பார்த்துக் கொண்டார்.

வாசன் எழுந்தான் 'அய்யா, நீங்க சொல்றது கட்டாயமா பிறருக்கு வியப்பா

இருக்கலாம், எனக்கு சிரிப்புதான் வருது அதுக்காக நான் சிரிக்காம இருக்க முடியுமா?' நேற்று வந்த காய்ச்சல் முற்றிலும் குறைந்தது போல் இருந்தது அவனுக்கு. 'அப்படின்னா என்ன சொல்ல வர, நாராயணன் வந்தது நான் சும்மா சொல்றேன்னு நினைக்கிறியா?' பெரியவர் விவாதிக்க தொடங்கினார். வாசன் அமைதியானான். கடவுளை பற்றி பேச அவனுக்கு விருப்பம் இல்லையென கூறினான். விவாதம் தொடங்கப்படாமலே நின்று போனது. 'இதுதான் என் திட்டம் இந்த நிலத்துக்கு, அது என்ன செடி, என்ன அப்படிங்கிறதை நாம இரண்டு பேரும் போய்தான் பார்க்கபோறோம்' பெரியவர் உறுதியாக சொன்னார். வாசன் மறுக்கவில்லை.

'என்னைப்பார்த்து வாழ்க்கை வாழ்ந்து முடிச்சீட்டீங்களான்னு கேட்ட, என்ன அர்த்தத்தில கேட்ட' பெரியவர் நிலம் பற்றிய சிந்தனையை அகற்றிவிட்டு கேட்டார். வாசன் சற்று யோசித்தவாறே 'கல்யாணம் பண்ணினவங்கதானே வாழ்ந்து முடிச்சவங்க, நீங்க கல்யாணம் பண்ணலையே அதான் கேட்டேன் நீங்க எந்த வகைக்கு வருவீங்கன்னு' வாசன் பேச ஆரம்பித்து இருந்தான். பெரியவர் முகத்தில் சோகம் கவ்வியது. என்ன பதில் சொல்வதென்று தெரியாமல் திணறினார். 'தெரியலைப்பா' என்றார். பெரியவர் முகம் வாடியதை கண்ட வாசன் சுதாரித்து கொண்டவனாய் 'அய்யா, தப்பா கேட்டுட்டேனோ?' என்றான். பெரியவர் அவனிடம் 'நீ எப்பவுமே எனக்கு உறுதுணை, நீ என்னுடைய வாழ்க்கைய பத்தி பிறரிடம் கேட்டு தெரிஞ்சு இருந்தா நான் எதுக்கு கல்யாணம் பண்ணிக்காம வாழ்றேன்னு புரியும், என் வாழ்க்கையை உன்கிட்ட சொன்னா நீயும் வருத்தப்படுவ, அதனால இருக்கட்டும்' என பெரியவர் சொல்ல விருப்பம் இல்லாது இருந்தார்.

'எப்போ உனக்கு கடவுள் மேல ஒருவிதமான பற்று நிறைஞ்சு வருதோ அன்னைக்கு நான் சொன்ன கனவோட உள் அர்த்தம் புரியும்' என மீண்டும் பேசினார். வாசனுக்கு அவரை பேச விடவேண்டும் போல் இருந்தது. 'அய்யா நீங்க அன்னைக்கு ஏதாவது மூலிகைகள் இல்லைன்னா மூலிகைகள் விக்கிறவங்க இப்படி யாரையாவது சந்திச்சீங்களா, அவர்களோட பாதிப்பா கூட இருக்கலாம் உங்க கனவு, இல்லைன்னா நோயால் யாராவது அவதிபட்டு அவங்களை கடவுள்

காப்பாத்தின மாதிரி படம் பாத்தீங்களா, அதன் பாதிப்பாவும் இருக்கலாம் அந்த கனவு, கனவை நம்பி இவ்வள பெரிய காரியத்தில இறங்கிட்டீங்களே அய்யா' என்று கவலையோடு கூறினான் வாசன்.

பெரியவர் சொன்னார் 'இது வெறும் கனவு இல்லைப்பா, எந்த சம்பந்தமும் சேர்ந்து வந்தது இல்லை. மனித உருவுல வரலை நாராயணன், பெரும் ஒளியாக இருந்தது என்னை நேசித்த தமிழ் பக்தை இருந்த ஊரான ஸ்ரீவில்லிபுத்தூரிலே மலையின் அடிவாரத்தில் ஒரு அற்புத செடி இருக்கிறது அது அழிந்து கொண்டு வருகிறது அதனை நீ எடுத்து வளர்த்து உலகில் உள்ள உயிர்கள் குறை காப்பாயாக...' பெரியவர் தனது கனவின் ரகசியத்தை தொடர்ந்து சொல்லிக்கொண்டே இருந்தார். வாசன் சற்று பயந்தே போனான்.

இது எல்லாம் வெறும் கதை, நடக்க கூடிய சாத்தியமா? செடியாம், நாராயணனாம், உயிர் காக்கும் மருந்தாம் அதுவும் திருவில்லிபுத்தூரிலாம்! இப்படித்தான் இருக்கும் எல்லோர்க்கும்! அபிராமி பட்டரின் தவறான கணிப்பை அவரது பாடல்களால் சரியென அபிராமி மாற்றிக் காட்டியது உண்மையா? பாடல்கள் என்னவென்று தெரியாதவர் கவிதையில் காளி தேவியால் அருள் பெற்று காளிதாசனாக மாறியது உண்மையா? குரல் வளம் பாதிக்கப்பட்டு அதனால் அவதிபட்டு வருந்தி வருந்தி முருகனின் புகழ் பாடியதும் குரல் வளம் பெற்றதாய் இயம்பி சீர்காழியிலே பிறந்து பாடலால் உள்ளம் கொள்ளை கொண்டவர் கூறியது உண்மையா? கணித மேதை ராமனுஜருக்கு கூட கனவில்தான் கணிதம் சொல்லித்தரப்பட்டதாம் உண்மையா? ஆண்டாள் நேசித்த ரெங்கன், ரெங்கனையே அடைந்தாளாம் உண்மையா?

கருவிகளெ இல்லாத காலத்தில் கண்டுபிடிக்கப்பட்ட விசயங்கள் மாறிப்போனது இப்போது! இருளை நேசிக்கும் புளூட்டோ இப்போது கோள்களின் கூட்டத்தில் இருந்து விளக்கப்பட்டதாம் விளக்கம் தருகிறார்கள் வேடிக்கையாக இருக்கிறது!

எந்த ஒரு பொருளின் தனித்தன்மையை நாம் ஆராய்ந்து முழுவதுமாய் தெளிந்துவிடமுடியாது! அந்த அந்த பொருளின் நிலை அந்த அந்த பொருளுக்கு மட்டுமே துல்லியமாய் தெரியும். இதைதான் கல்லுக்கும் உயிர் இருக்கிறது என சொன்னார்களோ? அது வளரவும் செய்யும், தேயவும் செய்யும் பார்ப்பவர்களின்

எண்ணத்தை பார்வையைப் பொருத்தது அது.

பெரியவர் சொல்வதை கேட்டு கேட்டு இவனது நா வறண்டது! வாடி இருந்த பெரியவர் முகம் பிரகாசமாக மாறி கொண்டே வந்தது, பேச பேச அவருள் பெரும் ஒளி ஏற்படுவதை உணர்ந்தார். வாசன் என்ன செய்வதென தெரியாமல் எல்லாம் கேட்டான். இது என்ன மிகவும் புதுமையானதாக இருக்கிறதே! பெரியவர் கூறி முடித்தார். வாசனது முகத்தில் மறுபடியும் ரேகைகள் பார்த்தார்!

வாசன் பெரியவரை சொன்னதை கேட்டு மிகவும் அதிசயித்துப்போனான். வெறும் கதைகளில் மட்டுமே படித்து இருந்தவன் ஒருவர் தன்னிடம் இவ்வளவு விளக்கமாக எந்த ஒரு அடிப்படை காரணம் இன்றி இறைவனைப் பற்றி பேசிவிட்டு போனதை நினைத்து அவனுக்கு இது எல்லாம் எப்படி சாத்தியம் என நம்பிக்கையில் நம்பிக்கை இல்லாமல் போனான்.

'என்ன அண்ணன் சொன்னார்' அம்மா கேட்டாள். அம்மாவிடம் சொல்வதா வேண்டாமா எனப் புரியாதவனாய் ஒரு முடிவுக்கு வந்தவாறே சொன்னான் 'பெரியவர் கனவுல கடவுள் வந்ததாகவும், உலகத்துக்கு நல்லது செய்ய வேண்டும் என சொன்னதாகவும் சொன்னாரும்மா' என சுருக்கினான். அம்மா 'ஆ என்ன இது உலகத்தில இல்லாத அதிசயம், அது எதுக்கு உன்கிட்ட வந்து சொன்னார்' அம்மாவின் கேள்வியில் இருந்து பிரச்சினைகள் வரக்கூடும் என வாசன் உணர்ந்தான். 'அவருக்கு உதவி செய்யனும்னு கேட்டார்மா' என முடித்தான். அம்மா விபரீதமாக உணர்ந்தாள். வாசன் அம்மாவிடம் யாரிடமும் இது பற்றி பேச வேண்டாம் என கூறினான்.

நாலு பேரின் காதுக்கு இந்த விசயம் போகும் எனில் பெரியவருக்கு பைத்தியம் பிடித்து விட்டது என பேசுவார்கள் என அம்மாவுக்கு எச்சரிக்கை செய்தான் வாசன். வாசனுக்கு இது மிகப் பெரிய பிரச்சினையாக உருவெடுத்தது. அம்மா அப்பாவிடம் சொல்வார், அப்பா யாரிடமாவது சொல்வார். வாசனுக்கு இதை ரகசியமாக வைத்து இருக்க தெரிந்து இருக்க தெரியவில்லை. கடவுளுக்கும் இதற்கும் எந்த சம்பந்தமும் இருக்காது என நம்பிக்கையினை வேறு விதமாக நம்பினான் வாசன்.

சில வருடங்களாக மனதில் போட்டு வைத்து இருந்த விசயத்தினை நம்மிடம் எதற்கு திடீரென வந்து சொல்ல வேண்டும் அதுவும் நேற்று நோய்வாய்ப்பட்டு இருந்த தினத்தில். வாசன் யோசித்தான். என்ன காரணத்திற்கு பாரதி படம் வாங்கித் தர வேண்டும். நாராயணனின் சிந்தனை வாசனை மேலும் மேலும் சிந்திக்க வைத்தது. அப்பாவிடமும் சொல்லிவிட வேண்டும் இந்த விசயத்தை. இதனை மிகவும் சாதாரண விசயமாக நினைத்துவிட முடியாது.

வினாயகம் வீட்டில் சென்று அமர்ந்தார். அவரது நண்பர் சாரங்கன் வெளியூருக்கு சென்று இருந்தார். அவருக்கு மனதில் இருந்த பாரம் எல்லாம் இறங்கியது போல் இருந்தது. சில வருடங்களாக அவரது கனவில் நாராயணன் வந்து கொண்டே இருக்கிறார் என்பதை வாசனிடம் அவர் சொல்லாமல் விடவில்லை, இதனால்தான் வாசன் பயந்து போனான். "இல்லை" என்று இருப்பவனை காணாத காரணத்தால் சொல்லத்தகுமோ?

வினாயகம் கண்கள் மூடினார். பூஜை அறையின் கதவுகள் பார்த்தார். இத்தனை வருட காலங்கள் வாழ்ந்த வாழ்க்கையின் அர்த்தம் என்ன என தன்னைத் தானே கேட்டுக்கொண்டார். திருமணபந்தம் என்ற ஒன்றை ஏற்படுத்தி கொள்ளவில்லையெனில் வாழ்வு பூரணமாகாதா? அப்படியென்றால் ஞானிகள், சித்தர்கள், பிறர் வாழ்வுக்கு தன்னை அர்பணித்துக்கொண்டவர்கள் இவர்கள் வாழ்வு எதுவுமே பூரணமானதில்லையா? புரியாமல் பேசிய வாசனது வாசகம் பெரியவரை பெரும் பாடாய் படுத்திக் கொண்டு இருந்தது. கனவில் வரும் நாராயணனிடம் இவர் இதுவரை எதுவும் பேசியதில்லை என்பதை இப்போது அறிந்தார். இனிமேல் பேசும் வாய்ப்பு கிடைக்குமெனின் வாழ்வு பூரணமானதா என கேட்டுவிட வேண்டும் என உறங்கினார். பகலில் காணும் கனவுகள் பலிப்பதில்லையாம். அது சரி கனவுகள் எதனின் பிரதிபலிப்பு?

எத்தனை மனிதர்கள் தான் கண்ட கனவினை பற்றி ஆச்சர்யப்பட்டு இருக்கிறார்கள். தான் எப்போதுமே கண்டிராத இடம்தனை கண்டதாகவும் ஒரு புது உலகம் போல இருந்ததாகவும் எத்தனை எத்தனை கனவுகள். ஆழ்ந்த தூக்கத்தில் வரும் கனவுகள் பல அதிசயங்களைக் காட்டுமோ? அதெப்படி ஆழ்ந்தத் தூக்கத்தில் வரும் கனவு, அது உள்மனம் விழித்துக் கொண்டு இருக்குமாம்!

வாசன் புத்தகங்களைத் தேடினான். கனவுகளின் ரகசியம் பற்றிய புத்தகம். எடுத்தான் படித்தான். ஒன்றுமே விளங்கவில்லை. அவனது மனநிலை விளங்கும் நிலையில் இல்லை. விடுமுறைக்கு வரும் தங்கையிடம் இதைப் பற்றி விவரம் அறிய வேண்டும் என முடிவுடன் திருவில்லிப்புத்தூருக்கு செல்ல வேண்டுமே என யோசிக்கலானான்.

13.

சுந்தரன் சென்ற பேருந்து மிகவும் பாதுகாப்பாக ஆனால் தாமதமாக சென்னை சென்று அடைந்தது. அவனது அருகில் அமர்ந்து வந்தவர் தாம்பரத்தில் இறங்கிக் கொண்டார். சுந்தரன் சென்னைக்கு ஒரே ஒரு முறை வந்து இருக்கிறான். அம்பத்தூரில் இறங்கியதும் சேகர் அய்யாவிடம் பேசலாமா என நினைத்தான். 'சார், வாங்க சார், எங்க போகனுமோ அங்க பத்திரமா இறக்கிருறேன்' முன் பின் தெரியாத ஆட்டோ ஓட்டுநர் சுந்தரன் இங்கும் அங்கும் பார்த்துக் கொண்டு இருப்பதை பார்த்து வந்து அழைத்தான். சுந்தரன் தான் பேருந்தில் போய்க்கொள்வதாக கூறிவிட்டு பேருந்து நிலையத்தின் உள் சென்றான். ஒருவழியாக வில்லிவாக்கம் செல்லும் பேருந்தினை பிடித்தான்.

வீட்டின் முகவரி தேட வேண்டும். வில்லிவாக்கத்தில் இறங்கியவன் எந்த பக்கம் போவது என தெரியாமல் தேநிர் கடையில் தேநிர் வாங்கிக் குடித்துக்கொண்டு அங்கு இருந்தவர்களிடம் ராமகிருஷ்ணா தெரு செல்லும் வழி கேட்டான். வழி சொன்னவர்கள் வீடு வரை வந்தால் சுகமாக இருக்கும் என எண்ணிக்கொண்டான். கிராமமாக இருந்தால் வீட்டிற்கே கொண்டு சென்று விட்டுவிடுவார்கள். இங்கு வேலை செய்யாத ஆட்கள் கூட ஆயிரம் வேலைகள் இருப்பதாக அலட்டிக்கொள்வார்கள். நடக்கும்போதே மூன்று பேர்களிடம் கேட்டுவிட்டான் பாதையை.

ராமகிருஷ்ணா தெருவில் திரும்பினான். சாலை மிகவும் சுத்தமாக இருந்தது. இதுவரை நடந்து வந்த பாதையும் இந்த பாதையும் ஒன்றுக்கு ஒன்று சம்பந்தம் இல்லாமல் இருந்தது. இருபுறங்களும் வீடுகள் ஒருங்கே அமைந்து இருந்தன.

மரங்கள் சாலையை இன்னும் அழகுப்படுத்தின. பெரிய பெரிய வீடுகளாக இருப்பதை பார்த்தவுடன் அதிக பணம் உள்ளவர்கள் வசிக்கும் பகுதி என சுந்தரன் நினைத்துக்கொண்டான்.

8/26 ராமகிருஷ்ணா தெரு கதவின் அழைப்பு மணி அடித்தான். ஒரு 22 வயது மதிக்கத்தக்க இளம் வாலிபன் வந்து கதவை திறந்தான். அழகிய நிறம். 'வணக்கம், நான் சுந்தரன் சேகர் அய்யா வீடு...' என்ற சுந்தரனைப் பார்த்து 'ஆமாம் உள்ள வாங்க, நான் அருண் என்னை அடையாளம் தெரியலையா' என அவன் சொன்னதும் சுந்தரனுக்கு நகரத்திற்கு வந்து விட்டவுடன் கிராமம் மறந்து போனதை உணர்ந்தான். '14 வயசில உன்னைப் பார்த்தது, இப்போ ஆள் ரொம்ப மாறிட்ட' என்ற சுந்தரன் உள்ளே சென்று அமர்ந்தான். 'உன்னை நெத்தியில் அடிச்ச தழும்பு இன்னும் மாறலை' என சிறு வயதில் சண்டைப் போட்டு அடித்துக் கொண்டதை நினைவு படுத்தினான் அருண். சுந்தரனுக்கு வேறு எதுவும் யாபகத்திற்கு வரலையா என்பது போல் சிரித்தான்.

'என்ன பேருந்து ரொம்ப வேகமாக வரும்னு சொல்வாங்க, இவ்வளவு தாமதமா வந்து இருக்கே' என்றவரிடம் 'ஆமாம்' என தலையாட்டிக்கொண்டு 'ஓட்டுநர் புதுசாம், அதான்' என்றான். சுற்று சுவர் கட்டப்பட்டு இருந்தது வீடு. அழகிய கட்டிடம். சுவர் எல்லாம் வண்ணமயமான ஓவியங்கள். வீட்டில் நிலவும் அந்த அமைதியில் நாராயணனுக்கு சுப்ரபாதம் அப்போதுதான் முடிந்தது. வளைவாய் அமைந்த படிகள். எல்லாம் தேக்கு மரம் போல் இருக்கிறது. 'கிரானைட்' எனப்படும் பாறையால் இடப்பட்ட தரை. முகம் பார்க்கலாம். மேலிருந்து கீழ் பார்க்கும் வகையில் கட்டப்பட்ட மாடி. அங்குதான் பாரதி அப்போது வந்து நின்று கீழே பார்த்தாள்.

வீட்டினை சுற்றிக் காட்டினான் அருண். இத்தனை பெரிய வீட்டில் வேலைக்காரர்கள் இல்லையா என கேட்க நினைத்தான் சுந்தரன். ஒவ்வொரு அறையாய் காட்டினான். புத்தகங்கள் நிரம்பிய அறை பார்த்தான். இவ்வளவு புத்தகங்கள் இங்கு யார் படிக்கிறார்கள். எங்கள் கிராமத்தில் தானியங்கள் அடைக்கத்தான் அறை. வாசனது வீட்டில் புத்தகங்களை ஒரு அறையில் அடுக்கி வைத்து இருக்கிறான், அங்குதான் அவன் படுத்துக்கொள்வதும் உண்டு. சுந்தரனது

வீட்டில் புத்தகங்கள் அறை என்று எதுவும் இல்லை. பிரமித்தான் சுந்தரன். மிகவும் சுத்தமாக வைக்கப்பட்டு இருந்த குளியலறை. ஒவ்வொரு அறையுடன் இணைத்து கட்டப்பட்டு இருந்தது. எந்த அறை நமக்கு என நினைத்துக் கொண்டு இருந்தவனிடம் 'வீடு எப்படி இருக்கு' எனக் கேட்டான் அருண். பிரமித்தவனாய் 'பிரமாதமா கட்டி இருக்கீங்க' என்றான் சுந்தரன்.

வீட்டின் வெளியில் அழைத்து வந்து அருகில் இருந்த ஒரு தனி சிறு கட்டிடத்தைக் காட்டினான். 'எல்லாம் எடுத்துக்கோங்க, அங்கதான் நீங்க தங்கனும்' என அழைத்து சிறிய வீட்டினை அருண் திறந்து காட்டினான். எல்லா வசதிகளும் இருந்தது, இருந்தாலும் வீடு சிறியது தானே. 'இது விருந்தாளிகள் தங்குற இடம்' என சொன்னான். நான் வேலையாளி என நினைத்துக்கொண்டான் சுந்தரன். அருண் அரைமணி நேரம் கழித்து வருவதாக சொல்லி சென்றான். வீட்டின் பஞ்சு மெத்தையால் ஆன கட்டிலில் பொத்தென விழுந்தான் சுந்தரன். தான் இருந்த விடுதிக்கு இது எவ்வளவோ மேல், ஆனால் அந்த பெரிய வீடு... சுந்தரன் கோட்டை கட்டத் தொடங்கினான்.

அருணுடன் சாப்பிடச் சென்றான் சுந்தரன். அம்மா அதற்குள் உப்புமா தயார் செய்து வைத்து இருந்தார்கள். பேசிக்கொண்டே சாப்பிட்டார்கள். சேகர் அய்யா கடைக்குச் சென்று விட்டதாக தெரிந்து கொண்டான் சுந்தரன். இன்று காலையில் வந்தவர் ஓய்வு எதுவும் எடுக்காமல் அதற்குள் சென்று விட்டாரா, அப்படியெனில் நாமும் இன்று கடைக்கு செல்ல வேண்டும் போல என நினைத்துக்கொண்டான் சுந்தரன். பாரதி உறங்கச் சென்று விட்டாள். அம்மா சுந்தரனைப் பார்த்து, 'தம்பி, தங்கி இருக்கற இடம் எப்படி இருக்கு' என்றாள். 'அடக்கமா ஒரு சின்ன குடும்பத்துக்கு ஏத்த மாதிரி இருக்குமா' என்றான். எந்த ஒரு இடமும் சட்டென மனதில் பிடித்து விட்டாலும், பிடிக்காவிட்டாலும் சில மணி நேரங்கள், சில நாட்கள் என விட்டு விட வேண்டும், பின்னர் அந்த இடம் இன்னும் மனதில் பிடித்தால் அதுதான் உண்மையான பிடிப்பு! அப்போதுதான் பழகப் பழக நேசிப்புத் தன்மை அதிகரிக்கும். இதுதான் காரணம் என சொல்லி வரும் பிடிப்பும், பிடிப்பற்ற தன்மையும் நிலையானது அல்ல. காரணமே இல்லாமல் 'எனக்கு பிடித்து இருக்கிறது' என்று எதனையும் அடிப்படையாய் கொண்டு அடையாளம்

காட்டாமல் வரும் பிடிப்பு எப்போதும் கிறக்கம் அடையாது இறக்கம் அடையாது. 'இந்த ஊர் பிடிச்சிருக்கா' அருண் கேட்டான். சுந்தரன் அதிகம் பழகி இருக்காவிட்டாலும் 'பிடிச்சி இருக்கு' என்றான். ஏன் என்ற காரணம் கேட்டால் காரணம் தேடி தேடிச் சொல்ல வேண்டும்.

'நான் பார்த்துக்குற கடைய உனக்குக் காட்டிட்டு அப்பா வாங்கி இருக்கற புதிய கடையில போய் உன்னை விடறேன்' என காபி அருந்திக் கொண்டே சொன்னான். சுந்தரனின் நாக்கில் காபி சுட்டது. 'உஸ்' என்றான். 'சூடா இருக்குதுல்ல, பார்த்து குடி' என அம்மா சொன்னார். இளைப்பாறலாம் என்ற எண்ணங்களில் விழுந்த சூடு அது.

சுந்தரன் காரில் பின்புற இருக்கையில் ஏறி அமரப்போகும்போது அருண் அவனை முன்னால் வந்து அமரச் சொன்னான். வீட்டில் சமமாய் இடம் தராதவன் காரில் இடம் தருகிறான் என் சுந்தரன் நினைத்தான். காரை ஓட்டிக்கொண்டே 'உனக்கு பிரைவெசி வேணும்னுட்டுதான் தனியா வீட்டுல தங்க வைச்சிருக்கேன், அப்பா வீட்டுலதான் தங்க சொன்னார், நான் தான் உன்னை அங்கு தங்கச் சொன்னேன்' என்றவனைப் பார்த்து இன்னும் சிறு வயது மனஸ்தாபங்கள் உனக்கு என் மேல குறையில போல இருக்கு என நினைத்துக் கொண்டான். வாசன் இவனை மிகவும் கேட்டதாகக் கூறச் சொன்னதை சொல்லலாமா வேணாமா என எண்ணிக்கொண்டு இருக்கையில் 'என்ன அமைதியாயிட்ட, அங்க தங்கப் பிடிக்கலைன்னா வேற வீடு பார்க்கலாம்' என்று சொல்லிக்கொண்டே 'வாசு எப்படி இருக்கான்' என்றவனை சுந்தரன் ஒருமாதிரியாய் பார்த்துக்கொண்டே 'நல்லா இருக்கான், நீ தான் ஊருக்கு வரவே மாட்டேங்கிற' என்றான். தன்னை ஒதுக்கி வைத்து பேசுகிறானே என தனக்குள் வருந்திக்கொண்டு 'இல்லை இல்லை வீடு நல்லா இருக்கு, எனக்கும் ரொம்ப சவுகரியமா இருக்கும்' என்றான் சுந்தரன். எப்படியும் வாழ்ந்து காட்டிட வேண்டும் என்ற வைராக்கியம் இருந்தது.

அருண் அவனது கடையினைக் காட்டினான். அருண் டெக்ஸ்டைல்ஸ் என எழுதி இருந்தது. வள்ளுவர் கோட்டத்தின் அருகில் அமைந்து இருந்தது. சற்று பெரிய கடையாய் தான் இருந்தது. கீழ் அறையில் விற்பனை ஆரம்பித்து கொண்டு இருந்தது. 'வணக்கம் சார்' என கொஞ்சம் நடுத்தர வயதுக்காரர் அருணிடம்

சொன்னார். அருண் சுந்தரனை அறிமுகப்படுத்தினான் தழும்பையும் சேர்த்து. என்ன இவன் என நினைத்துக் கொண்டான் சுந்தரன் தான் மறந்த விசயம்தனை நினைவு படுத்திக் கொண்டே இருக்கிறானே எனப் பட்டது. மாடியில் பல துணிகள் விதவிதமாக அணிவகுத்து நின்றன. எப்படியும் 20 வேலையாட்கள் இருப்பார்கள் என எண்ணிக்கொண்டான். கடையின் விவரம் படிக்க வேண்டும் என எண்ணிக்கொண்டு இருக்கையில் 'இங்க நீ வேலை பார்க்கப்போறதில்ல, வா அப்பா கடைக்குப் போவோம்' என நகன்றான் அருண்.

சுந்தரனும் அருணும் கடையினை அடைந்தனர். கடை சைதாப்பேட்டையில் இருந்தது. இங்கும் அங்கும் செல்லவே அரைமணி நேரம் ஆகும் போல் இருக்கிறதே என எண்ணிக்கொண்டான் சுந்தரன். கடை வாசலில் பாரதி டெக்ஸ்டைல்ஸ் என இருந்தது. உள்ளே சென்று பார்த்தான். பல தையல் மெஷின்களுடன் பல ஆட்கள் வேலை புரிந்து கொண்டு இருந்தார்கள். கட்டிடம் புதிதாக இருந்தது. சுந்தரன் கால் தடுக்கி கீழே விழப்போனவனை பிடித்த அருண் 'இன்னொரு தழும்பு நீயா தேடிக்காத, அப்புறம் எனக்கு வித்தியாசம் தெரியாமப் போயிரும், பார்த்து' என சொன்னவனுக்கு சுந்தரன் நன்றி சொன்னான். உள்ளே நுழையறப்பவே தடுக்குதே என எண்ண அவனுக்கு வியர்த்தது. சென்னை சூடாகிக் கொண்டு இருந்தது.

14.

வாசனுக்கு உடல் நலம் நன்றாக தேறிவிட்டது. பெரியவர் வந்து சென்றதில் இருந்து அவன் மனம் அமைதியாய் இல்லை. அன்றைய தினம்தனை அவன் வீட்டிலேயே கழித்தான். எனக்கும் நாரயணன் கனவில் வரவேண்டும் என வேண்டிகொண்டான் விளையாட்டாக. கண்ணாடியின் முன்னால் நின்று சிரித்தான், 'எனக்கு கனவாய் நீ வா, உனக்கு நான் அடிமையாய்' ஏதேதோ பேசினான் வாசன். மறுநாளும் இப்படியே கழிந்தது. மாலைப்பொழுது வந்ததும் நேராக காத்தமுத்து தாத்தாவின் வீடு சென்றான். வீட்டினை திறந்து உள்ளே சென்றான். தாத்தா மறைந்து ஒரு சில நாட்கள்தான் ஆகிறது. மூன்றாம் நாளே காரியங்கள் எல்லாம் செய்துவிட்டு அனைவரும் கிளம்பி சென்று விட்டனர், வாசனுக்கு வருத்தமாக இருந்தது, இவ்வளவு அவசரமாய் எப்படி இவர்களால் வாழமுடிகிறது என நினைத்துக் கொண்டான். 'என்னப்பா விளக்கு ஏத்தி வைக்க

வந்தியா' என பேச்சி பாட்டி வந்து கேட்டார். 'ஆமாம் பாட்டி' என்றவனிடம், நீ என்கிட்ட சாவிய கொடு, நான் பார்த்துகிறேன், வாச தெளிச்சி கோலம் போட்டு வைக்கிறேன்' என்றார். வாசனும் நம்பிக்கையாய் சாவியை தந்தான்.

நேற்று பெரியவரை பார்த்தவன், நேராக பெரியவர் வீடு சென்றான். அங்கு வழக்கம் போல அவர் அவரது நண்பர் சாரங்கனிடம் பேசிக் கொண்டு இருந்தார். 'அய்யா, நாளைக்கு பக்கத்து ஊர்க்கு போய் நிலம் கேட்கனுமே...' என்றவனை 'வாப்பா வாசா, உட்கார் அப்பா சொன்னாரு உனக்கு இப்போ எல்லாம் சரியாயிருச்சினு, உடம்பு எல்லாம் நல்ல இருக்குதானே அது மயக்கத்து காய்ச்சல்' என்றார். உடனே சாரங்கன் 'என்ன வாசா, தம்பி எதுவும் தொலைபேசியில பேசினானா, சென்னை பிடிச்சிருக்காமா? என்றவர் சற்று தள்ளி அமர்ந்தார் வாசனுக்கு இடம் விட்டு. 'சித்தப்பா சொன்னார், நேற்று அவன்கிட்ட பேசினாராம் எல்லாம் நல்லா இருக்குனு சொன்னானாம்' என்றவனை 'உனக்கு கொடுத்து வைக்கல, இப்படி கிடைக்கிற வாய்ப்பை யாரச்சும் நழுவ விடுவாங்களா, உன் தம்பிய சும்மா ஒன்னும் அவர் கூட்டிட்டு போகலை இந்த ஊருல குரு மகன் இரண்டு பேரை விசாரிச்சிருக்கார் அப்புறம் கொத்தனார் பேரன், ஆண்டியப்பன் அப்படின்னு கிட்டதட்ட ஏழு எட்டு பேரை பார்த்து பேசிட்டு கடைசியில உன் தம்பிய கூட்டிட்டு போயிருக்கார்' என்று தனக்குத் தெரியாத விசயம் சொன்ன சாரங்கனை பார்த்தான் வாசன். பெரியவர் உடனே வாசனை நோக்கி 'எல்லாம் பண விசயம், பார்த்து நடக்கனும்னு செஞ்சி இருப்பான்' என சொன்னார். வாசன் நினைத்தான் நம்மை அழைத்ததால் தானே தம்பியை அனுப்பினோம், இனி ஊருக்குள் சிலரின் பேச்சுக்கு ஆளாக வேண்டி இருக்குமே! வாசனை பார்த்து 'என்னப்பா யோசனை, நாளைக்கு கிளம்புவோம், தயாரா இரு' என்றார் பெரியவர்.

வாசன் தோட்டம் சென்று இரண்டு நாட்கள் ஆகிறது. தோட்டம் சென்றான். பொன்னுராஜ் மாமா வாசனை பார்த்து 'உடம்பு சரியில்லைன்னுட்டு எதுக்கு இப்போ இந்த பக்கம் வர, வீட்டுல ஓய்வு எடுக்க வேண்டியதுதான மருமகனே, எல்லா வேலையும் நல்லாதான் நடக்குது' என்றவரிடம் நாளை தான் சேட்டூர் செல்வதாக கூறினான். 'என்ன நீ, உனக்கு என்ன சொன்னாலும் கேட்கமாட்டேங்கிது, அவர் இப்படி நிலத்து மேல நிலம் வாங்கிட்டே போறார்

கடைசியில நம்ம ஊருல கரும்புகை மேகம்தான் வரப்போகுது காரணமில்லாம இப்படி யாராச்சும் நிலங்கள் வாங்கிப் போடுவாங்களா தேவையில்லாம பக்கத்து ஊர்க்காரங்களை பகைச்சிக்க வேணாம் மருமகனே' என்று அன்பினால் கூறினார் மாமா. அந்த நேரம் பார்த்து முத்துராசு வந்தான். வாசனுக்கு தர்ம சங்கடமாய் இருந்தது. 'வாசு உன் நிலத்தில இருந்து இந்த பக்கம் தண்ணிய நாளைக்கு திறந்து விடு, நாங்க அந்த வயக்காட்டுக்கு இங்க இருந்து பாய்ச்சிக்கிறொம், என்ன' என்றவனை 'மாமா எல்லாம் செய்வார்' என்றான் வாசன். 'நீ எங்க போற' என கேட்டான் முத்துராசு. வாசன் பேசும் முன்னர் 'பெரியவரோட ஒரு வேளையா போறார் மருமகன்' என்று சொன்னதுதான் தாமதம் முத்துராசு கோபம் வந்தவனாய் 'நிலத்தை பார்க்கறதா இருந்தா இங்க இரு, இப்படி உடம்பு சரியில்லை, அவன் செத்துட்டான் இவன் செத்துட்டான்னு அவனுக்கு இந்த வேலை இவனுக்கு இந்த வேலைன்னு போறதா இருந்தா பட்டணம் ஓடிப்போ, அந்த பட்ட மரத்தை வெட்டச் சொல்லி எத்தனை நாள் ஆச்சு' என்றான். பொன்னுராஜ் மாமா முத்துராசுவை அவனது வேலையை பார்க்க சொல்லி அனுப்பினார். 'அதான் ஊருல பேசிக்கிறாங்க நீ சொல்லித்தான் உன் தம்பிய பட்டணம் கூட்டிட்டு போனாங்களாம்ல' முத்துராசு திருந்துவதாய் இல்லை. வாசனோடு முரண்டு பண்ணுவதே அவனது வேலையாய் இருந்தது. மாமா அதட்டினார், ராசு அடங்கினான்.

வாசன் தன் தோட்டத்தில் உள்ள அந்த பட்டுப்போன சிறிய மரத்தை தற்பொது வெட்டிவிட்டு செல்வதாகவும், நாளை மதியத்துக்குள் வந்துவிடுவதாக கூறிவிட்டு தோட்டத்தில் மெதுவாக மரத்தை சுற்றி தோண்டினான். ஒரு அடி ஆளம் சென்றது, ஒரு கல் தெரிந்தது. மரத்தை சாய்த்துவிட இந்த கல்லின் பகுதி சுற்றி தோண்டினான். ஆழத் தோண்டினான், ஒரு உருவச் சிலை இருந்தது, பட்டமரம் விழுந்தது! வாசன் எடுத்தான், பார்க்க நாராயணனைப் போன்ற உருவ அமைப்பு, அவனது கையில் இருந்து தவறியது

வாசன் தனது காலில் அந்த உருவச் சிலை விழுந்துவிடக்கூடாது என எண்ணி கைகளை முன்புறமாக நீட்டி, கால்களை பின்புறமாக எடுத்து வைத்தான். அவன் ஆழமாகத் தோண்டி இருந்த மண் குவியலில் கால்கள் பட்டு பின்புறமாக

விழுந்தான். 'நாராயணா' ஆம் அப்படித்தான் வாசன் சத்தம் போட்டுக்கொண்டு விழுந்தான். வலி ஏற்படும்போதோ, எதிர்பாராத ஒன்று நடக்கும்போது "ஆ" என்று அலறுதலும் இல்லையெனில் "அம்மா" "அப்பா" என்று சொல்லிக்கொள்வதும் எதேச்சையாக நடக்கும் செயல். "அய்யோ" என்று கூறக்கூடாது எனவும் அது உயிர் எடுக்கும் எமனின் மனைவியின் பெயர் எனவும் குட்டிகதைகள் உண்டு. இப்படி எதையுமே சொல்லாமல் நாராயணா என வாசன் சத்தமிட்டது ஆச்சரியமாக இருந்தது. ஒரு விசயத்தை பற்றிய சிந்தனை அதிகமாக இருப்பின் அந்த சிந்தனை மனதில் வெகுவாக பாதித்துவிடும். பிடித்த விசயமோ, பிடிக்காத விசயமோ எண்ணங்கள் முழுவதும் வியாபித்து விடுகிறது. நல்ல வேளையாக அந்த சிலை அவனது காலில் விழுந்து இருக்கவில்லை. விழுந்தவன் எழுந்தான். எந்த ஒரு விசயத்திலும் விழுபவர்கள் தானாக எழ பழகிகொண்டால் எந்த ஒரு வீழ்ச்சியும் அந்த மனிதரை தாக்கிவிடாது. 2 அடி உயரமும் 1 அடி அகலமும் 30 கிலோ எடையுள்ள சிலையினை தவறவிட்டுவிட்டோமோ என வாசன் சிலையை பார்த்துக் கொண்டு இருந்தான். சிலையை சுத்தமாக கழுவினால் 25கிலோ கூட இருக்காது. என்ன செய்யலாம் என யோசித்தான் வாசன். இருட்டி கொண்டு வேறு வந்தது. மாமாவும் ராசு அண்ணனும் இந்த பக்கம் வந்துவிட்டால் சிரமம் என எண்ணினான். மீண்டும் சிலையை மண்ணில் போட்டு மூடிவிட்டால் என்ன எனத் தோன்றியது வாசனுக்கு. சிலையை அப்படியே போட்டுவிட்டு மாமா தோட்டம் சென்றான். அவர்கள் குளித்து கிளம்பிக் கொண்டு இருந்தனர். 'என்ன மருமகனே, மரத்தை வெட்டிட்டியா போவோமா வீட்டுக்கு' என்றார். 'வேரோட சாய்ச்சிட்டேன், தரை கொஞ்சம் கடினமா இருந்தது' என்றவனை நோக்கி 'சரி வா போகலாம், அதை நாளைக்கு வெட்டிரலாம்' என்றார் மாமா. வாசன் தான் சிறிது நேரம் கழித்து வருவதாக கூறினான். அவர்கள் செல்வதைப் பார்த்துவிட்டு திரும்பி தன் தோட்டம் வந்தான்.

வாசன் சிலையை மெதுவாக தொட்டான். உடலில் ஏதோ ஒன்று பரவுவது போல் இருந்தது. கைகளை சுண்டி இழுத்தவாறே அமர்ந்துவிட்டான் வாசன். பாரதி தந்த நாராயணன், பெரியவர் சொன்ன நாராயணன் இந்த மண் தந்த நாராயணன்! அது எப்படி அவனது கண்களுக்கு அந்த சிலை நாராயணனாய் தெரிகிறது! எந்த உருவத்தையும் உள்வாங்கி கொண்டு பார்த்தால் எந்த பிம்பம் வெளிப்பட

வேண்டுமோ அந்த பிம்பம்தனை உணரலாம், கைகள் அமைப்பு முகவெட்டு எல்லாம் அவன் பார்த்த நாரயணன் படம் போல் இருந்தது. வாசன் நாராயணனின் பிடியில் சிக்கிக் கொண்டு இருந்தான். எப்படி சிலை இங்கு வந்தது. உழுது போடும்போது எப்படி இந்த சிலை அகப்படாமல் இருந்தது. அப்போதுதான் அந்த மரம் சுற்றி உழப்படாமல் இருப்பதை பார்த்தான். இந்த ஊருக்கு எப்படி எப்பொழுது குடியிருக்க வந்தார்கள். எப்படி கோவில்கள் உருவாக்கப்பட்டன எல்லா விபரமும் தெரிந்தால் ஒருவேளை இந்த சிலையின் பிண்ணனி தெரியும் என தன் நிலை வந்தவனாய் சிந்திக்கத் தொடங்கினான். யாரிடம் கேட்கலாம் என எண்ணியபோது பேச்சி பாட்டி யாபகத்திற்கு வந்தாள். சிலையை மறுபடியும் தொட்டான் வாசன் , இந்தமுறை எதுவும் ஏற்படவில்லை. தோட்டத்திற்கு தூக்கிச் சென்றான். தண்ணீரால் அபிஷேகம் செய்யப்பட்டது சிலை. கருங்கல்லினால் ஆன சிலை, செவல் மண்ணில் இருந்ததால் சிவந்து இருந்தது. கண்கள் தடவினான், இவனுக்கு கண்ணில் கண்ணீர் வருவது போல் இருந்தது. ஆசிர்வாதம் வழங்கிக்கொண்டு அழகிய பட்டாடை உடுத்தியது போன்றும், தலையில் கிரீடமும், நெற்றியில் ராமமும், முகத்தில் அழகிய புன்னகை தவழ விட்டும் எப்படி இவ்வளவு அற்புதமாய் இந்த சிலை செய்து இருப்பார்கள். சேட்டுரீல் சிலை செய்யும் கோபாலனிடம் இதை பற்றி கேட்டால் விவரம் கிடைக்குமோ என எண்ணினான். சிலையை ஒரு சாக்குப் பையால் சுற்றினான். கடவுளை பற்றி பேசாத, கடவுள் பற்றி அதிகம் சிந்திக்காமல் சாதாரணமாய் இருந்த வாசனுக்கு இப்படி நடந்த விசயங்களால் ஒரு வேளை கதைகள், புராணங்கள் எல்லாம் உண்மையோ என நினைக்கத் தோன்றியது. பல வருடங்களுக்குப் பின்னர் கடவுளின் சிந்தனைப் பற்றி மனதில் வரைந்தான் கவிதை. அவனுக்கு மனதில் அவனையும் அறியாமல் வந்து விழுந்தது "யாவும் நீ"! மீண்டும் அந்த இறைவன் வட்டத்தில் விழக்கூடாது என முடிவு செய்தான்!

பத்திரமாக வீடு வந்து சேர்ந்தான் வாசன் சிலையுடன். எப்போதும் போல் அப்பா இன்னும் வரவில்லை. அம்மாவிடம் காட்டி நடந்த விசயங்கள் சொன்னான். அம்மா சிலையை பார்த்து கண் கலங்கினார். உணர்வுகள் தீண்டப்படும் பொழுது உடல் ஆனந்தம் அடைவது போன்ற நிலை ஏற்படுகிறது. அதிகம் உணர்ச்சிவசப்பட்டாலும் கண்ணீர் வருகிறது. 'என்னம்மா' என்ற வாசனை நோக்கி

'பூஜை அறையில வைப்பா, இப்போதைக்கு இருக்கட்டும் நகை எதுவும் இல்லையே' அம்மா இதனால் பிரச்சினைகள் வந்துவிடக்கூடாது என கேட்டார். இல்லை என்று சொல்லிக்கொண்டு பூஜை அறையில் வைத்தான். பூஜை அறையைவிட்டு வாசன் திரும்பியபோது நிலையில் இடித்துக் கொண்டான். 'நாராயணா' என்றான் வாசன், அம்மா 'என்னப்பா பார்த்து குனிஞ்சி வரதுதான, அம்மானு தான சொல்வ இன்னைக்கு நாராயணா சொல்றியே' என வாசன் தலையை தேய்த்துக்கொண்டே கேட்டாள் அம்மா. தாய்க்கும் தாயானவனை அழைக்காமல் யாரை அழைப்பது! அப்போதுதான் வாசன் தான் சொன்னதை உணர்ந்தான். 'சிலை நாராயணன் மாதிரி இருந்தது, அதான்மா' வாசன் கதை சொல்லிவிட்டு வருவதாகச் சென்றான். குழந்தைகள் வாசன் சில நாட்கள் சரிவர வராமல் இருந்ததுக்கு கோபித்துக் கொண்டனர். 'நாரதர் எதுக்கு நாராயணா, நாராயணானு சொல்லிட்டு இருக்கார்' என படங்களில் அறிமுகமாகும் நாரதரை பற்றி பாபு கேட்டான்.

வாசனுக்கு பாபு கேட்டதும் 'அப்படி சொன்னாத்தான் அவர் நாரதருன்னு எல்லார்க்கும் தெரியும், அதனாலதான்' என்றவுடன் 'அப்படின்னா அவர் எதுக்கு கலகம் பண்ணிக்கிட்டே இருக்கார்' பாபு ஆவலாய் கேட்டான். வாசன் யோசித்துகொண்டு இருக்கும்போது, 'அண்ணே இவன் நேத்து சரஸ்வதி சபதம் படம் டி வி யில பார்த்தான், அதான் நாரதர் கீரதர்னு கதை சொல்றான், நீங்க கதை சொல்லுங்க அண்ணே' என்றான் சந்திரன். வாசன் சிரித்துக்கொண்டே 'நாரதர் கதையை சொல்றேன்' என நாராயணா நாராயணா என வினாடி மாறாமல் சொல்லிக்கொண்டு இருக்கும் நாரதரிடம் நாராயணன் ஒருமுறை எண்ணை நிரம்பிய விளக்கினை தந்து சிந்தாமல் ஒரு இடத்தை சுற்றி வரச் சொன்னதாகவும் நாரதரும் மிக கவனமாக சிந்தாமல் சுற்றி வந்ததாகவும், அவ்வாறு சுற்றி வரும்போது நாரதர் ஒருமுறை கூட நாராயணன் என்ற நாமத்தை உச்சரிக்கவில்லை என நாரதரிடம் நாராயணன் கூறியதாகவும் ஒரு அளவில் சிறிய கருத்தில் பெரிய கதையை கூறி முடித்தான் வாசன். 'என்ன அண்ணே சாமி கதை இன்னைக்கு' என்றான் தர்மன். 'கதைதான, சரி இந்த கதை சொல்ற நீதி என்ன தெரியுமா' எனக் கேட்டான் வாசன். உடனே 8 வயது நிரம்பிய சிறுமி சுமதி 'எந்த காரியம் செய்தாலும் கண்ணும் கருத்துமா செஞ்சா வெற்றி அடையலாம், அதுக்காக

நமக்கு பிடிச்ச விசயங்களை இழக்கிறதுல்ல ஒன்னும் நஷ்டமில்ல, இதுதான மாமா நீதி' என்றாள். வாசன் ஒருமுறை அல்ல, பலமுறை யோசித்தான். இதை யார் இந்த கோணத்தில் இவளை சிந்திக்கச் சொன்னது. கண்ணும் கருத்தும் சரி, பிடிச்ச விசயங்கள் இழப்பது? 'நீதி சரிதான், யார் சொன்னாங்க' என்றான் வாசன். 'எனக்கு அந்த சாமி ரொம்ப பிடிக்கும், எனக்கு மீரா மாதிரி இல்லைன்னா ஆண்டாள் மாதிரி ஆகனும்னு ரொம்ப ஆசை, நீங்கதான மாமா சாமி கதையே சொல்ல மாட்றீங்க, நான் எத்தனை தடவை அந்த சாமி பத்தி கேட்டு இருக்கேன், நீங்க உம் கொட்றதோட சரி' என வாசன் கேட்ட கேள்விக்கு பதில் சொல்லாமல் இதுதான் தருணம் என தனது பல நாட்கள் எண்ணத்தை இன்று சொல்லிவிட்டாள் சுமதி. மற்ற சிறுவர்கள் சுமதியையே பார்த்து கொண்டு இருந்தனர். அமைதி நிலவியது.

'சரி இனிமே சொல்றேன், யாரும் இந்த கதை சொன்னாங்களா' என கேட்டான் வாசன். இல்லை என தலையாட்டினாள், அப்படின்னா 'நீதி' என வாசன் திரும்பவும் கேட்டான். 'கதையிலதான் வருதே மாமா, நாரதருக்கு பிடிச்ச நாராயணன் நாமம் சொல்லாம காரியத்தை சரியா முடிக்கிறார்னு'. 'உனக்கு எதுக்கு மீரா இல்லை ஆண்டாள் மாதிரி ஆகனும்னு ஆசை, அது சரி மீரா யாரு, ஆண்டாள் யாரு' எனக் கேட்டான். சுமதி தயங்காமல் சொன்னாள் 'எனக்கு பிடிக்கிற சாமிய நேசிச்சவங்க அவங்க'. வாசன் கூர்ந்து அவளைப் பார்த்தான். அவளது கண்களில் அவனிடம் இல்லாத ஒரு தெளிவு தெரிந்ததைக் கண்டான். வேற கதை சொல்லுங்க என சிறுவர்கள் நச்சரித்தனர். 'எல்லாரும் புத்தகம் எடுத்து படிங்க' என்றான் வாசன். 'அண்ணே, எனக்கு இந்த கணக்கு புரியவே மாட்டேங்குது' என்றான் பழனி. வாசன் பாடம் சொல்லிக்கொடுத்து கொண்டு இருந்தான். பெரியவரின் கனவினை நனவாக்க வாசன் அப்பொழுதுதான் முடிவு செய்தான். சுமதிக்கு மனதில் நன்றி சொன்னான். அனைவரும் படித்துவிட்டு கிளம்பியதும் வாசன் சுமதியை அழைத்தான். 'உனக்கு யார் நாராயணன் சாமி பத்தி சொன்னது' என்றான். 'யார் சொல்லனும்' மௌனமாக சிரித்துக்கொண்டே சுமதி சொல்லிவிட்டு ஓடினாள். பிரபஞ்சம் படைத்தவனை பற்றி யார் யாருக்கு சொல்லித்தரவேண்டும். வாசன் மௌனமானான்.

அப்பா வாசனை பார்த்ததும் அமைதியாய் சத்தம் போட்டார். 'சிலைய எதுக்கு

வீட்டுக்கு எடுத்து வந்த, அது எந்த காலத்து சிலை எப்படி வந்துச்சு ஒரு விவரமும் தெரியாது, அப்படியே அங்கேயே போட்டுட்டு வரவேண்டியதுதான' வாசன் குறுக்கிட்டான் 'சிலை நம்ம நிலத்தில இருந்தது அது வெறும் கல்லுன்னா அப்படியே போட்டுரலாம் அதோட வேலைப்பாடு பாருங்கப்பா அந்த கண்ணை செதுக்கினவன் தன் கண்ணை எடுத்து வைச்சிதான் செஞ்சு இருப்பானோன்னு இருக்கு' என்றதும் 'இப்பவே சிலைய கொண்டு போய் பெருமாள் கோவில்ல வைச்சிட்டு வந்துரு, இப்படி சாமி சிலை எல்லாம் வீட்டுல இருக்கக் கூடாது' அப்பாவின் பேச்சால் வாசன் குழம்பினான். 'பெரியவர் கிட்ட ஒரு வார்த்தை கேட்கலாம்பா' என்றான் 'என்ன கேட்கப் போற, வீட்டுல வைக்கவா வேணாம்னா?' நீ என்ன செய்வியோ யார் கிட்ட கேட்பியோ இந்த சிலைய கொண்டு போய் வைச்சிட்டு வந்து சாப்பிடு, எனக்கு பசிக்குது' என்றார். 'நாளைக்கு கொண்டு போய் வைக்கட்டும், ஊருக்குள்ள தெரிஞ்சா பெரிய பிரச்சினையாயிரும் அதனாலதான் வீட்டுக்கு கொண்டுவந்துட்டான்' என அம்மா பரிந்து பேசினாள். வாசன் சாப்பிட்டு செல்வதாக கூறினான்.

பெரியவர் பூஜை அறையில் அமர்ந்து இருந்தார். இரவு தூங்கச்செல்லும் முன்னர் பூஜை செய்வது அவரது வழக்கம். வாசன் வாசலில் காத்து கொண்டு இருந்தான். சிவகாமி 'உட்கார் தம்பி, என கூறிவிட்டு கணவனுக்கு சாதம் பரிமாறச் சென்றாள். பூஜை அறையை விட்டு வந்த பெரியவர் வாசனை பார்த்ததும் 'என்னப்பா இந்த நேரத்தில, நாளைக்கு வேற வேலை இருக்கா' எனக் கேட்டார். வாசன் சிலை பற்றி சொன்னான். பெரியவர் 'அந்த சிலைய எடுத்துட்டு வா, வாங்கி இருக்குற தோட்டத்துல சின்ன கோவில் மாதிரி கட்டி வைச்சிரலாம்' என்றார் அமைதியாக. இந்த சிலை பற்றி எதுவும் தெரியுமா என கேட்டான் வாசன். பெரியவர் தெரியாது என்றார். 'நாராயணன் கனவில் வருவது உண்டா' என்றான் வாசன். 'இல்லை' என்றார் பெரியவர்.

பெரியவரின் கனவும் அதற்கு பின்னர் அவர் மிகவும் சாதாரணமாக இருந்து வருவதை எண்ணிப் பார்த்தான் வாசன். இறைவனை பார்த்தால் எப்படியெல்லாம் இருக்கும் ஒருவருக்கு, இறைவனை, கனவில் வந்தார் என்று பிரசங்கம் பண்ணியே ஒரு பெரும் கூட்டம் கூட்டி இருக்கலாம், இல்லையெனில் தான் வாழ்வின் உச்ச

நிலை அடைந்து விட்டேன் என ஒரு தனி அமைப்பு தொடங்கி இருக்கலாம், அப்படி எதுவுமே செய்யாது பெரியவர் இருந்தது வாசனுக்கு அதிசயமாக இருந்தது. வாசன் அப்பாவிடம் விசயம் சொன்னான். அப்பா சரி என சொல்லிவிட்டு பூஜை அறையை மறுபடியும் பார்த்தார். சாமியிடம் தன்னை மன்னித்துக் கொள்ளுமாறு கன்னத்தில் போட்டு கொண்டார்.

வாசன் தாமதமாக எழுந்தான். அன்று இரவு நாராயணன் கனவில் அவனுக்கு வரவில்லை. அர்த்தமுள்ள கனவுகள் அவ்வளவு எளிதாக வருவதில்லை, அதனால்தான் பலர் அர்த்தமற்ற கனவுகள் கண்டு வீண் பொழுது போக்குகின்றனர். கனவு வரவேண்டும் என நினைத்துகொண்டே இரவு நேரம் பறந்தோடி இருந்தது வாசனுக்கு. அப்பா வியாபாரத்திற்கு போகாமல் ஏதோ எழுதிக் கொண்டு இருந்தார். கணக்கு எழுதுகிறார் என எண்ணிக்கொண்டு குளிக்கச் சென்றான் வாசன். குளித்துவிட்டு வந்து பார்த்தபோதும் எழுதிக்கொண்டு இருந்தார். 'என்னப்பா இன்னைக்கு வியாபாரத்துக்கு போகலையா, கணக்கு வேணும்னா நான் எழுதி வைக்கிறேன்' என்றான் வாசன். 'அது எல்லாம் இல்லப்பா' என்ற தந்தை என்ன எழுதுகிறார் எனப் பார்த்தான் வாசன். அவர் ஸ்ரீராமஜயம் எழுதிக்கொண்டு இருப்பதை பார்த்து 'என்னப்பா திடீருன்னு ஸ்ரீராமஜயம் எழுதுறீங்க' என்றான் வாசன். 'நேத்து சாமிய நிந்திச்சிட்டேன், அதான் எழுதிட்டு இருக்கேன், சாமி குத்தம் ஆயிறக்கூடாது பாரு' என்ற தந்தையை நோக்கி 'தண்டனை தராது சாமி, இல்லைப்பா எந்த கடவுளும் யாரையும் தண்டிக்கிறது இல்ல, இப்போ என்ன தப்பு செஞ்சுட்டீங்கன்னு இப்படி நேரம் போக்கிட்டு இருக்கீங்க' என்ற மகனைப் பார்த்து 'எனக்கு மனசுக்கு பட்டது, எழுதுரேன்பா' என்றார். பயம் எங்கே தண்டிக்கப்பட்டுவிடுவோமோ என்ற பயம்தான் கடவுளிடம் ஒரு மனிதனுக்கு இருக்கும் உறவு. பயத்தினால் வருகின்ற மரியாதையும் அன்பும் அர்த்தமற்றவை. பயம் எப்பொழுது விட்டு போகின்றதோ இவையும் விட்டுப் போகும். தெய்வம் நின்று கொல்லுமாம், கொல்லும் தெய்வம் என்று எதுவுமே இல்லை, அப்படியெனில் இதிகாசங்கள், புராணங்கள்? எழுதப்பட்டவை எழுதப்பட்டவையே, நடந்தவை நடந்தவையே! எப்படி வேண்டுமானாலும் ஒருவர் அதனின் உட்கருத்து எடுத்துக்கொள்ளலாம். வாசன் அப்பாவிடம் சொன்னான் 'ஸ்ரீராமஜயம் எழுதுரதால தப்பு குறையும்னு, ஆயிரம் தப்பு செஞ்சு ஸ்ரீராமஜயம்

எழுதி தப்பிச்சிக்கலாம்பா ஆனா அது உங்க மனசு சாந்திக்கு' என்றவனை 'மனசாட்சி இருக்கேப்பா' என்ற அப்பாவை பார்த்து தீர்க்கமாக சொல்லிவிட்டு நடந்தான் 'மனசாட்சி உள்ளவங்க தப்பை திருப்பி திருப்பி செய்யமாட்டாங்க, அதனால உயிர்க் கொல்லும் தெய்வம்னு, மனிதனுக்கு தண்டனை தரும் தெய்வம்னு எதுவுமே இல்லை, காக்கத்தான் கடவுள்' மகனின் கடவுளின் உபதேசம் கண்டு வியந்தார் தந்தை. அம்மா சிறு வயதில் கடவுள் பேசும் வாசன் திரும்ப வந்ததுபோல் உணர்ந்தார். கடவுள் நம்பிக்கை உள்ள மனிதர்கள் தவறு செய்யமாட்டார்கள் என்பது ஒரு எண்ணம். கடவுளின் பெயரால் தற்போது நடைபெற்று வரும் விசயங்கள்... செய்பவர்களைத்தான் கேட்கவேண்டும்! அப்பா எழுதியதை மூடிவைத்துவிட்டு வேலைக்குக் கிளம்பினார்.

சிலையை எடுத்து சாக்கினில் சுற்றினான் வாசன். நேராக பெரியவர் வீடு சென்றான். அவரும் தான் பெருமாள் கோவில் பூசாரியினை விசாரித்ததாகவும் பிரதிஸ்டை செய்து கோவிலில் வைக்கும் முன்னர் சில சாத்திரங்கள் செய்ய வேண்டும் என்றும் அதனால் தற்போது இருக்கும் பெருமாள் கோவிலிலேயே ஒரு இடத்தில் வைத்து மண்டபம் கட்டலாம் எனக் கூறினார் அதுதான் தனக்கும் சரியெனப்படுகிறது என பெரியவர் வாசனிடம் கூறினார். வாசன் 'என்ன செய்யவேண்டும் அய்யா' எனக் கேட்டான். 'இப்போ சிலையை கொண்டு போய் பெருமாள் கோவிலுல வைச்சிரு, பூசாரி சிலைய நெல் குவியல்ல போட்டு வைப்பார் இது பேரு தான்யா வாசம், அப்புறம் கும்பாபிஷேகம் பண்றதுக்கு சிலநாட்கள் முன்னால சிலையை தண்ணீரீலே போட்டுவைப்பாங்க அது ஜலாதி வாசம் ஒரு நாள் இல்லைனா இரண்டு நாள் இருக்கலாம் அப்புறம் சீராதி வாசம் சிலையை பால்ல போட்டு வைப்பாங்க அதுக்கப்பறம்தான் சிலையை கழுவி பிரதிஸ்டை செய்யனும்' வாசனிடம் விளக்கினார் பெரியவர். தெருவில் கிடக்கும் கல் எல்லாம் கடவுள் சிலையாகும் தகுதி அடைவதில்லை. வாசன் பெருமாள் கோவிலில் சென்று தந்தான். பூசாரி அவனை பார்த்து சிலையை எடுத்த நீ மிகவும் அதிர்ஷ்டக்காரன் என சொன்னதும் மனதுக்குள் சிரித்துக் கொண்டான். கைகள் எடுத்து பெருமாளை வணங்கினான். பூசாரி பூவினை எடுத்து தந்தார். நெல் குவியல் தயாராய் இருந்தது.

பெரியவர் தயாராக இருந்தார். சேட்டுருக்கு நடந்து செல்வோம் என முடிவு எடுத்த வாசனை வேண்டாம் பேருந்தில் செல்லலாம் என கூறிவிட்டார். நாணல்கோட்டையில் இருந்து வரும் பேருந்து சேட்டுருக்கு செல்லும். சாரங்கனும் வந்தார். ஒரு நல்ல காரியத்திற்கு மூவராகவோ இல்லை ஐவராகவோ செல்லக்கூடாதாம்! மூவராய் இருக்கும்போது நால்வராய் கடவுள் வருவதாக நினைத்துக்கொள்ள வேண்டும் அப்படியெனில் நால்வராய் இருந்தால் கடவுளோடு ஐவர் ஆகிவிடுமே! கடவுள் தன் துணையுடன் வருவதாய் கணக்கு வைத்துக் கொள்ள வேண்டும், ஆறாகி விடும்! நமது தேவைக்கு ஏற்ப சமயத்திற்கு ஏற்ப வாழ்ந்து கொள்வதுதான் வெற்றியான வாழ்க்கைமுறை. ஒரு முக்கியமான விசயத்திற்காக ஒன்றுமே இல்லாத விசயம்தனை காரணம் காட்டி தள்ளிப்போடுவது சோம்பல்தனத்தை அதிகரிக்குமே தவிர வெற்றி கிட்டாது.

சாரங்கன், பெரியவர் வாசன் சேட்டுரை அடைந்தனர். முதலில் ராஜனை சந்திக்கலாம் என அவரைப் போய் வீட்டில் பார்த்தனர். ராஜன் தோட்டத்தில் இருந்து வரவழைக்கப்பட்டார். குளத்தூரில் ஆட்கள் கூப்பிட அவ்வப்போது வரும் ராஜன் சில நாட்களாக வருவதில்லை 'அய்யா அந்த தோட்டம் பக்கம் இருக்குறது மூக்கப்பனோடது, விவசாயம் பார்க்கமுடியாம தள்ளாடுறான் அதுக்கு இந்த பக்கம் சின்னகருப்பனோடது அந்த இரண்டையும் தாண்டிதான் என்னோடது, என்னோட தோட்டத்தோட பஸ் பாதை வருது எனச் சொல்லியதும் 'அப்படின்னா அவங்களை கேட்டுட்டு பிறகு பார்ப்போம்' என பெரியவர் சொன்னார். அவர்களிடமும் பேசினார் பெரியவர். வாசன் அவர்கள் நிலத்தை பயிர் செய்து பாடுபடமுடியுமெனில் விற்க வேண்டாம் எனக் கூறினான், அவர்களோ 'வேலைக்கு உங்க ஊருல இருந்துதான் ஆள் தேட வேண்டி இருக்கு இங்க இருக்கறவங்க தீப்பெட்டிக்கும் பஞ்சாலைக்கும் போய்றாங்க அதனால விவசாயம் பண்ண ஆளெ கிடைக்கல' என மிகவும் வருத்தமாக பேசினர். வளமான பகுதிதான் பாதுகாக்க ஆட்கள் இல்லையெனில் வளம் இருந்து என்ன பயன்! அனைவருக்கும் ஆறு அறிவு இருக்கிறது அற்புத செயலாற்றல் இருக்கிறது அனைவரும் உபயோகப்படுத்திக் கொண்டு முன்னேறுகிறோமா என்ன? சாரங்கன் மூவரிடமும் நன்றாக யோசிக்கச் சொன்னார். வீட்டில் கலந்து ஆலோசித்து நல்ல பதில் சொல்வதாக அவர்கள் கூறினர். விளக்கங்கள், தேவைகள் எல்லாம் பெரியவர்

கூறியபடி விவரித்தான் வாசன். அதிக விலைக்கு விற்கபடும்போது லாபமாகத்தான் தெரியும், சம்மதித்து விடுவார்கள் போல இருந்தது. இந்த பகுதிக்கும் சேர்த்து கற்கள் வாங்க வேண்டும் என எண்ணினான் வாசன். சிலை செய்யும் கோபாலனிடம் செல்ல வேண்டும் எனக் கூறினான் வாசன். பெரியவர் வினோதமாய் பார்த்தார் வாசனை!

15.

பாரதி சுகுமார் அச்சகம் சென்றாள். 'எல்லாம் பிரிண்ட் போட்டாச்சா?' என்றாள். வந்தவளை பார்த்து அச்சடிக்கப்பட்ட கவிதை தொகுப்பை எடுத்து வந்தார் அச்சகத்தில் பணிபுரிபவர். 'எல்லாம் சரிபார்த்துட்டு அப்படியே கவிதைக்கு தலைப்பும், ஆசிரியர் குறிப்பும், முன்னுரை அணிந்துரை எல்லாம் தந்தா நாங்களே இதை விற்பனை பண்ணி தர்றோம்' என அச்சகத்தின் முதலாளி சொன்னார். 'அன்னைக்கு பேசினப்போ விற்பனையெல்லாம் நானேதான் பாத்துக்கனும்னு சொன்னீங்க, இப்ப எப்படி உங்க மனசு மாறினது' எனக் கேட்டாள். 'பொதுவா புதுசா எழுதறவங்க கவிதை எல்லாம் அவ்வளவு எளிதா மார்க்கெட் அடையறது இல்ல ஒரு சில பிரசுரங்கள் செய்யும் நாங்க ரிஸ்க் எடுக்கறதில்ல ஆனா கவிதைகள் எல்லாம் நல்லா இருக்கு அதனால முயற்சி பண்ணுவோம்னு சொன்னேன் விருப்பம் இல்லைன்னா பரவாயில்லமா' என்றார். ஆம் எழுத்தாளனுக்கு அங்கீகாரம் மிகவும் அவசியம். அற்புதமான கவிதைகளையும் கதைகளையும் எழுதிவிட்டு ஒரு அங்கீகாரம் கிடைக்காமல் மூழ்கிப்போனவர்கள் அதிகம். நிராகரிக்கப்பட்டே எழுத்துக்கள் முடக்கப்பட்டன. அங்கீகாரம் கிடைத்துவிட்டால் எது வேண்டுமெனிலும் எழுதலாம், குறை சொல்லவாவது நாலு பேர் படிப்பார்கள். எழுத்து உலகம் உன்னை ஏற்றுக்கொள்ளும்வரை எழுதிக்கொண்டே இரு, எங்காவது ஒரு இடத்தில் வெளிச்சம் கிடைக்கும்! எழுதி என்ன சாதித்துவிட்டோம் என இறுமாந்து இருந்திடவேண்டாம், இனிமேல் என்ன எழுதபோகிறோம் புதிதாய் என சலித்துக்கொள்ளவும் வேண்டாம், விசயங்கள் நினைவுபடுத்தபட்டுக் கொண்டே இருக்க வேண்டும். பாரதி அவர்களிடமே விற்பனை விசயத்தை விட்டுவிட்டு சரிபார்க்க கவிதை தொகுப்பை எடுத்து வந்தாள்.

பாரதி கதவின் அழைப்பு மணி அடித்தாள். அவளது கல்லூரித் தோழி கதவினை

திறந்து 'என்னய்யா சனிக்கிழமை வந்துருக்கே, வாயா உள்ள' என அழைத்தாள். பெயர் கிருத்திகா. வீட்டிற்கு ஒரே செல்லப் பிள்ளை. அப்பா வங்கியில் கணக்காளராக பணி புரிகிறார். அம்மா தமிழ் ஆசிரியை. 'சனிக்கிழமை சனீஸ்வரனுக்கு எள் தீபம் போடப் போவியே, அதான் ஆச்சர்யமா கேட்டேன்' என அவளை உட்காரச் சொன்னாள். கிருத்திகாவின் வீட்டிற்கு நடந்தால் 10 நிமிடத்தில் சென்று விடலாம். கையில் இருந்த கவிதை தொகுப்பை தந்தாள் பாரதி. பார்த்துக் கொண்டே 'என்னய்யா கவிதை புத்தகம் வெளியிடப் போறியா, சொல்லவே இல்லை, நீ கவிதை நேசிக்க மட்டும்தான செய்வ, எப்போ எழுத ஆரம்பிச்ச' என வள வளவென பேசிகொண்டிருந்தவளிடம் 'இது எங்க கிராமத்தில இருக்கவனோட கவிதைகள் அதை புத்தகமா வெளியிடலாம்னு ப்ரிண்ட் பண்ணி வாங்கி வந்து இருக்கேன், நீ இதுக்கு அணிந்துரை எழுதனும்' என்றவளை 'என்னய்யா கிராமத்து காதலா' எனக் கண் சிமிட்டினாள். பாரதி சிரித்தாள். 'எங்க கிராமத்தில போய்தான் காதல் பண்ணனுமா என்ன' என வாசன் பற்றி முதன் முதலாக கிருத்திக்காவிடம் சொன்னாள் பாரதி. 'தலைப்பு என்ன வைச்சிருக்கார், முன்னுரை இல்லை அம்மா கிட்ட சொல்லி எழுத சொல்றென் அதுதான் பொருத்தமா இருக்கும், நான் கவிதை எழுதறதோட சரி' என்றவள் முதல் கவிதை தாவரமே ஆதாரம் என இருந்ததை பார்த்து 'என்னய்யா, கடவுள் வாழ்த்துனு இல்லாம தாவரமே ஆதாரம் அப்படின்னு இருக்கு' என்று வரிகள் வாசித்து பார்த்தாள். பாரதி சிரித்துக் கொண்டெ 'தலைப்பு சொல்லு, முன்னுரை நாளைக்கு வாங்கிறேன்' என்றாள். வாசன் தலைப்பு ஏதாவது ஒன்று இடுங்கள் எனக் கூறிவிட்டான், ஆதலால் அது நமது பொறுப்பு என கிருத்திகாவிடம் கூறினாள். கிருத்திகா அவளது அம்மாவிடம் சொன்னாள். அம்மாவோ 'பெரிய கவிஞர்கள் கிட்ட எழுதி வாங்கினா விளம்பரம் கிடைக்கும், உங்க விருப்பம் படிச்சிட்டு எழுதி தரேன்' என முடிவாய் அம்மா சொன்னது பாரதிக்கு மிகவும் சந்தோசம். அம்மா தாவரமே ஆதாரம் கவிதை படித்தாள்.

கடவுள், சூரியன் தான் உலகில் உயிர்கள் தோன்ற காரணம்? தாவரங்கள்? தாவரங்கள் மட்டும் இல்லாது போய் இருந்தால் கார்பன் டை ஆக்சைடு மட்டுமே நிரம்பி இருந்த இந்த பூமியின் வளிமண்டலம் அப்படியே தான் இருந்து இருக்கும். இந்த தாவரங்களே பெருமளவான கார்பன் டை ஆக்சைடுகளை ஆக்சிஜனாய் மாற்றி ஓசோன் எனப்படும் ஒரு வளையம் அமைத்து சூரியக்கதிர்களை பூமியில்

நேரடியாய் பெருமளவு தாக்காமல் காத்து நிற்க வழி வகுத்தது. சூரியன் தான் எல்லாம் எனில் மற்ற கோள்களில் ஏன் உயிர்கள் வாழ முடிவது இல்லை. அது அப்படித்தான். இலையுதிர் காலங்களிலும் மரம் உறுதியாய் நிற்கும். கவிதையினை படித்து கொண்டெ வந்தபோது, உணவு தயாரிக்க வேருக்கு தெரியாது உலைக்கு வேண்டும் தண்ணீர் பொல் தண்ணீரும் தாதும் தருவதோடு சரி என்ற கருத்தில் எழுதி உள்ள வரிகள் பார்த்தாள் அம்மா! இலை தான் உணவு தயாரிக்குமாம், இலை நீரை வெளியிடவில்லையெனில் வேர் தண்ணீரைக் கூட உறிஞ்சாதாம். ஒளியோடு தண்ணீர் இல்லையெனில் ஒன்றுக்கும் ஆகா தாவரம்; உணர்ந்து கொள்ளுங்கள் வாழ்விற்கு தாவரங்களே ஆதாரம் என முடிந்து இருந்தது. பாரதியும் கிருத்திகாவும் தலைப்பு தர போராடினர். அம்மா கவிதைகளை படிக்க அமர்ந்துவிட்டார்.

தாய் தமிழரசி, கிருத்திகாவின் தாயின் பெயர், அம்மா கவிதைகளை நேரம் போவதே தெரியாமல் வாசித்து கொண்டு இருந்தார். ஆறாவது கவிதை படிக்கும்போது அவரை அறியாமல் அவரது கண்களில் கண்ணீர் கொட்டியது. "தவிக்க வைத்த தாத்தா" ஆம் வாசன் அவனது சொந்த தாத்தா நல்லையன் இறந்த பிறகுதான் சாமி என்றால் என்ன என அறிந்து கொள்ள சங்கடப்பட்டான். அவன் தாத்தா இறந்த பிறகுதான் நிறைய யோசிக்கத் தொடங்கினான். கூடவே பாட்டியும் செத்து போக கும்பிடும் சாமிக்கு குறை இருக்குமோ என குமுறினான். பேரன்களையும் பேத்திகளையும் கொஞ்சுவதில் பெற்றோர்களைவிட, தாத்தாமார்களுக்கும் பாட்டிகளுக்கும் பேரின்பமாய் இருக்கும். அன்பின் அளவினை நிர்ணயம் செய்வது சரியோ?

கிருத்திகா 'என்னய்யா ஒரு தலைப்பு வரமாட்டேங்குது, பேசாம "மண்புழு" அப்படின்னு வைச்சிரலாம்' என பாரதியின் கன்னத்தில் இருந்த கைகளை தட்டிவிட்டு சொன்னாள். கன்னத்தில் கை வைக்க கூடாதாமே? கப்பல் கவிழ்ந்தாலும். பாரதி 'ஆ' என்று சிணுங்கியவாறே 'என்னது மண்புழுவா, நீ அம்மாகிட்ட வாங்கி எல்லா கவிதையும் படிச்சிட்டு பிறகு சொல்லு, கிண்டல் பண்ணாத' என்றவளை 'உன் மாமன் கவிதையை கிண்டல் பண்ணினா உனக்கு கோபம் வருதோ' என்றாள் கிருத்திகா. இதுதான் செல்லத் தீண்டல்கள்,

சிந்தனையை கூறுப் பார்க்கும் தீண்டல்கள், வேடிக்கையாய் பேசி பேசி விவஸ்தை கெட்டு போனால் மனம் அவஸ்தைப் படும். இப்படியே பேசிக் கொண்டே இருக்கட்டும். எண்ணங்களில் உறுதியாய் இருப்பவர்கள் இடையூறுகளை இனிதாய் எளிதாய் வெல்கிறார்கள். 'கிருத்தி, கிறுக்குத்தனமாச் சிந்திக்காத, கவிதையை யாராவது எழுதி கொண்டாந்தா இது நீதானா எழுதினது, நம்பவே முடியலையே சொன்னாலும், காப்பி பண்ணினயானு கேட்டாலும் அதே மாதிரி கவிதையை கிண்டல் பண்ணினாலும் எழுதின கவிஞனை விட வாசிக்கிற ரசிகர்களுக்கு அதிக கோபம் வரும், உன் கவிதைக்காக எத்தனை பேரு கிட்ட நான் சண்டை போட்டுருக்கேன், எப்ப பாரு கிண்டல் பண்றதே வேலையா போச்சு, பேசாம ஒரு நல்ல மாப்பிள்ளை எனக்கு பாரு கட்டிக்கிறேன்' என்ற செல்ல சினேகிதியை சீண்டியதில் வெற்றி கண்டவளாய் 'கவிழ்த்துட்டேனா' என ஆரஞ்சு சாறு எடுக்கச் சென்றாள். பாரதிக்கு மிகவும் பிடிக்கும்.

'வாசனுக்கு எத்தனை வயசு' தமிழரசி கேட்டார். '22 வயசு' பாரதி சொன்னாள். '22 வயசா அப்படின்னா முதல் கவிதை 1997னு போட்டு இருக்கே, இந்த கவிதை 12, 13 வயசில எழுதினதா' அம்மா ஆச்சரியமாக கேட்டார். வாசன் கவிதைகள் எழுதும்போது, இடம் நேரம் வருடம் தேதி எல்லாம் குறித்து வைத்து இருப்பான், அதனை மாற்றாமல் பாரதியும் அச்சடிக்க சொல்லிவிட்டாள். 'அப்படித்தான் இருக்கும்' கணக்கு பார்த்தவாறே பாரதி தோராயமாய் பதில் சொன்னாள். 'என்ன படிச்சிருக்கான்' '+2 மாவட்ட முதல் மாணவன்' 'மேற்கொண்டு படிக்க வசதி இல்லையா' ஆர்வமாய் கேட்ட அம்மாவுக்கு அதிர்ச்சியாய் 'படிக்க பிடிக்கலைன்னு சொல்வான்' என்ற பதில் சொன்னாள் பாரதி.

கிருத்திகா என்னம்மா 'கவிதை படிச்சி கலைச்சீட்டிங்களா' என்று ஆரஞ்சு சாறினை அருந்தாமல் இருந்த அம்மாவிடம் கேட்டாள். 'கிருத்தி இந்த வரிகள் கேளு, என அம்மா ஒரு சிறு கவிதை வாசித்தார்.

செவ்வாய் வெறும் வாயாய் போனது
கரிய மில வாயுவே
இன்னும் அங்கு கணமாய் உள்ளது
பூமியும் செவ்வாயாய் போகும்

காலம்தனை கண்டு விட
கரியமில வாயு உமிழ்ந்தே
அழிக்கின்றார் மரத்தை
செவ்வாயில் வாழ்ந்த கதையை
தாத்தா சொல்லி சொல்லி செத்தார்!

பொன் கிடைத்தாலும் புதன் கிட்டாது
தக தகவென ஜொலிக்கும்
பொன்னை போன்ற புதனாம்
காதில் தொங்கும் தொங்கட்டான்
கழற்றி கையில் வைத்துக் கொள்
இந்த பூமியும் புதனாய் மாறும்
வெப்பம் விவரிக்க முடியாது
மனிதரின் வேடிக்கை விசயங்களால்
பாட்டியும் சொல்லி சொல்லி செத்தார்!

கிருத்திகா உணர்விழந்து போனாள்.

கிருத்திகா அம்மா படித்து முடித்த சில கவிதைகளை வாங்கி படிக்க ஆரம்பித்தாள். 'எல்லா கவிதைகளையும் படிச்சிட்டு, தலைப்பு சொல்றேன்யா, நீ ஏதாவது தலைப்பு தோணிச்சினா சொல்லுயா' என கூறிய கிருத்திகாவிடம் 'படிச்சிட்டு சொல்லு, நான் கிளம்பறேன், அம்மா தனியா இருப்பாங்க' என்று கூறிவிட்டு பாரதி விடைபெற்றாள். நிச்சயம் அணிந்துரை எழுதித் தருவதாக தாய் தமிழரசி கூறினார்.

சுந்தரன் சென்னையுடன் ஒட்டிக்கொண்டான். ஏழு நாட்களும் வேலைக்குச் செல்ல வேண்டி இருந்தது. ஞாயிற்றுக்கிழமைகளில் மட்டும் மூன்று மணி நேரம் இருந்துவிட்டு வந்து விடுவான். அருண் அவனை தினமும் காலையில் ஏழு மணி முப்பது நிமிடத்துக்கெல்லாம் வேலை இடத்தில் இறக்கிவிடுவான், அதே கேலியும் கிண்டலும் வழக்கமாய். வரும்போது பேருந்தில்தான் வரவேண்டும். சேகர் சில தினங்களில் அழைத்து வருவார். அம்மா அதிகாலையில் எழுந்து காலை உணவும், மதிய உணவும் தயார் செய்து விடுவார்கள். சுந்தரனுக்கு விடுதியில் சாப்பிட்ட

நாட்கள் தற்போது வெறுப்பான நாட்களாக இருந்தது.

'என்ன சுந்தரா, இன்னும் சாப்பிட போகலையா, மணி இரண்டு ஆகப்போகுது' என சுந்தரன் அலுவலக அறைக்கு வந்த சேகர் கூறினார். 'இதோ போகனும் சார்' சேகரை இப்போது எல்லாம் அலுவலகத்தில் "சார்" என அழைப்பது வழக்கம். சாப்பாடு அறைக்குச் சென்றான் சுந்தரன். சாப்பாடு தயார் செய்யப்படும் இடமும், சாப்பாடு அருந்தும் இடமும் மிகமிகச் சுத்தமாக இருக்க வேண்டும், அதற்காக மற்ற இடங்களை அசுத்தமாக வைத்து இருக்க வேண்டும் என்ற அர்த்தம் இல்லை. சுத்தமான இடங்களில்தான் சுகம் இருக்கிறதாம், அது சோறு போடுமாம்.

சாப்பிட வீட்டில் இருந்து கொண்டு வந்து இருந்த உணவு பாத்திரம் திறந்தான். சாம்பார், ரசம், வெண்டைக்காய் பொரியல், தயிர், சோறு எனத் தனித் தனியாய் வைக்கப்பட்டு இருந்தது. பழங்கள் வகைகளும் இருந்தது. சைவச் சாப்பாடு. குளத்தூரில் பெரும்பாலான மக்கள் அசைவ உணவு சாப்பிடுவதில்லை. சேகரும் அவரது குடும்பத்தினரும் சென்னைக்கு வந்த பிறகும் மாறவில்லை. சுந்தரனும் சைவம்.

சுந்தரன் ரசித்துச் சாப்பிட்டுக் கொண்டு இருந்தான். பசிக்கு உணவு. அவனது உணவு சத்து தரும் கார்போஹைட்ரேட், செல்கள் வளர செப்பனி செய்ய புரதம், நீண்ட கால சேமிக்கும் சத்தாய் கொழுப்பு, நோய் வராமல் இருக்க விட்டமின்கள், சமநிலைக்கு தாதுப்பொருட்கள், செரிமானம் ஆக நார்ச்சத்து, சுத்தமான தண்ணீர் என சமவிகிதமாய் உணவினை உண்டு சந்தோசமாக இருந்தான் சுந்தரன். உணவினால் உணர்வுகள், நோய்கள் எல்லாம் கட்டுப்பாட்டில் வைத்துக்கொள்ளலாம். தெரிந்தது போல் எல்லாம் இருக்கிறது. சுந்தரன் சாப்பிட்டு முடித்தான்.

புதுபுது விசயங்களை சுந்தரன் கற்றுக் கொண்டு இருந்தான் சுந்தரன். கல்லூரி முடித்து புதிதாய் வேலைக்கு நேர்முகத் தேர்வுச் செல்லும்போது, அனுபவம் இருக்கிறதா என கேட்கும் நேர்முகத் தேர்வாளரை கடிந்து கொள்வதில் அர்த்தம் இல்லை. படிக்கும் காலத்தில் என்ன வேலைக்குப் போகப்போகிறோம் என்ற எண்ணமும், வேலையைப் பற்றிய அறிவும், சிந்தனையும் மிகவும் அவசியம்,

இப்படி இல்லாத காரணத்தால்தான் பலர் வேலையில் திருப்தி இல்லாது இருக்கிறார்கள். சேகருக்கு சுந்தரனை மிகவும் பிடித்துவிட்டது. வேலையில் உள்ள அவனது ஈடுபாடு கற்றுக்கொள்ளும் திறன் கண்டு பல விசயங்களை துணிவுடன் கற்றுத்தந்தார். கடையில் உள் நுழைய தடுமாறிய சுந்தரன் சுறுசுறுப்பாகவே காணப்பட்டான் (

16.

'இப்போ என்ன சிலை விசயமா கோபாலனை பார்க்கனும்' என பெரியவர் கேட்டார். வாசன் 'சிலையை செய்ற கோபாலனிடம் நாராயணன் சிலை பற்றி விவரம் கேட்கனும் அய்யா' என்றான். 'அதுதான் நீ தந்ததும் நெல் குவியல்ல சிலைய போட்டு வைக்கச் சொன்னேன் பூசாரிகிட்ட' என பெரியவர் சொன்னதும் 'சிலை ஆராய்ச்சி பண்ணப் போறியா, கவிதை எழுதறத விட்டுட்டு இதை பண்ணப் போறதா இருந்தா நான் அனுமதிக்க மாட்டேன்' என தான் கவிதைகள் நேசிப்பதை சொன்னதும் 'சிலை ஆராய்ச்சியா' வாசனைப் பார்த்து பெரியவர் கேட்டார். 'ஆராய்ச்சி ஒண்ணும் இல்ல அய்யா, சிலை விவரம் கேட்கனும், நீங்க கிளம்புங்க அய்யா, நான் போய் பார்த்துட்டு நடந்து அப்படியே தோட்டத்துக்குப் போயிரேன்' என்றவனை விட்டுச் செல்ல மனமின்றி பெரியவரும் சாரங்கனும் யோசித்தனர். வாசன் ஒருவழியாய் சம்மதிக்க வைத்து அவர்களை பேருந்தில் அனுப்பிவிட்டு கோபாலனை பார்க்கச் சென்றான்.

கோபாலன் வயது 65, தீர்க்கமான உருவம். எண்ணங்களின் மன வலிமை இல்லையெனில் உடல் வலிமை ஒன்றுக்கும் உதவாது. பரம்பரையாய் சிலை வடிக்கும் தொழில். இங்கு சுற்றி உள்ள ஊர்களில் உள்ள கோவில்களில் எல்லாம் இவர்களது குடும்பத்தார் செய்த சிலைகள் தாம். 'அய்யா நான் குளத்தூரில இருந்து வரேன், என் பேரு வாசன்' என்றவனை ஏறிட்டுப் பார்த்தவாறே 'யாரு நல்லையன் பேரனா, நாடகத்துல வேசம் போடுவியே' என அவரது சிலை அடிக்கப்படும் கட்டிடத்தினுள் அழைத்துச் சென்றார். கற்கள் சிலை உருவம் எடுத்துக் கொண்டு இருந்தன. பூமியில் இருந்து தானாய் வந்ததாய் சுயம்பு சிலைகளுக்கு விளம்பரம் தேடிக்கொள்ளப்படுகிறதே, கல்லுக்கும் உயிர் இருக்குமோ? சொல்லுக்கு உயிர்ப்பித்தல் கலை அற்புதமாக இருக்கிறது என்பதைத் தவிர வேறு என்ன

சொல்ல முடியும். தன்னைப் பற்றி இவர் தெரிந்து வைத்து இருக்கிறாரே என நினைத்துக் கொண்டே உள்ளே நுழைந்தான்.

நாராயணன் சிலையின் நுட்பம் சொல்லி தான் கண்டு எடுத்தை சொல்லாமல் விவரம் கேட்டான். அவன் சொல்ல சொல்ல அவர் முகம் அதிசயத்திலும் ஆச்சரியத்திலும் உழன்றது. 'தெரியல தம்பி, எனக்கு விவரம் தெரிஞ்சி இந்த ஐம்பது வருசத்துல பெருமாள் சிலைய நீ சொல்ற மாதிரி இவ்வளவு தத்ரூபமா எங்க குடும்பத்துல இருந்து வடிக்கல, நீ சொல்ற மாதிரி சிலை செதுக்குறது அவ்வளவு சுலபம் இல்ல அதுக்கு அளப்பரிய சக்தி வேணும், எங்க இருக்கு தம்பி அந்த சிலை நான் பார்க்கனும்' எனச் சொன்னவுடன் வாசன் முகம் வாடியது. 'அய்யா இந்த கிராமங்கள் எப்ப வந்ததுனு தெரியுமா' என அவர் கேட்டதுக்கு பதில் சொல்லாமல் கேட்டான். 'ஒரு 300 வருசம் இருக்கும்' என்றவுடன் நிறைய காலங்கள் போகவேண்டியதில்லை என நினைத்து பெருமூச்சுவிட்டவனை 'சிலை ஏதும் கண்டு எடுத்தியா தம்பி' என்றவரை இவரிடம் பொய் சொல்ல வேண்டாம் என நாராயணன் சிலையினை கண்டு எடுத்ததை சொன்னான். 'பெருமாளே' என வாசனை கையெடுத்துக் கும்பிட்டார் கோபாலன். வாழ்வில் ஆம், இல்லை, அது இல்லையெனில் இது என எளிதாகச் சொல்லிவிடலாம் விளக்கங்கள் விபரமாக இருக்க வேண்டும் என அவசியமில்லை. வாசன் அவரது கைகளை பிடித்து 'ஐயா' என்றான். 'அது மனிசன் கைப்பட்டு செஞ்ச சிலை இல்லை தம்பி' என்று அவர் சொன்னதும் வாசன் உடல் கிடுகிடுவென நடுங்கியது.

உடல் நடுக்கம் பல காரணங்களால் ஏற்படுகிறது. நரம்புகள் சம்பந்தமாக அடிக்கடி நடுக்கம் ஏற்பட்டால் ஒரு மனிதனுக்கு உறுப்புகள் யாவும் செயல் இழந்து போகும் அபாயம் உள்ளது. அதனால்தான் அதிகம் உணரச்சிவசப்படுதல் மிகவும் ஆபத்து. எப்போதாவது வரும் கோபம், பயம், குளிரினால் வரும் உடல் நடுக்கம் அவ்வளவாக பாதிப்பது இல்லை. வாசன் பயத்தினால்தான் நடுங்கினான். எப்படி இவர் சிலையை பார்க்காமல் இது மனிதன் கைபட்டு செஞ்சதுனு சொல்றார் என பயம் சிறிதாய் போனவாரே. 'தம்பி இப்பவே அந்த சிலைய நான் பார்த்தாகனும்' என கோபாலன் சொன்னதும் வாசன் தோட்டம் செல்ல வேண்டும் என்பதை மறந்து பெருமாள் கோவிலுக்கு அழைத்து சென்றான். 'அய்யா எதுக்காக என்னை

கும்பிட்டீங்க, எப்படி அந்த சிலை மனிசன் கைப்பட்டு செஞ்ச சிலை இல்லைன்னு சொல்றீங்க' எனது தனது சந்தேகம்தனை கேட்டான் வாசன். சந்தேகம் வரும்போது, சரி இது இப்படித்தான் இருக்கும் என நமக்குள்ளே நாமாக ஒரு கற்பனை பண்ணி கொண்டு வாழ்வதில் என்ன லாபம். விளக்கம் அறிய முற்படவேண்டும் அதற்காக கொடுக்கப்படும் விளக்கத்தில் கரைந்து போகாமல் அந்த விளக்கம் உண்மையிலே விளக்கம்தானா என விளக்கபப்டுத்தி கொண்டால் சிறந்தது. பூமி தோன்றி பல பில்லியன் வருடங்கள் ஆகிறது என அறிவியலும் டிரில்லியன் வருடங்கள் என வேதமும் விளக்குகிறதே! உலகம் எப்பொழுது தோன்றினால் என்ன, எப்படி தோன்றினால் என்ன, நமக்கும் நம்மைச் சுற்றி உள்ளவருக்கும் நம்மால் சந்தோசம்தான் தரமுடிகிறதா இல்லை தவிப்பைத்தான் தரமுடிகிறதா? காலங்கள் வரையறுத்துக் கொள்வதில்லை. வரையறுத்து வைத்தது நாம். வாழ்க்கையை பற்றி எவ்வளவு சந்தேகங்கள்? தீர்மானமான முடிவுக்கு வந்துவிடுங்கள். உலகத்தோடு உள்ள கருத்துக்களை சம்மதித்து மட்டுமே வாழவேண்டும் என்று மட்டும் நம்பி இருந்து இருந்தால் இன்னும் உலகம் உருண்டை இல்லை என்றுதான் பேசிக் கொண்டு இருப்போம். அதுசரி ஒரு விவரமும் விளக்கமும் இல்லாத விசயம்தனை நாம் சிந்திப்பது மடத்தனமா இல்லையா என்பதை நாம் எப்படி அறியமுடியும். கோபாலன் வாசனை பார்த்தார். 'இதில என்ன சந்தேகம் தம்பி, அது நிச்சயமா மனிசன் கைபட்டு செஞ்சது இல்லை' வாசனுக்கு பயம் முழுவதும் நீங்கி இருந்தது. எதிர்பாராத விசயத்தை நம்முள் திணிக்கும்போது பயம் வருகிறது. கடவுளை யார் எதிர்பார்த்து இருந்தார்கள்.

ஹைட்ரஜனுக்கு ஒரு புரோட்டான் ஒரு எலக்ட்ரான் மட்டுமே நியூட்ரான் இல்லை! இந்த சூரியன்கள், கோள்கள் எல்லாம் உருவாக மூல காரணமே அந்த ஹைட்ரஜன்தானாம். அதோடு சில துகள்கள் இணைந்து அழுத்தங்களாலும் ஹீலியம் எனப்படும் (இரண்டு புரோட்டான் ஒரு நியுட்ரான் இரண்டு எலக்ட்ரான்) வாயு உருவாகி பல வருடங்களாக கருவினில் வேதியியல் மாற்றம் நிகழ்ந்து நிகழ்ந்து இந்த பால்வெளி பாதைகளும் பிரபஞ்சமும் உண்டாகியதாம். வெப்பமாய் இருந்த பூமி குளிர்ந்து மண் துகள்கள் எல்லாம் படிமம் ஆகின. கார்பன் பெரும் பங்கு வகித்தது. முதலில் இந்த பூமி ஒரே நிலப்பரப்பாய்தான் இருந்தது. உள்ளே அமுக்கப்பட்ட வெப்பக் குழம்புகள் வெடித்து சிதறிக்கொண்டெ இருந்தன.

அப்பொழுதுதான் ஒரு கார்பன் மூலக்கூறும் நான்கு ஹைட்ரஜன் மூலக்கூறுகளும் இணைந்த மீத்தேன் வாயு பெருமளவில் வளிமண்டலத்தில் இருந்தது. அதே வேளையில் அம்மோனியாவும் அதிக அளவில் வளிமண்டலத்தில் இருந்தது. புரதத்தின் உயிரான நைட்ரஜன் (தற்போது 79% வளிமண்டலத்தில்) அதிக அளவில் உருவாகின. அப்படி வெளியான அந்த எரிமலைக் குழம்புகள் மேற்பரப்பில் விழுந்து பாறைகளாக உருவாகின. எரிமலை வெடித்து வந்த வெப்பத்தினால் வந்த ஆவியானது குளிர்ச்சியால் தண்ணீராய் மாறியது. இப்படி உருவான இந்த பூமியினில் அடிப்பகுதியில் இரும்பும் நிக்கலும்தான் இருக்கிறது இவைகளுக்கு காந்த சக்தி, கவரும் சக்தி மிகவும் அதிகம். இப்படி உருவான பாறைகள் வெடித்தும் சிதறியும் பல கற்கலாக மாறின. நாளடைவில் ஒரே நிலப்பரப்பாய் இருந்த பூமி பிரியத் தொடங்கியது. இயற்கையாகவே பாறைகள் உருவம் கொண்டன. உயிரினங்கள் தோன்றி அழியத்தொடங்கியதும் இந்த பாறைகள் அவைகளை உள்வைத்து காத்து வந்தன. கரிய மில வாயு பாறைகளிலும் இறந்த உயிரினங்களிலும் சென்று முடங்கி கொண்டன. இயற்பியல் விளக்குவது போல், வேதியியலும் உயிரியலும் சிறந்த விளக்கங்களையும் இனி இப்படி நடக்கும் என யூகித்தும் சரிவரச் சொல்ல முடிவதில்லை. இன்னும் சில நகரங்களில் எரிமலையால் அப்படியே முடங்கி பாறையாகிப்போய் இறந்து பாறை உருவம் எடுத்துக் கொண்ட உயிரினங்கள் இருக்கத்தான் செய்கிறது. இதெல்லாம் எதற்கு? பிரபஞ்சம் இப்படித்தான் தோன்றியது என எழுதி வைத்தால் படைத்தவன் சிரிக்க மாட்டானா என்ன?

வாசன் திரும்பவும் கேட்டான் 'எதை வைத்து சொல்கிறீர்கள்' கோபாலன் கோபமாய் இந்த முறை பார்த்தார். எரித்து விடுவார் போல் இருந்தது. 'என்ன நீ திரும்ப திரும்ப அதையே கேட்கற, சிலைய நான் பார்க்காமலே சொல்றேன்னா, நீ சிலை பத்தி சொன்னா விவரங்கள் பொய்யா இல்லை நிறைய மிகைப்படுத்தி சொல்லிட்டியா' என்றார் ஆவேசமாக. வாசன் அவரது கோபம் புரிந்தவனாய் 'இல்லய்யா நான் சொன்ன விளக்கங்கள் உண்மைதான்' என்றவனை 'அப்படின்னா பேசமா நடந்து வா நான் சிலைய பார்க்கறவரைக்கும்' என கையெடுத்து கும்பிடப்பட்ட வாசன் கையால் அடிபடாத குறையாக நடந்து வந்தான். இப்படித்தானே நமக்கு தேவையெனில் படைத்தவனை பாராட்டுவதும் தேவை

இல்லையெனில் பழிப்பதும் சர்வசாதாரணமாகிப் போனது வாழ்வில். பெருமாள் கோவில் மூடி இருந்தது. 'போய் பூசாரிய கூப்பிட்டு வா, உள்ளே போய் பார்க்கனும்' என்றார் கோபாலன். கிராமங்களில் கோவில்கள் அனைத்து நேரமும் திறந்து இருப்பதில்லை. பூசாரியை தேடிப் போனான் வாசன். கோபாலன் சாந்தமாகிக் கொண்டு இருந்தார். பூசாரி வீட்டில் இல்லை. இனி இவரை எங்கு தேடுவது என நினைத்துக்கொண்டு திரும்புகையில் பூசாரி வந்தார். பூசாரியை அழைத்துக்கொண்டு பெருமாள் கோவில் அடைந்தான் வாசன்.

பூசாரி கோவில் வாசல் கதவினை திறந்தார். உள்ளே சென்று நெற்குவியலில் இருக்கும் சிலையினை கோபாலுனுக்கு காண்பித்தார். இதுவரை சிலையினைப் பார்த்தவர்கள், வாசன், அப்பா, அம்மா, வினாயகம், பூசாரி இப்போது சிலை வடிக்கும் கோபாலன். சிலையினைப் பார்த்தவர் மிகவும் ஆச்சரியப்பட்டார் அதிசயப்பட்டார், அவர் அந்த சிலையினன கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டு இருந்தார். நெற்மணிகளை மெதுவாக விலக்கி சிலையினைத் தொட்டார். அவரது கண்கள் கலங்கியது. எப்படி செவல் மண்ணில் இந்த கருங்கல்லினால் ஆன சிலை என ராமம், ஆடை உடுத்தியது போன்ற அமைப்பு, கைகள் அமைப்பு, கிரீடம், புன்னகை தவழும் முகம், சிலையைத் திருப்பிப்பார்த்தார். ஒரு மனித உருவத்தில் சிலை. நிச்சயமாக இது செதுக்கப்பட்ட சிலை இல்லை என முடிவுக்கு வந்தவராய் 'இது மனிசன் கைப்பட்டு செஞ்ச சிலை இல்லை, இது பூமியில தானாக வந்த சிலை, பெருமாளே, பெருமாளே' என கோபாலன் சொன்னதும் பூசாரி நிலை கொள்ளாமல் ஆடினார். வாசன் பூசாரியைப் பிடித்துக் கொண்டான். கோபாலன் திருநீர் எடுக்க ஓடினார்.

உணர்ச்சி வசப்படும்போது தன்நிலை மறந்து போகும், மறப்பது போன்று இருக்கும். உடல் தசைகள் முறுக்கேறும். நரம்புகள் நாட்டியமாடும். அவ்வாறு நிகழும்போது நமது உடல் பூமியில் செலுத்தும் விசை அதிகமாகி பூமி உடலுக்கு செலுத்தும் விசை குறைந்து இருவிசைகளும் சமமாக இருப்பது இல்லை. சமமாக விசைகள் இல்லாதபோது விசையினை சமப்படுத்த வேண்டி உடல் இங்கும் அங்கும் ஆடும், சமநிலைப்படுத்த முடியாத பட்சத்தில் கீழே விழுந்துவிடும். வாசன் பூசாரியைப் பிடிக்க பிடிக்க ஆடிக்கொண்டு இருந்தார். இதுமாதிரி தருணங்களில்

உள்நினைவுகளில் பூட்டப்பட்டு இருக்கும் விசயங்கள் வெளியில் சொல்லப்படும். செல்கள் எப்பொழுது உருவானதோ அன்றைய தினத்திலிருந்து இன்று வரை ஒவ்வொரு செல்லுக்குள்ளும் ரகசியம் பொதிந்து இருக்கிறது. வாசன் தன்னைக் கட்டுப்பாட்டில் வைத்துக்கொள்ள சிரமப்பட்டான்.

கோபாலன் திருநீரை பூசாரியின் மேல் தெளித்தார். நெற்றியில் திருநீரை அழுத்தினார். பூசாரி தன் நிலைக்கு வந்தார். 'என்ன பூசாரி அய்யா, சாமி வந்து என்ன சொன்னது' என கோபாலன் கேட்டார். 'சாமி என்ன பேச விடாம பண்ணிருச்சு, இந்த சிலை கிடைச்சது நம்ம ஊருக்கு விஷேசம் தரும், பூமியில தானா வந்த பெருமாளுக்கு தனியாய் கோவில் கட்டுறது நல்லது, இதுபத்தி ஊருல பேசி முடிவு எடுக்கச் சொல்லனும்' என பூசாரி கூறினார். வாசன் என்ன சொல்வதெனத் தெரியாமல் 'எப்படி இந்த நாராயணன் சிலை மனுசன்...' என இழுத்தவனை 'இந்த பெருமாள் உன் கையில கிடைச்சது பெரும் பாக்கியம்னு நினைச்சுக்கோ, சும்மா சும்மா எப்படினு கேட்காத' என்றார் கோபாலன். 'மண்ணிலிருந்து சிலை தானா தோன்றி வரது உண்டு, அப்படிப்பட்ட இந்த சிலை வெளியில வர நாள் பார்த்துட்டு இருந்து இருக்கு, நீ வெளியில தோண்டி எடுத்துட்ட நான் சொன்னமாதிரி நீ அதிர்ஷ்டக்காரன்' என்று பூசாரி சொன்னதும் 'இன்னும் விளக்கனுமா போய் புது கோவில் கட்டுற வழியப் பாரு, ஊர்ல சொல்லி இது ஆபூர்வ சிலைனு சொல்லு, பெரிய கும்பாபிஷேகம் பண்ணலாம்' என்ற கோபாலனைப் பார்த்து 'பெரியவர்கிட்ட நீங்க பேசுங்க' என அவர்களை பெரியவர் வீட்டினில் விட்டுவிட்டு தோட்டத்தில் வேலை இருப்பதாக சென்றான். அவன் உள்ளுணர்வு சொல்லியது இது ஒரு குழந்தை இறந்து புதைக்கப்பட்டு அந்த குழந்தையின் உருவில் பாறை சிலையாக உருவாகி உள்ளது. உள்ளுணர்வு கேட்காதவர்கள் எவரும் இல்லை எனலாம். உள்ளுணர்வு உணர்ந்து நடந்தவர்கள் மேலும் முயற்சி செய்து உள்ளுணர்வு ரகசியம் அறிந்து சாமானியர்களுக்கு அதிசயமாய் இருப்பதை சாதாரணமாய் செய்தார்கள். வாசன் தோண்டிய இடம் அடைந்தான்.

வாசன் வந்து நின்றான். தோண்டிய இடம் எல்லாம் மூடப்பட்டு மூன்று வேப்பமரக் கன்று நடப்பட்டு தண்ணீர் விடப்பட்டு இருந்தது. பட்டுப்போன மரம் எல்லாம்

வெட்டப்பட்டு விறகுகள் ஆக்கப்பட்டு இருந்தது. அதனை பக்கத்தில் அடுக்கி வைத்து இருந்தனர். கற்களும் பக்கத்தில் அடுக்கி இருந்தனர். ஒரு மரம் வெட்டப்பட்டால் மூன்று மரங்கள் வளர என்ன பல மரங்கள் வளர நட்டு வையுங்கள். வாசன் அந்த இடத்திலேயே அசையாமல் நின்றான். பொன்னுராஜ் மாமா தோட்டத்தில் வேலை செய்து கொண்டு இருந்தார்கள். அம்மா சற்று தள்ளி களை எடுத்துக் கொண்டு இருந்தார் சில பெண்களுடன். சித்தப்பா தோட்டத்திலும் வேலை விறுவிறுப்பாக நடந்து கொண்டு இருந்தது. அம்மாவிடம் சென்றான் வாசன்.

'அம்மா யார் இந்த வேலையெல்லாம் பண்ணீனாங்க' எனக் கேட்டான். 'உன் தாய்மாமன் தான், இன்னைக்கு காலையில வந்து முத வேலையா இதைப் பண்ணிட்டுதான் வேற வேலைக்குப் போனாங்க, சரி போன விசயம் என்னாச்சு, நல்லபடியா எல்லாம் முடிஞ்சதா' எனக் கேட்டார் தாய். 'பேசிட்டு சொல்றேன்னு சொல்லிருக்காங்க' என்றவுடன் 'வாசு, எதுக்கு இப்படி நிலமா அவரு வாங்கிப் போடரார், உனக்கு விவரம் தெரியுமா, உன்கிட்ட கூடவா சொல்லாம செய்யறாரு' என ராசாத்தி தெரிந்து கொள்ள ஆசைப்பட்டு கேட்டார். 'நல்ல காரியம் செய்ய ஆசைப்படறார்க்கா அதுக்குத்தான் இப்படி நிலம் எல்லாம் வாங்கி போடறார், இனி வர காலத்தில யார் விவசாயம் பார்க்கப்போறாங்க, அதனால நல்ல முறையில பாதுகாக்க முயற்சி பண்றார்' என்றதும் இவருக்கு பின் யார் இதைப் பார்ப்பது என அவர்களுக்குள் பேசிக்கொண்டு இருந்தனர். 'வாசுதான் இனிமே அதைப் பார்க்கனும்' எனச் சிரித்தார் ராசாத்தி. 'இவனுக்கு இங்க நிலம் பார்க்கவே நேரம் இல்ல' என அம்மா கவலைப்பட்டார். பயிர்களுக்கு மருந்து அடிக்க வேண்டும் என அம்மா ஞாபகப் படுத்தினார். பசுமாடுகளுக்கு சாயந்திரம் வீடு செல்லும்போது கட்டி வைத்து இருக்கும் புல் கட்டினை மறக்காமல் தூக்கிக் கொண்டு போகச் சொன்னார் அம்மா. வாசன் சரி எனக் கூறிவிட்டு நெல்லுக்கு தண்ணீர் திறந்து விட்டுவிட்டு மாமாவிடம் சென்றான்.

சென்ற விசயம் கேட்டபின் 'எப்படி மருமகனே, அவ்வளவு பலம் உனக்கு அவ்வளவு கடினமான தரையை தனி ஆளா தோண்டி மரத்தை சாய்ச்சு இருக்க, ராசு சொன்னதும் வீராப்பு வந்துருச்சா' என்று பக்கத்தில் எல்லாம் தோண்டி நிலத்தினை

சரிசமப்படுத்தி மரக்கன்றுகள் வைத்ததினை நினைவு கூர்ந்தவராய் கேட்டார். 'எதுக்கு மாமா அந்த இடத்தில மட்டும் அப்படி இருக்கு, உழாமலும் அங்க இருக்கே மற்ற மரம் எல்லாம் நல்லாத்தான் இருக்கு இந்த மரம் மட்டும் எப்படி பட்டு கிடந்தது அதுவும் இதை எதுக்கு வெட்டாம பெரியவர் விட்டு வைச்சிருந்தார்' எனக் கேட்டவுடன் 'தெரியல மருமகனே அந்த இடம் மட்டும் கல் எல்லாம் கருங்கல்லா கிடந்தது, எல்லாம் தோண்டி போட்டுட்டு புது மண் அடிச்சிட்டோம்' என சொல்ல சொல்ல வாசன் கேட்டுக் கொண்டு இருந்தான். முத்துராசு அமைதியாய் இருந்தான்.

'என்ன ராசு அண்ணே ஒண்ணும் பேசாம இருக்கீங்க' என்றான் வாசன். 'என்னத்தப் பேச சொல்ற, பேசினா குத்தம் சொல்வ, பேசாட்டா என்னடா ஊமையாண்டின்னு சொல்வ' என செல்லமாய் கோபித்துக் கொண்டவராய் 'உனக்கு பொண்ணு பார்க்கச் சொன்னேன் உங்க அப்பாகிட்ட, ஏதாச்சும் சொன்னாரா' என்ற ராசு அண்ணனிடம் 'எதுக்கு எனக்கு என்ன வயசாகிப் போச்சு இப்ப' என்றான் வாசன். 'வயசுப் பார்த்தா கல்யாணம் பண்ணிக்கிறாங்க இல்ல வயசு பார்த்துதான் காதலிக்கிறாங்களா' என்றதும் 'என்ன இப்படி பேசறீங்கண்ணே' என்றான் வாசன் 'பார்த்தியா, இதுக்குதான் நான் எதுவும் உன்கிட்ட பேசறதுல' என்று சிரித்தார், 'மருமகனே அவன் சும்மா இருந்தாலும் நீ சும்மா இருக்க விடமாட்ட' என்று கூறி அடுத்த வாரம் கற்கள் எல்லாம் வந்துவிடும் பெரியவர் தோட்டத்துக்கு என சொன்னார் மாமா. ஊரெல்லாம் புதிய சிலை பற்றிய பேச்சு காற்றில் மிதந்து கொண்டு இருந்தது.

மாலைப் பொழுது மழையுடன் வந்து சேர்ந்தது. களை எடுத்தவர்கள், மாமா சித்தப்பா அனைவரும் வீடு நோக்கி சென்று விட்டனர். வாசன் மட்டும் இன்னும் தோட்டத்தில் இருந்தான். நெல்லுக்கு தண்ணீர் பாய்ச்சாமல் இருந்து இருக்கலாம் என வாசனுக்குத் தோன்றியது. வாசன் தண்ணீரை நிறுத்தினான். கடும் மழையாக இருந்தது. சற்று நேரம் இருந்துவிட்டு தண்ணீரை திறந்துவிட்டுதான் போகவேண்டும் என முடிவு செய்தான். வெட்டிய மரத்தின் விறகுகள் நன்றாக நனைந்து கொண்டு இருந்தன. இனி ஒன்றும் அதனை செய்ய இயலாது என பேசாமல் விட்டுவிட்டான். ஒரு சில புல் கட்டுகளை அம்மா தன்னுடன் வந்த

வேலையாட்களுடன் அப்போதே எடுத்து போய் இருந்தார். வாசன் மழை நிற்கட்டும் என காத்து இருந்தான்.

ஊரில் நல்ல மழை. சிலை வந்த நேரம் நல்ல மழை என அனைவரும் பேசிக் கொண்டு இருந்தார்கள். பெருமாள் கோவிலில் கூட்டமாக இருந்தார்கள் சிலையை பார்ப்பதற்கு. கோபாலன் சிலை செய்வதில் மிகச் சிறப்பு பெயர்பெற்று இருந்ததால் அவர் சொன்னதால் அனைவரும் நம்பினர். பெரியவர் தனி கோவில் கட்டவேண்டாம் என கூறிவிட்டார். கோவிலுக்குள்ளேயே ஒரு சின்ன மண்டபம் எழுப்பலாம் என சொல்லிவிட்டார். அந்த சிலை 2 அடி உயரம் இருந்ததால் இதற்கு என்று சிரமப்படவேண்டாம் என கூறிவிட்டார். பெரியவர் சொன்னால் ஊரில் யாரும் அவருக்கு நேர் எதிராக நின்று எதிர்த்து பேசுவதில்லை. அவரை பற்றி பின்புறம் பேசுபவர்கள் உண்டு. நேராக பேசும் விசயங்களுக்குத்தான் நாம் செவி சாய்க்க வேண்டும், அவர் கூறினார் இவர் கூறினார் என செவி சாய்த்தால் 1 என்று சொல்லப்பட்ட செய்தி 9 என்று நமது காதில் வந்து விழும் உண்மை எதுவென்றும் தெரியாது, சொன்னவரை திருப்பிக் கேட்டால் அவர் 1 என்று சொன்னதை கூட 7 என்று சொல்லிக் கொண்டு இருப்பார். நமது செயல்களுக்கு நாம்தான் பொறுப்பு அதுபோல் பிறர் செயல்களுக்கு நாம் பொறுப்பு எடுத்து கொள்ளமுடியாது அப்படியே எடுத்துக்கொண்டாலும் அது ஒரு முறையாக இருக்காது. கோபாலான் சேட்டூர் செல்லாமல் கோவிலில் விளக்கம் கேட்டவர்களுக்கு பதில் சொல்லிக்கொண்டே இருந்தார், மழை வேறு!

பாரதி சென்னையிலிருந்து தொலைபேசியில் பெரியவரிடம் தொடர்பு கொண்டாள். பெரியவர் சிலை விவரம் சொன்னதும் 'சும்மா விளையாட்டுக்குத்தான் நாராயணன் கொடுத்தேன், இப்போ மண்ணே நாராயணன் தந்துருச்சா' என சிரித்தாள். பெரியவரிடம் சிறிது நேரம் பேசிவிட்டு வாசன் வீட்டுக்கு பேசினாள். 'இன்னும் அவன் தோட்டத்தில இருந்து வரலைம்மா, வந்தா பேச சொல்றேன்' என அம்மா நலம் விசாரித்தார். 'சுந்தரன் எப்படி இருக்கான்மா' என்றதும் 'ஓ ரொம்ப நல்லா இருக்கார் வேலை வேலைதான்' என்றதும் 'அவனை ஊருக்கு போன் பேசச் சொல்லுமா' என்றார். பாரதிக்கு கவிதைக்கு தலைப்பு பற்றியும் முன்னுரை பற்றியும் வாசனிடம் பேசாமல்

போய்விட்டதே என வருத்தமாக இருந்தது. ஊரில் இருட்டி கொண்டு வந்தது, மழையால் மின்சாரம் தடைப்பட்டது, தொலைபேசியும் "கரகர" என கனைத்துவிட்டு துண்டித்துப் போனது. வாசன் இன்னும் தனியாய் மழை நிற்கும், என இருளில் நின்று கொண்டு இருந்தான்.

மழை நிற்காது எனத் தெரிந்ததும் வாசன் வயற்காட்டில் சென்று தண்ணீரை திறந்துவிட்டான். மழை அவனை கரைத்துவிடும்போல் இருந்தது. தோட்டத்து கட்டிடத்துக்குள் சென்று நின்று கொண்டான். இனி புல்கட்டினை தூக்கி சென்றால் முழுவதும் நனைந்துவிடும் என இருளை பொருட்படுத்தாது நடக்க நினைத்தான். 'தம்பீ" என அவனுக்கு முன்ன பின்ன தெரியாத ராமம் இட்ட மிக மிக முதியவர் ஒருவர் அவன் மேல் குளிர்ந்த முதிர்ந்த கையை வைத்தார், மறுகையில் ஒரு பையினை வைத்துக் கொண்டே.

திடுக்கிட்டு திரும்பிய வாசன் அந்த இருளில் யார் என அடையாளம் தெரியாதவனாய் 'யார் நீங்க, என்ன வேணும்' என நடுக்கம் தோய்ந்த குரலில் கேட்டான். 'எனக்கு பசிக்குது, ஏதாவது இருந்தா கொடேன்' அவரது பேச்சு குரல் அவரை மிகவும் வயாதனவர் என வாசனுக்கு காட்டியது. வயதானவராய் இருக்கும் அவருக்கு நம்மை எப்படி தெரிகிறது என நன்றாகப் பார்த்தான், இப்பொழுது அவனுக்கு அவர் நன்றாகத் தெரிந்தார். பசி எனக் கேட்டவருக்கு தக்காளிப் பழங்களைத் தந்தான். இளநீர் வெட்டி மழையின் குளிரில் தண்ணீராகவும் இளனியினையும் எடுத்து தந்தான். ஒரு இரண்டு அடி தொலைவில் பார்க்கும் அளவிற்கு இருள் தெளிந்து இருந்தது.

சாப்பிட்டபின்னர் 'நீங்க யார் எனச் சொல்லமுடியுமா' எனக்கு உங்களை தெரியவில்லை எனச் சொன்னான். வயது ஆகி முகத்தில் சுருக்கங்கள் இருந்தாலும் திடமாய் நின்றார். அவர் சிரித்தவாறெ 'சொந்த ஊருனு எதுவும் இல்ல தம்பி கால் போற போக்கில போய்கிட்டே இருக்கேன் நிரந்தரமா எங்கயும் தங்கி இருந்தது இல்ல, உடம்பு தெம்பு இருக்கறவரைக்கும் உழைச்சி சாப்பிட்டு ஊர் ஊரா வந்துட்டு இருக்கேன் இப்பெல்லாம் தெம்பு இல்ல அதனால கிடைக்கற கஞ்சிய குடிச்சிட்டு காலம் தள்ளிட்டு வரேன்' 'குடும்பம்' எனச் சொன்னதும் யாரும் இல்ல தம்பி கல்யாணம் செய்துக்கல, கூடபிறந்தவங்க யாரும் இல்ல என்றதும் 'பிறந்த

ஊர்' எனக் கேட்டான் வாசன். அவர் சொன்ன பதிலில் ஒரு நிமிடம் ஆடிப்போனான், 'குளத்தூர்' என்றவுடன் எத்தனை குளத்தூர் இருக்குமோ நமது மாநிலத்தில். 'எது சோலையரசபுர குளத்தூரா' என்றான் வாசன். 'அவர் ஆமாம் எனத் தலையாட்டினார். 'நீங்க உங்க சொந்த ஊருக்குத்தான் இப்ப வந்து சேர்ந்து இருக்கீங்க தாத்தா, வயசு எத்தனை தாத்தா' 'தெரிஞ்சுதான் வந்துருக்கேன்ப்பா, நூறுக்கு மேல இருக்கும்' என்றவரை ஆச்சரியத்தோடு மழை நிற்கட்டும் வீட்டுக்கு கூட்டிட்டு போரேன் என்றான். ஆர்வமாக 'காத்தமுத்து தாத்தாவை தெரியுமா தாத்தா அவர் கொஞ்ச நாளைக்கு முன்னதான் இறந்துட்டார், பேச்சி பாட்டி?' எனக் கேட்டான். 'தெரியாது' எனக் கூறினார். காத்தமுத்துவின் தந்தையின் பெயர் ஞாபகத்திற்கு வரவில்லை வாசனுக்கு. தனது தாத்தாவின் அப்பா பெயர் சொன்னான், 'தெரியும்' எனத் தலையாட்டினார். அப்படியெனில் அவரது பெற்றோர்கள் அவரது தாத்தா என எல்லோரையும் பற்றி கேட்டான், அவனது உள்ளுணர்வு சொன்னதும், அவர் சொல்லிய விசயங்களும் சரியாக இருந்தது. எப்படி இத்தனை ஞாபக சக்தி எனத் தனக்குத் தானே கேட்டுக் கொண்டான். ஞாபக சக்தி இல்லையெனில் தனது வாழ்நாள் முடியும் தருணம் என தான் பிறந்த ஊரிலேயே இறக்க வேண்டி இங்கு வருவாரா என்ன? மழை நிற்க ஆரம்பித்தது.

முதியவரை வீட்டுக்கு அழைத்துச் சென்றான் வாசன். தெருக்களில் நடந்து செல்கையில் வீடுகளினுள் விளக்கு ஏற்றி வைத்து வெளிச்சம் கொண்டு வந்து இருந்தார்கள். 'இந்த வாசு பய சிலையை எடுத்தானே நமக்கெல்லாம் சொல்லிருக்கக் கூடாதா வீட்டுக்கு முன்னால கொண்டு வர வைச்சி ஆராத்தி எடுத்து அனுப்பி வைச்சிருப்போமே' என வாசன் நடந்து போவதைகவனிக்காமல் வாசன் குடியிருக்கும் தெருவில் உள்ள பாட்டி சொல்லிக்கொண்டு இருந்தாள். வாசனுடன் வந்த முதியவர் சிரித்து கொண்டார். சற்று தள்ளி சென்றதும் விளக்கு வெளிச்சத்தில் 'வாசு யாரு இவரு' என அவரைக்கேட்டதும் 'எங்க தாத்தா' என உறவு கண்டவனாய் சொன்னான், அதே வேளை 'ம்ம் உங்க தாத்தா' எனச் சொல்லி இருந்தால் அது வம்பு பேச்சு. மழையினால் குழந்தைகள் படிக்க கதை கேட்க வரவில்லை. 'இது யாரு பார்க்க குடுகுடுப்பைகாரர் மாதிரி ராமம் போட்டுகிட்டு வாசுவோட போறது, நம்ம ஊருக்கு நல்லகாலம் பொறந்துருக்கு போல சிலைய கண்டுபிடிச்ச வாசு இப்போ சாமியாரை கண்டுபிடிச்சி கொண்டு வந்துருக்கு'

ஒவ்வொருவர் ஒவ்வொன்றாக பேசினார்கள். மின்சார விளக்கு இருந்து இருந்தால் இந்த பேச்சுக்கள் இருக்காது எல்லாம் தொலைகாட்சி முன்னர் அமர்ந்து இருப்பார்கள். முதியவர் தள்ளாடாமல் தைரியமாய் நடந்து வந்தார்.

இவரது பின்னால் சிலர் நடக்க ஆரம்பித்துவிட்டார்கள் என வாசன் பின்னால் திரும்பி பார்த்தபின்னர்தான் தெரிந்தது. முதியவர் வாசன் வீடு அடைந்ததும் மின்சார விளக்கு எரிந்தது. பின்னால் திரும்பி பார்த்தான் வாசன், யாரும் இல்லை. அப்பா அதிசயமாய் வீட்டில் இருந்தார். 'கடவுளை கண்டுபிடிச்ச பெரிய கருணையாளன் ஆயிட்ட நீ' என அப்பா அவனுடன் வந்த முதியவரை கவனிக்காமல் சொன்னார். 'நமக்குள்ள இருக்கற கடவுளை கண்டுபிடிக்கவே நம்மால முடியல...' என்றான் வாசன். 'சரி சரி தலைய துவட்டிட்டு வேற துணி மாட்டிகிட்டு வா சாப்பிடலாம்' என அப்பா சொல்லவும் முதியவர் உள்ளே நுழைந்தார். 'வாங்க அய்யா' என வீட்டுக்கு வந்தவரை வரவேற்றார் யார் என்று கூடத் தெரியாமல். அம்மாவையும் அழைத்தான் வாசன், முதியவருக்கு ஒரு சின்ன நாற்காலியினை தந்து அமரச் செய்தான். 'அப்பா இவர் பேரு பெருமாள், இவங்கதான் முதன் முதலா இந்த ஊருக்கு குடி வந்து இருக்காங்க இப்ப நாம வாங்கி இருக்கோமே செவல் நிலத்திலதான் இவங்க முதமுத தாத்தா குடி இருந்து இருக்காங்க அவங்க இங்க சாத்திரம்பட்டியில இருந்து அடிச்சி விரட்டபட்டு இருக்காங்க. அப்பவே பெண் சுதந்திரம் தீண்டத்தகாமைக்கு எதிர்த்து பேசினதால இவங்க தாத்தாவை அடிச்சி விரட்டி இருக்காங்க அவரும் அவரோட புள்ளைங்களும் இங்க வந்து குடிசை போட்டு தங்கி இருந்து இருக்காங்க. அப்படியே அங்கேயே இவங்க குடும்பம் பல வருசங்களா தனியா வாழ்ந்து இருந்து இருக்கு அப்ப ஒருதடவை பெரிய மழை வந்து எல்லாம் அழிஞ்சி ஒரு சிலர் மட்டுமே மிஞ்சி இருந்து இருக்காங்க அதுல ஒருத்தர் அந்த நினைவுகளை மறக்காம அப்படியே தலைமுறை தலைமுறையா சொல்லி வந்து இருக்கார், அங்க 200 வருசம் முன்னால ஒரு குழந்தை பிறந்து கொஞ்ச நாள்ல இறக்கவும் புதைச்சிட்டு, தள்ளி இங்க வந்து தங்கிட்டாங்க! அப்படி புதைச்ச குழந்தைதான் பாறை மூடி சிலையா வந்துருக்கு, குழந்தைய தெய்வம் அப்படிங்கிற ரீதியில பார்த்தா அது ஒருவகையில தெய்வசிலைதான்' என்று வாசன் ஒரு முதியவரின் 300-350 வருட சரித்திரம்தனை அவரிடம் கேட்டதை வைத்து சொன்னான்.

நமது கொள்ளு தாத்தா யார், நமது கிராமம் எப்படி வந்தது என தெரியாத நமக்கு இந்த பிரபஞ்சம் பற்றி விளக்கினால் எப்படி புரியும். ஒவ்வொரு யுகங்களிலும் விசயங்கள் வாய் மொழியாகவே சொல்லப்பட்டு வந்து இருக்கின்றன, அவை காலப்போக்கில் மாறி இருக்கலாம் அது எழுத்து வடிவமாக்கப்பட்டு வேதங்களாக மொழியில் வைத்தபோது பல குளறுபடிகள் நடந்து இருக்கலாம்! இரண்டாயிரம் வருடத்திற்கு முன்னர் எழுதப்பட்ட திருக்குறளிலே பல இடைசெருகல்கள் இருக்கிறதென ஐயப்படுவோர் இருக்கையில் பில்லியன் வருடங்கள் வாய்மொழி கணக்கில் வந்ததை எப்படி சொல்வது. அதனால் தான் விசயங்கள் எதுவுமே மறைக்கப்படக்கூடாது. அப்படி மறைக்கப்பட்டு இருந்து இருந்தால் ஒரு காயத்ரி மந்திரம் தொலைந்து போய் இருக்கும் நமக்கு தெரிந்தவரை! இன்னும் எத்தனை விசயங்கள் தொலைந்து போனதோ இந்த கலியுகம் முடிந்து மீண்டும் சத்ய யுகம் வரும் வரை காத்து இருக்க வேண்டுமோ என்னவோ. எவ்வளவு காலங்கள் இருந்து இருந்தால் இப்படியெல்லாம் எழுதி வைத்து இருப்பார்கள். மொத்த காலங்களையும் எழுத்திலே செலவழித்து இருப்பார்களோ என அதிசயப் பட வைக்கிறது. இறந்த காலங்கள் இல்லாமல் நிகழ்காலம் இல்லை, நிகழ்காலம் குறிக்காத ஒன்றை எதிர்காலம் உணரப்போவதில்லை. முதியவர் தனக்கு தனி வீடு இருந்தால் நல்லது எனச் சொன்னார். வாசனுக்கு காத்தமுத்து தாத்தாவின் வீடு யாபகத்திற்கு வந்தது. அவன் ஆற்றி இருந்த உரையில் தலையும் துணிகளும் உலர்ந்து இருந்தது.

முதியவர் தான் வைத்து இருந்த பையினுள் உள்ள ஒரு பையில் அடுக்கு அடுக்காக பணக் கட்டுகளையும் சில விவரங்கள் அடங்கிய தாள்களையும் எடுத்து வைத்தார். மற்றொரு பையில் சில துணிகளும் ராமக்கட்டிகளும் குங்குமம் என தூக்கக் கூடிய அளவில் பொருட்கள் வைத்து இருந்தார். மொத்த தொகை 50 ஆயிரத்து 320 ரூபாய். நன்கொடையாக கொடுத்த தொகை என இடத்தின் பெயர், எவ்வளவு பணம் என எழுதி வைத்து இருந்தார் எல்லாம் பத்தாயிரம், ஐயாயிரம் என இருந்தது. 'எல்லாம் இத்தனை வருசம் சம்பாரிச்சதல எல்லாம் போக இதான் மிச்சம், இந்தாங்க பத்திரமா எடுத்து வைச்சிருங்க நான் கேட்கறப்ப கொடுத்தாப் போதும்' என வாசன் தந்தையிடம் தந்தார்.

'நீங்களே வைச்சிருங்க' என்றார் வாசன் தந்தை. அவருக்கோ ஆச்சரியம் எப்படி

இவ்வளவு பணத்தை பத்திரமாக பாதுகாத்து வந்து இருக்கிறார் என்று. பின்னர் பணத்தை வாங்கித்தான் ஆக வேண்டும் என கட்டாயத்தின் பேரில் வாங்கிக் கொண்டார்.

சாப்பிட்ட பின்னர் காத்தமுத்து தாத்தாவின் வீட்டிற்கு சென்றான். மழை அவ்வளவு பெய்தும் அந்த வீட்டில் ஒரு தண்ணீர் கூட இறங்கவில்லை. படங்கள் எல்லாம் அப்படி அப்படியே இருந்தன. பேச்சிப் பாட்டிதான் வீட்டினைப் பார்த்து வந்தாள். வாசன் பாட்டியிடம் சாவி வாங்கி அவரை தங்க வைத்தான். இவரைப் பற்றி சொல்லவும் 'அப்படியா எனக்கு ஞாபகம் இல்லப்பா' என்றார் பேச்சி பாட்டி. சிலை பற்றி சிலாகித்துப் பேசினாள் பாட்டி, ஒரு பாட்டும் பாடினாள் வாசன் தன்னை மறந்து பாட்டியின் பாடலில் சிரித்தே விட்டான். சுமதியின் வீடு அங்குதான் இருக்கிறது. உறங்கி இருப்பாள் என நினைத்தான் வாசன். முதியவர் காலையில் சந்திப்பதாய் கூறினார்.

வீட்டிற்கு வந்ததும் அம்மா பாரதி போன் பண்ணியதாக கூறினார். சாதாரணமாக சின்ன பிரச்சினை என்றால் சில வாரங்கள் ஆகும் கிராமத்தில் இருக்கும் போன் சரி செய்ய. இம்முறை அப்படி இல்லை. அம்மாவினைத் தேடி பலர் வந்ததாகவும் சிலை பற்றி பேசிச் சென்றதாகவும் மழை வந்ததால் வீடு தப்பியதாகவும் அம்மா சொன்னார். தொலைபேசி அழைத்தது. எடுத்தான் வாசன். எதிர்முனையில் பாரதி. எடுத்த காரியம் முடிக்காமல் வெற்றியாளர்கள் உறங்குவதில்லை.

பாரதியிடம் நலம் விசாரித்தான். சிலையைப் பற்றி பேசினாள் எல்லாரையும் போல. 'சிலைதான் எடுத்தேன்' எனச் சிரித்தான். கவிதைத் தொகுப்பினை வெளியிடப்போவதாகவும் விவரங்கள் சொன்னாள். 'உனக்கு எப்படி நன்றி சொல்றது, சும்மா விளையாட்டுக்குனு நினைச்சேன், என்ன தலைப்பு சொன்ன' என்றான் 'தொலைக்கப்பட்ட தேடுதல்கள்' எனக்கேட்டதும் 'பரவாயில்ல நல்லாதான் இருக்கு, நீயா வைச்ச' என்றான் 'இல்லை என் தோழி கிருத்திகானு பேரு' என்றதும் 'சரி நீ ஏதாவது தலைப்பு வைச்சியா' எனக் கேட்டான். 'ஒளித் தீண்டலின் உயிர்கள்' என்று சொன்னதும் 'நீ சொன்ன தலைப்பே தலைப்பா வைச்சிரு' என்றான், அவள் 'இல்ல என் தோழி வைச்சதே இருக்கட்டும், இல்லைன்னா அவ கோவிச்சுக்குவா' என்றதும் 'உன் விருப்பம்' என்றான்.

முன்னுரை கேட்டதும் ஒரு வரியில் சொன்னான் 'உணர்தலில் உள்ள சுகம்தனை கருவாய் சுமக்கும் கவிதைகள் கண்ணீரை வரவழைக்கின்றன, இதுதான் முன்னுரை. 'அது இல்ல முன்னுரைன்னா கொஞ்சம் எழுதனும்' என்றாள். 'முன்னுரை அப்படினு போட்டு இது எழுது அதுக்கு கீழே தேடுதல் தலைப்பில இருக்குற அந்த 'நீ என் அருகில் இருப்பினும்... ' கவிதையை எழுது அது போதும்' என்றான். பாரதிக்கு மிகவும் சந்தோசமாக இருந்தது அவனுடன் பேசியது, அவனுக்கும் சந்தோசமாக இருந்தது அவளிடம் பேசியது.

17.

முதியவர் அதிகாலையில் எழுந்து வாசன் தோட்டம் சென்றார். அவர் தான் நடந்து வந்த பாதையை மிகவும் சரியாய் கணித்து வைத்து இருந்தார். அங்கு சென்று குளித்து விட்டு தியானம் பண்ணினார். தியானம் மனதை பக்குவபடுத்தும், ஒருமுகப்படுத்தும்.

நமது மூளையில் எத்தனையோ விசயங்கள் அடக்கி ஆளப்பட்டு வருகின்றன. இதில் ஒன்று விசயங்கள் சிந்திக்கும் பகுதி, அதே வேளையில் உடனே சிந்திக்காத மற்றொரு பகுதி. ஒரு விசயம் நடக்கும் போது உடனே முடிவு எடுக்கும் திறன் கொண்ட சிந்திக்கும் பகுதியால் நாம் தவறு இழைக்கும் வாய்ப்புகள் அதிகம். அங்கு யோசனைக்கு இடம் இல்லை, முடிவுதான் மொத்த கருத்தாக இருக்கிறது, இன்னது நடந்துவிட்டது இன்னது செய்துவிடவேண்டும் என்ற சிந்தனையே மேலோங்கி இருக்கிறது அப்போது நல்ல முடிவு எடுப்போம் என உறுதியாகச் சொல்ல முடிவது இல்லை. சிந்திக்காத பகுதியை சிந்திக்க பண்ணிவிட்டால் அது ஆற அமர யோசித்து நிதானமாய் முடிவு எடுக்கும். தியானத்தின் மூலம் இந்த ஆற அமர பகுதியானது அதிக செயல்பாடு உடையதாகி வேகமாய் முடிவு எடுக்கும் பகுதியினை விட நன்றாக செயல்பட்டு எல்லாம் சிறப்புற செயல்படுகிறது. அதனால்தான் தியானத்தின் மூலம் சிறப்பான சிந்தனையை கொண்டுவரலாம் என ஒவ்வொருவரும் ஒவ்வொரு மூலப்பொருளை முதன்மையாய் கொண்டு தியானம் செய்து மனத்தின் எண்ணங்களை கட்டுப்பாட்டில் கொண்டுவரச் செய்து பெரும் பேறு அடைகின்றனர்.

அப்படியெனில் தவத்தில் தியானத்தில் மிகச்சிறந்தவரான விசுவாமித்திரருக்கு ஏன் கோபக்காரர் என பெயர் வந்தது. இதுதான் இதன் மூலம் நடக்கிறது என அறுதியிட்டுச் சொல்வது தகுமோ? எல்லாவற்றிர்க்கும் விடை காணத் துடிக்கிற செயல், காரியங்களுக்கு காரணம் கற்பிக்கலாம் அதுதான் முடிவு என்று நிச்சயமாய் சொல்லிவிடமுடியாது. அப்படித்தான் நடக்கும் எனில் அது அப்படித்தான் நடக்கும் என சர்வ சாதாரணமாய் சொல்லிவிட்டு போகிறது வெளித் தேடல் இல்லாத பயணம். முதியவர் அரை மணி நேரமாய் இன்னும் தியானத்தில் இருந்தார். இவரது கட்டுப்பாடு உணவு முறை வழக்கங்கள் இவரை இயற்கையாய் இன்னமும் வாழவைத்துக் கொண்டு இருந்தது.

வாசன் தோட்டத்திற்கு வெகு காலையில் வந்து சேர்ந்தான். ஊரில் இருந்தால் சொற்பொழிவாற்ற வேண்டும் என நினைத்துக் கொண்டான். முதியவர் தியான நிலையில் அமர்ந்து இருந்ததை கண்டான். பெரியவர் பூஜை அறையில் இவ்வாறு இருப்பதை பலமுறை கண்டு இருக்கிறான். வாசன் கவிதைகள் எழுதும்போது தியான நிலையில் இருப்பதாய் உணர்ந்து இருக்கிறான். நேற்று பெய்த மழையால் இன்று யாரும் வேலைக்கு வரமாட்டார்கள் என வாசனுக்கு மனதில் பட்டது. சூரியன், தண்ணீர் காய வைக்க வேகமாய் எழுந்துவிடுவான் இன்று. முதியவர் தியானம் கலைத்து எழுந்தார், வாசன் தலை குனிந்து வணக்கம் சொன்னான்.

முதியவரும் வணக்கம் சொல்லியவாறே தியானத்தில் இருந்து எழுந்தார். நெற்றியில் ராமம் இட்டு இருந்தார். 'நாராயணா நாராயணா நாராயணா' என் மூன்று முறை கூறினார். இவரது தாத்தா காலத்து கதையும் கிராமத்து கதையும் கேட்டு தெரிந்து கொண்ட வாசன் இவரை பற்றி முழுவிவரம் கேட்க விரும்பினான். 'தாத்தா எப்ப இருந்து தியானம் செய்ய ஆரம்பிச்சீங்க' என கேட்டவுடன் 'இந்த ஊரைவிட்டு என்னை பெத்தவங்க, தாத்தா இறந்த அந்த எட்டு வயசில வெளியேறினேனோ அப்ப இருந்து தியானம் செய்துட்டு இருக்கேன்' என்றவரை 'அப்படின்னா நீங்க எங்க போய் தங்கி இருந்தீங்க, எதுக்காக ஊரை விட்டு வெளியேறி போனீங்க' என்றான். ‘அந்த குழந்தைய புதைச்சப்பறம் எனக்கு, என்னுடைய பெற்றோர்கள், அவர்களுடைய பெற்றோர்கள் எல்லாருக்குமே அவர்கள் அவர்களுக்கு ஒரு ஒரு குழந்தைதான் இது எங்க தாத்தாவுக்கு ஒருத்தர்

விதித்த சாபம்' என்றார்.

சாபம் அப்படி என்றால்? சொல் வாக்கு பலித்து விடும் என்பது உண்மையா? ஒரு மனிதனுடைய சந்ததி வரலாற்றினை சாபங்கள் எனப்படும் சொல்லாற்றல் நிர்ணயம் செய்துவிடுமா? மனித வரலாற்றில் இதெல்லாம் எதுவுமே நடக்கவில்லையென எதைச் சொல்லி சாதிக்க முடியும். 'அப்படின்னா அதை நீங்க மாத்தி அமைச்சிருக்கலாமே தாத்தா' என்றான் 'முயற்சி பண்ணாமலா இருந்து இருப்பேன்னு நினைக்கிற, நானும் ஒரு பொண்ணை காதலிச்சேன் அவளுக்கு 3 அண்ணன்ங்க, 3 அக்கா எங்கள் காதலுக்கு எனக்கு யாரும் சம்மதம் தரத் தேவையில்லை ஆனா அவங்க பக்கம் சம்மதம் வேண்டி இருந்தது, எனது உழைப்பு திறமை எல்லாம் வைச்சு சொந்தமா வாழ்க்கை அமைச்சதால அவங்களை சம்மதிக்க வைக்க ஒண்ணும் பெரிய விசயமா படல அதே வேளையில அந்த பொண்ணுக்கும் அவங்க வீட்டுல அவ விருப்பம் போல ஆகட்டும்னு சொல்லிட்டாங்க, எல்லாம் சரியா வர நேரம் இடம் எல்லாம் பார்த்தாச்சு தேதி எல்லாம் குறிச்சாச்சு' என நிறுத்தினார். கடந்தகாலங்களை அசைபோடுவது மிகவும் சுகம், சோகமாக இருப்பினும்.

'என்ன ஆச்சு தாத்தா அப்புறம்' என அறியும் ஆவலுடன் கேட்டான். 'அவள் மணமேடைக்கு வரலைப்பா, அதிகாலையில செத்துட்டா' என மேலும் சில வினாடிகள் தாமதித்தார், 'மன்னிச்சிக்கோங்க தாத்தா' என்றவனை 'ம்ம்ம் அதுக்கப்பறம் வேற எந்த பொண்ணோடயும் வாழ பிடிக்கல இந்த சாபத்துக்கு எதிரா போகவும் விருப்பம் இல்ல, அநியாயமா நம்மால ஒரு பொண்ணு இறந்துட்டாளேங்கிற வேதனையில அங்க இருந்து ஒவ்வொரு இடமா மாற ஆரம்பிச்சேன், இந்த ஊருல இருந்தாத்தானே அந்த சாபம் அப்படின்னு வேற ஊருக்கு போன என்னை சாபம் விடல' என்றவரை 'தாத்தா அப்படி பாத்தா உங்களோட சத்தியத்துல நீங்க ஜெயிச்சிட்டீங்க தாத்தா, ஏன்னா நீங்க இன்னொரு குழந்தைய பெற்றெடுக்கலை' என்றான் 'அவரும் ஆமாம்பா, ஒருவகையில சாபம்தனை ஜெயிச்சிட்டேன் ஆனா வாழ்க்கை நிறைவு பெற்ற மாதிரி இல்லை' என்றார். விபரீதம் நடக்கப் போவதாக வாசன் உள்ளுணர்வு சொல்லியது.

முதியவரிடம் கேட்டான் வாசன் 'வாழ்க்கை நிறைவு பெறவில்லையா, என்ன

அர்த்தத்தில் சொல்றீங்கள் தாத்தா' என்றான் அதற்கு அவர் எனக்கப்புறம் ஒரு வாரிசும் இல்லாமா போகுதேன்னு சிறு வருத்தம் வருவது உண்டு தம்பி' என்றார். காலம் கடந்த கவலை. வாசன் நினைத்தது சரியாக இருந்தது. சில விசயங்கள் பேசும்போது இப்படித்தான் இருக்கும் என நமது மனது தானாகவே ஒரு எண்ணம் கொண்டு வந்துவிடும். அது நடந்துவிட்டால் நாம் அப்பவே நினைச்சம் பாரு என சொல்லலாம், இல்லையெனில் இது எப்படி அப்படியெல்லாம் நடக்கும் என சொல்லிக்கொள்ளலாம். ஒன்று இது இல்லையெனில் அது.

நேராக கேட்டான் வாசன். அப்படின்னா இந்த வயசில் கல்யாணம் பண்ண போறீங்களா தாத்தா' என்றான். அவர் சிரித்தார் அப்படி பண்ண நினைச்சிருந்தா எப்பவோ பண்ணி இருப்பேன் அது இல்ல தம்பி எவ்வளவுதான் சீரும் சிறப்புமா வாழ்ந்தாலும் வாழ்க்கை ஒரு நல்ல முடிவா இருக்க மாட்டேங்குது ஏதாவது ஒரு குறை இருக்க மாதிரியே இருக்கு எப்படி ஒரு பூரண வாழ்க்கையே யாருமே வாழ முடியறது இல்ல அப்படினுதான் தோணுது இப்ப கூட எனது கடைசி கால வாழ்க்கையை இந்த இடத்தில வாழ வந்து இருக்கேன் அது கூட ஒருவித ஆசைதான் இப்படியே ஆசைகள் தொடர்ந்து வரதால வாழ்க்கை வெறுமையாய் இருக்கு' என்றவரை 'அப்படின்னா வாழ்ந்தவரைக்கும் நல்லா வாழ்ந்தோம்னு சந்தோசபடலாமே இந்த சாபத்தில கிடைச்ச வெற்றி மாதிரி' என்றான் 'அந்த சாபம் என்னோட இப்படி முடியனும்னு இருக்கு' என கவலைப்பட்டார். 'உங்க வாழ்கை நிறைவு அடைய என்ன செய்யனும் சொல்லுங்க தாத்தா' என்றான். இந்த ஊரில ஒரு ஆசிரமம் கட்டனும் அந்த ஆசிரமத்தில தாயில்லாமல் தவிக்கிற குழந்தைகளை பாதுகாத்து தவிக்கிறவங்களுகு உதவி செய்யனும் உதவி பன்னுவியா' என்றார். 'இப்ப வந்து சொல்றீங்களே' என்றதும் 'எனக்கு மரணம் இப்ப வராது தம்பி அதை எப்ப வரவைக்கனுமோ அப்ப வரவைப்பேன்' என்றார். மரணம்தனை வெல்லும் வழி தெரிந்துவிட்டால் தெய்வம் இல்லை என தெரிந்து கொள், இல்லை எனச் சொல்வதே இயலாமையின் வெளிப்பாடு என்பதையும் அதே வேளையில் புரிந்து கொள். வாசன் உதவுவதாய் அவரிடம் வாக்கு கொடுத்தான்.

அவர் சந்தோசப்பட்டார். சாப்பிட அங்கிருக்கும் சில கனிகள் எடுத்து கொண்டார். 'வீட்டுல சாப்பிடுங்க தாத்தா' என தோட்டத்தில் சிறு வேலைகள் கவனித்தான்

வாசன். அவன் முடித்து வரும்வரை காத்து இருந்தார். ஆசிரமம் பற்றிய வேலையை பற்றி விளக்கி கொண்டு வந்தார், இதுவரை தன்னால் இதை செய்யமுடியவில்லை எனவும் அதனால் தன் இடம் இருந்த பணம்தனை உதவியாய் பல இடங்களில் தந்ததாய் கூறினார். இதை அவர் என்றோ செய்து இருக்கலாம் எனப்பட்டது வாசனுக்கு.

முதியவரை பெரியவரிடம் அறிமுகம் செய்து வைத்தான் வாசன். பெரியவரும் முதியவருக்கு அறிமுகப்படுத்தப்பட்டார். தனது வீட்டில் காலை உணவு உண்ணுமாறு பெரியவர் முதியவரிடம் கேட்டுக்கொன்டார். வாசன் தான் சேட்டூர் வரை சென்று வருவதாக கூறி விடைபெற்றுக்கொண்டான்.

பெரியவரும் முதியவரும் விசயங்கள் பரிமாறிக் கொண்டனர். தனது ஆஸ்ரம ஆசையினை பெருமாள் வினாயகத்திடம் கூறினார். அதற்கு பெரியவர் 'ஆஸ்ரமம் கட்டுறதுன்னா இங்க எப்படி சரிப்பட்டு வரும்னு எனக்குத் தெரியல, அதுவும் கிராமத்தோட கிராமமா உள்ளூரிலேயே கட்டீனீங்கன்னா அது அந்தளவுக்கு நல்லா இருக்குமான்னும் எனக்கு அபிப்பிராயம் இல்ல' என்றதும் முதியவர் 'அது சரிப்பட்டு வராதுனு எவ்வளவு இவ்வள உறுதியா சொல்ற' என்றதும் 'ஆமாம் அது சரிப்பட்டு வராதுதான், ஊருக்கு ஒதுக்குப்புறமா ஊரை ஒட்டாம இருந்தாத்தான் நல்லது அதுவும் பள்ளிகூட வசதி குருகுலம் மாதிரி வைக்கனுமா இல்லை அந்த பிள்ளைகளுக்குனு தனியா பள்ளிக்கூடம்னு வைக்க போறீங்களா இப்படி பல விசயங்களை கருத்தில வைச்சிட்டுதான் நீங்க செயல்படனும், ஏதோ குழந்தைகளை காப்பாத்தனும் அப்படிங்கிற நல்ல நோக்கத்தில எல்லாத்தையும் முடிவு பண்ணாம ஏனோ தானோன்னு செய்யக்கூடாது அதுவும் இந்த வயசில நீங்க ஆரம்பிக்கிறதா இருந்தா யார் யார் உதவி பண்ணுவாங்க எல்லா விபரமும் வேணும்' என்றதும் 'வாசன்தான் உதவி பண்ணப்போறான், எனக்கு கிராமத்திலதான் அதுவும் பொது இடத்திலதான் கட்டனும்னு விருப்பம்' என்றதும் 'அது சாத்தியப்பட்டு வராது, வாசனுக்கு அதுக்கெல்லாம் நேரம் இல்ல' என பெரியவர் கூறினார்.

'வாசனுக்கு நேரம் இல்லை அப்படிங்கிறதை நீ ஒன்னும் முடிவு பண்ண வேண்டியது இல்ல, இன்னைக்கு ஊரை கூட்டுவோம் அதுல எனக்கு சம்மதம் தரவங்களை கணக்கு எடுப்போம் அப்புறம் ஊர் மத்தியில வைக்கலாமா

வேணாமானு பார்க்கலாம், வேணாம்னு சொன்னா என்ன ஆகும்னு பிறகு தெரியவைப்பேன்' என்ற பெருமாளை 'சொன்னா சொன்னதுதான் அவங்க நல்லதுக்குத்தான் இங்க வாழ்ந்து வரேன், அதனால இந்த வயசான காலத்தில நல்லா ஓய்வு எடுக்கறத பாருங்க வாசனை தேவை இல்லாம சங்கடபடுத்தவேண்டாம்' என்றதும் 'அவன் எனக்கு சத்திய வாக்கு கொடுத்து இருக்கான், அவன் அப்படி செய்யாட்டி எங்க பாரம்பரியம் சாபம் அடைஞ்சது போல அவனுக்கு நான் சாபம் விடவேண்டி இருக்கும்' என்ற முதியவரை பார்த்து பெரியவர் 'வாசனுக்கு சாபமா' எ ன சொல்லிக்கொண்டே 'அவனுடைய சாபத்துக்கு நீங்க ஆளாகாம இருந்தா சரி' என முதன்முறையாய் முதியவரின் அறியாமையை நினைத்து வேதனைப்பட்டார். முதியவர் 'உன் தயவு இல்லாம இப்படி ஆஸ்ரமம் கட்டித்தான் ஆகனும்னா அதுக்கும் நான் தயார்' என சாப்பிடாமல் எழுந்தார் முதியவர். 'சாப்பிட்டு போங்க' என்று சொன்னதற்கு 'உன் வீட்டுல என் கைய நனைச்சா உனக்கு கடன் பட்டவன் ஆயிருவேன், இன்னைக்கு சாயங்காலம் ஊர் சபைய கூட்ட வழிய பாரு இல்லைன்னா நானே தண்டோரா போட வைப்பேன்' என முதியவர் சொல்லியதும் பெரியவர் எவ்வளவோ தடுத்தும் ஏதும் கேளாமல் கிளம்பிச் சென்றார்.

18.

சேட்டூர் சென்ற வாசன் கோபாலனை சந்தித்தார். 'வா வா என்ன ஆளையே நேத்துல இருந்து ஊருல உன்னை பாக்கமுடியலைன்னு சொல்றாங்க பயந்து ஓடி ஒளிஞ்சிட்டு இருக்கியா, நீ தான் இப்படி இருக்கேன்னு பார்த்தா அந்த வினாயகம் உன்னை விட பெரிய ஆளா இருக்கான் இப்பவும் அவன் வைச்சதுதான் சட்டம்னு பேசிக்கிட்டு இருக்கான், தனிக்கோவில் கட்டச் சொன்னா கட்டிட்டு போக வேண்டியதுதானே அதைவிட்டுட்டு ஆயிரம் விளக்கம் பேசறான், தெய்வசிலையா இருந்தா என்ன, இருந்துட்டு போகட்டும் அதுக்காக தனிக்கோவில் கட்டி இருக்குற கோவிலோட கடவுளோட மரியாதைய கெடுக்க இஷ்டமில்லைன்னு அடாவடியா பேசுறான்' அமைதியே உருவான அந்த வினாயகம் எனும் மனிதனை, சிலை வடிக்கும் தான் கடவுளை படைப்பதாய் எண்ணிக்கொள்ளும் திறமை தந்த கர்வத்தால் அடாவடி எனும் வார்த்தையை உபயோகிக்கப்பட்டதை கேட்டதும் வாசன் முகம் சுளித்தான்.

'அவர் சொன்னதுல எந்த தவறும் இல்ல அது போல மத்தவங்களை மதிச்சு பேசுறது நல்லது அய்யா, அந்த சிலை மனிசன் செஞ்சது இல்லைன்னு எப்படி அவ்வளவு சரியா சொன்னீங்கள்' என்றதும் கையில் இருந்த உளியினை படாரென கீழே போட்டு 'ஒரு விசயத்தை எத்தனை தடவைதான் திருப்பி திருப்பி கேட்ப, இதோ கீழே எரிஞ்சேன் பாரு உளி, அது பட்ட இடம்னு அந்த சிலையில எதுவும் இல்ல அதை வைச்சுதான் சொன்னேன், போ' என வாசனை பார்க்கும் போதெல்லாம் எரிச்சல் பட்டவர் போல காணப்பட்டார். சிலையின் உண்மை விசயம்தனை சொல்லிவிட்டு 'உங்ககிட்ட பதிலை தெரிஞ்சுகிட்டு போகலாம்னுதான் வந்தேன்' என வேகமாக வெளியேறினான். 'இனிமே இந்த பக்கம் வந்த உன்னை இங்க சிலை அடிச்சி வைச்சிருவேன்' என்று சத்தமாய் சிரித்துக் கொண்டே சொன்னார், வார்த்தைகளில் கோபம் சிரிப்பினால் அமுங்கி இருந்தது போல இருந்தது. வாசன் திரும்பினான் 'அய்யா நான் என்ன தவறு செய்துவிட்டேன்னு இப்படி என்னை கோபமா பேசறீங்க, எனக்கு சந்தேகமா இருந்தது அதுவும் இவ்வளவு திறமையா சிலை எல்லாம் செய்றீங்க அப்படினுதான் கேட்க வந்தேன்' என வாசன் சொன்னதும் கோபாலன் வாசனிடம் 'பெரியவங்க சொன்னா சரி அப்படின்னு கேட்கனும், என்னையவும் பூசாரியையும் அவன்கிட்ட விட்டுட்டு நீ உனக்கு என்னானு போய்ட்ட' என்றதும் வாசனுக்கு அது எப்படி தவறாகப்பட்டது இவருக்கு எனப் புரியவில்லை 'கிளம்பு எனக்கு வேலை இருக்கு தெய்வத்தை நம்பு கண்ட கதைகளை நம்பாத' என வாசனை இம்முறை வாசல் வந்து வழி அனுப்பினார், மூக்கப்பன், சின்னகருப்பன் ராஜனை சந்தித்து முடிவுதனை கேட்டான் அவர்கள் சம்மதம் தந்தார்கள் அதே வேளையில் அதிகமாக பணம் கேட்டார்கள் பெரியவரிடம் பேசிவிட்டு சொல்வதாக சொல்லிவிட்டு வீடு அடைந்தான் வாசன். முதியவர் வாசனை பார்த்து 'இன்னைக்கு சாயந்திரம் ஊருல பெரிய பிரச்சினை வரப்போகுது' என்றார். வாசன் ஒன்றும் புரியாமல் அம்மாவை பார்த்தான். அம்மா உனக்கு ஏன்டா இப்படி தேவை இல்லாத பிரச்சினை எல்லாம் என்பது போல் பார்த்தார்.

பெரியவர் வினாயகம் வீட்டில் நடந்த விசயம்தனை அறிந்துகொண்டான் வாசன். ‘என்னதான் இருந்தாலும் நீங்க அவர் சொன்னதும் சரி அப்படின்னு சொல்லிட்டு

வந்து இருக்கனும், அவருக்கு எதிரா யாரும் இங்க பேசமாட்டாங்க, நீங்க தேவை இல்லாம பிரச்சினை வளர்த்துட்டு வந்து நிற்கீறிங்க' என்று வாசன் சொன்னதும் 'நீ எனக்கு உதவி பண்றேன்னு வாக்கு கொடுத்து இருக்க, அதை மறந்துட்டு பேசாத நான் என்ன சொல்றேனோ அதை மட்டும் செய்' என பெருமாள் சொன்னதும் வாசன் 'நீங்க செய்றது நல்லா இல்ல தாத்தா' என்றான். 'அதை சாயந்திரம் பார்ப்போம்' என சொல்லிவிட்டு கிளம்பினார்.

'எதுக்குப்பா வாக்கு கொடுத்த' என்ற அன்னையிடம் 'உதவி பண்ணுவியான்னு கேட்டார், பண்றேன்னு சொன்னேன், அதுக்காக இப்படியெல்லாம் பண்ணினா உதவி பண்ணுவேன்னு நினைச்சா அது அவரோட தப்புமா' என்று சொல்லிவிட்டு தேவையில்லாமல் மனதை குழப்ப வேண்டாம் என சொல்லிவிட்டு தோட்டம் செல்வதாக வாசன் சென்றான்.

தன்பக்கம் ஆட்கள் திரட்ட வேண்டி பொது கட்டிடம் சென்றார். அங்கு பலர் அமர்ந்து இருந்தனர். முதியவர் தனது முப்பாட்டன்களால் தான் இந்த ஊர் வந்ததாக கூறி சிலை விசயம், ஆஸ்ரமம் விசயம் எல்லாம் சொல்லி முடித்தார். அதற்குள் ஒருவன் ஓடி சென்று ஒரு காபியும் வடையும் தண்ணீரும் வாங்கி வந்து கொடுத்தான். இவர் சொல்வதை ஆவலுடன் அனைவரும் கேட்டு கொண்டு இருந்தனர். இன்னும் திடமாக இருப்பதை கண்டு அவர்கள் அனைவருக்கும் ஆச்சர்யமாக இருந்தது. 'இப்போ சொல்லுங்க இங்க ஆஸ்ரமம் கட்டலாமா கூடாதா என்றார்' அங்கு இருந்தவர்கள் 'தாரளமா கட்டலாம், யார் என்ன சொன்னாலும் நாங்க உதவி பண்றோம் தாத்தா' என்றதுதான் தாமதம் 'உங்க ஊருல இருக்கானே வினாயகம் அவன் நான் கட்டகூடாதுனு சொல்றான், கட்ட விட மாட்டானாம்' என்றவுடன் அனைவரும் ஒன்றும் பேசவில்லை.

அவர்கள் அமைதியாய் இருப்பதை கண்டு 'தெரியும் நீங்க எல்லாம் அவனுக்கு எதிரா போகமாட்டிங்கன்னு, இதோ இவன் சொன்னான் பாரு அவர் நிலம் எல்லாம் மாத்தி வாங்கிட்டாருனுட்டு அது மாதிரி இந்த மொத்த ஊரும் அவனது ஆக்கி வைக்கத்தான் போறான்' கூட்டத்தில் இருந்த ஒருவன் 'ஏ கிழவா இனிமே எதாச்சும் பேசின, நல்லா இருக்குற அந்த பல்லை எல்லாம்
பேத்துருவேன், வந்தமா செத்தமான்னு கட்டைய வேக வைக்க வழிய பாரு' என்று

சொன்னதும் அவனை சபித்தார் முதியவர். பித்து பிடிச்சிருச்சி போல இவருக்கு, வயசானா இல்லாதது பொல்லாதது பேச வைக்கும் போல, இந்த ஆளு இந்த ஊர்தானா என பேச்சை அப்படியே மாற்றி பேசியவாறே கூட்டம் கலையத் தொடங்கியது.

ஒரு சிலர் மட்டும் அமைதியாய் அங்கு இருந்தனர். 'நீங்க மட்டும் இங்க என்ன பண்ணப் போறீங்க, அந்த வினாயகத்தை என்ன பண்றேன் பாருங்க' என்ற முதியவரிடம் 'ஒற்றுமையா இருக்குற ஊருல பிரச்சினை பண்ண வேணாம், எங்களுக்கு ஏதாவது வேணும்னா அவர்தான் செய்வார்' என நல்லபடியாய் எடுத்துக் கூறினர். ஊர் சபையை கூட்டத்தான் வேண்டும் என அடம்பிடித்தார். இவர் இப்படி பொது கட்டிடத்தில் ஆர்ப்பாட்டம் பண்ணி கொண்டு இருந்ததை கேள்வி பட்டு வினாயகம் தனது நண்பர் சாரங்கனுடன் அங்கு வந்தார்.

வினாயகம் வந்ததும் 'ஊர் சபைய கூட்ட சொல்லப் போறியா இல்லை நீ இந்த ஊருல இருக்குற எல்லாரையும் ஏமாற்றி சொத்துக்களை அபகரிக்கிறதை இந்த மூளை கெட்ட பசங்களுக்கு சொல்லவா' என்றார். வினாயகம் அமைதியாய் 'தாராளமா ஊர் சபையை கூட்டுறேன்' என்று சொல்லிவிட்டு அமைதியாய் இருக்கும்படி கேட்டுக்கொண்டார்.

முதியவர் பல கிராமத்து ஆட்களை சந்தித்தார். தனது பூர்விகம் சொல்லி அனைவரின் பரிதாபம்தனை பெற்றார். பல நாட்களாய் பழகிய குடும்பம்தனை கிடைக்கும் காதலிக்காக, காதலுனுக்காக மறப்பது சில இடங்களில் நடக்கும், இது அப்படி அல்ல. ஊர் சபையை கூட்ட அறிவிப்பு செய்யப்பட்டது. விழாக்களின் போது மட்டும் கூட்டப்படும் ஊர் சபை இன்று கூட்டப்பட்டது. ஊர் பெரியவர்கள் அனைவரும் அமர்ந்து இருந்தனர்.

அனைவரும் ஒருமித்த கருத்தாக ஆஸ்ரமம் இந்த ஊரினுள் கட்டக் கூடாது என சொல்லியதும் ஆவேசமாய் எழுந்தார் முதியவர் 'இப்பவே அந்த சிலைய உடைச்சி பாருங்க அதுல குழந்தை இல்லைன்னா நான் சொல்றத நம்ப வேணாம்' என்றார். அதற்கு அனைவரும் இப்படி இவர் பேசியது தவறு எனவும் சாமி குத்தம் எனவும் சத்தம் போட்டனர். இனிமேல் இவரை இந்த ஊரில் தங்க விடக்கூடாது எனவும்

சிலர் கூறினர். பெரியவர் அனைவரையும் அமைதியாக இருக்கச் சொல்லிவிட்டு சிலையை உடைக்க வேண்டிய அவசியம் இல்லை எனவும் ஆஸ்ரமம் ஊருக்கு வெளியில் கட்டிக்கொள்ள ஆட்சேபனை இல்லை அதே வேளையில் இவர் இங்கேயே இருக்கலாம் எனவும் முடிவு சொன்னார். நல்ல வேளை தப்பிச்சீங்க என முதியவரை இனிமேல் ஒழுங்காக இருக்குமாறு சொல்லிவிட்டு கூட்டம் கலைந்தது. வாசனை முறைத்தார் பெருமாள்.

19.

'தொலைக்கப்பட்ட தேடுதல்கள்' என்னும் தலைப்பு கவிதை புத்தகத்திற்கு வைக்கப்பட்டு அச்சடிக்கப்பட்டது. பலமுறை பாரதியும் கிருத்திகாவும் அம்மா தமிழரசியும் சரிபார்த்து சரிபார்த்து மிக அற்புதமாக புத்தகம் வந்து இருந்தது. பாரதி கவிதை புத்தகம்தனை பார்த்து பார்த்து பூரித்துப் போனாள். கவிதை புத்தகத்தின் முன்புற அட்டையில் தாவரத்தின் விதை பூமியில் இருந்து முளைத்து வருவது போலவும் சூரியன் மேகங்களுக்கு பின்னால் ஒளிந்திருப்பது போலவும் வாசனது சிறு வயது புகைப்படம் போடப்பட்டு ஒரு கண்ணால் விதையினை பார்ப்பதும் மற்றொரு கண்ணால் மேகத்தை பார்ப்பதுமாயும் "ஓம் நமோ நாராயணா" என்னும் நாமத்தை இதன் பின்னால் செதுக்கி நன்றாக செய்து இருந்தார்கள். பின்புற அட்டையில் மழைத்துளிகள் சிதறவது போலவும் சாமி சிலைக்கு தீபம் காட்டுவது போலவும் போடப்பட்டு இருந்தது. பாரதி மிகவும் உணர்ச்சிவசப்பட்டவளாய் காணப்பட்டாள்.

பாரதி 'எப்பொழுது இந்த புத்தகம் வெளியிடலாம்' எனக் சுகுமார் அச்சக உரிமையாளரிடம் கேட்டதும் அதற்கு அவர் 'புத்தக வெளியீட்டு விழா நடத்த வேண்டும்மா, அதற்கு நன்றாக மக்களுக்கு அறிமுகம் ஆனவரை தேர்ந்தெடுக்க வேண்டும்மா' என்றதும் 'புத்தகம் வெளியீட்டு விழா எல்லாம் ஒருவிதமான விளம்பரம்தானே, நாம அப்படி செய்யாம நாளிதழ்கள், வார இதழ்கள், மாத இதழ்கள்ல விளம்பரம் செய்யலாம் இந்த கவிதைகளை எழுதினவர் இதுவரை இந்த பதிப்பை பார்க்கவே இல்லை' என்றதும் 'என்னம்மா இப்படி சொல்ற, அவர் ஏதாவது மாற்றம் சொன்னா என்னம்மா பண்றது 5000 பிரதிகள் தயாராக

இருக்கேம்மா' என்றவரை பார்த்து 'அதைபத்தி கவலைபடாதீங்க, அப்படி எந்தவிதமான மாற்றமும் வராது, எல்லாமே சிறப்பா வந்து இருக்கு, உங்களுக்கு மிகவும் நன்றி' என்றாள்.

இந்த கவிதை தொகுப்புக்கு அச்சடிக்க ஆன செலவினை எடுத்து வைத்தாள். அவர் கணக்கில் குறித்தவாறே 'எல்லா புத்தகங்களையும் புத்தக விற்பனையாளர்களுக்கு நான் அனுப்பி வைக்கிறேன்மா, விளம்பரச் செலவு, தபால் செலவு எல்லாம் நாங்க பார்த்துக்கிறோம் புத்தகம் நல்லபடியா போகும் அப்படி போனா அதுல வர லாபத்தில செலவு போக 25% வேணும்' என்றதும் மக்கள்கிட்ட நல்ல வரவேற்பு இருந்தா அதுவே பெரிய வெற்றிதான் செலவு பத்தி ஒண்ணுமில்ல, இதுல வர லாபத்த பொதுத்தொண்டு செய்யற நிறுவனங்களுக்கு தரதாத்தான் முடிவு பண்ணியிருக்கேன் அதுல உங்களுக்கு 25% தரதில எனக்கு ஆட்சேபனை இல்லை' என தனது முதல் முயற்சியில் சாதித்தவளாய் களிப்புடன் இருந்தாள் பாரதி.

கவிதை தொகுப்பின் 100 பிரதிகளை வாங்கிக் கொண்டு வீட்டில் அம்மாவிடம் காண்பித்தாள். அம்மா பார்த்துவிட்டு 'ரொம்ப நல்லா இருக்குமா' என பாரதியினை வெகுவாக பாராட்டினார். காஞ்சிபுரம் போயிருக்கும் கிருத்திகாவும் அவளது அம்மாவும் அப்பாவும் வந்தவுடன் காண்பிக்க வேண்டும் என நினைத்துக் கொண்டாள் பாரதி. 'அம்மா நான் வாசனுக்கு புத்தகங்களை தபால் மூலமா அனுப்பிட்டு வரேன்மா' எனச் சொல்லிவிட்டு போகும் மகளை இது இவள் வாசன் மேல் வைத்து இருக்கும் மரியாதை கலந்த நட்பா இல்லை மனதில் வேரோடி இருக்கும் அன்புக் காதலா என காதல் திருமணம் புரிந்தும் இதைப் புரிந்து கொள்ள முடியாமல் அவள் மறையும்வரை பார்த்துக்கொண்டு இருந்தார்.

வாசனுக்கு தொலைபேசியின் மூலம் தொடர்பு கொண்டாள். கிராமத்தில் வயதானவர்களைத் தவிர பகல் வேளையில் வீட்டில் யாரும் இருப்பதில்லை. பின்னர் தனது பெரியப்பாவிடம் பேசினாள். அவர் 'கிராமத்துல ஏதுமா விடுமுறை' என்றவரிடம் வாசனை பற்றி கேட்டுவிட்டு, வாசனது புத்தகம் வெளியிடப் போவதாகவும் கூறினாள். அவர் மிகவும் மகிழ்ச்சியாய் 'சந்தோசம்மா' என அனைவரின் நலம் விசாரித்துவிட்டு அவளது தந்தையை அவருடன் தொடர்பு

கொள்ளுமாறு கூறினார்.

அப்பாவிடமும் அண்ணனிடமும் காண்பித்தாள். பெரியப்பாவிடம் பேசுமாறு அப்பாவிடம் கூறினாள். அண்ணன் கிண்டலாய் ‘இந்த காகிதம் எல்லாம் துணி வெட்ட அளவுக்கு நல்லா இருக்கும் போல இருக்கே’ என்றவனை கோபமாய் பார்த்துவிட்டு ஒன்றும் சொல்லாமல் பாரதி சுந்தரனிடம் ‘இது உங்க அண்ணன் எழுதின கவிதைகள் தொகுக்கப்பட்ட புத்தகம்’ எனக் கொடுத்தாள். ‘நன்றி’ சொல்லிவிட்டு புத்தகம்தனை வாங்கி வைத்து கொண்டான் சுந்தரன். அவனிடம் வேறு எதுவும் பேசாது கிருத்திகா வீட்டுக்குப் போனாள் பாரதி. இன்னும் வீடு பூட்டப்பட்டு இருந்தது. கிருத்திகாவை செல்போனில் தொடர்பு கொண்டாள், அது பயன் அளிக்கவில்லை.

'பெரியப்பா என்ன சொன்னாருனு சொல்லுங்க அப்பா?' என்று அருண் கேட்டதும் 'புதுசா நிலம் வாங்க போறாராம் அதுக்கு கொஞ்சம் பணம் அனுப்பி வைக்கச் சொன்னார்' என சேகர் சொன்னதும் 'கொஞ்சம்னா எவ்வளவு, அவர்கிட்டதான் நிறைய இருக்கேப்பா, இன்னும் இப்படி நிலம் வாங்குறதுக்கு நாம தந்துட்டே போனா எப்படி, நாம போய் அங்க விவசாயம் பார்க்கபோறது இல்ல, துணித் தொழிற்சாலை கட்டலாம்னா வாகன வசதி அப்படின்னு இப்படின்னு ஏகப்பட்ட பிரச்சினைகள், இந்த முறை தரமுடியாதுனு சொல்லுங்கப்பா பிறகு என்ன நடக்குதுனு பார்கலாம்' எனச் சொல்லி முடிக்கவும் சோகமான முகத்துடன் பாரதி வீட்டின் அழைப்பு மணி அடித்தாள்.

'என்ன ஒருமாதிரியா இருக்கேமா' என சரோஜா கேட்டதும் 'கிருத்திகா காஞ்சிபுரம் போய்ட்டு இன்னும் வரலை, வீடு பூட்டி இருக்கு, செல்லுக்கு பேசினாலும், டெக்ஸ்ட் அனுப்பினாலும் எடுக்க மாட்டேங்கிறா, இன்னைக்கு சாயந்திரத்துகுள்ளாற திரும்பி வந்துருவேன்னு சொன்னா' என்றதும் 'இதுக்கு போயா கவலைப்படுவ, வேற வேலை ஏதாவது இருக்கும்மா அவங்க அம்மா அப்பாவும்தான கூட போய் இருக்காங்க, போய் சாப்பிடு அண்ணனும் அப்பாவும் காத்துக்கிட்டு இருக்காங்க' என சரோஜா சொன்னதும் சாப்பிட பிடிக்காதவளாய் அண்ணன் சொன்ன அந்த பேச்சினை கேட்டாள்.

'இரண்டு லட்சம் எல்லாம் தரமுடியாதுப்பா, இது எல்லாம் கொஞ்சம் அதிகமாகத்தான் எனக்குப்படுது, இவ வேற என்னன்னா கவிதை தொகுப்புக்கு காசு செலவழிக்கிறா அவர் அங்க இருந்துகிட்டு காட்டுக்கு செலவழிக்கிறார்' என அருணின் வார்த்தைகளை கேட்டு பாரதி 'என்ன அண்ணா சொல்ற' என்றாள். சேகர் 'அவளைப் பத்தி பேசாத அது அவளோட சொந்தப் பணம், இந்த தடவை என் அண்ணனுக்கு நான் பணம் அனுப்பலைன்னா இத்தனை முறை அனுப்பினதுக்கு அர்த்தம் இல்லாம ஆயிரும், என்னுடைய இந்த வளர்ச்சிக்கு அவர்தான் முதல் காரணம், நானும் விவசாயம் பார்த்துதான் ஆகனும்னு பெரியவங்க சொன்னப்ப அவன் படிக்கட்டும் எதுக்கு வம்பு பண்றீங்கன்னு எனக்கு உறுதுணையா இருந்தவர், உனக்கு இது வேணும்னா தெரியாம இருக்கலாம் அருண்' எ ன சொன்னதும் 'இப்ப வாங்கி இருக்குற நிலம் எல்லாம் அவர் பேருலதான் இருக்கு, அதை அவர் எதுவேணும்னாலும் செய்யலாம் இல்லையா' என்று மகன் கூறியதை கேட்டு சேகர் சிரித்தார்.

'சில விசயங்கள் காலங்கள் வரப்பதான் புரிஞ்சிக்க முடியும்' எனக் கூறியவாறு 'சாப்பாடு கொண்டு வாம்மா' என்றார். 'அண்ணா பெரியப்பா பணத்தை ஒண்ணும் வீணா செலவழிக்கலை, எல்லாத்துக்கும் சரியா கணக்கு வைச்சிருக்கார் நீ ஊருக்குப் போனாத்தானா' என பாரதி சொன்னதும் 'இன்னும் கொஞ்ச நாள்ல போகத்தான் போறேன், நீ சேர்த்து வைச்ச பணம் எல்லாம் கவிதை புத்தகத்துக்கு செலவு பண்ணிட்டியா' என அருண் சொன்னதும் 'நீ சாப்பிடு கணக்கு காமிக்கிறேன்' என்றாள்.

'என்ன சுந்தரன் சாப்பிட வரலையா, சரியா இந்த மணிக்கு வந்துருவான் வெளியில சாப்பிட்டானா' என சேகர் சொன்னதும் அருண் 'இல்லையே, இருங்க போன் பண்ணி பார்ப்போம்' என அழைத்ததும் 'இதோ வருவதாக' கூறினான் சுந்தரன்.

'சாப்பிடக் கூட மறந்துட்டியா' என்று சேகர் சுந்தரனிடம் கேட்டதும் 'இல்லை அய்யா, வாசனோட கவிதை புத்தகம் படிச்சிகிட்டு இருந்தேன், அதான் நேரம் போறது தெரியலை' என்றவனிடம் 'இதுவரைக்கும் படிச்சது இல்லையா' என்றான் அருண். 'தருவான், படிச்சிருக்கேன் ஆன புத்தகமா படிக்கிறது வித்தியாசமா

இருக்கும், அதான்' என்ற சுந்தரனிடம் 'நாளைக்கு நீ ஓய்வு எடுத்துக்கோப்பா' என சேகர் சொல்லியவாறு சாப்பிட ஆரம்பித்தனர். பாரதி பசிக்கவில்லையென திரும்ப திரும்ப செல்போனில் எண்களை அழுத்திக் கொண்டு இருந்தாள்.

முதியவர் பெருமாள் சில நாட்களாக வாசனோடு அவ்வளவாக பேசுவதில்லை. வாசனது வீட்டில் வந்து சாப்பிட அமர்ந்து இருந்தார். தொலைபேசி ஒலித்தது. எடுத்தான் வாசன். பாரதியின் குரலில் உற்சாகம் இல்லாதது கண்டு 'எப்படி இருக்க பாரதி, குரல் ஒருமாதிரி இருக்கு உடம்புக்கு சரியில்லையா' என்றான் வாசன். 'ரொம்ப சந்தோசாமத்தான் இருந்தேன் உன்னுடைய கவிதை புத்தகம் எல்லாம் அடிச்சி இன்னைக்கு எல்லாம் தயாரா இருக்கு உனக்கு கொஞ்சம் அனுப்பி வைச்சிருக்கேன் ஆனா இப்போ மனசுக்கு சரியில்லாம இருக்கு, என் தோழி காஞ்சிபுரம் போனா இன்னும் வரலை மணி இப்பவே எட்டாகப் போகுது' என்றவளிடம் 'அதெல்லாம் ஒண்ணும் இருக்காது, கவலைப்படாத, புத்தகத்துக்கு எவ்வளவு செலவு ஆச்சுனு சொல்லு பணத்தை அனுப்பி வைக்கிறேன்' என்றான்.

'பணமா எதுக்கு? உன்கிட்ட காட்டாம புத்தகம் எல்லாம் அடிச்சி வெளியிட்டுட்டேன் வருத்தம் இல்லையா' என்று பாரதி சொன்னதும் 'அது புத்தக வடிவம் வரதுக்கே நீதான் காரணம், நீ எல்லாம் சரியாத்தான் செய்வ அப்படிங்கிற நம்பிக்கை இருக்கு நீ சரிப்பார்த்துட்டதான அது போதும்' என்று வாசன் சொன்னதும் 'ம்ம் எதுவும் தப்பு இருந்தா கோவிச்சிக்க மாட்டியே' என்றாள் பாரதி. 'தப்பு இருந்தா அடுத்தமுறை திருத்திக்கலாம்' என்றான். அவனிடம் பேச பேச அவளுக்கு ஆறுதலாய் இருந்தது.

நல்ல நண்பர்கள் வாழ்க்கையின் உயிர் நாடி, அது தந்தையாக இருக்கட்டும், தாயாக இருக்கட்டும், மனைவியாக இருக்கட்டும், மகளாக, மகனாக நண்பனாக நண்பியாக எந்த உறவாகவும் இருக்கட்டும். ஒரு இன்னல் என வந்தபொழுது இடர்பாடுகளை கலைத்து விடுவது மட்டுமின்றி இனிவரும் காலங்களில் இடர்பாடுகள் வராது காக்கும் வகையில் காத்து வரும் தோழமை பெற்றவர்கள் பாக்கியசாலிகள். தடுமாறி விழும் போதெல்லாம் தான் முன் விழுந்து சுமை ஏந்திக் கொண்டு தானும் எழுந்து தன் மேல் விழுந்தவரையும் எழ வைத்து இனி விழ

விழாது தூணாய் இருந்து காத்து வரும் தோழமை பெற்றவர்கள் தெய்வ கிருபையை தேடாமலே தெய்வ அனுக்கிரகம் பெற்றவர்கள்.

சோதிக்கப்படும் நட்புகளுக்கு சாதித்து காட்ட வேண்டும் என தைரியம் தருவதும் பழைய நட்புதான். நல்ல நட்பு, தெய்வம் தனை விட காத்து நிற்கும்.கூடா நட்பு கூட ஒரு எச்சரிக்கை மணியாகவே கருதப்படவேண்டும்.

சாப்பாடு பரிமாறப்பட்டது. முதியவர் எதுவும் பேசாமல் சாப்பிட்டு எழுந்தார். பசும்பால் எடுத்து வந்து அம்மா தந்தார். தனது கடைசி ஆசை நிறைவேறாதோ என்றும் தான் அவசரப்பட்டு நடந்துவிட்டோமோ எனக் கருதியவாறு பசும்பால் அருந்தினார். வாசன் 'தாத்தா ஊருக்கு வெளியில நிலம் கிடைச்சா அங்க நீங்க நினைச்சபடி கட்டலாம் தாத்தா' என அவர் அமைதியினை கலைத்தான். அவர் எதுவும் பேசாமல் பாலை அருந்திக் கொண்டு இருந்தார். அப்பா எதுவும் பேசவேண்டாம் என சைகை காட்டினார்.

குடித்து முடித்துவிட்டு தான் படுத்துக் கொள்ளப்போவதாக கூறிவிட்டு கிளம்பினார் முதியவர். வாசனுக்கு எதுவும் பதில் சொல்லவில்லை. வாசன் அவருடன் காத்தமுத்து தாத்தா வீடு வரை செல்வது வழக்கம், இப்போதெல்லாம் அவனை வர வேண்டாம் எனச் சொல்லிவிட்டார். வெளியில் செல்ல கால் வைத்தவர் திரும்பி பார்த்து ராமமூர்த்தியிடம் நாளைக்கு தான் தந்த பணத்தில் பத்தாயிரம் எடுத்து வைக்குமாறு கேட்டுக் கொண்டார்.

பாரதிக்கு தூக்கம் வரவில்லை. அம்மா வந்து சாப்பிடச் சொல்லியும் வேண்டாம் என மறுத்துவிட்டாள். கிருத்திகாவுக்கு என்ன ஆனது என அறிந்துகொள்ளாமல் அவளால் தூங்கமுடியவில்லை. கவிதை புத்தகம்தனை எடுத்து மறுபடியும் படிக்க ஆரம்பித்தாள். பாடப் புத்தகம் எடுத்து படித்தால் வராத தூக்கம் கூட வந்துவிடும், இது கவிதை புத்தகம் அவளுக்கு மீதம் இருந்த தூக்கமும் போய்விட்டது. பிறகு எப்படி உறங்கினாளோ அவளை அம்மா காலை பத்து மணிக்கு எழுப்பிவிட்டாள்.

எழுந்தவள் ‘அம்மா கிருத்திகா வந்துட்டாளா’ என்றவளை ‘தெரியலைமா, நான் இன்னும் கடைக்கு போகலை நீ வேகமா ரெடியாயிட்டு அப்படியே கடைக்கு

போய்ட்டு அவ வந்து இருக்காளான்னு பார்த்துட்டு வா' என எழுப்பி விட்டார். 'போன் போட்டு பாரேன்மா' என்றாள் பாரதி. அம்மா அதை காதில் வாங்கி கொண்டதாய் தெரியவில்லை.

பாரதி அவசரம் அவசரமாய் கிளம்பினாள். செல் இனியும் வேலை செய்யவில்லை. வீட்டை விட்டு வெளியேறும் முன் சுந்தரன் வந்து நின்றான். அவனை பார்த்து புன்னகை கூட செய்யாமால் கிருத்திகா வீட்டுக்கு போனாள். சுந்தரன் என்ன இவள் இப்படி அரக்க பறக்க ஓடுகிறாள் எனப் பார்த்தான்.

'வாப்பா, கொஞ்சம் கடையில எண்ணை வாங்கிட்டு, அப்படியே இந்த லிஸ்ட்ல இருக்க மளிகை சாமான்களும் வாங்கிட்டு வரியாப்பா, பாரதிகிட்டே சொன்னேன் அவ தன்னுடைய பிரண்டை பார்க்க போறேன்னு அவசரமா ஓடுறா' என்றார் சரோஜா. 'நான் போய் வாங்கிட்டு வரேன்மா, இன்னைக்கு மதியம் எனக்கு சாப்பாடு வேண்டாம்மா, திருவேற்காடுவுக்கும் மாங்காடுக்கும் போய்ட்டு வரலாம்னு இருக்கேன்மா' என்றவனை 'ஓ சரிப்பா நேரம் ஆகுதுனா நீ போப்பா நான் பிறகு போய் வாங்கி வந்துக்கிறேன்' என்றவரிடம் 'இல்லமா நான் வாங்கி தந்துட்டு போறேன் சாப்பாடு வேணாம்னு சொல்லத்தான் வந்தேன்' எனச் சொல்லிவிட்டு கடைக்கு போனான் சுந்தரன்.

கிருத்திகாவின் வீட்டுக்கு முன்னால் பாரதி நின்று கொண்டு அழைப்பு மணியினை அழுத்திக் கொண்டு இருந்தாள். எப்படியும் 5 நிமிடம் ஆகி இருக்குமே இவள் வந்து என நினைத்துக் கொண்டான் சுந்தரன். இவனைப் பார்த்ததும் பாரதி வந்தாள். சுந்தரன் பேசாமல் நடந்தான். 'சுந்தர்' பாரதியா தன்னை அழைப்பது என திரும்பி பார்த்தான். 'சுந்தர்' என பாரதி மறுபடியும் அழைத்ததும் 'சொல்லுங்க, அம்மா கடைக்கு போகச் சொன்னாங்க அதான் போய்கிட்டு இருக்கேன் ஏதும் வாங்கனுமா' என்றான். கிருத்திகாவை பற்றி சொன்னாள். 'இது சாதாரண விசயம் எதுக்கு இப்படி பதட்டப் படறீங்க, இன்னைக்கு லீவுதானே அதனால தங்கிட்டு வருவாங்க' என்றான். பல வருடங்களுக்கு பிறகு சுந்தரன் பாரதியிடம் அதிகமாய் பேசிய வார்த்தைகள். ஆனால் பாரதிக்கு மனசு கேட்கவில்லை. சுந்தரன் கடைக்கு செல்வதாய் கூறிவிட்டு சென்றான். நேரம் போய்க் கொண்டே இருந்தது.

பாரதி தொலைபேசி மூலம் தொடர்பு பண்ணிக் கொண்டே இருந்தாள், பயன் இல்லை. பாரதி திரும்ப கிருத்திகா வீட்டுக்கு வந்தபோது மணி நான்கு இருக்கும் கிருத்திகா வீட்டின் கதவினை திறந்தாள். ‘உள்ள வாயா’ என அழைத்து சென்றாள்.

'என்ன நேத்து வரேன்னு சொல்லிட்டு இன்னைக்கு வந்து இருக்க, ஒரு போன் பண்ணி சொல்லி இருக்கலாம்ல' என்ற பாரதியிடம் 'ம்ம் ஒரு பிரச்சினை அதான் வரமுடியலையா' என்றாள். 'அம்மா அப்பா எங்க' என்றவளுக்கு 'அசதியில தூங்குறாங்கய்யா' என்றவள் மிகவும் களைத்துக் காணப்பட்டாள். 'கவிதை புத்தகம் எங்கயா' என்று கிருத்திகா கேட்டதும்தான் இவளை பார்க்க வந்த அவசரத்தில் புத்தகம் எடுத்து வர மறந்ததை பாரதி உணர்ந்தாள். 'உனக்கு என்னமோ ஏதோ அப்படிங்கிற பதட்டத்தில எனக்கு என்ன செய்றேன்னு தெரியலை' என்றவளிடம் 'அது என்னய்யா எனக்கு எதாவது ஒன்னுனா உனக்கு பெல் சத்தம் கேட்குது' என்றவளிடம் 'அப்படின்னா நேத்து என்ன நடந்தது' என்றாள் பாரதி. 'பிரச்சினைய பெரிசாக்கக் கூடாதுன்னுதான் அங்க போனோம் ஆனா பிரச்சினை பெரிசா போயிருச்சுயா, நான் இப்பவே கல்யாணம் பண்ணிக்கனும் அதுவும் அடுத்த வாரத்துக்குள்ள கல்யாணம் பண்ணிக்கனும் அப்படினு கலாட்டாயா' என்றவளிடம் 'யாரை சொல்ற உன் மாமன் மகனையா' என்றாள் பாரதி. 'ஆமாம்யா' என்றாள் கிருத்திகா.

'இது தெரிந்த விசயம்தான, முடியாதுனு சொல்லிட்டு வரவேண்டியதுதான' என்றாள். 'இரு உனக்கு குடிக்க ஏதாவது எடுத்து வரேன்' என சொன்னவளை 'என்னதான் ஆச்சுனு சொல்லிட்டு பிறகு எடுத்துட்டு வா' என்றாள் பாரதி. 'நலமா வந்து சேர்ந்துட்டேனே அது நினைச்சி சந்தோசப்படுயா' என குடிக்க இருவருக்கும் பழச் சாறு எடுத்து வந்தாள்.

'கவிதை புத்தகம் எப்படியா இருக்கு, நல்லா வந்து இருக்காயா' என்றாள் கிருத்திகா. பாரதி சுற்றும் முற்றும் பார்துவிட்டு 'இங்க யாரும் இல்ல அங்க என்ன நடந்ததுனு சொல்லு' என்றாள். 'சினிமால வருமே அதுமாதிரியெல்லாம் கடத்தல் படலம் எல்லாம் ஒன்னும் இல்லயா' என்றாள். 'கடத்திட்டு போய் இருந்தா இங்க

இன்னைக்கு உன்னை பாத்து இருப்பேனா, அது என்ன சீரியல்ல வரமாதிரி இந்த இழுவை இழுக்கற நடந்ததை சொல்லேன்' என்றாள் பாரதி. நண்பர்கள் பேசிக் கொண்டு இருந்தால் உறக்கம் எங்கிருந்து வரும்?

'இங்க இருந்து கிளம்பி காஞ்சிபுரம் போயி அங்க இருந்து எங்க கிராமத்துக்கு போனோம்யா. போனவுடனே இதோ வந்துட்டாங்க பிடிச்சி கட்டி போடுங்கடான்னு வீட்டு முன்னால ஒரே சத்தம். எங்களுக்கு ஒண்ணும் புரியலயா நாங்க நிசமாவே பயந்துட்டோம்யா. உடனே என்னை கட்டிக்கப் போறதா சொன்னவன் வந்து அவங்க மேல கைய வைச்சீங்க கையெல்லாம் மீன் போல தரையில துள்ளும் அப்படின்னு வசனம் பேசிட்டு அருவாளோட வாசல்ல நின்னான்யா. என்னடா இது கல்யாணம் பண்ணிக்கலைன்னா பிரச்சினை பண்ணுவேன்னு சொன்னதாலதான் பேசி முடிவு பண்ணிட்டு போகலாம்னு வந்தோம் இங்க இவ்வள பெரிய பிரச்சினை வரும்னு தெரியாம போச்சேன்னு நினைக்கிறப்ப எனக்குத் தரையில மீன் துள்ளின மாதிரி இருந்ததுயா. அதுக்கப்பறம் ஒரே சண்டைதான்யா அம்மாவும் அப்பாவும் முடிவா சொல்லிட்டாங்கய்யா கல்யாணம் சொந்தத்தில முடியாதுன்னுட்டு உடனே சொத்து பத்தி பிரச்சினை பேசி எல்லாம் முடிக்கிறதுக்குள்ள ராத்திரி ஆயிருச்சுயா தூங்கவே இல்லையா எப்படியா தூங்குறது? இனிமே கிராமத்துக்கு போக முடியாதுயா, எப்படியாவது அங்க இருந்து தப்பிச்சு வந்தா போதும்னு ஆயிருச்சுயா ' என்று விசயம்தனை சொல்லி முடித்தவளை பார்த்து 'இனிமே அவங்க இங்க வந்து பிரச்சினை பண்ணாம இருந்தா போதும்' என்றாள் பாரதி.

சில வருடங்காளாகவே இருந்து வந்த பிரச்சினை. உறவுகள் வெட்டப்பட்டுத்தான் முடிய வேண்டுமெனில் அப்படித்தான் முடிகிறது. இருக்கின்ற உறவுகள் சிதைந்து போவதும் புதிய உறவுகள் ஏற்படுவதும் நடைமுறைப்படுத்த பட்டுவிட்டது. உறவுகளுக்கு மரியாதை தருகிறவர்கள் எனில் தர்மம்தனை பற்றி சிந்திப்பார்கள். ஆனால் இது போன்ற தருணங்களில் நிராகரிக்கப் பட்டதாகவும் அதனால் தமது உரிமைகள் கேவலப் படுத்தப்பட்டதாகவும் பலர் புரியாமல் நடந்து கொள்கிறார்கள். உறவுக்குள் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு திருமணம் செய்து கொண்டவர்களும் சரி காதலித்து திருமணம் செய்து கொண்டவர்களும் சரி

திருமணம் பற்றிய உண்மை அர்த்தம்தனை உணராது போனால் இனிய உறவுகளால் பின்னப்பட்ட இந்த அற்புத வாழ்க்கைக்கு அர்த்தமே இல்லாது போய்விடும். இதைப் பற்றி யாருக்கு என்ன கவலை, அதுவும் நான்கு சுவர்களுக்குள் உலகம்தனை வைத்து வாழ பழகி கொண்ட பின்னர்.

கிருத்திகா கவிதை புத்தகம்தனை பார்த்தாள். பாரதியினை கட்டி பிடித்துக் கொண்டாள். 'ரொம்ப நல்லா வந்துருக்குயா' என்று பக்கங்கள் திருப்பியவள் 'என்னயா நான் கிறுக்கினதை வாழ்த்துரையா போட்டு இருக்க' என்ற கிருத்திகாவிடம் 'உன் வாழ்த்து வாசனுக்கு கிடைச்சது கோடி புண்ணியம்' என்றாள் பாரதி. நட்பினை போற்றுபவர்கள் தமது நட்பிற்குரியவர்களை தெய்வமாகவே மதிக்கிறார்கள். 'இன்னைக்கு எங்க வீட்டுல சாப்பிடலாம்' என்ற பாரதியினை என்றும் போல் இன்றும் கருணையுடன் பார்த்தாள் கிருத்திகா.

20.

வாசன் கவிதை புத்தகங்கள் பார்த்து மிகவும் சந்தோசம் அடைந்தான். இதற்காக பாரதி எவ்வளவு சிரமம் பட்டு இருப்பாள் என நினைத்துப் பார்த்தான். மனதில் நன்றி சொல்லிக் கொண்டான். ஐம்பது புத்தகங்கள் இருக்கும். எல்லாப் புத்தகங்களையும் தனது அறையில் பரப்பினான். அது கண் கொள்ளா காட்சியாக இருந்தது. அந்த புத்தகங்களை பார்க்க பார்க்க அவனுக்குள் அவனை அறியாமல் அழத் தோன்றியது. அப்படியே அவைகளை பரப்பி வைத்துவிட்டு ஐந்து புத்தகங்கள் கையில் எடுத்துக் கொண்டான். நேராக பெருமாள் கோவில் சென்றான். பூசாரி அப்பொழுதுதான் கோவிலின் கதவினை அடைப்பதற்கு ஆயத்தம் ஆகி கொண்டு இருந்தார்.

பூசாரியை வணங்கினான் வாசன். பூசாரி வாசனை கண்டதும் 'வாசு தம்பி, என்ன கோவில் பக்கம்' என்றார். 'பெருமாளோட ஆசிர்வாதம் வாங்க வந்தேன்' என்றான். அவரும் 'தம்பி இந்த சாமிக்கு ஒரு மண்டபம் அமைக்கனும்னு யாரும் பேச மாட்றாங்களே ஊருல, நீங்களாவது பெரியவர்கிட்ட சொல்லி ஏற்பாடு செய்யக் கூடாதா எவ்வளவு நாளுதான் தான்யா வாசத்திலே வைக்கப் போறோம்?' என்றதும்

'பெரியவர்கிட்ட இதுபத்தி இன்னைக்கு பேசறேன், பூசாரி அய்யா நீங்க கோயில் நடைய சாத்தப் போறீங்களா' என்றான். 'நீங்க கும்பிட்டு வாங்க தம்பி, நான் ஆட்டுக்கு இலை தழை பறிச்சிட்டு வரேன்' என்று சொல்லியவாறே 'தம்பி நீங்க சொல்லுங்க பெரியவர் இது பத்தி சீக்கிரம் முடிவு எடுப்பார்' என சொல்லிவிட்டு 'என்ன இது புத்தகமா இருக்கே' என்றார். எந்த நிமிடத்திலும் அழுதுவிடுவான் என்ற முகபாவத்தில் இருந்த வாசன் 'இது என்னோட கவிதை புத்தகம்' எனக் கூறினான். பூசாரி சில நிமிடங்கள் பேசியபின் பாராட்டிவிட்டு நடந்தார்.

வாசன் கோவிலின் உள்ளே சென்றான். ஐந்து புத்தகங்களை பெருமாள் சிலை முன் வைத்தான். சிலையாய் சிறு வயதிலிருந்து பரிச்சயமாகிப் போன கடவுளான பெருமாளினை வணங்கினான். பெருமாளாக சிலையாய் நிற்கும் நாராயணனை கண் கொட்டாது பார்த்துக் கொண்டே இருந்தான். கண்கள் கலங்கியது. சிலை இப்போது சிலையாகத் தெரியவில்லை. உள்ளத்தில் இருந்த அழுத்தம் உடைந்து கண்ணீராய் வெளிவந்து அவனது கன்னங்கள் நனைத்தது. பார்க்காமல், தனக்கு பிடித்தமான ஒரு பொருளானது இருப்பதாய் பிறரிடம் கேள்விப்பட்டு அந்த பொருள் எங்கு தேடியும் கிடைக்காமல் ஏக்கத்தில் அழும் சிறு குழந்தை போல வாசன் அன்று அழுதான். " நாராயணா, என்னால் முடியவில்லை நாராயணா உன்னை என்னுள் தேடியும், உலகில் எங்கு தேடியும் என்னால் உணர முடியவில்லை நாராயணா, என்னால் உணரமுடியவில்லை" மனம்விட்டு அழுகையுடன் பேசினான் வாசன். சிலை இப்போது ஒரு நண்பனாய், கடவுளாய். அவனால் அழுகையை நிறுத்த முடியவில்லை. அழுது கொண்டே நின்றான். எல்லா இடங்களிலும் வியாபித்து இருக்கும் இறைவனை உணர்தல் என்பது அவ்வளவு எளிதான விசயம் அல்ல. எளிதான விசயமாய் இருந்ததை சிரமமாக்கி விட்டோம். விளக்கங்கள் கேட்டு கேட்டு வெகு தூரம் விலகிப் போய்விட்டோம். நல் விசயங்களை விமர்சித்து விமர்சித்து விசயமற்றதாய் மாற்றிவிட்டோம்.

பூசாரி வருவது கூடத் தெரியாமல் வாசன் அழுது கொண்டு இருந்தான். வாசனை மெதுவாக அழைத்தார் பூசாரி. வேகமாய் கண்களையும் கன்னங்களையும் துடைத்து கொண்டு கவிதைப் புத்தகங்களை எடுத்துக் கொண்டான். 'வாசு தம்பி என்ன கண் எல்லாம் சிவந்து இருக்கு, எதுக்கு இப்படி சன்னிதி முன்னால நின்னு அழற' என்ற

பூசாரியிடம் 'ஒண்ணும் இல்ல பூசாரி அய்யா' என்றான். 'சொல்லு தம்பி, நீ சின்ன பையனா இருக்கறப்ப திருவிழா சமயத்துல உன்மேல சாமி வரும், எல்லாரும் நீ என்ன சொல்வேன்னு ஆவலா எதிர்ப்பார்ப்போம் ஆனா நீ ஒண்ணும் சொல்லாம மயங்கி விழுந்துருவ, பிறகு என்ன காரணமோ நாடகத்தில மட்டும் நடிக்கிறதோட நிறுத்திட்டு சாமிய நீ சரியா கும்பிடறது இல்ல, கேட்டா பதிலும் சொல்ல மாட்ற சொல்லு தம்பி' என பூசாரி கேட்டதும் 'என்னால நாரயணனை உணரமுடியலை' என மறுபடியும் அழுதுவிட்டான். பிறர் முன்னிலையில் ஆண்கள் அழக் கூடாதாம்! பெண்கள் சிரிக்கக் கூடாதாம்! உணர்வுகளுக்கு ஆண் பெண் பேதம் பார்த்து பழகிப் போன உலகம். இதற்கெல்லாம் சில காரணங்கள் காட்டி விவாதிக்க தேவையில்லை. பெரும்பாலான இடங்களில் உணர்வுகளை கட்டுப்படுத்தி கொள்ளத் தெரிய வேண்டும். அதற்காக உணர்வு அற்ற மனிதர்கள் போல் நாம் இருக்க வேண்டிய அவசியமும் இல்லை. பூசாரி, வாசன் சொன்னதை கேட்டதும் தனது பேத்தி சுமதியை நினைத்து பார்த்தார்.

பூசாரி வாசனைப் பார்த்து சொன்னார். 'சாமியை உணரனும் அப்படிங்கிற ஆசை மேலோங்கி இருக்கும் பட்சத்தில் சாமியை உணர்தல் அப்படிங்கிறது சாத்தியம் இல்லை தம்பி. பொதுவா எந்த பொருளைத் தேடுவோம், சொல்லுங்க?' அதற்கு வாசன் 'தொலைத்த பொருளை தேடுவோம், அப்படி இல்லைன்னா வேண்டும் அப்படிங்கிறதுக்காக ஒரு பொருளைத் தேடுவோம்' என்றான். பூசாரி புன்னகைத்தார். அந்த புன்னகையில் ஆயிரம் அர்த்தங்கள் இருந்தது.

'இதுதான் தம்பி தெய்வத்தோட சூட்சுமம். எங்கன தேடினாலும் கிடைக்காது. ஏனா அது தேடி கண்டு எடுக்கறப் பொருள் இல்ல தம்பி' என்றார் பூசாரி. சர்வமும் வியாபித்து இருக்கிறவனை எதற்காக தேட வேண்டும். அப்படி தேடித்தான் என்ன செய்யப் போகிறோம்? தேடல் என்பதே ஒரு ஆசை. அடைய வேண்டும் என்பதே ஒரு ஆசை. ஆசைகளுக்கெல்லாம் அப்பாற்பட்டவன் இறைவன். அப்படி அவன் ஆசைபட்டவனாய் இருந்து இருந்தால் அவனது விருப்பத்திற்கு அவன் நினைத்தபடி இந்த உலகத்தை பிணி பட்டினி மூப்பு என இல்லாமல் படைத்து இருக்கலாமே, மாற்றங்களை உருவாக்கி இருக்கலாமே! இருளாகவும் இருக்கிறான், இருளின் ஒளியாகவும் இருக்கிறான். என்னவென்று சொல்வது!

புரோட்டானுக்கு "கடவுளின் துகள்" எனச் பெயர் இடப்பட்டு அதனை பிளக்க பெரும் பொருட்செலவில் ஒரு ஆய்வு வெகு விரைவில் நடக்க இருக்கிறது. அதன் முடிவு என்னவாக இருக்கும் என பெரும் ஆவலாய் இருக்கிறார்கள். உயிர்கள் அற்ற பல்வேறு சூரிய குடும்பத்திலும் கூட இருக்கும் எல்லை இல்லாதவனை ஒரு துகளுக்குள் அடக்கி விட முடியுமா. தேடிக் கொண்டே இரு கிடைக்கப் போவது இல்லை. அதற்காக இல்லை என்று சொல்லிவிட்டு இறுமாந்து இருந்துவிடாதே! பொறி ஒன்று உன் நினைவில் ஆடும்! புரிந்து கொள். உணர்தலுக்கும் உணர்தலைப் புரிதலுக்கும் நிறைய வேறுபாடு இருக்கிறது.

வாசன் பூசாரியை பார்த்தான். 'சாமி அவதாரங்கள் எல்லாம், அதுவும் பத்தாவது அவதாரம் எல்லாம்' எனக் கேட்டான். கலகலவெனச் சிரித்தார், காரணம் சொல்லவில்லை. கண் மூடினார். அனைவரும் தரும் பதில் போல அது நாம் நல்வழியில் செல்ல சொல்லப்பட்டது என அவரால் சொல்ல முடியவில்லை. எப்படி செவ்வாயில் ஒரு மோதல் ஏற்பட்டது என விவரிக்கப் படுகிறது! அதைப் போல் இது சொல்லப்பட்ட விதம்தான் வேறு. வாசன் பூசாரியைப் பார்த்தான். 'இதை பற்றி தெளிந்து என்ன லாபம் தம்பி, எப்போதும் போல சிரமப்படறவங்களுக்கு உதவி செய் தம்பி, அது போதும்' என்றார் பூசாரி. வாசன் இன்னும் தெளிந்த பாடில்லை. இந்த மயக்கம் வெறும் வார்த்தைகளால் தெளியும் எனில் எதற்கு இத்தனை சொற்பொழிவுகள், இத்தனை வியாக்கியானங்கள் இத்தனை கதைகள் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. வாசனை வருத்தப் படவேண்டாம் எனச் சொன்னார் பூசாரி. வாசனைப் பெரியவரிடம் பேசச் சொன்னார்.

வாசன் பெரியவர் வீடு சென்றான். அங்கு பெரியவர் அவரது நண்பர் சாரங்கனிடம் வழக்கம்போல பேசிக் கொண்டு இருந்தார். வாசன் கவிதை புத்தகம்தனை காண்பித்தான். புத்தகம்தனை பார்த்ததும் சாரங்கன் மெய் சிலிர்த்துப் போனார். பெரியவரும் சாரங்கனும் வாழ்த்தினர். கவிதைகள் பற்றி சிறு உரையாடல் நடந்தது. பின்னர் கல் நாளை வந்துவிடுவதாகவும் நிலம் எல்லாம் சுற்றி நட வேண்டும் என பெரியவர் கூறினார். வாசன் கேட்டுக் கொண்டான். சில வாரங்களில் திருவில்லிபுத்தூர் செல்ல வேண்டும் எனக் கூறினார். சேட்டுர் நிலம் இன்னும் சில தினங்களில் கைமாறும் என்பதையும் கூடவே சொன்னார். சரி என்றவன் ‘அய்யா

சிலைக்கு புது மண்டபம் கட்டனும்' என்ற வாசனை பெரியவர் இப்போ அதுக்கு என்ன அவசரம் என்பது போல பார்த்தார்.

கவிதைகளை வாசித்துக் கொண்டு இருந்த சாரங்கன் 'என்ன விசயமா திருவில்லிபுத்தூர் போகப் போறிங்க?' எனக் கேட்டார். பெரியவர் இதைப் பற்றி யாரிடமும் கூறவில்லை என அறிந்து கொண்டான் வாசன். பெரியவர் புன்னகைத்தவாறே 'இப்ப வாங்கி இருக்கிற நிலத்தில இந்த செடியை வளர்க்கனும் அந்த செடி திருவில்லிபுத்தூரிலதான் கிடைக்கும் அதான் போய் வாங்கிட்டு வரலாம்னு இருக்கோம்' என்றார். 'அப்படி என்ன விசேச செடி அது, இதுக்குதான் நிலம் எல்லாம் வாங்கினியா, எவ்வளவு விசயங்கள் பேசி இருப்போம் ஆனா இந்த நிலம் விசயம் மட்டும் வாயை திறக்கலியே' என்றார் சாரங்கன். 'சொல்றதுக்கு என்ன இருக்கு, நிலம் வாங்கி இந்த செடி பயிரிடனும்னு ஒரு தேவை' என்றார் பெரியவர். 'யார் யார் போகப் போறீங்க' என்றார் சாரங்கன். 'இதோ வாசனும் நானும்தான்' என்றார் பெரியவர்.

சாரங்கன் விடாமல் 'அப்படின்னா நான் வர வேண்டாமா, நானும் வந்தா அப்படியே ஆண்டாள் கோவிலுக்கு போன மாதிரி இருக்கும்' என்றார். பெரியவர் சில விநாடிகள் யோசித்துவிட்டு 'நீ வரதுல ஒன்னும் ஆட்சேபனை இல்லை, அடிக்கடி வெளியூருக்கு நீ போயிருர அதனால உன் வசதி எப்படின்னு தெரியல' என்றார் பெரியவர். சாரங்கனும் யோசித்துவிட்டு 'அதுவும் உண்மைதான், பேசாம நானும் என் மனைவியும் போய் பட்டினத்துல இருக்கலாம்னு நினைக்கிறோம்' என்றார். வாசன் இவர்கள் பேசுவதை கேட்டுக் கொண்டு இருந்தான். 'உனக்கும் வெளியூர் ஆசை வந்துருச்சு போல, நீ இந்த ஊருல இருந்தா உன்னையும் கூட்டிட்டு போறோம்' என்றார் பெரியவர்.

வாசன் மறுபடியும் சிலைக்கு மண்டபம் பற்றி கேட்டான். பெரியவர் அதற்கு 'இப்போதைக்கு இருக்கட்டும் வாசா, இன்னும் ஆறு மாசம் போகட்டும் பிறகு அதைப் பத்தி நினைக்கலாம்' என்றவரை 'எதுக்கு அவ்வளவு கால தாமதம் பண்ணனும்' என்றான் வாசன். 'வாசா எல்லாம் ஒரு காரணத்துக்குத்தான் சொல்றேன், இருக்கட்டும் இப்ப சிலைக்கு மண்டபம் கட்டுறத விட்டுருவோம்,

ஊரில இன்னும் விதம் விதமா பேசிக்கிறாங்க, என் முன்னாடி சொல்லாட்டாலும் சிலைக்கு உள்ள குழந்தை இருக்கா இல்லை, எலும்பாவது இருக்கானு பார்க்க பிரியப்படறாங்க' என்றார். உடனே சாரங்கன் 'அப்படி பார்க்க நினைக்கிறவங்க பெருமாள் கோவில சிலைய திருடி உடைச்சி பார்க்கமாட்டாங்களா இதெல்லாம் ஒரு காரணமா' என்றார். பெரியவர் சிரித்தார். 'அப்படி நடக்கும்னு நானும் எதிர்பார்க்கிறேன், ஆனா நம்ம ஊருல இருந்து அதைச் செய்ய யாருக்கும் தைரியம் வராது' என்ற பெரியவரை 'அய்யா என்ன சொல்றீங்க, அப்படி சிலைய திருடிட்டு போகற அளவுக்கு எதுக்கு நாம விடனும், மண்டபம் கட்டி பிரதிஸ்டை பண்ணிட்டா போதும்' என்ற வாசனை 'வாசா உன்னுடைய நோக்கம் புரியுது,பொறுமையா செய்வோம்' எனச் சொன்னார் பெரியவர்.

'தோட்டத்துக்கு போகலையா' என்ற சாரங்கனிடம் 'இல்லை இன்னைக்கு வேலை இல்லை, எல்லாம் நல்லபடியா வந்துக்கிட்டு இருக்கு' என்றான். 'அப்படின்னா கரிசலை விட செவல்ல நல்ல மகசூல் வரும்னு சொல்லு' என்றார் சாரங்கன். 'வரனும்' என்றான் வாசன். 'ஆமா உன் மாமன் பொண்ணும் உன் தங்கையும் அடுத்த வாரம் ஊருக்கு வராங்களாமே, இன்னைக்கு உன் மாமன் தான் சொன்னான்' என்ற சாரங்கனிடம் 'ஆமா ஏதோ இரண்டு வாரம் பரீட்சைக்கு முன்னால படிக்கிறதுக்கு இங்க வராங்களாம், அங்க விடுதியில எதுக்கு தங்கி இருக்கனும்னு இங்க வர நினைக்கிறாங்க, அப்பா சொன்னார்' என்றான் வாசன். 'இவ்வளவு கவிதைகள் இருக்கே உன் மாமன் பொண்ணை பத்தி ஒரு கவிதையாவது இருக்கா' என்றார் சாரங்கன் சிரித்துக் கொண்டே. உடனே பெரியவர் 'சாரங்கா அதான் கவிதையெல்லாம் நிறைய ஆவலா படிக்கிறியா, இதெல்லாம் முன்னமே படிச்ச கவிதைகள்தானே' என்ற பெரியவரிடம் 'மாமன் பொண்ணைத்தான இவன் கட்டிக்கிறப் போறான், பிறக்கறப்பவே பேசியப் பேச்சுத்தானா, அதான் கவிதை தேடிப் பார்த்தேன்' என்றார் சாரங்கன்.

'அவ மருத்துவருக்குப் படிச்சிட்டு இருக்கா, நான் மரத்தை படிச்சிட்டு இருக்கேன் எப்படியெல்லாம் நீங்க கற்பனை பண்றீங்க' என்றான் வாசன். 'சரி நடக்கறப்ப பார்ப்போம், பத்திரிக்கை தராமலா போகப் போற' என்று சாரங்கன் சொல்லிக்கொண்டு இருக்கும்போதே முதியவர் பெருமாள் பெரியவரின் வீட்டினை

அடைந்தார்.

பெருமாள் வந்தவுடன் அவரை வரவேற்றார் பெரியவர். வாசன் எழுந்து கொண்டான். வாசனை அமருமாறு சைகை செய்தார் பெருமாள். முதியவர் பெருமாள் அமர்ந்தார். 'இன்னைக்கு என்ன பிரச்சினை பண்ண வந்து இருக்கீங்க, இந்த வீட்டை உங்க பேருக்கு மாத்தி தரச் சொல்றீங்களா' என்று சற்று நகைசுவை எனக் கருதி பெருமாளினை கேட்டார் சாரங்கன். பெருமாள் சாரங்கனைப் பார்த்து 'பிரச்சினை அப்படின்னு பண்ணலை, இப்பவும் கேட்கிறேன் பொது மந்தைக்கு முன்புறமா இருக்குற இடத்தில ஒரு ஆஸ்ரமம் கட்டினாத்தான் என்ன' என்றார் முதியவர். அதற்கு பெரியவர் இதைப் பத்தி அன்னைக்கே விவரமா பேசியாச்சு. அந்த இடம் பேருந்து வந்து போக வசதிக்கு வேணும், திருவிழா சமயத்துல விளையாடறதுக்கு அதுதான் சின்ன மைதானமும் கூட வேற இடம் இருந்தா பாத்துச் சொல்லுங்க முடிஞ்சா உதவி பண்றோம்' என்றார் பெரியவர். 'அப்படின்னா முடிவுல மாத்தம் இல்ல' என்றார் பெருமாள். 'முடிவுல என்ன மாத்தம் வேண்டி கிடக்கு, இந்த ஊருல ஒண்ணு பேசிட்டு அப்பறம் வெளியில வந்து வேற மாத்தி செய்ய யாராலயும் முடியாது அது ஊர்க் குத்தமாகும் எவ்வள சொன்னாலும் கேட்க மாட்றீங்க நீங்க இந்த ஊருதானா பூர்வீகம்னு எங்களுக்கு பெரும் சந்தேகமா இருக்கு அன்னைக்கு நீங்க பேசின ஆவேச பேச்சுக்கு இப்போ இங்க இருக்கறதே பெரிய விசயம்னு நினைச்சுக்கோங்க' என்றார் சாரங்கன்.

அமைதியாய் கேட்ட முதியவர் 'நான் என்ன தப்பா சொல்லிட்டேன், இதோ இவன் நிலம் எல்லாம் மாத்தி வாங்கினானே என்ன சொல்லி வாங்கினான் பணம் தந்து ஏமாத்தலையா' என்று மறுபடியும் வாதம் செய்தார் பெருமாள். பெரியவர் அதற்கு 'நிலம் எல்லாம் வாங்கினது செடி வளர்க்கப் போறேன் அந்த செடி கரிசல்ல நல்லா வரும் அதுக்குத்தான் இத்தனை ஏற்பாடு' என்றதும் 'அதைச் சொல்லி வாங்க வேண்டியதுதான, நீ மட்டும் அந்த செடியோட மகிமையை அனுபவிக்க பாக்குற எவ்வளவு சுயநலவாதி நீ உன்னைப் பத்தி நான் என்ன சொல்றது சொல்லு' என்றார் முதியவர் தனது திட்டம் செயல்படாமல் இருப்பதை கண்டு. பெரியவர் அதற்கு 'இது ஒரு முயற்சி தான் ஒரு வருசம் ஆகும் இந்த செடியோட பலன் கிடைக்க, இதை முறைபடுத்தி செய்றதுக்கு பல மாதங்கள் ஆகலாம் அதுவரைக்கும் எப்படி

பாடுபடாம இருப்பாங்க ஏதோ சின்ன இடத்தில போட்டு நிறைய சாகுபடி செய்ற விவரம் இல்ல இது அதனாலத்தான் இத்தனை ஏக்கர் நிலங்களை வாங்கி இருக்கேன் புரிஞ்சிக்கோங்க' என்றார் பெரியவர்.

உடனே பெருமாள் 'அப்படின்னா நீ வாங்கின நிலத்தில கொஞ்ச இடம் தா அங்க ஆஸ்ரமம் கட்டிக்கிறேன்' என வாசனைப் பார்த்தார் 'என்னடா சொல்ற ஒழுங்கா இருந்து பார்த்துப்பியா எனக்கப்புறம்' என சில நாட்கள் பின்னர் வாசனிடம் பேசினார். வாசன் பெரியவரை பார்த்தான்.'நிலங்கள் பத்தாதோன்னு பக்கத்து ஊர் நிலம் எல்லாம் வாங்க ஏற்பாடு செய்துட்டு இருக்கேன் இதுல இடம் கேட்டா எப்படி' என்றவரிடம் முதியவர் சிரித்தார் 'இவ்வளவு இடம் வாங்கி போட்டு இருக்கியே நாளைக்கு நீ போகறப்ப உனக்கு அந்த இடத்தில கோயிலா கட்டப் போறாங்க நிலத்தில ஒரு சின்ன இடமாவது கொடு இந்தா பணம் என இருபதாயிரம்தனை எடுத்து வைத்தார். வாசனுக்கு இப்போதுதான் புரிந்தது எதற்கு அப்பாவிடம் பத்தாயிரம் பத்தாயிரமாக இரண்டு முறை இவர் பணம் வாங்கினார் என்று. பெரியவர் சாரங்கனைப் பார்த்தார். கிராமத்தில் ஒரு சதுர அடி 50 ரூபாய்க்கு கூடப் போகாது. விளை நிலம் ஆதலால் விலை அதிகமாக இருக்கும். பெரியவர் யோசித்தார். 'எடுத்துட்டு நிலத்தை மாத்திக் கொடு ஒரு ஏழு சென்டாவது வரமாதிரி பார்த்துக் கொடு' என்றார் முதியவர்.

பெரியவருக்கு இது என்ன சோதனைப் போல இவர் வந்து இப்படி பண்ணுகிறார் எனப் பட்டது. 'சரி சேட்டுர் பக்கத்தில இருக்கற நிலத்தில தாறேன் பணம் எல்லாம் இருக்கட்டும் நல்ல விசயம்தான' என்ற பெரியவரிடம் 'இனாமா எல்லாம் வேணாம் பணத்தை எடுத்துக்கோ எனக்கு நம்ம ஊரை ஒட்டி இருக்க நிலத்தை தா, என்னை எதுக்கு அவ்வளவு தூரம் போகச் சொல்ற' என்றார் முதியவர். 'வினாயகம் இப்படி இவரை மாதிரி நாலு பேரு வந்துட்டா என்ன பண்ணுவ நீ இருக்கற நிலத்தை எல்லாம் மாத்தி தந்துட்டு உட்காந்துட்டு இருக்க வேண்டியதுதான், இவரே கொஞ்ச நிலத்தை வாங்கி நாளைக்கு பெரிய பிரச்சினை பண்ணமாட்டாருன்னு என்ன நிச்சயம் யாரும் தொல்லை தரக் கூடாதுன்னுட்டுதான எல்லா நிலமும் வாங்கின' என்றார் சாரங்கன். அதற்கு முதியவர் 'இனிமே நீ ஏதாவது பேசின அவ்வளவுதான்' என்று எச்சரிக்கை செய்தார் சாரங்கனை.

'இருக்கட்டும், சரி உங்களுக்கு ஒரு கொஞ்ச நிலப்பரப்பை தாறேன்' என பெரியவர் சொன்னதும் தான் நினைத்தது நடக்கும் என மனதுக்குள் கணக்குப் போட்டார் முதியவர். வாசனைப் பார்த்து கனகன் நிலத்தை தனியா விட்டுட்டு மத்த நிலத்துக்கு கல் வந்ததும் நட்டாப் போதும். நாளைக்கு அதை அளந்து இவருக்கு காமிச்சிருங்க' என்றார் பெரியவர். சாரங்கன் உடனே 'இது நியாமா வினாயகம், இவருக்கு எதுக்கு நீ பயப்படற ராமம் போட்டு இருக்குறதாலா' என்றார். பெரியவர் புன்னகைத்தார். 'தம்பி இப்பத்தான் கொஞ்சம் எனக்கு நிம்மதி' என வாசனைப் பார்த்து சொன்னார் முதியவர். வாசன் ஒன்றும் புரியாது விழித்தான்.

பெருமாள் 'சாப்பிட ஏதும் இருக்கிறதா' எனக் கேட்டார் பெரியவரிடம். 'வாங்க சாப்பிடலாம்' என அழைத்துக் கொண்டு உள்ளே சென்றார். 'யாரு இந்த கிழவன், தோட்டத்துல வைச்சி பார்த்தியா அப்படியே அனுப்பிட்டு வர வேண்டியதுதான, காத்தமுத்து வீட்டை தங்க கொடுத்து இருக்க, இப்ப பாரு ஆஸ்ரமம் உன்னை வைச்சித்தான் கட்டப் போறாராம், என்ன வாசா' என்றார் சாரங்கன். வாசன் அமைதியாய் இருந்தான். 'என்ன இங்க உக்காந்துட்டீங்க, வாங்க நீங்களும்' எனப் பெரியவர் அழைத்தார். 'இந்த வீடு கட்டி ஒரு நூறு வருசம் இருக்குமா' என்றார் பெருமாள். 'இருக்கும்' என்றார் பெரியவர். 'ரொம்ப மாத்தம் பண்ணி இருக்கே' என்றார் முதியவர். 'ஆமாம்' என்றார் பெரியவர். 'நானும் இங்க வந்து தங்கலாம்னு இருக்கேன், வீட்டு வேலைக்காரங்களுக்கு இடம் தந்து இருக்கியே அதுமாதிரி ஒரு இடம் எனக்கும் தா' என்றார் பெருமாள். கையை நனைக்க மாட்டேன் எனச் சென்றவர் இப்படி பேசுவதை கண்டு பெரியவர் 'தந்துட்டா போச்சு' என்றார். சாரங்கன் 'வினாயகம் யார் என்னன்னு விசாரிக்காம பண்றது நல்லா இல்லை' என்றார். முதியவர் அதற்கு 'என்ன விசாரிக்கப் போற, என் கதைதான் ஊரெல்லாம் தெரியுமே அடிக்கடி குறுக்கப் பேசாத' என்றார் பெருமாள். சாரங்கனுக்கு பெரியவர் செய்வது சரியாகப் படவில்லை. வாசனுக்கு என்ன இப்படி நடக்கிறது தனி வீடு கேட்டுத்தான் போனார். பெரியவர் சம்மதம் தந்தார். சாப்பாடு பரிமாறப்பட்டது. சாப்பிட்டு முடித்துவிட்டு வாசனையும் பெரியவரையும் வாழ்த்தினார். சாரங்கனைப் பார்த்து 'நீதான் ஊருல இருக்கப் போறது இல்ல, போற இடத்திலவாவது பிள்ளைகளோட சந்தோசமா இரு' என்று முதியவர் சொன்னதும் சாரங்கன் திகைத்தார்.

சாரங்கன் முதியவரைப் பார்த்து 'யார் சொன்னாங்க' என்றார். அதற்கு முதியவர் 'ஊர்லதான் பேசிக்கிறாங்களே' என்றார். தான் யாரிடமும் சொல்லவில்லை என்பதும் மனைவியிடம் கூட இது பற்றி பேசவில்லை என்பதும் இன்றுதான் தனது நண்பனிடம் கூறினோம், அதற்குள் இவருக்கு எப்படி தெரிந்தது என நினைத்துக் கொண்டே 'யாருக்குமே நான் சொல்லலையே' என்றார். 'அப்படின்னா உறுதியா போகப் போற' என்றார் முதியவர். சாரங்கன் ஆமாம் எனத் தலையாட்டினார் அதே வேளையில் இவருக்கு எப்படி தெரிந்தது எனவும் அறிய ஆவலுற்றார்.

வாசன் வீட்டிற்குச் செல்வதாய் கூறிவிட்டு விடை பெற்றான். முதியவர் சாரங்கனை அழைத்துக் கொண்டு வெளியேறினார். 'உனக்கு எதுக்கு இந்த சந்தேகம் நான் தோராயாமச் சொன்னேன்னு வைச்சிக்கோ' என்றார். 'இல்லை தோராயாமாச் சொல்லிருக்க முடியாது' என்றார் சாரங்கன். 'அப்படின்னா அன்னைக்கு நான் பேசினதை யாரும் சட்டை செய்யவே இல்லையே, இப்பக் கூட அவன் நிலம் தாரேன்னு சொல்றான் நீ விதண்டாவாதம் பண்ற' என்றதும் சாரங்கன் யோசித்தார். 'ஓ அதனாலாத்தான் எனக்கு சொல்ல வந்தீங்களா' என்றார். முதியவர் சிரித்தார். 'எப்படியோ ஊரைவிட்டு போகப் போற அதுவரைக்கும் எனக்கு ரொம்ப நல்லது' என்றார். சாரங்கன் தனது திட்டம்தனை அப்பொழுதே மாற்றி அமைத்தார் ஆனாலும் அது நடக்கப் போவது இல்லை என்பது முதியவருக்கு தெரியும்.

முதியவருடன் சாரங்கன் பொது மண்டபம் நெருங்கினார் 'உன் வாயில கொள்ளிக்கட்டைய வைக்க' என மாரிமுத்து கையில் கட்டையுடன் முதியவரை நோக்கி ஓடி வந்தார். பின்னால் சிலர் ஓடி வந்தார்கள். சாரங்கன் அவனை மறைத்து 'என்ன ஆச்சு' என்றார் 'என்ன ஆச்சா' என முதியவரை கையில் வைத்து இருந்த கட்டையால் ஓங்கி அடித்தான். ஆத்திரத்தில் செய்யும் செயல்கள் மனிதர்களை மட்டுமல்ல முனிவர்களையும் மதி இழக்கச் செய்கின்றன. என்ன செய்கின்றோம் என கொஞ்சம் கூட சிந்திக்காமல் செய்துவிடுகிறார்கள். இது இப்பொழுது மட்டுமல்ல முனிவர்கள் காலக் கதைகளும் இப்படியேதான் சொல்கிறது. சுருண்டு விழுந்தார் முதியவர். சாரங்கன் பதைத்துப் போனார். முதியவருக்கு தலையில் சரியான அடி. ரத்தம் வழிந்தது. முதலுதவி செய்யப்பட்டது. மயக்கமாகிய நிலையில் இருந்தார் முதியவர் பெருமாள்.

'இதோ இந்த கிழவன், என் மகனை அன்னைக்கு இதே மண்டபத்திலே வைச்சி வாய் பேசமுடியாம போவேன்னு சொன்னானாம் இப்ப என் மகன் வாய் பேசமுடியாம திணறுரான்' எனச் சொல்லிக்கொண்டே மேலும் அடிக்க ஓங்கியவனை தடுத்தார் சாரங்கன். 'செத்துகித்து போகப் போறார், அப்புறம் பெரிய பிரச்சினையாப் போயிரும்' என்றார் சாரங்கன். பின்னால் வந்தவர்கள் "காத்தமுத்து வீட்டுக்கு போனோம் இவர் இல்ல, பெரியவர் வீட்டுக்குப் போனதாக பேச்சி பாட்டிதான் சொல்லிச்சு அதான் இவன் சொல்லியும் கேட்காம இப்படி பண்ணிட்டான்" என்றனர். விசயம் ஒளியின் வேகத்தினை விட அதி வேகமாக ஊரெல்லாம் பரவியது.

அதிர்ச்சியில் உறைந்து போனார் பெரியவர். 'என்ன இது நம்ம ஊர்ல இப்படி நடக்கிறது' என்று வேகமாக வந்தார். வாசன் வீட்டிலிருந்து ஓடி வந்தான். ஊரில் இருந்தவர்கள் எல்லாம் வந்து சேர்ந்தனர். மந்தையில் பெரும் கூட்டம் கூடியது. வந்த பேருந்து நிறுத்தப்பட்டது. பெரியவர் உடனே முதியவரை மருத்துவமனைக்கு தூக்கிச் செல்லுமாறு உத்தரவிட்டார். பலத்த அடியாய் இருந்து இருக்கும்! முதியவரோடு வாசனும் இன்னும் சிலரும் சென்றனர்.

பெரியவர் மாரிமுத்துவை அழைத்துப் பேசினார். ‘என்ன காரியம் பண்ணிட்ட, அவர் சொன்ன சாபத்தினாலாதன் உன் மகனுக்கு வாய் பேச முடியலைன்னு சொல்ற, பிரச்சினைனு பட்டா நேரா என்கிட்ட வந்துருக்கனும் அதுக்குனு இப்படி ஊருல ஒவ்வொருத்தரும் அடிதடின்னு ஆரம்பிச்சா ஊரோட நிம்மதி எங்க போறது’ என்ற பெரியவரிடம் கட்டையை கீழே போட்டுவிட்டு ‘புள்ளை பாசம்யா’ கோபம் குறையவில்லை என அவன் சொன்னதில் தெரிந்தது. நல்ல மனிதர்கள் ஆத்திரத்தில் அறிவிழக்கும் போது பின்னர் அதை நினைத்து உள்ளம் வெட்கி உருகுகிறார்கள் சிலர் உடைந்து போகிறார்கள். ‘அவரே அப்படி சாபம் விட்டுத்தான் ஆச்சுனா இன்னொரு சாபம் விடச்சொல்லி அதை சரி செய்யலாம்ல எதுக்கு ஆவேசப்படற’ என்றவர் இந்த தருணத்தில் அறிவுரைகள் சரிப்பட்டு வராது என்று உணர்ந்தவராய் ‘வா உன் மகனை பார்ப்போம்’ என அழைத்து சென்றார்.

வார்த்தைகள் வெளிவராமல் திணறிக் கொண்டு இருந்தான். பெரியவர் அவனை

தொட்டு பார்த்துவிட்டு 'என்ன உடம்பு சூடா இருக்கே, ஏதும் காய்ச்சல் இருந்ததா' என்றார். அதற்கு மாரிமுத்து அண்ணன் சோனைமுத்து 'ஆமாம்யா அன்னைக்கில இருந்து காய்ச்சலத்தான் இருக்கான், என்னை இப்படி சொல்லிட்டாரு இப்படிச் சொல்லிட்டாருன்னு புலம்பிக்கிட்டே இருந்தான் பிறகு காய்ச்சல் சரியாப் போச்சு அப்புறம் திடீருன்னு காய்ச்சல் வந்தது புலம்புறது இல்ல' என்றார். 'உடனே நாணல்கோட்டை மருத்துவமனைக்கு கூட்டிட்டு போவோம் வாங்க' என அவனையும் அழைத்துச் சென்றனர்.

காய்ச்சல் வியாதியின் அறிகுறி. பயத்தினால் மனம் பிறழ்கிறது. இந்த மருத்துவர் கை ராசிக்காரர் எனச் சொல்லியே அவரிடம் சென்று இல்லாத நோய் இருந்ததாய் இருந்து தொலையும். எண்ணங்கள் வைத்து எதையும் சாதிக்கலாம், முறையாய் செயல்படுத்தினால். மருத்துவமனையினை அடைந்தான் வாசன் முதியவரோடும் சிலரோடும். சிகிச்சை அளிக்கப்பட்டது முதியவருக்கு. கண் திறந்து பார்த்தார். வாசன் தெரிந்தான். வாசனை கைகள் கூப்பி வணங்கினார். வாசனது கரம் பற்றினார். வாசன் 'தாத்தா' என்றான்.

மாரிமுத்துவின் மகன் முத்துராமனுக்கு மூளை காய்ச்சல் எனவும் அதனால்தான் நரம்புகள் பாதிக்கப்பட்டு பேச்சு வராமல் இருக்கலாம் என மருத்துவர்கள் கூறி தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டது. பெரியவர் செலவுகள் பற்றி கவலைப்பட வேண்டாம் எனச் சொன்னார். 'அய்யா என்னை மன்னிச்சிருங்க அய்யா' என கண் கலங்கினான் மாரிமுத்து.

சிறிது மணி நேரம் பின்னர் முதியவர் வாசனை அருகில் அழைத்து 'தலையெல்லாம் வலிக்குது, உன்கிட்ட இப்ப பேசாட்டி எப்பவும் பேச முடியாது அதனால நல்ல கேளு, நாளைக்கு நல்ல நாள், உன் பேருல நிலத்தை வாங்கிக்கோ, அதுல கட்டாயமா ஆஸ்ரமம் கட்டனும் கொடுத்த வாக்கை காப்பாத்து, யார் சொன்னாலும் மனசு மாறாத உனக்கு ஆயுசு கெட்டி, என்னோட ஆயுசையும் உனக்குச் சேர்த்து தந்துட்டு போகப் போறேன் எனக்கு வாரிசு இல்லை அங்கிற குறை இனிமே இல்லை, உன்மேல எனக்கு எந்த கோவமும் இல்ல நீ எவ்வளவு விசுவாசமானவன்னு உன்கிட்ட நான் பேசாத இருந்த நாட்கள்ல தெரிஞ்சிகிட்டேன்

இனி நாளைக்குள்ள நான் எனக்கு மரணத்தை வரவழைச்சுக்குவேன், அந்த சிலையில குழந்தை இருக்கானு யாரையும் உடைச்சி பார்க்க விட்டுராத. உண்மையிலே அதுக்குள்ள குழந்தை சிதையாம இருக்கு எப்படியாவது அந்த தெய்வச் சிலைக்கு மண்டபம் கட்டிரு சிலை திருடு போகலாம் கவனமா இரு. நீ தெய்வமா மதிக்கிறியே வினாயகம் நாரயணனோட பக்தன் நான் வேணுமின்னுதான் அவன் மறுக்கும் விசயமெல்லாம் செஞ்சேன் இருந்தும் கூட என் மேல அவன் மரியாதை வைச்சிருந்த காரணம் அவனுக்கு மட்டும்தான் தெரியும். அந்த அர்த்த ராத்திரியிலே உன்னை எதுக்குத் நான் தேடி வரனும் புரிஞ்சிக்கோ. அவரோட நண்பனா இருக்க சாரங்கன் கிட்ட கவனமா இரு. என்னுடைய பையில ஒரு முக்கியமான காகிதம் இருக்கு, நீ கணக்கு எழுதினது மட்டும்தான் பாத்து இருப்ப இது வேற காகிதம் அதுல சில விவரங்கள் எழுதி வைச்சிருக்கேன் அங்கு போய் பாரு' நிறுத்தாமல் சொல்லி முடித்தார்.

மற்றவர்கள் அங்கு இல்லை. வாசன் கண்களில் கண்ணீரோடு அனைத்தும் கேட்டுக்கொண்டான். முதியவர் சொன்னதை வைத்து ஒருவேளை இவர் கடவுளாக இருக்குமோ இந்த காலத்திலும் இப்படி நடக்குமோ நாம்தான் உணராமல் போகிறோமோ என நினைத்துக் கொண்டு 'நீங்க நாராயணனா' என்று முதியவரைப் பார்த்துக் கேட்டான். முதியவர் வலியிலும் புன்னகை ஏந்திக் கொண்டு 'நீ புராணங்களை படிச்சி படிச்சி இப்படியெல்லாம் தெய்வம் வரும்னு கற்பனையில இருக்க, நான் நாராயணனா இருந்து இருந்தா இவ்வுலகத்தை மாத்தி அமைச்சிர மாட்டேனா, நான் நாராயணனோட பக்தன் அவ்வளவுதான்' என்றார் முதியவர்.

எப்போதெல்லாம் உலகத்தில் அநியாயம் அக்கிரமங்கள் அதிகரிக்கிறதோ அப்போதெல்லாம் நான் அவதரித்து தர்மம் நிலை நிறுத்துவேன்னு சொல்லப்படறதா இருக்கிற வாசகம் கொஞ்சம் அதிகப்படுத்தபட்டதுதான். வரும் முன்னர் காப்பது தானே சிறப்பு, அதுதானே புத்திசாலித்தனம். நம்மையெல்லாம் அல்லல்பட வைத்து அதில் ஆனந்தம் காண்பவனா இறைவன். இருக்கவே இருக்க முடியாது.

முதியவர் கண்களை மூடினார். வாசன் "தாத்தா" என்றான். 'இங்க இறக்க மாட்டேன், இப்ப இறக்க மாட்டேன் என்னை வினாயகம் வீட்டுக்கு கொண்டு போ, நாளைக்கு எல்லாம் மாத்தி என் கண்ணு முன்னால காமி அப்புறமா போறேன், உன்மேல நம்பிக்கை இல்லைன்னு இல்ல எனக்கு சாரங்கன் மேல நம்பிக்கை இல்லை. அப்புறம் இங்க இறந்தா வீட்டுக்கு வெளியில வைச்சிருவாங்க, என்னை வீட்டுல இருந்துதான் தூக்கிட்டு போகனும் அதுவும் நான் ஓடி விளையாடுன இடத்துல' என சொல்லிக் கொண்டு கண் மூடினார். அடுத்த சில வினாடிகளில் பெரியவர் வந்தார். வாசன் விபரம் சொன்னான். பெரியவர் சரி எனச் சொன்னார். மாரிமுத்துவின் மகன் நிலைமை முன்னேறி வருகிறது எனச் சொன்னார் பெரியவர். முதியவர் அவரது விருப்பத்திற்கேற்ப பெரியவர் வீட்டினில் தங்கினார்.

சாரங்கன் எவ்வளவோ தடுத்து பார்த்தார். பெரியவர் ஒப்புக்கொள்ளவில்லை. பத்திரம் மாற்றி எழுதப்பட்டது. வாசனுக்கே எழுதித் தந்தார் பெரியவர். முதியவர் அதனைப் பார்த்தார். வாசன் மற்றும் பெரியவர் இருவரையும் கைகள் எடுத்து கும்பிட்டார் முதியவர் பெருமாள். உயிர் பிரிந்தது, இல்லை உயிரை பிரிய வைத்தார். வாசன் கண்கள் கலங்கினான். தனது சாபத்துக்கும் மாரிமுத்துவின் மகனது நிலைக்கும் சம்பந்தம் அவனது எண்ணத்தால்தான் வந்ததே தவிர எனது சாபத்தின் திறன் அல்ல மேலும் ஒருவனை நிந்தித்த காரணத்தால்தான் இந்த நிலை தனக்கு ஏற்பட்டது என பெரியவரிடம் முதியவர் சொன்னதை வாசன் நேற்றைய இரவு கேட்டு இருந்தான். முதியவரை நினைக்கையில் மிகவும் பாவமாக இருந்தது வாசனுக்கு.

இறுதிச் சடங்குகள் நடந்தேறின. நல்ல நாள் பொழுதுமாய் எல்லாம் நடைபெற்று முடிந்தது. கற்கள் வந்து இறங்கி இருந்தன. பொன்னுராஜுவும் முத்துராசுவும் எல்லாம் சரிபார்த்து வைத்தனர். ஒரு சில நாட்கள் பின்னர் எல்லா வேலையும் ஆரம்பிக்கலாம் என பெரியவர் கூறிவிட்டார். மாரிமுத்துவின் மகன் உடல்நலம் தேறிக் கொண்டு வந்ததை நினைத்து தான் அவசரப்பட்டு அநியாயமாய் முதியவரின் மரணத்திற்கு காரணமாய் இருந்து விட்டோமே என வருந்திய மாரிமுத்துவுக்கு வாசன் ஆறுதல் சொன்னான். எது எப்படி நடக்க வேண்டுமோ அது அப்படியே நடக்கிறது.

சாரங்கன் ஊரில் இருப்பதில் இல்லை என முடிவு செய்தார். பெரியவரிடம் ‘இவ்வளவு தூரம் பழகிட்டு நான் சொல்றதே கேட்காம இப்படி நிலத்தை மாத்தி தந்தது சரியில்ல, அதுவும் எதுவுமே சொல்லாம இவ்வளவு நிலம் வாங்கிச் செஞ்சதும் சரியில்ல, நான் கேட்டப்ப பணம் தர மறுத்துட்ட’ என ஏதேதோ காரணங்கள் சொன்னார். பெரியவர் சமாதானப்படுத்தினார். தான் நிராகரிக்கப் பட்டதாக சாரங்கன் சொன்னார். பெரியவர் இல்லை என மறுத்தும் இதற்காகத்தான் ஊரை விட்டுச் செல்வதாக கூறி விடை பெற்றார் சாரங்கன். வாசனுக்கு இதில் சற்று வருத்தம்தான். இதே வேளையில் சென்னையில் அருண் குளத்தூர் செல்ல திட்டம் தீட்டிக் கொண்டு இருந்தான்.

21.

'அப்பா நாளைக்கு நான் குளத்தூர் கிளம்புறேன், நீங்க பணத்தை காசோலையா தாங்க நான் கொடுத்துரேன்' என்றான் அருண். 'பெரியப்பாவோட சண்டை எதுவும் போட வேண்டாம், வீணா அவரை பகைச்சிக்காதே' என்றார் சேகர். 'அப்படி எல்லாம் ஒண்ணும் செய்யமாட்டேன், எனக்கு அவருடைய நோக்கம் எல்லாம் தெரிஞ்சாகனும், இத இப்படியே விட்டா என்ன நடக்கும்னு தெரியாது அதனால பார்க்குறது நல்லதுன்னு படுது கவலைபடாதீங்க' என்றான் அருண்.

'அண்ணா, இதை வாசன் கிட்ட கொடுத்துரு' என ஒரு பெரிய மடலை பாரதி தந்தாள். 'என்ன இது' எனக் கேட்டான் அருண். 'ஒரு கடிதமும் கவிதை புத்தகம் பற்றிய விபரங்கள் எல்லாம் இருக்கு, தபால்ல அனுப்பி இருப்பேன் நீதான் திடீருன்னு ஊருக்குப் போறியே' என்றவளிடம் 'பத்திரமா கொண்டு போய் சேர்த்துரேன்' என வாங்கி வைத்தான். அம்மா கவலைப் பட்டவளாய் தென்பட்டாள். 'தம்பி, இரண்டு நாள்ல திரும்பி வந்துரு' என்றார் சரோஜா.

சுந்தரனிடம் சென்றான் அருண். 'நாளைக்கு சாயந்திரம் ஊருக்கு கிளம்புறேன்னு சொன்னேனே வீட்டுக்கு எதுவும் கொடுக்கனுமா வாங்கிட்டியா' என்றான் அருண்.

சுந்தரன் 'இன்னும் இல்லை' என்றவனிடம் 'கொண்டு போகமாட்டேன்னு நினைச்சியா' என்றான் அருண். ஆமாம் எனத் தலையாட்டினான் சுந்தரன். 'சின்ன வயசுல நடந்ததை நினைச்சிட்டு இருக்கியா, உன் மேல எனக்கு எந்தவிதமான கோபம் இல்ல, சும்மா கிண்டல் பண்ணுவேன் அப்படி நினைச்சிருந்தா உன்னை இங்க வர வைச்சிருப்பேனா, நான் வரதுக்கு இரண்டு நாள் ஆகும் கடைய பார்த்துக்கோ' என்றான் அருண். சரி எனச் சொன்ன சுந்தரன் இப்போது சென்று வாங்கி வருவதாக சென்றான். பணம் தந்தான் அருண்.

சிறு வயதில் எப்போதும் பாரதியை கிண்டல் பண்ணிக்கொண்டே இருப்பான் சுந்தரன். இருவரும் ஒரே வகுப்பு. வாசனும் அருணும் ஒரே வகுப்பு. அதனால் பாரதி சுந்தரனிடம் அவ்வளவாக பேசமாட்டாள். சுந்தரனை பாரதி சத்தம் போட்டதும் இல்லை. இவ்விசயம் அருணுக்கு தெரிய வந்தது, வாசன் தம்பி என விட்டுவிட்டான். ஒருநாள் இவ்வாறு நடக்கும் போது அருணுக்கு கோபம் வந்து ஆசிரியர் அடிக்கும் பிரம்பினால் ஓங்கி சுந்தரனை அடிக்க தடியின் கணு பட்டு சுந்தரனுக்கு தையல் போட வேண்டி இந்த தழும்பு வந்தது. அன்றிலிருந்து அருணைக் கண்டால் பயப்படுவான் சுந்தரன். காலங்கள் உருண்டோடிவிட்டன! நினைவுகள் இனியும் பசுமையாய்.

சுந்தரன் நிறைய பொருட்கள் வாங்கினான், வாசனுக்கும் சேர்த்து. ஊருக்கேச் செல்ல வேண்டாம் என நினைத்தவன் ஊர் ஞாபகம் வந்தது. அம்மா, அப்பா தம்பியை பார்க்க வேண்டும் என எண்ணினான். அருகில் இருக்கும்வரை உறவுகளின் அர்த்தம் புரிவது இல்லை. அருணிடம் எல்லாம் கொடுத்தான். துணைக்கு சுந்தரன் வரட்டுமா எனக் கேட்டார் சேகர். 'இது என்ன நான் தான் உங்க புள்ளைனு சொல்லிட்டு நிக்க போறேனா, அடையாளம் காட்ட அதெல்லாம் சுந்தரன் இங்க இருக்கட்டும்' என்றான் அருண். தினம் கழிந்தது. குளத்தூரில் காலையில் வந்து இறங்கினான் அருண். யாரு இந்த பையன் என பொது மந்தையில் அமர்ந்து இருந்தவர்கள் ஆச்சர்யமாக பார்த்தார்கள்.

பெரியவரின் நிலத்தில் வேலைகள் மும்முரமாக நடந்து கொண்டு இருந்தன. முத்துராசு ஒரு கல்லைத் தூக்கியவாறு 'இந்த கல்லால அந்த கிழவர் மேல

போட்டுடலாம்னு இருந்தேன் அதுக்குள்ள மாரிமுத்து முந்திக்கிட்டான்' என்றதும் கண்ணையன் 'ராசு உனக்கு என்ன பேசறதுன்னு தெரியாதா, இது கொலை கேஸாப் போயிரும், பேசாம வேலையப் பாரு' என்றார். பெரியவர் வேலைகள் எல்லாம் நல்லபடியாக நடக்கிறதா எனப் பார்த்தார். 'ஒன்றரை அடி ஆழம் தோண்டவேண்டும்' என முத்துராசுவிடம் இன்னும் தோண்டச் சொன்னார். முத்துராசு பெரியவர் சற்று தள்ளி சென்றதும் 'இன்னும் கொஞ்சம் ஆழமாத் தோண்டினா இவரையும் அப்படியே உள்ள வைச்சி கல்லாக்கிறலாம்' என்றான். கண்ணையன் கோபமாக 'உன் வாயை எப்பத்தான் அடக்கப் போறியோ, இப்படியே பேசிட்டே நல்லா தப்பிச்சிக்கிற, யாராவது போட்டுக் கொடுத்துறப் போறாங்க' என்றார் கண்ணையன்.

வேலையில் ஈடுபட்டான் முத்துராசு. சிறிது நேரத்துக்கு பின்னர் கம்பியை கீழே போட்டுவிட்டு நேராக பெரியவரிடம் சென்றான். கண்ணையன் என்ன இது கொடுமை ஏதாவது ஏடாகூடமாகச் சொல்லப் போறானோ என பயந்து கொண்டே பின்னால் சென்றார். வேலை செய்து கொண்டு இருந்த வாசனிடம் பெரியவர் சென்றார். 'அய்யா, நீங்க கொஞ்சம் அதிக ஆழம் தோண்டச் சொன்னீங்க, இப்ப சரியா இருக்கானு வந்து பாருங்க' என்றான். கண்ணையனுக்கு நிம்மதியாய் இருந்தது. பெரியவர் சரிப்பார்த்துவிட்டு 'சரி' எனச் சொன்னார். 'அய்யா இன்னும் கொஞ்சம் ஆழமாத் தோண்டினா நம்ம வாசனை கல்லா இங்க நட்டுரலாம் எப்படி அய்யா என் யோசனை' என்றான். பெரியவர் சிரித்தார். 'என்னை கல்லா நட்டுரலாம்னு நினைச்சிகிட்டு வாசனைச் சொல்றியா' எனச் சிரித்தார். இல்லை என்பது போல் தலையாட்டினான் வேகமாக.

'இவருக்கு கோபமே வராதா' என்று கண்ணையனிடம் கேட்டான் முத்துராசு. 'அதுதான் நம்ம ஊர்ல அவரை மதிக்கிறாங்க, எல்லாருடைய பிரச்சினைக்கும் வடிகாலா இருக்காரே, மாரிமுத்து மகனுக்கு ஆன செலவெல்லாம் இவர்தான் கட்டினாராம் இப்ப நல்லா ஊருக்கு வந்துட்டான், பேசறான்' என்றார் கண்ணையன்.

அருண் நேராக வீட்டிற்குச் சென்றான். குளித்துவிட்டு பெரியவர் தோட்டத்தில்

இருக்கிறார் எனக் கேள்விப்பட்டு நேராக் தோட்டம் சென்றான். வேலைகள் நடப்பதை கண்டு என்ன செய்கிறார்கள் எனப் புரியாமல் பெரியவரை நெருங்கினான். பெரியவர் அருணை அடையாளம் கண்டு கொண்டார். வாசன் அருணைப் பார்த்தான். 'பெரியப்பா எப்படி இருக்கீங்க, வேலையெல்லாம் படு சுறுசுறுப்பா இருக்கு' என்றவனை ஆச்சர்யமாய் 'வாப்பா அருண், என்ன ஒரு தகவலும் இல்லாம முத முத தடவையா ஊருக்கு வந்துருக்க, நல்ல சௌகரியம்தான் வா வீட்டுக்கு போகலாம்' என்றார் பெரியவர். 'வேலை நடக்கறப்ப எதுக்கு வீட்டுக்கு' என்றான் அருண். வாசன் 'வா அருண், நல்லா இருக்கியா' என்றான். வாசனை பார்த்து 'எப்படி இருக்க வாசா, 8 வருசம் ஆச்சுல்ல' என்று தான் 8 வது வரை வாசனுடன் படித்ததை நினைத்துப் பார்த்தான். 'அங்க பாரு புது ஆபீஸரு வந்துருக்காரு' என முத்துராசு சொன்னதும் வேலைப் பார்த்தவர்கள் அருணை பார்த்தனர்.

பெரியவர் அருணை கூட்டிக்கொண்டு தோட்டக் கட்டிடம் சென்றார். கட்டிலில் அமர்ந்தான் அருண். 'என்ன அருண் சாப்பிட்டியா' என்றார் பெரியவர். 'காலையில சாப்பிட்டேன் பெரியப்பா, எனக்கு நிலம் பத்தி கொஞ்சம் விவரம் தெரியனும் பெரியப்பா அதுக்குத்தான் இங்க இவ்வளவு அவசரமா வந்தேன்' என்றான் அருண். இத்தனை வருட காலங்கள் பாசமதை பாராது பணம்தனை மையமாக வைத்து வந்து இருப்பதை நினைத்து பார்க்கையில் பெரியவருக்கு வேடிக்கையாக இருந்தது. இதற்கு முன்னர் விவரம் தெரியாமல் இருந்து இருக்கலாம் என நினைத்துக் கொண்டார். 'அப்பா சொல்லலையா' என்றார் பெரியவர். இல்லை என்றவனிடம் எல்லா விபரங்களும் சொன்னார். அதை கேட்க கேட்க அருணுக்கு கோபமாய் வந்தது. 'அப்பாகிட்ட சொல்லி இருக்கலாம் இப்படி தேவையில்லாம பொருளை விரயம் பண்றதுல என்ன லாபம், ஒரு முன் யோசனையும் இல்லாம இப்படி பண்ரது கொஞ்சம் கூட நல்லா இல்லை' என்று சத்தம் போட்டான். இவனிடம் நாராயணன் சொன்னது எனச் சொன்னால் நகைப்பான் என அதை மட்டும் சொல்லாது எல்லா திட்டங்களும் சொன்னார். அருண் சத்தம் போடுவது அருகில் வேலை செய்து கொண்டு இருந்த வாசனுக்கு கேட்டது. வாசன் வேலையை போட்டுவிட்டு சென்றான்.

வாசன் வருவதை கண்டதும் 'இது எல்லாத்தையும் இப்படியே நிப்பாட்டுங்க, இதெல்லாம் நடக்கற காரியம் இல்லை' என்றான். வாசன் அருணிடம் 'அருண் நீ கொஞ்சம் பொறுமையா இரு, இது இப்ப நினைச்ச திட்டம் இல்ல, எல்லாம் நல்லபடியா வரும்' என்றவனை நோக்கி 'எல்லாம் உன்னாலதான், நீ சென்னைக்கு அப்பா கூப்பிடறப்ப வந்து இருந்தா இவருக்கு எங்க இந்த தைரியம் வரும்' என்றான் அருண். 'பணம், கடுமையா உழைச்சி சம்பாரிக்கிற பணம் எப்படி தண்ணியாச் செலவழிக்கிறார்' என்றவனை 'அருண் புரியாமப் பேசாதா, முதலீடு பண்ணாம எதுவும் கிடைக்காது, உழைப்பையாவது முதலீடு பண்ணனும்' என்றார் பெரியவர். 'எதுனாலும் பண்ணுங்க, இந்தாங்க 2 லட்சம் காசோலை, இனிமே பணம் கேட்டு தொந்தரவு பண்ண வேணாம் இப்பவே கிளம்புறேன்' என்றான் அருண். பெரியவர் அதிசயமாய் பார்த்தார்.

அருண் இவ்வாறு சொல்லியது வாசனுக்கு சங்கடமாய் இருந்தது. அருணை தனியாய் அழைத்தான் வாசன். பெரியவரிடம் அனுமதி கேட்டுக் கொண்டு அழைத்துச் சென்றான். 'பணம் பணம்னு சொல்றியே, நீங்க அனுப்பின பணம் எல்லாம் பத்திரமா வங்கியிலதான் போட்டு வைச்சிருக்கார் பாரதிக்குத் தெரியுமே சொல்லலையா' என்றான் வாசன். 'இப்ப வாங்கின நிலத்துக்கு அதிகமா கொடுத்த பணம் எல்லாம் அவர் நிலத்தில உழைச்சு சேர்த்தது. இந்த ஊருல நல்லா இருக்காங்கன்னா அதுக்கும் அய்யா தான் காரணம், அவசரப்பட்டு என்ன என்னமோ பேசற' என்ற வாசனை 'என்ன சொல்ற' என்றான் அருண்.

'நகரத்தில இருந்தா அந்த பகட்டு வாழ்க்கைக்கு பணம் தண்ணியா செலவழியும்னுதான் சின்ன அய்யா கிட்ட நிலம் வாங்க பல செலவுக்குனு பணம் வேணும்னு வாங்கிட்டு இருக்கார், சின்ன அய்யா ஒருநாளும் கணக்கு கேட்டதில்ல இப்ப கூட சின்ன அய்யா வந்தப்ப பணம் கணக்குனு அய்யா தந்தப்ப சின்ன அய்யா பார்க்கலை நான் தான் பாரதிக்கு எல்லாம் சொன்னேன்' என்றான் வாசன். அருண் வாசன் சொல்வது உண்மையா என்பது போல் பார்த்தான். 'இன்னைக்கு வேணுமின்னா வந்து பாரு' என்றான். 'கொஞ்சம் யோசி, அவர்தான் வெளியூருக்கு ரொம்ப தூரம் போனதே இல்லை நீயாவது சின்ன அய்யா வந்தப்ப வந்து பாத்துட்டு போனியா, அப்பல்லாம் யாரையாவது நம்பித்தானே வேலைய கொடுத்துட்டு

வருவாரு' என்றான் வாசன். அருண் பணம்தனிலே வாழ்ந்து வந்ததால் பந்தம்தனை மறந்து இருந்தான்.

'என்னதான் இருந்தாலும் இப்படியொரு திட்டம் தேவையா, அதுவும் ஒண்ணுமே மகசூல் இல்லாம எப்படி ஒரு வருசமோ இரண்டு வருசமோ சமாளிக்கப் போறார்' என்றான் அருண். 'அத்தனை ஏக்கர்லயும் பயிரிடலை, பாதி பயிரிடப் போறோம் முதல்ல' என்ற வாசனை 'உன்கிட்ட பேசினா எல்லாத்துக்கும் சரியா காரணம் சொல்வ' என்றவாறே அருண் பெரியவரிடம் சென்று 'விவரம் புரியாமல் பேசிட்டேன், இருந்தாலும் எனக்கு இஷ்டமில்லை' என்றான் அருண். 'இது என்னோட முயற்சி அருண், உனக்கு இஷ்டமில்லைங்கிறதுக்காக நிப்பாட்டுற வேலை இல்லை' என்றார் பெரியவர். 'அப்படின்னா எங்க அப்பாவோட பங்கு' என்றான் அருண். பெரியவர் அருணை பார்த்து சிரித்தார். 'உங்க அப்பா பங்கு எல்லாம் சரியா பிரிச்சிட்டோம், அதை உங்க தாத்தா சரியா செஞ்சுட்டார்' என்றார் பெரியவர். 'அப்படின்னா அந்த நிலம் எல்லாம் எங்க' என்றான் அருண். பெரியவர் சிரித்துக் கொண்டே 'அதை வேணாம்னுட்டுதான் பணமா வாங்கிட்டு பெரிய துணிக்கடை ஆரம்பிச்சான், ஆமா உனக்கு எதுவுமே என் தம்பி சொல்லலையா இந்த விவரம் கேட்கவா இவ்வளவு தூரம் வந்த, அப்படியே நிலம் மாத்துரதா இருந்தா என் தம்பியத்தான நான் வர வைச்சி பத்திரம் மாத்தி இருக்கனும் அப்படி பண்ணலையே' என்றார் பெரியவர். அருணுக்கு விசித்திரமாக இருந்தது.

அப்பாவுக்கு உடனே போன் போட்டான். பேசினான். அப்பா சத்தம் போட்டார் எதிர் முனையில் இருந்து. தனது அண்ணனிடம் தரச் சொன்னார். பெரியவரிடம் தந்தான். 'என்னப்பா பையனுக்கு விவரம் சொல்லி வளர்க்க வேணாமா, கேட்டா பதில் சொல்லி இருக்கலாம்ல அதுக்குனு இவ்வளவு தூரம் வந்துருக்கான் என்ற பெரியவரிடம் 'அண்ணே அப்படியாவது அவன் உங்களை பாக்கனும் உங்களை பத்தி தெரியனும்னுதான் போகட்டும்னு விட்டேன்' என்று சேகர் சொன்னதும் பெரியவர் 'இரண்டு நாளைக்கு அப்புறம் அனுப்பி வைக்கிறேன்' என போனை நிறுத்தினார்.

அருண் பெரியப்பாவிடம் மன்னிக்குமாறு வேண்டினான். பெரியவர் சிரித்துக் கொண்டே 'இது எல்லாம் உனக்கும் பாரதிக்கும்தான், அதுக்கும் எல்லா எழுதி வைச்சிருக்கேன்' என்றதும் அருண் வாயடைத்துப் போனான். சத்தமே போடாமல் அமைதியாய் பேசிய விதம் கோபப்படாமல் இருந்தது கண்டு அவன் மனசு சலனப்பட்டது. 'எத்தனை மணிக்கு கிளம்பற, இல்லை இரண்டு நாள் இருந்துட்டு போறியா' என்றார் பெரியவர். 'இரண்டு நாள் இருந்துட்டு போறேன் பெரியப்பா' என்றவனிடம் 'இப்போ சொன்னதெல்லாம் ஒரு வேளை உண்மையில்லாம நீ எதிர்பார்த்த மாதிரி இருந்து இருந்தா என்ன பண்ணி இருப்ப' என்றார் பெரியவர். அருண் ஆடிப்போனான். அன்பின் அர்த்தம் தெரியாதவர்கள் பணத்தினையும் பொருளையும் முதன்மை படுத்தி வாழ்க்கை முறையினை அமைத்துக் கொள்கிறார்கள். பிரபஞ்சம் படைத்தவனை நாம் விலக்கி வைத்ததன் மூல காரணமே இந்த பொருட்களின் மேல் கொண்ட அதீத ஈடுபாடுதான், மாலைகளகாவும் சூடங்களாகவும் கூட.

அருண் வாசனுடன் இணைந்து வேலை செய்ய ஆரம்பித்தான். ஒரு சிலர் உடனே புரிந்து கொள்கிறார்கள். அருண் உற்சாகமாய் வேலை செய்து கொண்டு இருந்தான். 'என்னது ஆபிஸரு நிலத்தை தோண்டுறாரு, புதையல் எதுவும் இருக்குமோ' என முத்துராசு வேகமாய் வந்தான். பெரியவரோட தம்பி பையன் என பேசிக் கொண்டார்கள். வாசன் அருணை ஓய்வெடுக்கச் சொன்னான், இல்லையெனில் வேடிக்கை பார்த்து பிறரது வேலை நடக்காது என்று சொன்னதும் அருண் சிரித்து விட்டான். பெரியவர் மனம் மகிழ்ந்தார்.

குழிகள் தோண்டப்பட்டு கற்கள் நடப்பட்டு வந்தன. ஊரில் நடந்த விசயங்கள் கேள்விப்பட்டு முதியவரை பற்றி கேள்விப்பட்டு குழந்தையா சிலையா என ஆச்சர்யப்பட்டான் அருண். கிராமத்தில் இன்னும் நிறைய விசயங்கள் மாறாதது கண்டு அவனுக்கு கொஞ்சம் கவலையாவும் இருந்தது. நகர வாழ்க்கைக்கும் இந்த கிராம வாழ்க்கைக்கும் நிறைய வேறுபாடுகள் இருப்பதை அறிந்து கொண்டான்.

அருணின் முன் அனைத்து கணக்குகளையெல்லாம் பத்திரங்களையெல்லாம் பார்ப்பதற்கு பெரியவர் எடுத்து வைத்தார். 'அதெல்லாம் வேணாம் பெரியப்பா'

என்றவனிடம் பெரியவர் 'எப்போ சந்தேகம்னு வந்துருச்சோ அதை முறைப்படி தீர்த்தரனும், என்னதான் தீர்த்தாலும் திரும்ப திரும்ப அந்த சந்தேகம் வரத்தான் செய்யும்' என்றார். அருண் கவலைப்பட்டான். இந்த உலகம் ஒருவனை கெட்டவன் என தீர்மானம் பண்ணிவிட்டது எனில் அவன் எவ்வளவு நல்லவனாக மாறினாலும் கெட்டவனாகவே பார்வை கொண்டு பார்க்கிறது. கெட்டவனாக வாழும் போது அவனை ஒதுக்கி வைக்க தயக்கம் கொள்கிறது என்பதுதான் சற்று விசித்திரம். நல்லவராய் வாழ்வது என்பது அவ்வளவு எளிதல்ல. இராமாயணத்து ராமனையே விமர்சிக்கும் யோக்கியதை உடையவர்களாக நம்மில் பலர் இருப்பது அதிசயம்தான். இதில் இறைவனை பற்றி சொல்லவா வேண்டும். எந்த தவறும் செய்யாதவர்கள் என எடுத்துக் கொண்டால் இறைவனை தவிர வேறு எவரை குறிப்பிட்டுச் சொல்ல முடியும். எது நல்லது எது கெட்டது? ஒருவருக்கு நல்லதாய் படுவது மற்றொருவருக்கு கெட்டதாய் படுகிறது. மாற்றங்கள் தவிர்க்க முடியாதவை. தனது தந்தையை போல அருண் கணக்கினை மனதில் இருந்து முதன் முதலாய் தள்ளி வைத்தான். பெரியவர் புன்னகைத்தார்.

வாசனை வீட்டுக்கு வரச் சொல்லி இருந்தான் அருண். அருணை சந்தித்து பேசிவிட்டு பாரதி தந்த மடலையும் சுந்தரன் தந்த பொருளையும் வாங்கி கொண்டான். நாளை காலையில் தோட்டத்தில் பார்ப்பதாக கூறிவிட்டு சென்றான் வாசன்.

சித்தப்பா வீட்டில் தந்துவிட்டு தனது பொருளுடன் வீடு வந்தான் வாசன். மடலை திறந்தான், ஒரு கடிதத்தில் அன்புள்ள வாசனுக்கு என தொடங்கி, எல்லா விபரங்களும் எழுதப்பட்டு, கணக்குகளும் தெளிவாக குறிப்பிடப் பட்டு இருந்தது. அதோடு அவனது பெயருக்கு ரூபாய் 5000க்கு காசோலை இருந்தது. எந்த ஒரு அடைமொழியும் இல்லாமல் இப்படிக்கு பாரதி என கடிதம் முடிந்து இருந்தது. திரும்ப திரும்ப கடிதம்தனை படித்தான். நம்மை அறியாமலே நமக்கு சிலரை பிடித்து விடுகிறது. இதற்கு காதல் என பட்டம் சூட்டபட்டால் மெதுவாய் கனக்கிறது, அந்த கனம் பின்னர் வலிக்கிறது. எதையும் நிச்சயப் படுத்திக் கொள்ளுங்கள். வெறும் கற்பனைகளும் கனவுகளும் சிறந்த வாழ்க்கையினை அமைக்க உதவுவதில்லை. கற்பனைகளும் கனவுகளும் அளப்பரிய சக்தி கொண்டுள்ள நம்மை அச்சக்திதனை

உணரச் செய்ய உதவும் அதே வேளையில் ஒன்றுமில்லாமல் போகவும் செய்யும்.

வாசன் அம்மாவிடம் சென்று சொன்னான். கடிதம்தனை வாசிக்கச் சொன்னார். அம்மாவை பற்றியும் அப்பாவை பற்றியும் குறிப்பிட்டு, அம்மாவின் அன்பினை பற்றி எழுதி இருந்ததை கேட்டதும் அம்மாவுக்கு மிகவும் சந்தோசமாய் இருந்தது. அம்மா கனவு காணவில்லை. நாம் பிறரால் நேசிக்கப்படும் போது நமக்கும் அந்த நேசம் பிடித்து இருந்தால் மட்டற்ற மகிழ்ச்சி உண்டாகிறது. 'இன்னொருதரம் படிப்பா' என்றார் அம்மா. படித்தான் வாசன்.

இதையெல்லாம் கேட்டுக் கொண்டு இருந்த அப்பா 'நாளைக்கு நம்ம தோட்டதில பாத்தி கட்டனும்பா, அதை கட்டிட்டு பிறகு நேரம் இருக்குறப்ப அவர் நிலத்துக்கு போ' என்றார். சிலை விசயத்தில் இருந்து அப்பா வாசனது நடவடிக்கைகளை கண்டிப்பது இல்லை. வாசன் முதன் முதலாக தன்னையும் ஒரு பெண் காதலிக்கலாமோ என எண்ணினான்.

22.

மருத்துவ கல்லூரி வளாகம். அழகிய புல்தரைகள், அதில் வளர்ந்து சிரிக்கும் அழகிய மரங்கள். கல்லூரியுடன் இணைந்து இருக்கும் மருத்துவமனை. மருத்துவ கல்லூரியெல்லாம் மருத்துவமனையுடன் இணைந்து இருந்தால் புத்தக படிப்புடன் செய்முறையும் கற்றுக் கொள்ள ஏதுவாய் இருக்கும். அதைவிட புத்தகம் சொல்லித்தராத கருணையினை வாழ்க்கையின் உள் அர்த்தம்தனை எளிதாக கற்றுக் கொள்ளலாம். அன்பும் கருணையும்தான் சிறந்த மருந்து என எத்தனை நல் இதயங்கள் வாழ்ந்து காட்டி இருக்கின்றன. வெள்ளை நிற மேலாடைகளுடன் வலம் வருபவரை காணும்போதெல்லாம் தெய்வங்கள் உலாவுவதாக ஒரு எண்ணம் மின்னலாய் மனதினை கீறிவிட்டுச் செல்லும்.

நுண்ணுயிர்கள் மட்டும் இல்லாது இருந்து இருந்தால் இந்த மருத்துவத் துறைக்கு நிறைய வேலை இருந்து இருக்காது. ஆனால் இருக்கிறதே! இப்படி இல்லாமல், அப்படி இல்லாமல் இருந்து இருந்தால் என்னும் சிந்தனை நம்மில் ஓங்கி இருப்பதின்

விளைவுதான் நமது கவலைகளுக்கு பெரும் காரணம். கவலைகளுடன் கசப்புகளுடன் வாழப் பழகிகொள்ள வேண்டும், வாழப் பழகுகிறோமோ இல்லையோ வாழ்ந்துதான் ஆக வேண்டும், வாழ வேண்டும் என்ற ஒரு எண்ணம் இருந்தால்.

இது வாழ்க்கை, நமக்கு ஓய்வு காலங்களே இல்லை. தூங்குகிறோமே அதை நாம் ஓய்வு எடுப்பதாய் நினைக்கின்றோம், அதுதான் இல்லை அப்பொழுதுதான் செல்கள் தம்மை புதுப்பித்துக் கொள்கின்றன. நாம் அமைதியாய் இருக்கும்போதெல்லாம் செல்கள் உடனடியாய் தன்னை புதுப்பிக்கும் வேளைகளில் இறங்குகிறது. தூங்கியே பொழுதை கழிப்பவர்கள் எச்சரிக்கையாக இருங்கள். புதுப்பிக்கபட்ட செல்கள் உழைக்க வாய்ப்பு கிடைக்கவில்லையென கருதிக் கொண்டு புதுப்பித்தல் கலையை மறந்து போகும், அதற்கு பின்னர் என்ன நடக்கும் என சொல்லியாத் தெரிய வேண்டும்.

செல்கள் எனில் ஒரு உறை இருக்கும், அந்த உறைக்கு உள்ளே திரவம் இருக்கும், அந்த திரவத்தில் கரு இருக்கும், அந்த கருவில் நியூக்லிக் அமிலம் இருக்கும் அதுதான் எல்லா தகவல்களையும் சேர்த்து வைக்கும், இன்னது செய்ய வேண்டுமென தகவலும் கொடுக்கும். நுண்ணுயிரான வைரஸ் ஒரு செல்லே இல்லை. நுண்ணுயிரான பாக்டீரியாவுக்கு கரு இல்லை. ஆனால் நியூக்லிக் அமிலம் இருக்கிறது. புரதம் மற்றும் நியூக்லிக் அமிலம்தான் உலக உயிர்கள் தோன்ற காரணம்? முட்டையா கோழியா என விடை தெரியாமல் தவிப்பவர்களுக்கு இதுவே ஒரு விடையாய் கண்ணுக்குத் தெரியாதா. இங்குதான் பிரபஞ்சத்தின் உயிர்களின் உண்மை ஒளிந்து இருக்கிறது. அப்படியெனில் இறைவன்? வெட்ட வெளியில் நின்று தன்னை மறைத்து கொள்ளும் உண்மை அவனுக்கு மட்டுமே தெரியும்.

மருத்துவமனையுடன் இணைந்த மருத்துவ கல்லூரியில் பெண்கள் அணிந்து இருக்கும் மல்லிகை மலர்களின் வாசனையை விட மருந்து வாசனை அதிகமாய் இருக்கும். செய்முறை பயிற்சிக்கு சென்று விட்டு மதிய உணவு இடைவேளையின் போது பாரதியும் கிருத்திகாவும் ஒருவரையொருவர் பார்த்த வண்ணம் இருந்தனர்.

பாரதியை பார்த்து 'என்னயா காலையில் இருந்து ஒரு மாதிரியா இருக்கே? என்றாள் கிருத்திகா.

கிருத்திகாவின் கேள்விக்கு பதில் தராமல் அமைதியாய் இருந்தாள் பாரதி. ‘என்னய்யா, சாப்பிடலாம்யா, ஏன்யா ஒருமாதிரியா இருக்கே’ என மறுபடியும் கேட்டாள். ‘அதெல்லாம் ஒண்ணுமில்லை, என்னை வாசன் காதலிக்கிறதா கனவு கண்டேன், அதையே நினைச்சிகிட்டு இருந்ததால டல்லா இருக்கு’ என்றாள். ‘என்னய்யா சந்தோசமான விசயம்தான கனவு கண்டு இருக்க, அப்படியே காதலிச்சாலும் கவலையா படுவாங்க’ என்றாள் கிருத்திகா. ‘சந்தோசமா, இல்லை கிருத்தி’ என்றாள். ‘ஓ வாசன் படிக்காதா பையன் கிராமத்தான்னு நினைக்கிறியா’ என்றவுடன் ‘சே சே அப்படியெல்லாம் இல்லை, ஒரு வேளை உண்மையிலே காதலிச்சாலும் ஏகப்பட்ட நடைமுறை சிக்கல்கள் இருக்கு, இந்த கனவு பொய்யானதா இருக்கனும்னுதான் நான் இப்போதைக்கு வேண்டிக்கிறேன், இன்னைக்கு சாயந்திரம் அஷ்டலக்ஷ்மி கோவிலுக்கு போய்ட்டு வருவோமா’ என்றாள் பாரதி. ‘என் மாமன் மாதிரி ஒண்ணும் இல்லையே’ என்றாள் கிருத்திகா. பாரதி சிரித்து விட்டாள்.

‘நீ வாசனோட பேசிப் பாரு பிறகு தெரியும், அவனுடைய கவிதையில இருந்து தெரியலையா அவனது சிந்தனைகள்’ என்றாள் பாரதி. ‘நானும்தான் வாசன் எழுத்துக்களை காதலிக்கிறேன்’ என்றாள் கிருத்திகா. எழுதப்படும் எழுத்துக்கள் எழுத்தாளரை பிரதிபலிக்க வேண்டும் என்று எந்த சட்டமும் இல்லை. சிலரே அவர்கள் எழுதும் எழுத்துக்களுடன் ஒன்றிய வாழ்க்கை வாழ்ந்து வருகிறார்கள். ‘பேசாம இது பத்தி வாசன் கிட்ட பேசி பாருயா இது சும்மா கனவுதானனு நினைக்காதையா, நாம ஒருத்தரை நினைச்சா உடனே அவங்க வருவாங்களயா அதுமாதிரி இருக்கும்யா’ என்றாள் கிருத்திகா.

‘வாசனை செல்போன்ல ட்ரை பண்ணுவோமோ’ என்றாள் பாரதி. ‘என்னது செல்போனா, நான் ஒருதரம் கேட்டப்ப வீட்டுக்குத்தான் பேசனும்னு சொன்ன’ என்றாள் கிருத்திகா. ‘அவங்க தம்பி வாசனுக்கு செல்போன் வாங்கி தந்துருக்கான், என்கிட்ட நம்பர் தந்தான் அதான் முயற்சி பண்ணலாம்னு கேட்டேன், இதோ நம்பர்

இருக்கு' என்ற பாரதியை 'அது வாசனது நம்பர்தானாயா, தப்பா போயிறப் போகுது, அதுசரி என்னய்யா அந்த கிராமத்துக்கு லைன் கிடைக்குமாயா' என்றவளின் பேச்சை சட்டை செய்யாது பாரதி எண்கள் அழுத்தினாள்.

வாசன் வேக வேகமாக பாத்தியினை கட்டிக் கொண்டு இருந்தான். 'என்ன மருமகனே, இவ்வளவு வேகமா வேலை செய்ற, பெரியவர்கிட்ட சொல்லிட்டு தான வந்த, உனக்கு பதிலா உன் வேலைய அந்த புது தம்பி செய்வாரு' என்ற பொன்னுராஜ் மாமாவிடம் 'தங்கச்சிய யாரு கூட்டிட்டு வரப் போறாங்க' என்றான். 'நாளை மறு நாளைக்கு அவங்களே வந்துருவாங்க மருமகனே, சாப்பிட்டு வந்து வேலை செய்யலாம் மருமகனே அந்த முத்துராசு இல்லாதது கஷ்டமாத்தான் இருக்கு' என்றார்.

சாப்பிடச் சென்றதும் வாசனது செல்போன் ஒலித்தது. 'என்னது மருமகனே தோட்டத்திலிலெல்லாம் செல்போனோட திரியற' என்றார் மாமா. 'இதோ வரேன் மாமா' என்றவன் செல்போனில் பேசினான். எதிர் முனையில் பாரதி. நலம் விசாரித்தாள். வாசன் அனைத்து உதவிக்கும் நன்றி சொன்னான், பணத்தை ஆஸ்ரமத்திற்கு உபயோகிக்க போவதாகச் சொன்னான். பின்னர் வாசன் தான் நேற்று அவள் காதலிப்பாளோ என நினைத்ததை சொன்னான். பாரதியும் தனது கனவினை சொன்னாள். இருவரும் சிரித்துக் கொண்டார்கள். ஒன்று நிகழும் நிகழ்வில் நடந்தது, மற்றொன்று உறங்கும் நிலையில் நடந்தது. 'நமக்குள்ள அப்படியெல்லாம் ஒண்ணும் வேண்டாம், அதுவும் இப்போதைக்கு அந்த எண்ணமே வேண்டாம், உனக்கு எவ்வளவோ சாதிக்க வேண்டி இருக்கு, எனக்கு எவ்வளவோ படிக்க வேண்டி இருக்கு எப்போதும் போல பேசிட்டு இருப்போம் எனக்கு நீதான் உனக்கு நான் தான் என இப்ப முடிவு செஞ்சிக்கிட வேண்டாம்' என பாரதி தெளிவாகச் சொன்னாள். வாசனும் அதே கருத்தை ஆமோதித்தான். இருவருக்கும் மிகவும் சந்தோசமாய் இருந்தது. காதல் புரிவது போல் நினைக்கிறீர்களா, காதலித்து கொண்டு இருக்கீறீர்களா தெளிந்து கொள்ளுங்கள். காதல் சொல்லிக் கொண்டா வருகிறது என நேர்மாறாக சிந்தீப்பீர்களேயானால் தேவை இல்லாத குழப்பத்திற்கும் உங்களை தயார் படுத்திக் கொள்ளுங்கள். பற்றற்று இருப்பவன்

மேல் கொள்ளும் காதலை விட எந்த காதல் சிறந்தது என நினைத்து பாருங்கள் உண்மை புரியும்.

வேகமாக வேலையை முடித்துவிட்டு வாசன் பெரியவர் தோட்டம் சென்றான். அருண் வாசனைப் பார்த்து ' இவ்வளவு கஷ்டமான வேலையா இருக்கே, அதுவும் வெயில் அடிச்சா மயக்கமே வந்துரும் போல இருக்கு, எப்படி இப்படி வேலை செய்றீங்க' என்றதும் 'உடல் உழைப்புத்தான, தூங்கி எழுந்திரிச்சா சரியா போயிரும்' என்ற வாசனை 'மன உழைப்பும்தான் வாசா, இப்படி இப்படி செஞ்சா இப்படி இப்படி வரும்னு நாம கணக்கு பண்ணாமலா செய்றோம்' என்றார் பெரியவர். 'எனக்கு கை கால் எல்லாம் பயங்கரமா வலிக்குது, இந்த வேலை என்னால செய்ய முடியாது' எனச் சொல்லிக்கொண்டே அங்கு பானையில் இருந்த தண்ணீரை எடுத்து குடித்தான் அருண்.

'ஆபிஸிலே உக்காந்து வேலை பாத்தவங்க நீங்க அதான் இப்படி, அதுக்குத்தான் என் பையனுங்களை பட்டணத்துக்கு அனுப்பிட்டேன், இந்த வேகாத வெயில்ல விழுந்து கருத்து போக வேண்டாம்னு, இதோ இங்க நிற்கிறாரே' என வாசனை கைகாட்டி 'பட்டணத்துக்கே போகமாட்டேன்னு அடம் பிடிக்கிறார், உங்க அய்யா வந்து கூப்பிட்டப்ப தன் தம்பியை அனுப்பிட்டு இந்த மண்ணு என் உயிருக்குனு என்னமோ சொல்றார்' என்று முத்துராசு சொன்னதும் 'அப்படி சொல்லாத ராசு, பட்டணத்தில எல்லாரும் அப்படி இல்லை அங்கயும் சிரமப்படறவங்க இருக்காங்க, ஒரு வேளை கஞ்சிக்கு கூட இல்லாம என்ன செய்றதுன்னு இருக்காங்க, இந்த கிராமத்தில யாராவது ஒருத்தர் உதவி பண்ணுவாங்க அங்க யாரையும் யாரும் கண்டுக்க மாட்டாங்க, நீ பட்டணத்துக்கு போய் பாரு சைக்கிள் வாங்கி ஓட்டுறவனுக்கு வருமானத்துக்கு ஏத்த செலவு இருக்கிற மாதிரு காரு வாங்கி போறவனுக்கும் வருமானத்துக்கு ஏத்த செலவு இருக்கும், எப்படி பார்த்தாலும் வாழ்க்கையும் மனசும் ஒண்ணுதான் இடம்தான் வேற' என கண்ணையன் சொன்னதும் முத்துராசு கிண்டலாய் 'பட்டணத்தில வாழ்ந்து அனுபவிச்ச மாதிரி பேசற, பட்டணத்தில பவிசா வாழறவங்களைத்தான் நான் சொல்ல வரேன் பட்டணத்தில இருக்குற கோயில்ல உக்காந்துட்டு வெறுமனே சாப்பிட்டு இருக்கறவங்களை சொல்ல வரலை' என்றான்.

'பேச்சை குறைச்சிட்டு வேலையா பாருங்க' என்றார் பெரியவர். 'வேலைய குறைச்சிட்டா பேசிட்டு இருக்கோம்' என முணுமுணுத்தான் ராசு. தள்ளிப் போய் வேலை செய்யலாம் என நகன்றான் முத்துராசு. 'ராசு இன்னைக்கு நம்ம ஊருல குறி பார்த்து சொல்ற அம்மா வந்ததே, குறி பார்த்தியா' என்றான் சோனைமுத்து. 'நீ லேட்டா வேலைக்கு வருவ, ஊருல என்ன கதையெல்லாம் நடக்குதுனு இங்க வந்து சொல்வ, கோழிய எழுப்பிட்டு வேலைக்கு வர எங்களுக்கெல்லாம் அந்த கண்றாவி எதுக்கு நீ பாத்திருப்பியே' என்றான் முத்துராசு. 'பார்க்காமலா, காலையிலே சொல்லலாம்னு நினைச்சேன் நீதான் இங்குட்டும் அங்குட்டுமா ஓடிட்டே இருந்த' என்றான். 'சரி என்ன விவரம் சொல்லு' என்றான் ராசு. 'இந்த ஊருக்கு புண்ணியம் சேர்ந்துருக்காம்' என்றதும் 'அதோ புண்ணியவான் நிற்கிறார்லே அப்புறம் புண்ணியம் வராமா என்ன செய்யும், உனக்கு என்ன சொன்னா-னு சொல்லு' என்றதும் 'எனக்கு இரண்டாம் கல்யாணம் நடக்குமாம், அதுவும் முத பொண்டாட்டிதான் தலைமை ஏத்தி நடத்தி வைப்பாளாம்' என சோனைமுத்து சொன்னதும் முத்துராசு மண் தானாய் பிளந்து குழி தோண்டி கொள்வது போல சிரித்துக் கொண்டே 'டிவி ரொம்ப பார்க்கும் போல இருக்கு அந்த குறி சொல்ற ஆத்தா, உன் பொண்டாட்டிக்கிட்ட இதைப் போய் சொல்லு உன் தலையை தனியா எடுத்து தாங்கிட்டு வேணுமின்னா போவா' என்றான்.

பெரியவர் வந்தார். 'புண்ணியவான் வறார்' என்று மண்ணை வேகமாய் அள்ளி அள்ளி போட்டான். முத்துராசுவை பார்த்து 'நாளைக்குள்ளாற வேலை முடிஞ்சிருமா இல்லை நாள் ஆகுமா' என்றதும் 'இன்னும் ரெண்டு நாளு பிடிக்கும்யா, புதுசா வாங்கி இருக்குற நிலத்துக்கு கல் எல்லாம் வந்தாத்தானே அதையும் சேர்த்து நடமுடியும், இல்லைனா வேலை இப்பக்குள்ள முடியாதுயா அவங்க அவங்க சொந்த நில வேலை வேற இருக்கு அய்யா' என்றான். 'நாளைக்கு நீயும் வாசனும் போய் பேசிட்டு வந்துருங்க உடனே தந்துரதா சொல்லி இருக்காங்க' என்றதும் 'இல்லை அய்யா அவங்க மாமா கூட போகட்டும் இல்லைன்னா ஒரு போன் போட்டா சரியா வரும்ல அய்யா' என்றான். முத்துராசு வில்லங்கமாய் பேசினாலும் வேலையில் கெட்டிக்காரர். பேசிக் கொண்டே வேலைப் பார்ப்பது அவரது பழக்கத்தில் வந்த ஒன்று. பொன்னுராஜுக்கு முத்துராசு இருந்தால் பொழுதே போவது தெரியாது.

பெரியவர் சென்றதும் 'குறி பாக்குற ஆத்தா போயிருச்சா இல்லை ஊருல இருக்கா, இருந்தா இவருக்கு முத கல்யாணமாவது நடக்குமான்னு கேட்கலாம்ல' என்றதும் யாரோ அடிப்பது போல் உணர்ந்தான் முத்துராசு.

'மண் எடுத்து நீ அடிச்சியா' என்றான் ஆண்டியப்பனை நோக்கி. 'அடிக்கிறது அடிக்கிறேன் மண்ணு வைச்சா அடிப்பேன் கல் எடுத்துல அடிச்சிருப்பேன், நான் அடிக்கல' என்றான் ஆண்டியப்பன். 'உன்னையை நீயே அடிச்சிக்கிட்டு யார் அடிச்சாங்கன்னா கேட்குற' என்றான் சோனைமுத்து. 'நான் என்ன மடையனா' என்றான் முத்துராசு. 'மண்ணைத் தூக்கி போடும்போது விழுந்துருக்கும்' என்ற சோனைமுத்துவை பார்த்தான். சோனைமுத்துதான் முத்துராசு பெரியவரை இப்படி பேசியதும் மண்ணால் அடித்தான். முத்துராசு அங்கிருந்து நகன்றான். வாசன் அருணிடம் தனது செல்போனை காண்பித்தான். பாரதியின் எண்கள் இருப்பதை கண்டான் அருண்.

மிகவும் நன்றாக உள்ளது போன் என திருப்பி தந்துவிட்டான் அருண். வேலையெல்லாம் முடித்துவிட்டு தோட்டத்தில் அனைவரும் குளித்தனர். 'அய்யா நாம பட்டணத்துக்கெல்லாம் நம்ம ஊருல இருந்து தண்ணி சப்ளை பண்ணினா என்ன அய்யா' என்றார் முருகேசன். கட்டிலில் அமர்ந்து இருந்த பெரியவர் 'தண்ணி பஞ்சம் அப்படிங்கிறது எல்லாம் வரதுதான், இருக்குறப்ப சேமிக்கப் பழகிட்டா பிறகு கவலைப்பட வேண்டியது இல்ல, இப்ப பட்டணத்திலெல்லாம் நிலத்தடி நீரை உறிஞ்சிறதோட மட்டுமில்லாம குடியிருப்பு பகுதியா மாறிக்கிட்டே வருது உதாரணமா நாணல்கோட்டையை கூட சொல்லலாம், சின்னப் பையனா பார்த்த நாணல்கோட்டைக்கும் இப்போதைக்கும் எவ்வளவு மாற்றம் ஆனா நம்ம கிராமத்தில ஒரு 30 வீடுதான் கூடி இருக்கு இன்னும் யாரும் தோட்டத்தை அழிச்சி வீடு கட்டலை அதனால பட்டணத்துக்கு எவ்வளவுதான் நாம தண்ணி கொடுத்தாலும் கட்டுப்படாது முருகேசா' என்றார் பெரியவர். 'இல்லை அய்யா தண்ணிய விக்கலாம்தானே' என்றதும் 'சோலையரசபுரத்தில நடக்கிறத மனசில வைச்சிட்டு சொல்றியா, தண்ணியை எல்லாம் யாரும் விற்க கூடாது' என்றார் பெரியவர். தண்ணிர் இல்லையெனில் எதுவுமே இல்லை. கடலில் இருக்கும் தண்ணீரினை குடி நீராக மாற்றுவதும் உபயோகிக்கப்பட்ட தண்ணீரை திருப்பி

உபயோகப்படுத்துவதுமாயும் நதிகளை ஒன்று படுத்தி தண்ணீர் இல்லா குறையை தீர்த்திட வழிவகை புரிதல் வாழ்க்கைக்கு நலம் பயக்கும்.

முருகேசனை பார்த்து 'நம்ம ஊருல சாரயமே விற்கக் கூடாது, குடிக்க கூடாதுனு சட்டம் போட்டு இருக்கிறவர்கிட்ட தண்ணி விற்கிறதை பேசற, அப்படி ஒரு ஆசை இருந்தா பக்கத்து ஊருக்கு போ' என்றார் கண்ணையன். 'ஒரு பேச்சுக்குத்தான் கேட்டேன்' என்றவரை 'ஒரு பேச்சு ஊர் பேச்சா மாறிரும்' என்றான் முத்துராசு தான் பேசுவது எதுவுமே ஊர் பேச்சாக மாறாமல் இருக்கும் வருத்தத்தில். இருளில் நடந்து சென்றனர். 'இந்த மரத்திலதான் பாண்டிச்சாமி தூக்கு போட்டுகிட்டான், ஆடுறானா பாரு' என்று மாரியப்பன் சொன்னதும் 'இரு நாளைக்கு இந்த மரத்தை வெட்டி சாய்ச்சிருறேன், வாசுகிட்ட சொன்னா வெட்டி போட்டுருவான், அப்படியே ஒரு சிலையும் கண்டு எடுப்பான் அப்புறம் ஒரு கிழடு வரும் மாரிமுத்து கொன்ன மாதிரி மாரியப்பா நீ கொல்வ அங்க பாருடா பாண்டிச்சாமி' என சிரித்தான் முத்துராசு. 'பேய் பிடிச்சா இந்த ஊருல மந்திரிக்க முடியாது' என்றான் மாரியப்பன். தற்கொலை புரிந்துகொள்பவர்கள் தன்னம்பிக்கையுடையவர்கள் என்று ஒரு கவிதையில் வாசன் எழுதி இருந்ததை கண்டு சாரங்கன் கொதித்து போனார்.

அந்த கவிதையானது ஒவ்வொரு இயற்கை அழகை வருணித்துக் கொண்டே வரும், ஒவ்வொரு நல்ல விசயங்களை படம் பிடித்து கொண்டே செல்லும் கடைசியில் இவ்வளவு நல்ல விசயங்களையும் இயற்கை அழகையும் ரசிக்க முடியாமல் வெறுத்து தற்கொலை புரியும் மனிதர்கள் மரணத்தை அடைவோம் என தன்னம்பிக்கையுடன் ஏதாவது ஒரு வழி தேடி தற்கொலை புரிகிறார்கள் என முடித்துவிட்டு வெகு இடைவெளி இருக்கும் கடைசியில் அந்த தன்னம்பிக்கையானது வாழ்வதில் ஏன் இல்லாமல் போனது என வினாவுடன் முடியும். பாண்டிச்சாமி இறந்ததை மனதில் கொண்டு எழுதப்பட்ட கவிதை. அக்கவிதையினை ஒருநாள் படித்த சாரங்கன் கசக்கி எறிந்தார். பாண்டிச்சாமி சாரங்கனுக்கு உறவினர். ஆனால் பத்திரப்படுத்தி இன்னமும் வைத்து இருக்கிறான். இது தன்னம்பிக்கை தருவதற்கு பதிலாய் தவறான அர்த்தம் தந்துவிடும் என்னும் நோக்கத்தில் அந்த கவிதையை வாசன் பாரதியிடம் தரவில்லை.

அருண் வீட்டிற்கு சென்றதும் பாரதியை பற்றியும் வாசனை பற்றியும் பெரியவரிடம் பேசினான். 'வாசன் எதையுமே யோசிச்சுட்டுதான் செய்வான், அப்படியே இருந்தாலும் இதனால பின்விளைவுகள் என்ன அப்படின்னு ஒருதரம் என்ன ரெண்டுதரம் யோசிப்பான் அவன் மனசில இப்ப இருக்கிறதெல்லாம் அந்த நாராயணன் தான் பாரதி இவ்வளவு தூரம் நம் மேல அன்பு காட்டுறாளேன்னு ஒருவேளை யோசிக்கலாம் ஆனா அந்த நாராயணன் தான் அவனோட இலக்கு. அப்படியே அவங்க இரண்டு பேரும் ஒருத்தருக்கு ஒருத்தர் பிடிச்ச வாழ்க்கை அமைக்கனும்னு முடிவு பண்ணிட்டா அதுக்கு யாரும் தடையா இருக்கக் கூடாது உன்னையும் சேர்த்துதான் இப்பவே சொல்றேன், உங்க தாத்தா செஞ்சது போல யாரும் இந்த விசயத்தில செய்ய வேண்டாம்' என்று பெரியவர் சொன்னதும் அமைதியானான் அருண். அருணுக்கு பொதுவாக வாசனை மிகவும் பிடிக்கும், தனக்கு பாடங்கள் சொல்லிக் கொடுத்து சிறு வயதில் அடிப்படை போட்டு தந்தவன் என்ற முறையில் வாசன் மேல் மரியாதை எப்போழுதும் உண்டு அதனால்தான் பாரதியின் எண்கள் பார்த்துவிட்டு ஒன்றும் சொல்லாமல் வந்துவிட்டான், சென்னையில் இருந்து பாரதி பேசினாலும் பாரதியிடம் எதுவும் கேட்பதில்லை.

வாசன் வீட்டில் அப்பாவோடு சாப்பிட அமர்ந்தான். சுமதி 'மாமா' என வாசனை தேடி வந்தாள். 'வாம்மா, சாப்பிடு' என்றார் அம்மா, அப்பா சாப்பிட தொடங்கிவிட்டால் அவ்வளவாக பேசமாட்டார். தலை மட்டும் அசைத்தார். வாசன் புன்னகை புரிந்தான். 'நான் சாப்பிட்டேன் அத்தை' என்று அம்மாவுக்கு பதில் சொல்லிவிட்டு 'சாப்பிட்டு வாங்க மாமா, உக்காந்து இருக்கேன்' என அமர்ந்தாள் .

வாசன் சாப்பிட்டு முடித்துவிட்டு சுமதியிடம் விபரம் கேட்டான். சுமதியும் தனக்கு பரீட்சை வருவதாகவும் வெளியில் சிலர் காத்துக் கொண்டு இருப்பதாகவும் படிப்பு சொல்லித்தர வேண்டும் என சொன்னாள். 'ஓ இன்னைக்கு தோட்டத்தில அதிக வேலை இருந்தது அதனாலதான் வரமுடியல, பாடம் மட்டும்தான இன்னைக்கு' என்றான் வாசன். 'இல்லை மாமா, பாடத்தோட கதையும் வேணும்' என்றாள் சுமதி.

வெளியில் தலைமை சீடரை அனுப்பிவிட்டு என்ன இனியும் காணவில்லை என

காத்துக் கொண்டு இருந்தார்கள் செல்வங்கள். அவர்கள் சத்தம் போடாமல் அமைதியாய் இருந்தது ஆச்சர்யமாய் இருந்தது. வாசன் வந்ததும் பாலு 'எனக்கு பாடத்தில பெயிலாப் போய்ருவோம்னு பயமா இருக்கு' என்றான். வாசன் 'இன்னும் பரீட்சைக்கு நாள் இருக்குத் தான, படிச்சிரலாம்' என்றதும் சிறு நம்பிக்கை வந்தவன் போல சரியென தலையாட்டினான். வீட்டின் வெளியில் வெளிச்சம் இருந்தது, அனைவருக்கும் பாய் விரித்து அமரச் சொன்னான் வாசன். அனைவரும் அமர்ந்தனர். பாடங்கள் சொல்லித் தந்தான். 'எவ்வள படிச்சாலும் மறக்குது' என பாலு தன் நிலையை வாசனிடம் சொன்னதும் 'ஒண்ணோட ஒண்ணு ஒப்புமை படுத்தி படிச்சா மறக்காது, இலகுவா ஞாபகம் வைக்க உதவும், நாம மனனம் செய்துதான் படிக்கனும் அதே வேளையில் புரிஞ்சி மனனம் செஞ்சா நல்லது' என்றதும் 'பரீட்சை முடிஞ்சிட்டா ஜாலிதான்' என்றான் பாலு.

வாசன் அதற்கு 'பரீட்சை முடிஞ்சாலும் படிச்சிக்கிட்டே இருக்கனும் இல்லைனா 'நூறு நாள் கற்ற கல்வி ஆறு நாள் விடப்போம்' மாதிரி ஆயிரும், இதற்கு அர்த்தம் தெரியுமா' என்றான். சுமதி சொன்னாள் 'நூறு நாள் படிச்சி ஆறு நாள் படிக்காம விட்டா நூறு நாள் படிச்ச கல்வி மறந்துரும்' என்றதும் 'ஆமா' என்றான் வாசன். 'அப்படின்னா படிச்சிகிட்டே இருக்கனுமா' என்றான் பாலு. 'விசயங்கள் தெளிவுபடுத்திக்கிற படிச்சிட்டுத்தான் இருக்கனும். வாழ்க்கைக்கு எவ்வளவு தூரம் உபயோக்கிறோம் அப்படிங்கிறது இரண்டாவது பட்சம்' என்றான் வாசன்.

'படிப்பு அப்படிங்கிரது ஒவ்வொரு விசயத்திலும் இருந்து படிக்கிறது, வெறும் புத்தகப் படிப்பு படிப்பாகாது. விசயம் தெரிய விசயங்கள் படிக்கனும் ஆனா எப்படி நடைமுறையில நடந்துக்கனுமோ அதுக்கு நமது விவேக புத்தியை உபயோகிக்கனும், அதுதான் சிறந்த கல்விக்கு வரைமுறை' என்றதும் பழனி 'இதை எங்க வாத்தியார் சொல்லமாற்றாரு, புத்தகத்தை படிங்கடா மனப்பாடம் பண்ணுங்கடான்னு சொல்றார்னே' என்றான். 'நீ எவ்வளவு விசயம் தெரிஞ்சவனா இருந்தாலும் பள்ளிக் கூடத்தில நீ எடுக்குற மதிப்பெண்கள் வைச்சித்தான் உன்னை எடை போடுவாங்க அதனால அவர் சொல்றதுதான் சரி, ஆனா உலக நடப்பு அப்படி இல்ல' என்றான் வாசன். பாடங்களை படித்து முடித்தார்கள். வாசன் நாளைக்கு பார்க்கலாம் என்றதும் சுமதி 'மாமா கதை' என்றாள்.

வாசன் சற்று யோசித்தவாறே இதோ நான் கேள்விபட்ட கதை சொல்றேன் என ஆரம்பித்தான்.

'ஒருத்தன் மற்றவர்களுடைய மனசை படிக்கிற படிப்பை எடுத்து நல்லவிதமா படிச்சு முடிச்சான்' என்று வாசன் ஆரம்பிச்சதும் 'அது என்ன படிப்புன்னே' என்றான் பழனி. 'அதை ஆங்கிலத்தில சைக்காலஜினு சொல்வாங்க தமிழ்ல மன உளவியல்னு சொல்வாங்க' என்றதும் அனைவரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர். 'ஓ சாமி கதை இல்லையா, நம்ம ஊருக்கு வந்தாரே ஒரு தாத்தா அவர் பத்தி இல்லையா' என்றான் பாலு. 'இல்ல இது வேற கதை' என்றான் வாசன். 'கதைய சொல்ல விடுங்கள்' என்றாள் வேணி.

வாசன் தொடர்ந்தான். 'அப்படி அவன் படிச்சி முடிச்சதும் தனது நண்பனோட கிராமத்தை விட்டு தள்ளி தனியா ஒரு வீடு எடுத்து தங்கினான்' 'அவர் நண்பன் என்ன படிச்சிருக்கார்னே' என்றான் பழனி. வாசன் சிரித்துக் கொண்டே 'அவன் நண்பன் சட்டம் படிச்சி இருந்தான், இப்படி இவங்க தங்கி இருந்தப்ப படிக்க பள்ளிக்கூடம் பக்கமே போகாத ஒருத்தர் இவனோட தனியான வீட்டை பார்த்து வந்தார்' 'யாருனே நம்ம முத்துராசு மாமா மாதிரியா' என்றான் பழனி. 'அப்படியெல்லாம் இல்லை' என்று சொல்லிய வாசன் 'கதைய கேளு' என்றான். 'நீங்கதான அண்ணே ஒப்புமை படுத்தி படிக்கச் சொன்னீங்க' என்றான் பழனி. மற்றவர்கள் அமைதியாய் கேட்டுக்கொண்டு இருந்தனர்.

'அந்த நேரம் பார்த்து அவனது சட்டம் படிச்ச நண்பன் வெளியூருக்கு போயிருந்தான், முன்ன பின்ன தெரியாதவர் இவன்கிட்ட வந்து எனக்கு பசிக்குது ஏதாவது கொடுன்னு கேட்டார்' அந்த நேரம் பார்த்து ஏதொ சொல்ல வாயெடுத்த பழனியின் வாயினை மூடினான் பாலு. வாசன் புன்னகைத்துக் கொண்டே 'உள்ள வாங்க அப்படின்னு அவரை வரவழைச்சி உணவு தந்தான், அவர்கிட்ட நிறைய நேரம் பேசிகிட்டு இருந்தான், அவரும் நிறைய விசயங்கள் பேசினார் அப்படி பேசிட்டு இருக்கறப்ப நேரம் போறதே தெரியல இருட்டிருச்சு, உடனே அவர் இங்க தங்கிட்டு காலையில போறேன்னு சொன்னதும் சரி அப்படின்னு சம்மதம் தந்து

படுக்கச் சொன்னான். புதுசா வீடு போனதால நிறைய விலையுயர்ந்த பொருட்கள் எல்லாம் வங்கி வைச்சி இருந்தான், சரின்னு தூங்கினாங்க' என நிறுத்தினான் வாசன்.

'என்ன அண்ணே ஆச்சு' என்றான் பழனி இம்முறை வாய் மூட வந்த பாலுவின் கைகள் விளக்கி. வாசன் தொடர்ந்தான். 'காலையிலே எழும்பி பார்த்தப்ப வீட்டுல இருக்குற பொருட்கள் எல்லாம் காணோம் அந்த ஆளையும் காணோம், அய்யோ ஏமாந்துட்டுமேன்னு தலையில கை வைச்சி உட்காந்துட்டான்' என்றதும் 'அவன் தான் பிறர் மனசை படிச்சிருக்கிறாரே மாமா பின்ன எப்படி' என்றாள் சுமதி. 'ம்ம்' எனச் சொல்லிவிட்டு 'அவன் நண்பன் வந்தவுடன் இதை பார்த்து பதறிப் போய் என்ன ஆச்சுனு கேட்டான், அதுக்கு அவன் நேத்து ஒருத்தர் வந்தார் நல்லா பேசினார் பிறகு தூங்கனும்னு சொன்னார் இப்படி பண்ணிட்டு போய்ட்டார்னு' சைக்காலஜி படிச்சவன் சொல்ல சட்டம் தெரிஞ்சவனுக்கு கோவம்னா கோவம் 'அறிவு இருக்காடானு திட்டினான் முன்ன பின்ன தெரியதவங்களை எப்படி நம்பலாம் உன் படிப்பை உபயோகிக்க வேண்டியது தான அப்படினு சொன்னான். அவன் சொன்னான் படிப்பை உபயோகிச்சு அவர்கிட்ட பேசினப்பறம் அவர் நல்லவருனு முடிவு பண்ணித்தான் தங்க விட்டேன்னு சொன்னதும் அவனையும் அவன் படிப்பையும் திட்டிக்கிட்டு சட்டப்படி நடவடிக்கை எடுக்கலாம்னு அந்த நண்பன் சொன்னான்.

இங்க வந்து பொருள் எல்லாம் திருடிட்டு போனவரை அவர் வீட்டுல பார்த்த அவரோட மனைவி 'எப்படி இவ்வளவு பொருள்னு கேட்டாங்க அதுக்கு அவர் சிரிச்சிக்கிட்டே ஒருத்தனைப் பார்த்தேன் அவன் தலையில இளிச்சவாயன்னு எழுதி ஒட்டாத குறைதான் பேசி தூங்கறாப்ல நகர்த்திட்டேன்னு சொன்னார்' இதில இருந்து என்ன தெரியுது என்றான் வாசன். 'ஏமாத்துறவங்க ஏமாத்திட்டே இருப்பாங்க' என்றான் பாலு. 'கற்றது கையளவு கல்லாதது உலகளவு' சுமதி சொன்னாள். வாசன் சிரித்துக் கொண்டே 'ம்ம், எதிலயும் சமயோசிதமா சிந்திச்சு வாழனும், வெறும் புத்தகப் படிப்பை நம்பக் கூடாது' என்றதும் அனைவரும் நன்றி சொல்லிவிட்டு ஞானோதயம் பெற்று கிளம்பினார்கள் .

23.

சுந்தரன் அம்மா அப்பாவிடம் பேசினான் அருண். சில வாரங்கள்தான் கழிந்து இருந்தது என்றாலும் சென்னைக்குச் சென்று மகனை பார்க்க வேண்டும் என ஆசைப்பட்டார்கள் சுந்தரனது பெற்றோர்கள். அருணும் தாராளமாக அழைத்துச் செல்ல சம்மதித்தான். சென்னையில் ஒரு வாரம் இருந்துவிட்டு திரும்புவதாக தனது அண்ணனிடம் சொன்னார் வேலன். ராமமூர்த்தியும் கவலைப்பட வேண்டாம் எல்லாம் பார்த்துக் கொள்வதாக கூறினார். வியாபரம் பாதிக்கப்படுமே என சொன்ன வேலனிடம் அதைப்பற்றி கவலையுற வேண்டாம் என தைரியம் சொன்னார் ராமமூர்த்தி. தோட்டம் பக்கத்தில தான இருக்கு சித்தப்பா நான் பாத்துக்கிறேன் என வாசனும் சொல்லவே அரைகுறை மனதோடு இருந்த வேலன் முழு மனதோடு கிளம்ப சம்மதம் தந்தார்.

தோட்டத்தில் விளைந்து இருந்த பொருள்களை எல்லாம் கட்டிக் கொண்டனர். சென்னைக்குச் சென்று தன் மகனை பார்க்கும் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. வீட்டு சாவியினை வாசன் அம்மா வாங்கி வைத்துக் கொண்டார். அவர்கள் சென்னைக்கு அருணுடன் கிளம்பிச் சென்றனர். சுந்தரனுக்கு மனதில் சந்தோசம் தாங்க முடியவில்லை. தானே கிளம்பிச் சென்று பார்க்க நினைத்தவனுக்கு அவர்களாகவே வந்தது இரட்டிப்பு சந்தோசம் தந்தது. நன்கு உபசரிக்கப்பட்டார்கள். சுந்தரன் தனது தங்கும் இடம் அழைத்துச் காண்பித்தான். வீடெல்லாம் மிகவும் சுத்தமாக வைத்து இருந்தான். 'நீ சமைக்கிறது இல்லையா' என்றார் அம்மா. 'இல்லம்மா எல்லாம் அவங்களே பண்ணி தந்துருவாங்க' என்றான் சுந்தரன். மிகவும் சந்தோசமாய் அவன் இருப்பது கண்டு பெற்றவர்களுக்கு மன நிம்மதியாய் இருந்தது.

'உன்னைப் பத்தி அவர் பெருமையா பேசறது கேட்டப்ப மனசு குளிர்ந்துச்சுப்பா' என்றார் அம்மா. 'நீ வாங்கி தந்த சேலையை பத்திரமா எடுத்து உங்க அம்மா வைச்சிருக்கா, ஊர் திருவிழாவுக்கு நீ வரப்ப போடனும்னு' என்று அப்பா சொன்னதும் 'அப்ப நிறைய வாங்கிட்டு வறேன்மா, இப்ப வரப்ப போட்டு வந்துருக்கலாம்ல' என்றான் சுந்தரன். சிறிது நேரம் கழித்து அருண் வீட்டிற்கு சென்றனர்.

அருண் தன் தந்தையிடம் எல்லா விபரங்களும் சொன்னான். 'காலம் போகட்டும்னு சொன்னேன், நீயே முந்திக்கிட்டு ஊருக்கு போய் எல்லாம் பாத்துட்டு வந்துட்ட' என்றார் சேகர். களைப்பாக இருப்பதாய் உறங்கச் சென்றான் அருண். பாரதிக்கு வாசனை பற்றி கேட்கவேண்டும் என தோன்றியது, பிறகு கேட்டுக் கொள்ளலாம் என விட்டுவிட்டாள்.

சுந்தரன் அம்மா தான் சமைப்பதாக கூறினார், சரோஜா மறுத்துவிட்டார், வீட்டிற்கு விருந்தாளியாய் வந்து இருக்கிறீர்கள் ஊரில் உழைத்த வண்ணம்தான் இருப்பீர்கள் அதனால் சந்தோசமாய் இருங்கள் என சரோஜா சொன்னதும் சரி என ஒப்புக் கொண்டார். நான்கு நாட்கள் இருந்துவிட்டு சென்றுவிட வேண்டும் என எண்ணி அதனைச் சொன்னார் வேலன். சுந்தரன் இரண்டு நாள் அனுமதி வாங்கி கொண்டான். சென்னையில் இனியதாய் அவர்களுக்கு பொழுது கழிந்தது.

24.

வாசனின் தங்கை தேவகியும் முறைப்பெண் மாதவியும் பெட்டிகளோடு குளத்தூரில் இறங்கினர். வாசன் தங்கையின் வரவுக்கு எதிர்பார்த்தவனாய் காத்து இருந்து பெட்டியை வாங்கிக் கொண்டான். மாதவியிடம் 'கொடு மா, நான் அந்த பெட்டியும் கொண்டு வறேன்' என கேட்டவனிடம் 'இருக்கட்டும் மாமா' என்றவளிடம் வம்பாக வாங்கி கொண்டு நடந்தான் வாசன். பொதுவாக இரண்டு வயது வித்தியாசம் இருக்கும்போது முறைப்பெண்கள் மாமா என்றெல்லாம் அழைப்பது இல்லை. சிறு வயதிலே வந்த பழக்கம் அது, காரணம் தேவகி வாசன் என பெயர் சொல்லி அழைப்பதில்லை அண்ணன் என்றுதான் அழைப்பாள்.

மாதவியின் வருகை கண்டு பொன்னுராஜும் அவரது மனைவி கமலாவும் மிகவும் சந்தோசம் அடைந்தனர். அதேபோல்தான் வாசன் வீட்டிலும். கிராமங்களில் எல்லாம் முன்னர் அதிகம் பெண்களை படிக்க அனுப்ப மாட்டார்கள். மிஞ்சி போனால் பன்னிரண்டு வரை படிக்க வைப்பதோடு சரி. இப்பொழுதுதான் உலகமே தலைகீழாக மாறி வருகிறதே அதில் இந்த மாற்றம் கூட இல்லாவிட்டால் பிறகு

எப்படி. அதே நேரத்தில் எல்லா கிராமங்களும் மாறிவிட்டதாய் சொல்லிவிட முடியாது. இன்னும் வறுமை மனதை பதம் பாத்துக் கொண்டுதான் இருக்கிறது இருப்பினும் கேளிக்கைகளுக்கு பஞ்சம் இல்லை, காதலுக்கு பஞ்சம் இல்லை.

படிக்க திறமை இருந்தும் வறுமையால் முடக்கப்பட்டவர்களுடன் சிறிது நேரம் பேசி பாருங்கள் நீங்கள் எவ்வளவு பாக்கியசாலிகள் எனப் புரியும். குளத்தூரில் அம்மாதிரி பிரச்சினை இல்லை. பலருக்கு கிராமமே உதவியது. ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டது. வாசன் தனது விருப்பத்திற்கேற்ப படிக்காமல் விட்டுவிட்டான்! தான் தேர்ந்து எடுத்துக் கொண்ட தொழில் முறை அப்படி. வேலை தவிர்த்து வீட்டில் இருக்கும்போது எல்லா புத்தகங்களையும் படித்து தனது அறிவினை பெருக்கிக் கொண்டான் என்பது ஊரில் பலருக்குத் தெரியும்.

வினாயகம் மிகவும் இவ்விசயத்தில் எச்சரிக்கையாய் இருந்தார். கிராமத்து மக்களின் குழந்தைகள் படிக்காமல் போய்விடக் கூடாது என்பதற்காக மிகவும் பாடுபட்டார். ஊரில்கூட பெரிய பள்ளி வசதி வேண்டி கேட்டும் பக்கத்தில் சோலையரசபுரத்திற்கு அவ்வாய்ப்பு சென்றதால் எதுவும் அவரால் செய்ய முடியவில்லை. வாசன் விசய்த்தில் தோற்றுப் போனார் என்று கூடச் சொல்லலாம். வாசன் தனது முடிவில் மிகவும் தீர்மானமாக இருந்தான், அவன் தீர்மானமாய் இல்லாது இருந்து இருந்தால் கூட இது தீர்மானிக்கப்பட்ட வாழ்க்கை.

'என்னம்மா தேவி எப்படிமா படிச்சிட்டு வர' என தேவகியிடம் கேட்டான் வாசன். 'ஓ நல்லா படிச்சிட்டு வரேண்ணா' என்றாள் தேவகி. அம்மாவுக்கு தனது மகள் மருத்துவராகப் போகிறாள் என நினைத்து அவ்வளவு பெருமிதம். இந்த ஊரில் மருத்துவருக்கு படிக்கும் மூன்று மாணவிகளும் ஒரே வகுப்பில் ஒன்றாய் படித்துச் சென்றவர்கள் என்பது மிகவும் ஆச்சர்யமான விசயம். வடக்கு தெருவில் உள்ள சாமிநாதன் மகன் அருள்பாண்டியன் மருத்துவராக படித்தவர் என்றாலும் அவருக்கு பின்னால் மருத்துவர் படிக்கும் வாய்ப்பு இவர்களுக்கு மட்டும்தான் கிடைத்தது. பலர் கணிப்பொறி தாக்கம் இருந்ததால் பொறியியல் துறை எடுத்து சென்றுவிட்டனர். குளத்தூர் ஊர் சைவம் வேறு, உயிர் சித்திரவதை வேண்டாம் என சில விவரம் அறியா தகவலுக்கு இணங்கி நன்றாக படித்த சிலர் மருத்துவம் விரும்பி

படிக்கச் செல்லவில்லை. தொழில் முறை படிப்பு என விருப்பப் பட்ட பாடங்கள், வேண்டிய பாடங்கள் கிடைக்காததால் கிடைத்த பாடங்கள் என பல வல்லுநர்கள் இவ்வூரில் இருந்து உருவாகி இருக்கிறார்கள் உருவாகியும் வருகிறார்கள் என்பது அறிந்ததுதான்.

எல்லா தாயும் சொல்வது போல இளைச்சிட்டியேம்மா என்ற அம்மா சொல் கேட்ட தேவகியிடம் 'நீதான்மா வேலை செஞ்சி வேலை செஞ்சி இளைச்சிருக்கே, எங்க வேலை படிக்கிறதுதானமா அதுவும் நிழல்ல உக்காந்துட்டு' என்றாள் தேவகி. பேசிக்கொண்டே எல்லாப் புத்தகங்கள் துணிகள் என எடுத்து வைத்தாள் தேவகி. 'எக்ஸாம் வரதால நிறைய படிக்கனும் நான், மாமா வீட்டுக்கு போய் மானோட சேர்ந்து படிக்கனும்' மாதவியை மான் என்று அழைப்பதுதான் வழக்கம். புள்ளிமான் கவரிமான் என மான் வகையினங்களை கற்பனை செய்து கொள்ள வேண்டாம். மாதவி அழகாய் இருப்பாள், தேவகியும்தான். பெண்களின் அழகினை விவரித்தல் கூடாது அழகே பெண்கள் என ஆனபின் அதில் விளக்கம் எதற்கு. 'ஏன் மாதவி இங்க வந்து படிக்க மாட்டாளா?' நீ எல்லாம் மாமா வீட்டுக்குப் போக வேணாம்' என்றான் வாசன் இந்த முறை எந்த புத்தகம் வாங்கி வந்து தரப் போகிறாள் தங்கை என்ற ஆவலுடன்.

அனைத்தும் எடுத்து வைத்த பின்னர் அண்ணனிடம் 'இந்தா அண்ணா உனக்கு பிடிக்கும்னு இந்த புத்தகம் வாங்கி வந்து இருக்கேன்' என புத்தகங்கள் தந்தாள். புத்தகம் ஆங்கிலத்தில் இருந்தது. புத்தகத்தின் பெயர் தெ சீக்ரெட் டாக்ட்ரின் எழுதியவர் எச். பி. பிலாவட்ஸ்கி இரண்டு பாகங்கள். வாசன் புத்தகத்தை வாங்கி கொண்டு 'நீ படிச்சியா' என்றான், 'இல்லைனா இது ஒரு வித்தியாசமான் புத்தகம் என் தோழி இந்த புத்தகம் பத்தி சொன்னா அதனால உனக்குப் பிடிக்கும்னு வாங்கினேன்' என்றாள். 'ம், நன்றி' என்றான் வாசன். அப்பா வாசனது கவிதை புத்தகம் எடுத்து தன் மகளிடம் பெருமையுடன் தந்தார், தேவகி புத்தகத்தை ஆச்சர்யமும் சந்தோசமும் கலந்து பார்த்தாள்.

அம்மாவிடமும் அப்பாவிடமும் பல விசயங்கள் பேசினாள் மாதவி. இன்னும் இரண்டு ஆண்டுகளில் ஒரு மருத்துவர் ஆகி விடுவோம் என்று நினைக்கும்போது

அவளுக்கு மனதில் மிகவும் சந்தோசமாக இருந்தது. 'நோயில்லா வாழ்வே குறைவற்ற செல்வம்' எல்லாம் சொல்லி வைத்தாகி விட்டது. பல நோய்களை முக்கியமாக மன நோய்தனை நாமேதான் வம்பாக வரவழைத்து கொள்கிறோம். மனநோய்தான் எல்லா நோய்க்கும் அடிப்படையாம்.

எதற்கெடுத்தாலும் "அழுத்தம்" என அடை மொழி இட்டுக் கொண்டு இந்த உலகமே நம்மால் தான் இயங்குவது போல உருவகம் செய்து கொண்டு நமது முடியும் தன்மையை முழுவதும் அறியாது வீணாக வருத்திக் கொள்கிறோம். உங்களை நீங்களே கேட்டுக் கொள்ளுங்கள் யாருக்காக வாழ்கிறீர்கள் என்று. நம்மில் பலர் "அடுத்தவர் நம்மை என்ன சொல்வாரோ" என்ற அச்சத்தில் உழலுவதாய் நிச்சயம் நினைத்து இருப்பதாய் பிறரிடம் சொல்லாவிட்டாலும் நமக்குள்ளே சொல்லிக் கொண்டு இருப்போம். இங்குதான் பிரபஞ்சம் படைத்தவன் வருகிறான். நம்மை அவனிடம் ஒப்படைக்கச் சொல்வதின் நோக்கமே அதுதான். வாழ்க்கையினை வசந்தமாய் வாழ்ந்து கொள்ள தயாராகுங்கள். இறைவன் பற்றிய சிந்தனையும் செய்யும் செயலில் ஈடுபாடும் உள்ள மனிதன் எதற்கும் அழுத்தம் கொள்ளத் தேவையில்லை. எந்த ஒரு காரியம் எடுத்தாலும் உலகம் இரண்டாய் நிற்கும்.

நேரம் நகர்ந்து கொண்டு இருந்தது. கமலா காய்கறிகள் நறுக்கிக் கொண்டு இருந்தார். மாதவி தேவகி வீட்டிற்கு சென்று இருந்தாள். பொன்னுராஜ் மெதுவாக கல்யாணப் பேச்சினை எடுத்தார். 'படிச்சிதக்கப்பறம் நம்ம பொண்ணை மருமகனுக்குத்தான் கட்டி தரனும்' என்றார். 'அதுக்கு இப்ப என்ன அவசரம் இன்னும் படிக்கனும்ல' என எப்போதும் போல் கூறினார் கமலா. 'இல்லை டாக்டருக்கு படிச்சிட்டா இந்த மாப்பிள்ளை வேணாம்னு சொல்லிருவா, நாம பிறக்கும்போதே பேசி இருக்கோம்' என்றதும் 'உங்க மருமகப் புள்ள படிக்காம போகும்னு யாரு கண்டா, அது அன்னைக்கு பேசின பேச்சு பொண்ணை பாக்கறப்ப எல்லாம் கல்யாணப் பேச்சையும் பேசிறீங்க' என்றார் கமலா.

அமைதியாய் இருந்துவிட்டு 'அப்படின்னா இந்த கல்யாணம் நடக்காதுன்னு சொல்ல வரியா' என்றார். 'அப்படிச் சொல்ல வரலை, இவ்வள படிச்சிட்டு எப்படி சம்மதம் தருவா, உறவு வேற இந்த மாதிரி சம்பந்தம் பண்றது வேற, இந்த படிப்பு

காரணம் ஒண்ணு போதும் அதை வைச்சி இவ வேணாம்னு சொல்லிட்டா என்ன பண்ணுவீங்க, இருக்கிறது ஒரே ஒரு பொண்ணு அவ மனசுக்கு எதுச் சரியோ அதை செய்ங்க என வேக வேகமாக காய்கறிகள் நறுக்கினார் கமலா.

'உங்க சொந்தத்தில இருந்து மாப்பிள்ளை தேடப் போறியா' என்றார் பொன்னுராஜ். 'உங்க சொந்தமோ எங்க சொந்தமோ அவ சொல்ரதுதான் முடிவு, இது பத்தி நாம ஒண்ணும் முடிவு எடுக்க வேணாம் படிக்க வந்து இருக்கா இதைப் பத்தி பேச வேணாம்' எனத் திட்டவட்டமாக கூறினார் கமலா, சிறந்த வியாபாரியின் மகள். பேசாமல் மௌனமானார். எவ்வளவு படித்தவராக பார்த்தாலும் வாசனைப் போல் ஒரு நல்ல மருமகன் கிடைப்பாரா என உறுதியாகச் சொல்ல முடியாது என அவர் நினைத்து இருந்ததுதான் காரணம்.

கவிதை புத்தகத்தை பார்த்து மாதவியும் ஆச்சர்யப்பட்டாள். பாரதிதான் இதற்கு எல்லாம் காரணம் எனத் தெரிந்ததும் 'ஓ நம்ம பாரதியா' என தேவகியை நோக்கி புன்னகைத்து விட்டு வாசனிடம் 'மாமா எப்ப சென்னை போகப் போறீங்க' என்றாள். வாசன் புரியாதவனாய் 'என்ன மா' என்றான். உடனே தேவகி 'மான் கிண்டல் பண்றானே' என்றாள். சந்தோசமாய் எப்பொழுதும் போல பேசிக் கொண்டு இருந்தார்கள். காலையில் வருவதாக சொல்லிவிட்டு கிளம்பினாள். சாப்பிடச் சொன்னதற்கு வேணாம் என வீட்டுக்கு சென்றாள். அப்பா கவலையுடன் இருப்பதை கண்டாள் மாதவி.

அப்பாவை பார்த்ததும் கையில் இருந்த கவிதை புத்தகம்தனை வைத்துவிட்டு சமையல் முடித்து கொண்டு இருந்த அம்மாவிடம் சென்று 'என்னம்மா அப்பா கவலையா இருக்கார்' என்றாள். 'அவருக்கு ஆயிரத்தெட்டு கவலை, எதுக்கு எதுக்குத்தான் கவலைப்படனும்னு இல்லாம அதெல்லாம் ஒண்ணும் இல்ல நீ சாப்பிட்டு படி' என்றாள் அம்மா. அம்மாவிடம் சரியான பதில் வராததை கண்டு நேராக அப்பாவிடம் சென்றாள். 'என்னப்பா கவலையா இருக்கீங்க' என்றாள். அம்மா இதை எதிர்பார்த்தவளாய் மாதவியின் பின்னால் வந்தார், கண்களால் தன் கணவனிடம் ஒன்றும் சொல்ல வேண்டாம் என கெஞ்சினார். தன் மனைவியினை

புரிந்தவாறே 'அதெல்லாம் ஒண்ணுமில்லம்மா, இன்னைக்கு கொஞ்சம் அசதியா வருது பெரியவர் தோட்டத்தில கடுமையான வேலை' என்றதும் சற்று முன்னர் வரை சந்தோசமாகத்தானே இருந்தார் என நினைத்தாள் மாதவி. அப்பாவிடம் இன்று கேட்டுவிட வேண்டும் என நினைத்தாள்.

'சாப்பிட வாங்க' என அம்மா அழைத்தார். கவலைகளை மறைத்துவிட்டு சாப்பிட அமர்ந்தார் பொன்னுராஜ். மாதவி அம்மாவுடன் சாப்பிடுவதாக கூறிவிட்டு தனது அறைக்குச் சென்றாள். பாரதியுடனும் தேவகியுடனும் சேர்ந்து எடுத்துக் கொண்ட சிறு வயது படம்தனை பார்த்தாள். நட்பாய் பழகிய நாட்கள் நெஞ்சில் நின்றது. பாரதியுடனான உறவு எப்படி விட்டுப் போனது என அவளால் விளக்க முடியவில்லை. பாரதி ஊருக்கு வந்த இருமுறையும் இவள் ஊரில் இல்லை. காலங்கள் வெகு வேகமாய் கடந்து விடுகின்றன. பல வருடங்களுக்கு பின்னர் சந்திக்கும் நண்பர்கள் நம்மில் எத்தனையோ பேர் உண்டு. அம்மா சாப்பிட அழைத்தார்.

மாதவி சாப்பிட்டாள். அப்பா தான் மந்தை வரை சென்று வருவதாக கிளம்பினார். அப்பா வெளியில் வந்ததும் 'அப்பா' என அழைத்தாள். 'சொல்லுமா' என்றவர் 'என்னப்பா கவலை சொல்லமாட்டீங்களா' என்றாள் தானும் கவலைப் பட்டுக் கொண்டு. தவறு பண்ணிவிட்டோம் எனப் பட்டது அவருக்கு. சந்தோசமாய் இருந்ததுபோல் இருந்து இருக்க வேண்டும். தேவையில்லாமல் அவளது மனதில் கேள்விதனை எழுப்ப வகை செய்துவிட்டோம் என நினைத்துக் கொண்டு 'அதெல்லாம் ஒண்ணுமில்லமா நீ நல்லா படி மா, கொஞ்ச நேரம் மந்தை வரை போய்ட்டு வரேன்' என்றவரை சரியென அனுப்பிவிட்டு புத்தகம் எடுத்து படிக்க அமர்ந்தாள். ஒவ்வொரு பெண்ணுக்கும் தெரியும் தனது பெற்றோர்கள் எதற்காக கவலைப் படுகிறார்கள் என்று. மாதவியும் யூகித்தாள். தெரிந்து கொள்ள ஆசைப்பட்டாள். தாய் சாதாரணமாக இருந்ததால் சரியென விட்டுவிட்டாள்.

முத்துராசு இவரை எதிர்பார்த்தவன் போல் அமர்ந்து இருந்தான். முத்துராசுவை தனியாக அழைத்து சென்றார். 'என் பொண்ணு வந்து இருக்கா, ஏடாகூடமா பேசாத, நீ ஒண்ணு பேசி அவ காதுக்கு போச்சுனா வீட்டுல நிம்மதி போயிரும்' என

கடுமையாக எச்சரிக்கை செய்தார். விளையாட்டுத்தனமாய் இருக்கும் முத்துராசு கண் கலங்கினான். 'என் குடும்பத்துக்கு படி அளக்கிற மகராசன் நீ, என் குடும்பம் இவ்வளவு நல்லா இருக்குனா உன்னை நான் நல்ல நண்பனா அடைஞ்சதுதான், மத்தவங்களோட வம்பு பேசியே எனக்கு பழகிப் போச்சு, நானா விரும்பி செய்றதில அதுவா வந்துருது நான் கவனமா இருந்துக்கிறேன்' என்றான் முத்துராசு. 'என் மருமகனைப் பத்தியும் பேசாத' என்றார். தனது நம்பிக்கைக்கு எதிர்மாறாக எதுவும் நடந்தால் அதையும் தாங்கிக் கொள்ள வேண்டும் என்னும் மனப்பக்குவதிற்கு தன்னை தயார் படுத்திக் கொள்ள ஆரம்பித்தார்.

'வீட்டுல எதுவும் பிரச்சினையா, பொண்ணு வாசுவை கட்ட மாட்டேன்னு சொல்லுதா' எனக் கேட்டான் முத்துராசு. 'அதெல்லாம் இல்லை, இப்படி ஏதாவது பேசி அவ படிப்புல கோட்டை விட்டுறக் கூடாதுன்னுட்டுதான்' என்றவரை 'என்ன நீ உலகம் தெரியாதவரா இருக்கியே, காதல் பண்ணாமா யார்தான் காலேசுல படிக்கிறா அப்படி காலேசுல காதல் பண்ணலைன்னா படிக்கிறதுக்கே மருவாதை இல்லையாம்' முத்துராசு பேசத் தொடங்கினான். பேச்சை எப்பொழுதும் ரசிக்கும் பொன்னுராஜ் யோசிக்க ஆரம்பித்தார். அவர் யோசிப்பதில் அர்த்தம் அவருக்கு இருந்தது. கல்லூரியின் உண்மை நிலை வேறு. காதலிப்பவர்கள் காதலிப்பார்கள் படித்துக் கொண்டும். காதலிக்காமலும், படமே பார்க்காமல் படிப்பவர்களும் உண்டு. கல்லூரி வாழ்க்கையில் வந்த காதல் பற்றி, வராத காதல் பற்றி எழுதச் சொன்னால் தமிழில் எழுத்தாளர்களின் எண்ணிக்கை பால்வீதியில் உள்ள நட்சத்திரங்களின் எண்ணிக்கையை விட அதிகமாகிப் போகும், எழுதப்பட்ட காவியங்கள் எல்லாம் ஓரங்கட்டப்பட்டு விடும். யோசனையுடன் வீடு திரும்பினார் பொன்னுராஜ்.

இரவு ஆனது. வாசன் உறங்கி கொண்டு இருந்தான். முதியவர் பெருமாள் கனவில் தோன்றினார். பதட்டத்துடன் விழித்தான் வாசன். உடல் சற்று வேர்த்து இருந்தது. இதயம் படபடப்புடன் இருந்தது. கனவினை திரும்ப திரும்ப அழைத்துப் பார்த்தான். ஒன்றும் விளங்கவில்லை. மீண்டும் மீண்டும் யோசித்து பார்த்தான். சில வாக்கியங்கள் பேசினார் என்பது மட்டும் தெரிந்தது. என்ன பேசினார் என்பது விளக்கமாய் இல்லை. இறந்தவர்கள் கனவில் வரக்கூடாதாம். வாழ்க்கையை,

இருந்தும் இறந்த மனிதரைப் போல் வாழும் மனிதர்கள் கனவில் வரும்போது உண்மையிலே இறந்து போனவர்கள் வரக்கூடாதா! மரணம் மனதினை பாதிக்கும் என்பதற்கா அது சொல்லப்பட்டது?

வாசன் எழுந்தான். விளக்கை போட்டுவிட்டு தண்ணீர் குடிக்கச் சென்றான். பக்கத்து அறையில் இன்னும் தங்கை படித்து கொண்டு இருப்பது தெரிந்தது. நேரம் பார்த்தான் ஒரு மணி ஆயிருந்தது. எவ்வளவு சிரமம் பட்டு படிக்கிறார்கள். தண்ணீர் பானையெல்லாம் மூடி இருந்தது. மனதுக்குள் சிரித்துக் கொண்டான். சிறு வயதாக இருக்கும்போது தனது பாட்டி சொன்னது வாசனுக்கு நினைவுக்கு வந்தது. 'தண்ணியை குடிச்சிட்டு படு வாசு, இல்லைன்னா தண்ணி தவிக்குதுனு ஆவி எழுந்து பானையில வந்து குடிச்சிட்டு போகும் ஆவி குடிச்சிட்டு இருக்கறப்ப பானைய யாராச்சும் மூடிட்டா அவ்வளவுதேன்' தண்ணீரை குடித்துவிட்டு தூங்க விருப்பம் இல்லாதவனாக மாடிக்குச் சென்றான். சிறு விளக்கு போட்டான்.
முதியவர் பெருமாளைப் பற்றி யோசிக்கத் தொடங்கினான். அப்பொழுதுதான் அவனுக்கு அவர் சொன்ன காகிதம் ஞாபகம் வந்தது. ஒவ்வொன்றாய் நடந்த விசயங்களில் அந்த காகிதத்தை அப்படியே மறந்து போனான். எடுத்து படிக்க வேண்டும் என்ற எண்ணம் எதற்கு வரவில்லை என யோசித்தான். பேச்சி பாட்டி தூக்கி எங்கயாவது போட்டு இருந்தாள் என்ன பண்ணுவது என்ற கவலை வேறு. பெட்டியை திறக்க மாட்டார் என்ற நம்பிக்கையும் இருந்தது. சில நாட்களாய் காத்தமுத்து வீட்டுக்குள் வாசன் சென்று இருக்கவில்லை. காலைப் பொழுது எப்பொழுது வந்து சேரும் என நினைத்துக் கொண்டு நட்சத்திரங்களைப் பார்த்து கொண்டு இருந்தான். இந்த நட்சத்திர கூட்டத்தில் நமது பூமியைப் போல் கிரகங்கள் நட்சத்திரங்களை சுற்றி வரும் அங்கு உயிரினங்கள் வாழ்ந்தும் வரும். இது எல்லாம் சாத்தியமா! எவ்வளவு நட்சத்திர குடும்பங்கள்!

தங்கை மாடிக்கு வந்தாள். 'என்ன அண்ணா பண்ணிக்கிட்டு இருக்க, தூங்கலையா' என்றாள் தேவகி. 'இதோ தூங்கனும், இன்னுமா படிக்கிற' என்றான் வாசன். 'இல்ல அண்ணா தூங்கப் போறேன், லைட் எறிஞ்சிகிட்டு இருந்தது அதான் வந்தேன்' என்றாள். 'நல்ல வேளை நீ லைட்ட நிறுத்தாம வந்து பார்த்த இல்லைன்னா இருக்குற பயத்துல இன்னும் பயந்துருப்பேன்' என்றான் வாசன். 'பயமா, ஓ இருளை

நினைச்சி சொல்றியா, சரினா நான் தூங்கப் போறேன் நீயும் தூங்கு' எனச் சொல்லிவிட்டு தூங்கச் சென்றாள் தேவகி.

காலையில் எழுந்ததும் முதல் வேலையாக காத்தமுத்து தாத்தா வீட்டுக்கு சென்றான் வாசன். பேச்சி பாட்டி வாசல் தெளித்து இருந்தார். சுமதி சாமிநாதன் வீட்டு திண்ணையில் உட்காந்து படித்து கொண்டு இருந்தாள். வாசனைப் பார்த்து 'என்ன மாமா இங்க' எனக் கேட்டாள். 'தாத்தா வீட்டுல ஒண்ணு எடுக்கனும், எங்க பாட்டி' என்றான் வாசன். 'இப்ப தான் வாச தெளிச்சாங்க, தெரியலை மாமா' எனச் சொல்லிக் கொண்டு இருக்கும்போதே பேச்சி பாட்டி வந்தார். 'பாட்டி வீட்டு சாவி தாங்க' என்றான் 'திறந்துதான் இருக்கு' என வீட்டுக் கதவினை திறந்தாள். உள்ளே பத்தி வாசனை வந்தது. சிறு விளக்கும் எரிந்து கொண்டு இருந்தது. உள்ளே சென்று காத்தமுத்து தாத்தாவின் பெட்டியை திறந்து முதியவர் பெருமாளின் பையினை எடுத்து உள்ளே பார்த்தான். கணக்கு காகிதங்கள், நாமக் கட்டிகள் எல்லாம் எடுத்து தனியாய் வைத்தான். ஒரு காகித உறை இருந்தது அதற்குள் முதியவர் சொன்ன காகிதம் இருந்தது. அக்காகிதம் எடுத்த பின்னர் உள்ளே மேலும் ஒரு காகிதம் இருந்ததை கண்டு எடுத்தான் . நாராயணன் அருள் பாலித்துக் கொண்டு இருந்தார்.

வாசன் காகிதத்தில் என்ன எழுதி இருக்கிறது என்று வாசித்தான்.

அன்புள்ளம் கொண்ட பெருமாள்,

கடிதம் கண்டேன். உமது சாபம்தனை பற்றி இவ்வளவு கால தாமதமாக என்னிடம் தொடர்பு கொண்டிருப்பதன் நோக்கம் என்னவென்று நீவீர் அறிந்தாலே போதுமானது. இவ்வாழ்க்கையின் அர்த்தம் விளங்கி விடும்.

இவ்வுலகம் ஒரு புள்ளியில் ஆரம்பித்ததாய் உறுதிப்படுங்கள். புள்ளி எப்படி வந்தது, அப்புள்ளியானது என்னவாய் இருந்தது இதற்கு முன்னால் என்ற கேள்வியையும் எழுப்பிப் பாருங்கள். விடை தெரிகிறதா? விடை தெரிந்து இருக்க நியாயம் இல்லை.

அப்படியே நீவீர் விடை தெரிந்தவரைப்போல் உம்மை காட்டிக் கொண்டும் அதற்கு காரணம் சொல்லிக் கொண்டும் இருப்பீரெனில் உண்மையை உணர மறுக்கிறீர்கள் என்றுதான் அர்த்தம். அப்படியெனில் உண்மை எது என பெரும் கேள்வி எழும், இல்லையா?

உண்மையானது உண்மையாக இருக்கிறது என சொல்லும் பட்சத்தில் உண்மைக்கு பெரும் விளக்கம் தேவை இருக்காது. உண்மை உண்மையாக இல்லாது போகும் தருணத்தில் உண்மையைப் பற்றி பெரும் அச்சம் எழும், உண்டா இல்லையா? உண்மையை எப்படி காண்பது? எப்படி அறிவது? முதலில் இதற்கெல்லாம் விடை தேடும் வழக்கத்தில் இருந்து எளிதாக விடுபட தெரிந்துகொள்ளுங்கள்.

இறைவன், அப்பாற்பட்ட சக்தி, என்ற அத்தியாயம்தனை முதல் அத்தியாயமாக வாழ்க்கையில் வைக்க வேண்டாம், அது வாழ்க்கையின் முடிவு அத்தியாயமாய் இருக்கட்டும். அப்படி இருக்கும் பட்சத்தில் ஒன்றின் முடிவானது மற்றொன்றின் தொடக்கமாய் இருக்கும் என்னும் உண்மை உணர்வீர்கள் எனவே இறைவன் ஒன்றின் முடிவாய் இருந்து இருக்கிறார் அதே வேளையில் மற்றொன்றின் தொடக்கமாகவும் இருந்து இருக்கிறார் என்னும் உண்மை புலப்படும். அந்த தருணத்தில் உமக்கு எதற்கு இறைவனை முதல் அத்தியாயமாக வைக்கவேண்டாம் என கூறியது சற்று சலனத்தை ஏற்படுத்தும். அப்படி சலனப்பட்டீரெனில் உண்மையை உண்மையாக நீவீர் கருதவில்லை எனப் புலப்படும். இப்படி எல்லாம் எழுதி வைத்தது எவர் என அறிந்து கொள்ள முயற்சி செய்து பாருங்கள். உம்மைப்போல் ஒரு சாதாரண மனிதன்தான். இவ்வாறு யான் சிந்திப்பதால் உமக்கு அசாதாரணமாக தெரியக்கூடும். என்னை நேரில் வந்து பார்.

அன்புடன்
பொ. திருமால்
22/8 சோமநாதர் குடியிருப்பு
கருக்குடில் கிழக்கு
சிரிப்பாற்றனூர்
சென்னை – 60

எழுத்துக்கள் அச்சடிக்கப்பட்டற்போல் எழுதப்பட்டு இருந்தது. காகிதம் கிழியாமலும் இருந்தது. கடிதம் வாசித்து முடித்தான் வாசன். கடிதத்தின் கீழே நான் இவரை சென்று பார்க்கவே இல்லை, அதற்கு பதிலாய் நாராயணனின் படம்தனை வைத்துக்கொண்டேன் - பெருமாள் என கையொப்பமிட்டு இருந்தது.

வருடம் நாள் என எதுவுமே குறிக்காமல் கடிதம் இருந்தது கண்டு வாசனுக்கு சற்று குழப்பமாக இருந்தது. கடிதத்தை எடுத்து மடித்தான். பத்திரமாக எடுத்து வைத்துக் கொண்டு கிளம்பினான்.

வாசலில் சுமதி வாசனைப் பார்த்து சிரித்துக் கொண்டு நின்று கொண்டு இருந்தாள். 'என்ன மாமா, புதையலை கண்டு எடுத்தது போல முகம் எல்லாம் பிரகாசமா இருக்கு' என்றவளிடம் தன் முகம் வெளிறிப் போயல்லவா இருக்க வேண்டும் என நினைத்துக் கொண்டு 'என்ன சொல்ற சுமதி, பிரகாசமா இருக்கா, ஒன்னுமே புரியலையே' என்றான் வாசன். 'கண்ணாடியில பாருங்க மாமா' என சிரித்தாள். 'கிண்டல் பண்றியா' என்றான் வாசன். 'மாமா அதோ வராங்க பாட்டி கேட்டு பாருங்க எனக்கு பள்ளிக்கூடத்துக்குப் போகனும்' என மீண்டும் சிரித்துக் கொண்டு வீட்டுக்கு ஓடினாள்.

'பாட்டி என் முகம் பிரகாசமா இருக்கா' என்றான் வாசன். 'ஆமா, முறைப்பொண்ணு வந்துருக்குல பிரகாசம இருக்காம என்ன செய்யும்' என பாட்டி நகைச்சுவையாய் சொன்னார். வாசன் 'பாட்டி உண்மைய சொல்லுங்க' என்றதும் ஓரிறு வினாடிகள் வாசன் முகம் பார்த்துவிட்டு 'தெய்வ களை முகத்தில தெரியுது' என்றார் பேச்சி பாட்டி.

தெய்வகளையா? யார் இதனைக் கண்டார்கள்! எப்படி இப்படியெல்லாம் உருவகம் செய்யச்சொல்லித் தந்தது. அப்படியெனில் எவரேனும் தெய்வம்தனை பார்த்து இருக்கிறார்களா? இல்லை படம் பார்த்து பழகிக் கொண்டார்களா?

'வாசா, பசுமாடு கன்னுக்குட்டி ஈனியிருக்கு, உங்க அப்பா தொழுவம்

வரச்சொன்னார்' என கண்ணையன் சொன்னதும் வாசன் ஆனந்தம் அடைந்தவனாய் பரவசத்துடன் பசுவினையும் அதன் குட்டியினையும் காண விரைந்தான்.

வாசன் தொழுவம் சென்று பார்த்தான். கன்றினை நாவால் தடவிக் கொண்டு இருந்தது பசு. பிறந்த கன்றினை 'கோமாதா' என்று அப்பா வாசனிடம் சொன்னார். வாசனும் கன்றினை தடவினான். ஏனோ பெண் குழந்தைகளை மட்டும் வெறுக்கும் சமுதாயம் இருக்கத்தான் செய்கிறது. எல்லாம் மாறிவிட்டது என கற்பனையில் சிந்திக்க வேண்டாம், இன்னும் அந்த அவலம் தொடர்ந்து கொண்டுதான் பல கிராமங்களில் இருக்கிறது. 'நல்லா அழகா இருக்குலப்பா' என்றான் வாசன். இந்த வாழ்க்கை தளத்தில் தொழுவம் மிகவும் பிரசித்தி பெற்றது.

அப்பா வியாபரத்துக்குச் செல்வதாய் கிளம்பினார். 'பார்த்துக்கோப்பா' என அப்பா சொல்லிவிட்டு சென்றதும் வாசன் பிற விசயங்களை கவனிக்கத் தொடங்கினான். அம்மாவும் அங்குதான் இருந்தார். அம்மாவுக்கு நிறைய சந்தோசம். புது குழந்தை தவழ்வது பெரும் ஆனந்தம் தரும்.

'எங்கமா தங்கை' என்றான் வாசன். 'வீட்டுல படிச்சிகிட்டு இருக்கா' என்றார் அம்மா. 'கஷ்டபட்டுத்தான் படிக்கிறா' என்றான் வாசன். 'ஆமாப்பா' என்றார் அம்மா. 'மாதவிக் கிட்ட பேசினியா' என்றார் அம்மா. 'என்ன பேசனும்மா' என இடம் எல்லாம் சுத்தப் படுத்தினான் வாசன்.

அம்மா பின்னர் ஏதும் அது குறித்து பேசவில்லை. 'தோட்டத்தில நிறைய வேலை இருக்கு, பிறகு வந்து சேருப்பா அங்க இங்க போறேன்னு போகாத' என அம்மா சொல்லிவிட்டு கிளம்பினார்.

வாசனுக்கு முதியவரின் கடிதம் பற்றிய விபரங்கள் தெரிய ஆசைப்பட்டான். அதே வேளையில் அம்மாவும் அப்பாவும் தனது முகம் பற்றி ஏதும் சொல்லாமல் சென்றதை எண்ணினான். சற்று தூரம் நடந்த அம்மாவை 'அம்மா ஒரு நிமிசம்

நில்லுமா' என வேகமாய் வந்து 'என் முகம் எப்படிமா இருக்கு' எனக் கேட்டான். அம்மாவும் பார்த்துவிட்டு 'என்னப்பா என்னைக்கும் இல்லாம புதுசா இன்னைக்கு கேட்கற' சொல்லும் தருணமோ என நினைத்துக் கொண்டு 'அந்த நாராயணனே நேரில் வந்த மாதிரி இருக்கு' அம்மா சொன்னதும் வாசன் அப்படியே நின்றான். தாயுள்ளம் எதனையும் அதிகப்படுத்தியே சொல்லுமோ? ஆனந்தமாய் இருப்பதையே விரும்புமோ? 'அம்மா சும்மா விளையாடதம்மா சொல்லுமா' என்றான் வாசன்.

'தோட்டத்துக்கு போகனும் ராசாத்தி இந்நேரம் வீட்டுக்கு வந்து நின்னு இருப்பா' என அம்மா பதில் தராமல் நடக்கலானார். 'அம்மா எதுக்குமா அப்படி சொன்னீங்க' என்றான் பின்னால் நடந்து சென்று. அம்மா நிதானமாய் சொன்னார் 'ஆமாம்பா நீ நாராயணன் தான், தெய்வப் பிறவி' என அம்மா சொன்னதும் 'அப்படின்னா என்னை பெத்த அம்மா இல்லையா நீங்க' என்றான் வாசன். பெற்ற தாயிடம் போய் இதை கேட்கலாமா? வாசன் அறிவிழந்து போனானா!

'என்னப்பா இப்படி கேட்டுட்ட, உன்னை பத்து மாசம் சுமந்து பெத்தவ நான்தாப்பா' அம்மாவின் முகத்தில் எவ்வித மாற்றமும் இல்லாதது கண்டு 'அப்படின்னா என்னை எதுக்குமா நாராயணன், தெய்வப் பிறவினு எல்லாம் சொல்ற' என்றான் வாசன். 'ஆமாம்பா நீ தெய்வப் பிறவி தான், அந்த மகா விஷ்ணுவோட அவதாரம்தான்' அம்மா திரும்பவும் சொன்னார். வாசனுக்கு புரியவில்லை. 'என்னம்மா சொல்றீங்க'

'கண்ணன் ராமன் எல்லாம் எப்படி ஒரு தெய்வ அவதாரமா நாம நினைக்கிறோமா அதே மாதிரி நீயும் தெய்வ அவதாரம்தான்' அம்மா சொன்னதை கேட்டு 'அம்மா பசு கன்று போட்டதும் உங்களுக்கு எப்படிம்மா இப்படி எல்லாம் சிந்திக்க தோணுது, இது நாள் வரைக்கும் இது பத்தி எதுக்கு ஒண்ணுமே சொல்லலை' என்றான் வாசன். 'சொல்ல வேண்டிய தருணம் வந்துருச்சு போல அதுதான் நான் போகப் போக விடாம இதே கேள்வி கேட்டு பதில் தெரிஞ்சிகிட்ட' என்றார் அம்மா. இது வாசனுக்கு கிடைத்த பேரிடி.

'தாயிற் சிறந்ததோர் கோயிலும் இல்லை' என்றால் அக்கோவிலில் உள்ள தெய்வம்

யார்? தெய்வம் இல்லாத கோவில் கோவிலாக இருக்குமா? 'அம்மா எனக்கு நல்ல பதில் சொல்லுமா' என்றான் வாசன். 'இனிமே என்னால சொல்ல முடியாதுப்பா, நீயே புரிஞ்சிக்குவ' என சொன்ன அம்மா செல்லும் பாதையையே பார்த்துக் கொண்டு இருந்தான் வாசன். வாசனுக்கு என்ன செய்வது எனத் தெரியவில்லை. இதுவே வேறு யாராவது தன்னை இறைவனுடனும் இறைவனின் அவதாரங்களுடனும் ஒப்புமைப் படுத்தி பேசி இருந்தால் குறைந்த பட்சம் சொன்னது தவறு எனவும் இப்படியெல்லாம் பேசக் கூடாது என கண்டித்து இருப்பான். சொன்னது தாய், விளக்கம் தரமுடியாது என செல்கிறாள். வாழ்வில் எந்த தருணத்திலும் தன்னை அவதாரமாக அம்மா பாவித்தார் என்னும் சொல்லுமளவிற்கு எந்த செயல்பாடுகளும் அம்மாவிடமிருந்து இல்லை. வாசனுக்கு மயக்கம் .வருவது போல் இருந்தது. பசு 'மா' என்று அழைத்தது. வாசனுக்கு தன்னை அழைப்பது போன்று இருந்தது.

வாசன் பசுவின் அருகில் சென்றான். பசு வாசனைப் பார்த்து 'மா' என மறுபடியும் அழைத்தது. கயிற்றை கழட்டினான் வாசன். அங்கிருந்து வேறு இடத்தில் பசுவை கட்டினான். கன்றினை அருகில் விட்டான். மற்ற பசுக்களும் வாசனைப் பார்த்தன. பசிக்கு வைக்கோல் தனை போட்டுவிட்டு வீட்டுக்கு வந்தான்.

தங்கையுடன் மாதவி படித்து கொண்டு இருந்தாள். 'அண்ணா சாப்பிட்டுட்டு தோட்டத்துக்கு போவியாம், அம்மா சொல்ல சொன்னாங்க' என்றாள் தேவகி. 'என்ன மாமா ரொம்ப யோசனையில இருக்கீங்க' என்றாள் மாதவி. வாசன் 'அதெல்லாம் ஒண்ணுமில்ல, நீங்க சாப்பிட்டீங்களா' என கேட்டுக் கொண்டு வீட்டின் பின்புறம் உள்ள கிணத்தடிக்கு சென்றான். தன் முகம் பார்த்தான். எப்போதும் போல் இல்லாமல் முகம் வித்தியாசமாக இருப்பதாய் உணர்ந்தான். சில தினங்களாக கிணற்றில் தன் முகம் பார்க்காதது தவறு என எண்ணிக் கொண்டான். திருவில்லிபுத்தூர் கோதை ஆண்டாள் கோவிலில் உள்ள கிணற்றில்தான் முகம் பார்ப்பாளாமே!

தங்கையிடம் கேட்கலாமா என எண்ணிக் கொண்டு 'தேவி, இங்க வாயேன்' என்று

அழைத்தான் வாசன். தேவகி மட்டும் வராமல் மாதவியும் சேர்ந்து வந்தாள். என்ன இது தங்கையை அழைத்தால் இவளும் வருகிறாள் என நினைத்துக் கொண்டு 'என் முகத்தில் ஏதாவது தெரியுதா தேவி' என்றான். தேவகி வாசனைப் பார்த்துவிட்டு மாதவியை பார்த்தாள். 'என்ன பதில் சொல்லுமா' என்றான் வாசன். ஆ என வாய் திறந்து காட்டு என கண்ணபிரானை சொன்னதும் ஆ என கண்ணபிரான் வாய் திறந்ததும் உலகம் தெரிந்ததாமே!

'பிரகாசாம இருக்குனா' என்றாள் தேவகி. பிரகாசம் என்றால் எப்படி, ஒளியெல்லாம் முகத்தில் பாய்ச்சுவது போன்றா? 'மாமா, நீங்க நாடகத்தில நடிப்பீங்களே சாமி வேசம் போட்டுகிட்டு அது மாதிரி இப்போ வேசம் போடாம சாமி மாதிரியே இருக்கு' என்றாள் மாதவி. வாசன் 'ஓ சரி நீங்க போய் படிங்க' என சொல்லிவிட்டு பூஜை அறைக்குச் சென்றான். பூஜை அறையின் கதவுகளைச் சாத்திவிட்டு உள்புறம் மூடிவிட்டு உள்ளே அமர்ந்தான். கதவு தாழிடும் சப்தம் கேட்டது.

'மாமா, கதவை திறங்க மாமா' என மாதவி வாசன் பூஜை அறைக்குள் சென்று கதவு சாத்தியதை கண்டு தட்டினாள். 'மான் என்ன' என தங்கையும் வந்தாள். 'உன் அண்ணன் பூஜை அறைக்குள்ள கதவு சாத்திக்கிட்டார், கவனிக்கலையா' என்றாள் மாதவி. 'நீ தான பின்னாலேயே வந்த' என 'அண்ணா அண்ணா' என தேவகியும் கதவை தட்டினாள். அவர்களுக்குள் பயம் வந்தது. எந்த பதிலும் இல்லை. 'மாமா ப்ளீஸ்' என்றாள் மாதவி. சிறிது நேரமாகியும் கதவு திறக்கப்படவில்லை. 'வெளியில ஜன்னல் மூலமா பார்க்கலாம் வா, யார்கிட்டயாவது சொல்லலாமா' என்றாள் மாதவி. தேவகி கலக்கம் அடைந்தாள். 'என்ன இது பூஜை அறைக்குள்ள போய் இப்படி கதவை சாத்துவாங்களா, வெளிய வா அண்ணா, இல்லைன்னா என்னனு சொல்லுனா' என்றாள் தேவகி. குரலில் கவலை தெரிந்தது.

மாதவி மட்டும் வீட்டிற்கு வெளியில் வந்தாள். பூஜை அறையின் வெளிப்பக்கம் சென்று பார்த்தாள். பூஜை அறையின் ஜன்னல்கள் மூடப்பட்டு இருந்தன. வானம் இருட்டிக் கொண்டு வந்தது. இது காலைப் பொழுதா என்னும் அளவிற்கு இருந்தது. கரு மேகங்கள் கூடி நின்றன. மழை வந்துவிடுவது போல் காற்றும் அடித்தது.

ஆடுகள் இங்கும் அங்குமாய் திரிந்தன. ஒரு நாய் திடீரென வேகமாய் ஓடி வந்தது. மாதவி பயந்து போனாள். நாய் அவளை விருட்டென கடந்தது. 'அம்மா' என்றவள் நாய் செல்லும் பாதை பார்த்தாள். ஒரு பூனை விட்டத்திற்கு தவ்வியது. 'அப்பா' என பெருமூச்சு விட்டவாறே வீட்டிற்குள் நுழைந்தாள்.

'தேவி' என்றபடி பூஜை அறைக்கு அருகில் வந்தாள். 'கூப்பிட்டு கூப்பிட்டு பார்த்தேன், பதில் இல்லை' என சொன்ன தேவகியின் கண்கள் கலங்கி இருந்தது, உதடுகள் துடித்தது. தேவகியை தன்னுடன் அணைத்துக் கொண்டு 'தேவி இரு' என கதவின் சாவி துவாரம் வழியாய் மாதவிப் பார்த்தாள். அறையில் தீபம் எரிவது மட்டும் தெரிந்தது.

'தேவி கொஞ்ச நேரம் பேசாம இரு' என மலரினும் மென்மையாய் சொன்னாள் மாதவி. மலர் தான் மென்மை, மலரை விட எது மென்மை. தென்றல்? கண்களில் இருந்து கண்ணீர் வரத் தொடங்கியது தேவகிக்கு. 'யேய் அழறியா, அழுதா நான் தான் அழனும் நீ எதுக்கு அழற, கொஞ்ச நேரம் இரு' என்றாள் மாதவி. 'நான் யாரையாவது கூட்டிட்டு வரேன்' என தேவகி கண்களைத் துடைத்துக் கொண்டு கிளம்பினாள். 'ஸ் பேசாம இரு' என வாசலை சென்று சாத்தினாள் மாதவி. 'நீ அங்க போய் உட்கார்' என தேவகிக்கு கட்டிலை காட்டினாள். 'என்ன செய்ய போற' என்றாள் நடுக்கத்துடன். 'இந்த மாதிரி தருணத்தில பேனிக் ஆகக் கூடாது, நீ உட்கார்' என்றாள் மாதவி. தேவகியும் என்ன செய்யப் போகிறாள் மாதவி என அறியாமல் அங்கு இருந்த கட்டிலில் அமர்ந்தாள். சிறிது நேரம் கழிந்தது. 'மாமா உங்களைப் பார்க்க பெரியவர் வினாயகம் அய்யா வந்து இருக்கார்' என்றாள் மாதவி. அப்படியும் கதவு திறக்கப்படவில்லை. பூஜை அறையானது மிகவும் நிசப்தமாய் இருந்தது.

வெளியில் மழை பெய்யத் தொடங்கியது. வீட்டின் ஜன்னல் கதவுகள் தானாகவே சாத்திக் கொண்டன. மாதவியிடம் 'என்ன நீ, வா யாரையாவது கூட்டிட்டு வருவோம், எனக்கு ரொம்ப பயமா இருக்கு' என அழுதுவிட்டாள். 'இன்னும் சத்தமா அழு, என்னமோ ஏதோன்னு ஊரெல்லாம் கூடட்டும், கொஞ்ச நேரம் பேசாம

இருக்கியா, என் மாமாவை பத்தி எனக்கு நல்லா தெரியும் எதுக்கெடுத்தாலும் எதுக்கு அழற' என்றாள் மாதவி. ஒரு மின்னல் மூடியும் திறந்தும் கொண்டு இருந்த ஜன்னல் கதவின் வழியாய் வெளிச்சம் தந்து போனது. மழை வரும்போதெல்லாம் கிராமத்தில் மின்சாரம் மறைந்து போகும். இனியும் தீபம் எரிவதை மறுபடியும் பார்த்தாள் மாதவி. 'இதோ பாரு தீபம் எரியுது, உள்ள உன் அண்ணன் தியானத்தில இருக்கார் போல' என்றாள் மாதவி. 'இப்ப என்னத்துக்கு தியானம், அண்ணா வெளியில வா அண்ணா, பேசு அண்ணா' என்றாள் தேவகி. தன்னால் இனியும் தாமதிக்க முடியாது என வீட்டின் வாசல் நோக்கி நடந்தாள்.

'எங்க போற' என்றாள் மாதவி. 'மான் என்னால ஒரு நிமிசம் கூட இங்க இருக்க முடியாது நான் யாரவது இருந்தா கூட்டிட்டு வரப் போறேன்' என்றாள். 'போ மழையில நனை அப்புறம் எக்ஸாமுக்கு இங்கே இருந்தே எழுது, நான் தான் சொல்றேன்ல கேட்கமாட்டியா அப்படி உன் அண்ணாவுக்கு ஏதாவது ஆயிருச்சுனா அதுக்கு நான் பொறுப்பு போதுமா' என்றாள் மாதவி.

'மாமா, இப்போ கதவை திறங்க' என்றாள் மாதவி. வாசன் கதவினை திறந்தான். உடல் எல்லாம் வேர்த்து கொட்டிக் கொண்டு இருந்தது. 'எதுக்கு இப்படி பண்ணினீங்க' என்றாள் மாதவி. 'அண்ணா என்ன அண்ணா ஆச்சு உனக்கு' என அழுதாள் தேவகி. பூஜை அறையினை எட்டிப் பார்த்தாள் மாதவி. தீபம் சுடர் விட்டு எரிந்து கொண்டு இருந்தது. வாசன் எதுவும் பேசாமல் தரையில் அமர்ந்தான். மாதவி தண்ணீரை எடுத்து வாசனின் முகத்தில் தெளித்தாள். வாசன் மாதவியை பார்த்தான்.'என்ன மாமா, சாமி மாதிரி இருக்கீங்கனு சொன்னதும் சாமியாவே மாறிட்டீங்களா,உங்களுக்கா ஒருத்தி நான் இருக்கேன்' இது மாதவியாய் நினைத்து சொன்னதா இல்லை சூழ்நிலையின் காரணமாய் சொன்னதா. வாசன் மாதவியை மறுபடியும் பார்த்தான்.

சாப்பாடு எடுத்து வந்து வைத்தாள். 'மாமா, இந்த மாதிரி சாமியார் மாதிரி ஆகனும்னு எண்ணம் இருந்தா அடியோடு விட்டுருங்க' என்றாள் மாதவி. தேவகி 'என்ன என்னமோ பேசற நீ' என மாதவியிடம் சொல்லிவிட்டு அண்ணா இங்க

பாருணா இங்க நடந்ததை யார் கிட்டயும் நாங்க சொல்ல மாட்டோம் சொல்லுனா என்ன அண்ணா திடீருனு இப்படி' என இன்னும் அழுகை குறைந்தபாடில்லை.

பூஜை அறைக்குள்ள போனதும் கதவு சாத்தி தாழ் இட்டதும் தீபம் ஏற்றியதும்தான் எனக்கு தெரியும். 'அப்படின்னா நாங்க கூப்பிட்டது, பூஜை ஜன்னல் கதவை அடைச்சது' என்றாள் மாதவி. பூஜை அறையின் ஜன்னல் கதவு மூடி இருந்ததை அப்போதுதான் பார்த்தான் வாசன். 'முன்னமே மூடி இருந்து இருக்கும் போல' என்றான் வாசன். 'கதவை திறந்து வெளியில் வந்தீங்க மாமா உடனே பேச தோணலையா' என்றாள் மாதவி. 'இல்லை' என்றான் வாசன். 'இனிமே இப்படி பூஜை அறைக்குள்ள போய் கதவை சாத்திக்க வேணாம்' என கூறி விட்டு சாப்பிட சொன்னாள். மழை வேகமாய் பெய்தது.

வாசனையே தேவகி பார்த்துக் கொண்டு இருந்தாள். வாசன் சாப்பிடாமால் எழுந்தான். 'மாமா சாப்பாடு' என்றாள் மாதவி. 'இதோ வந்து சாப்பிடுறேன்' என வீட்டை விட்டு வெளியில் வந்து மழையில் நனைந்து கொண்டே நடந்தான்.

வாசன் மழையில் நனைந்து செல்வதை கண்ட மாதவியும் தேவகியும் என்ன செய்வது என்று தெரியாமல் ஒருவரையொருவர் பார்த்தவண்ணம் இருந்தபோது 'குடை எங்க இருக்குனு பாரு' என தேவகியிடம் சொன்னாள் மாதவி. குடையை வேகமாய் தேடி கொணர்ந்தாள், அதை வாங்கிக் கொண்டு வாசனிடம் ஓடினாள் மாதவி. 'மாமா' என அழைத்தாள். மழையின் சப்தத்தையும் தாண்டி மாதவியின் சப்தம் வாசனின் காதுகளில் விழுந்து இருக்க வேண்டும், திரும்பி பார்த்தான். தண்ணீர் இரு புறமும் தெறித்தது. விழாமல் எப்படி ஓடினாள் என்பது அந்த தெருக்களுக்குத்தான் தெரியும். ஊரில் உள்ள தெருக்கள் எல்லாம் மிகவும் சீரமைக்கப்பட்டு இருந்தன. நகரத்தில் நீச்சல்குளம் கட்டுமளவிற்கு மழை பெய்தால் தண்ணீர் தேங்கும் அதுபோல் எல்லாம் குளத்தூரில் தேங்குவதில்லை. சீரான வடிகால்கள். தயவு செய்து நேரம் இருந்தால் அனைவரும் ஒருமுறை இந்த குளத்தூருக்கு வந்து கிராமம் எப்படி நிர்வகிக்கப்படவேண்டும் என செயல்முறையினை வந்து கற்று செல்லுங்கள். சிந்து சமவெளி நாகரிகம்தனை

நினைவு கொள்ளுங்கள். யார் அவர்களுக்கு அப்படி கற்று தந்தது. நமது கிராமத்தை நாம் சீரமைத்துக் கொண்டால் எல்லாம் நன்றாக இருக்கும்.

'என்ன மாமா, இப்படி மழையில் நனைஞ்சிட்டு போறீங்க, உங்களுக்கு பைத்தியம் பிடிச்சிருச்சா' என குடையினில் தான் வந்தாலும் சற்று நனைந்து இருந்தாள் மாதவி. 'இல்ல மா மழையில் நனைஞ்சிட்டு போகனும்னு ஆசையாய் இருந்தது' என்றான் வாசன். 'உங்களை பத்தி உங்க தங்கை நிறைய கவலைப் படறா, தயவு செய்து இப்படியெல்லாம் நடந்துக்காதீங்க' என குடையினை வாசனுக்கும் சேர்த்துக் காட்டினாள். வீட்டிற்கு திரும்பி நடந்தனர். 'நான் தான் நனைஞ்சிட்டேனே, நீ போ மா நான் வரேன்' என்றவனிடம் 'மாமா தேவிகிட்ட எல்லாத்தையும் சொல்லுங்க' என்றாள். 'ம்ம்' என நடந்தான் வாசன்.

வீட்டிற்கு வந்ததும் சட்டையின் மேற்பையில் இருந்த முதியவர் காகிதம் எடுத்தான். எடுத்து கிழிந்து விடாமல் பிரித்தான். எழுத்துக்கள் அழுது இருந்தது. ஒன்றின் மேல் ஒன்றாய் அருவி போல் ஆகி இருந்தது. வீட்டின் உள் இருந்த சிறு திண்ணையில் வைத்தான். இதை கவனித்த மாதவி 'இதெல்லாம் முன்னமே யோசிச்சிருந்தா இப்படி ஆகி இருக்குமா' என்றாள் அந்த காகிதம் என்னவென்று தெரியாமல். மாதவியை வாசன் பார்த்தான். துவட்ட துண்டினை எடுத்து அண்ணனிடம் தந்தாள், 'துவட்டிக்கோண்ணா' என்றாள். மழையில் நனைந்ததும் வாசன் கண்களில் கண்ணீர் வந்ததும் வெளியில் தெரியவில்லை. எவ்வளவு பாதுகாப்பாய் இந்த காகிதம்தனை பாதுகாத்து வந்தார் அந்த முதியவர் நாம் எவ்வளவு எளிதாய் இப்படி செய்துவிட்டோம் என எண்ணுகையில் மனசு அழுத்தியது. இப்படித்தான் முன்னோர்கள் விட்டுச் சென்ற அரும்பெரும் பொக்கிசங்களை நமது முற்போக்கு சிந்தனையால் தொலைத்துவிட்டு ஒருவரையொருவர் வேடிக்கை பொருளாய் பார்த்துக் கொண்டு இருக்கிறோம்.

வாசன் சென்று ஆடைகள் மாற்றிக் கொண்டான். தனது அறையில் அமர்ந்தான். 'மாமா சாப்பிட வாங்க' என்றாள் மாதவி. வாசன் இறங்கி வந்தான். மின்சாரம் அதிசயமாய் வந்து இருந்தது, இன்னும் மழை பெய்து கொண்டு இருந்தது. தங்கை தலை முடி உலர்த்தும் கருவியின் துணையால் காகிதம் உலர்த்திக் கொண்டு

இருந்தாள். 'என்ன மா பண்ற' என்றான் வாசன். 'இதோ இதை உலர்த்திக்கிட்டு இருக்கேன் அண்ணா' என்றாள் தேவகி. 'ம்ம்' என கூறிவிட்டு சாப்பிட அமர்ந்தான். 'மாமா தேவிக்கு தைரியம் சொல்லிட்டு வேற எங்கயும் போங்க' என்றாள் மாதவி. 'சரி' என பசிக்காமல் அன்றுதான் சாப்பிட்டான். 'பூஜை அறையில இருக்குற தீபம் அணைச்சிரட்டுமா' என்றாள் மாதவி. 'இல்ல எரியட்டும், ஒரு அரை மணி நேரம் கழிச்சி அணைச்சிரு' என்றான் வாசன். தேவகியிடம் வந்தாள். 'இப்ப எப்படி ◌ஃபீல் பண்ற' என்றாள் மாதவி. 'அண்ணன்கிட்ட சில விசயங்கள் கேட்கனும் மான்' என்றாள்.

வாசன் சாப்பிட்டு வந்தான். 'அண்ணா நல்லா உலந்துருச்சு, எழுத்துக்கள் சரியா தெரியல, ஆனா முழுசும் அழியலை' என்றாள் தேவகி. முகவரியினை மனதில் பதித்தான். 'காய வைச்சிட்டு பத்திரமா எடுத்து வை மா' என்று கிளம்பியவனிடம் 'அண்ணா நேத்து ராத்திரி தனியா மாடியில் உட்கார்ந்து இருந்த இன்னைக்கு இப்படி அறைக்குள்ள போய் தாழிட்டுக்கிற, என்ன அண்ணா நடக்குது' என்றாள் தேவகி. 'என்னை மன்னிச்சிருமா, ஒண்ணும் இல்ல, ஏதோ திடீருனு இப்படி ஆயிருச்சு, மற்றபடி நான் எப்பவும் போலத்தான் இருக்கேன் நேத்து தூக்கம் வரலை அதான் கவிதை எழுதி ரொம்ப நாள் ஆச்சா கவிதை எழுதலாம்னு யோசிச்சேன் நீங்க நல்லா படிங்க நான் சொன்னதை நீங்க இரண்டு பேறும் நிறைவேத்தனும் மறந்துட வேண்டாம்' என சமாதனம் சொல்லிவிட்டு தோட்டம் செல்வதாக நடந்தான். 'மழை நின்னப்பறம் போ அண்ணா, இப்போ என்ன தோட்டத்தில் செய்ய முடியும்' என்றாள் தேவகி. 'பத்து நிமிசத்தில மழை நின்னுரும்' என்றான் வாசன். மாதவி தேவகியின் முகத்தைப் பார்த்தாள். 'யூகம் சொல்றியாண்ணா' என்றவளுக்கு ஆச்சரியமாய் இருந்தது பத்து நிமிடத்தில் மழையும் நின்றது. 'சில நேரத்தில நாம் சொல்வதும் நடப்பதும் இப்படி ஒத்துப்போகும்' என மாதவி சொன்னாள். வாசன் வெளியில் கிளம்பினான்.

'மான் உன்கிட்ட ஒண்ணு கேட்கனும், கேட்கலாமா' என்றாள் தேவகி. 'ஓ தாராளமா' என்றாள் மாதவி. 'என் அண்ணனைத்தான் கல்யாணம் பண்ணிக்கப் போறியா' என்றவளை 'ம்ம் தெரியலை ஏன் திடீருன்னு கேட்கற' என்றாள் மாதவி. 'இல்லை நீ பேசினதை எல்லாம் வைச்சி பாக்கறப்போ எனக்கு அப்படி நினைக்க தோணிச்சி,

அப்புறம் அண்ணனை நினைச்சா கவலையா வேற இருக்கு' என்றாள் தேவகி. 'அதைப் பத்தி இப்ப எதுக்கு முடிவு எடுக்கனும், படிக்க வேண்டியது நிறைய இருக்கு, கோல்ட் மெடல் வாங்கனும்னா இப்படி எதையாவது நினைச்சி வருத்தப்பட்டா முடியாது அப்புறம் என் மேல வருத்தப்படாத' என்றாள் மாதவி. 'ம்ம் ஒரு பெர்சென்ட் தான வித்தியாசம், என் அண்ணனுக்குனு விட்டு தரியா மான்' என்றாள் தேவகி. 'பேப்பர் திருத்துறவங்க இவங்க இரண்டு பேரும் உறவுக்காரங்க பொண்ணுங்க அதனால ஒரே அளவா மதிப்பெண் தரனும்னு போடுவாங்களா, பாரதி தான் டாப்ல இருக்கா தெரியும் தான' என்றாள் மாதவி. 'ம்ம், சரி படிப்போம்' என்றாள் தேவகி. 'இனிமே கல்யாணப் பேச்சை பேசமாட்டியே' என்றாள் மாதவி. கவலை மறந்தாள் தேவகி. 'நீ வாங்கி தந்த புத்தகத்தை படிக்க வேணாம்னு மாமாகிட்ட சொல்ல மறந்துட்டேன்' என்றாள் மாதவி. 'நான் எடுத்து வைச்சிறேன் பிறகு சொல்லிக்கிறேன், படிப்போமா' என்றாள் தேவகி. படிக்க ஆரம்பித்தார்கள். வாசன் பெரியவர் வீட்டினை அடைந்தான்.

25.

வாசன் பெரியவரின் வீடு பூட்டி இருப்பதைக் கண்டான். வேலையாட்களும் காணவில்லை. பக்கத்து வீட்டில் இருந்தவரிடம் கேட்டான், தோட்டம் சென்று இருப்பதாக கூறியதும், நேராக தனது தோட்டம் நோக்கி சென்றான் வாசன். தோட்டத்துக் கட்டிடத்தில் வாசனின் தாய், ராசாத்தி, மற்றும் முத்துராசு அமர்ந்து இருந்தார்கள்.

'இப்பத்தான் நேரம் தீர்ந்துச்சோ' என்றான் முத்துராசு. 'சாப்பிட்டியாப்பா' என்றார் அம்மா. 'ம், சாப்பிட்டேன் அம்மா என்றவாறு அங்கு இருந்த கல்லில் அமர்ந்தான். 'மழை வந்து இன்னைக்கு வேலைய கெடுத்துருச்சுப்பா, வெயில் வரட்டும், தக்காளிப் பழங்களையாவது பறிப்போம்னு உட்கார்ந்துருக்கோம், ஆமா பசுமாட்டையெல்லாம் உள்ள கட்டினயா, மழை வரும்னு முன்னமேவா தெரியுது' என்றார் அம்மா. 'கட்டிட்டேன் அம்மா, இன்னைக்கு வேற ஆட்கள் வேலைக்கு வரலையா' என்றான் வாசன். 'இல்லப்பா, நாளைக்குத்தான் ஆட்கள் கூப்பிட

இருந்தேன் மழை பெய்ஞ்சிருச்சி' என்றார் வாசன் அம்மா. அம்மா எப்பொழுது தனியாய் அமர்வார் என எதிர்பார்த்துக் கொண்டு இருந்தான் வாசன்.

ராசாத்தி வாசனிடம், ஏம்ப்பா, மருமகப் பொண்ணு வந்துருக்கு, தோட்டத்தில என்ன வேலைனு இந்த மழை பெய்ஞ்சப்பறம் வந்த' என்று சொல்லி முடிக்கும் முன் 'பட்டணத்துல இருக்குறப் பொண்ணை கட்டிக்கிற மனசு தவிக்கிறப்ப, மருமகப் பொண்ணாவது, மகராணியாவது' என தன்னையறியாமல் சொன்னான் முத்துராசு. நேற்று அவ்வளவு நேரம் பொன்னுராஜ் எடுத்துச் சொல்லியும் தனது எண்ணங்களை கட்டுப்படுத்த தெரியாதவனாய் முத்துராசு நடந்துக் கொண்டான். 'அது யாரு பட்டணத்துல ராசு' என்றாள் ராசாத்தி. திடீரென தன் தவறு உணர்ந்தவனாய் நாக்கைக் கடித்துக் கொண்டு, 'டேய், ஆட்டை அந்தப் பக்கம் பத்துடா, மழை நேரத்தில வீட்டுக்குப் போகாம விவசாய நிலத்துக்குள்ள' என ஆடு நிலத்தில் விழுந்து விட்டது போலவும், அதை தடுக்க ஓடுவது போலவும் இடம் விட்டு நகர்ந்தான். 'இது என்ன ராசு இப்படி பதில் சொல்லாம ஓடுது' என்ற ராசாத்திக்கு ' எது எப்ப எப்ப நடக்கனுமோ அது அது அப்ப அப்ப தானா நடக்கும்' என்றார் வாசனது தாய். 'ஏம்ப்பா எப்பவும் உனக்கு உங்க அம்மா தான் பேசுமா' என சொல்லிக் கொண்டே 'அது யாரு முத்துக்கருப்பன் அண்ணன் மாதிரி இருக்கு ஒரு முக்கியமான விசயம் பேசிட்டு வரேன் ராமக்கா' என ராசாத்தியும் கிளம்பினாள்.

இந்த தருணம் எதிர்பார்த்தவன் போல வாசன் 'அம்மா, எனக்கு மனசெல்லாம் ஒரு மாதிரியா இருக்கு, பூஜை அறையில மயங்கி விழுந்துட்டேன்மா' என்றவனை 'என்னப்பா சொல்ற' என அம்மா பதட்டமானார், 'ம், மயங்கி எழுந்துட்டேன், உன்கிட்ட பேசனும் கேளுமா' என்றான் வாசன். 'சொல்லுப்பா' என்றார் அம்மா.

'ஒரே பதட்டமா இருக்குமா, தெம்பா நடக்கக் கூட முடியலமா, நேத்து ராத்திரி செத்துப்போன பெருமாள் தாத்தா கனவில வந்து என்னமோ சொன்னாருமா, ஆனா புரியல, இன்னைக்கு நீ வேற என்னன அதிசயமா தெய்வப்பிறவினு சொல்ற, இவங்க என்னனா எனக்கு கல்யாணம் இந்த பொண்ணுகூடயா இல்ல வேற பொண்ணுகூடயானு' என வாசன் பேச பேச அவனது கண்கள் கலங்கியது. அம்மா வாசனனயேப் பார்த்துக்கொண்டு அவன் சொல்வதை கேட்டுக்கொண்டு இருந்தார்.

'அம்மா எனக்கு நரம்பு சம்பந்தமா ஏதாவது நோய் இருக்குமா அம்மா, போய் டாக்டரைப் பார்க்கலாம்னு மனசுக்குப்படுதுமா, எதுக்கெடுத்தாலும் மனசு உடைஞ்சிப் போயிருறேன், மாதா, பிதா, குரு, தெய்வம்னு சொல்லி இருக்காங்க இந்த தெய்வம் கடைசி தானம்மா' என்றவனை 'சொல்லுப்பா, கடைசியில நான் சொல்றேன்' என அம்மா வாசனை தொடர்ந்து பேசச் சொன்னார்.

'அம்மா பெரியவர் என்கிட்ட பெரிய பொறுப்பை கொடுத்து இருக்கார், பெருமாள் தாத்தா ஆஸ்ரமம் கட்டச் சொல்லி போய் இருக்கார் என்னால எதையுமே புரிஞ்சிக்க முடியலமா, பாடம் சொல்லித்தர போகலைனா குழந்தைகள் எல்லாம் நம் வீட்டுக்கு தேடிட்டு வராங்க, ஊர்ல ஏதாச்சுனா வாசனை கூப்பிடுனு சொல்றாங்க, என்கிட்ட வம்பு பேசற முத்துராசு அண்ணன் பெத்தா இப்படி ஒரு புள்ளை பெறனும்னு வாய் நிறைய மத்தவங்ககிட்ட என்னன புகழ்றார், ஏன்மா எல்லார் கண்ணுக்கும் நான் இவ்வளவு நல்லவனாத் தெரியறேன் இப்படி ஊரெல்லாம் என்னை உயர்வா நினைக்கிறப்ப என் உள்ளுக்குள்ள அந்த நாராயணன் தான்மா... ' வார்த்தைகள் நனைந்தன, நனைந்த வார்த்தைகள் குலுங்கியது 'நாராயணன் தான்மா...' என அம்மாவின மேல் சாய்ந்தான், கேவி கேவி அழுதான் 'எனக்கு ஒண்ணுமே புரியலமா' என்றவனின் தலையினை தடவினாள் தாய், அவரது கண்களும் ஈரமாகி இருந்தன.

'வாசா, தெய்வத்தோட நினைப்போட நீ சுத்தி வந்த அந்த பன்னிரண்டு வருசம் எனக்கு எப்ப திரும்ப கிடைக்கும்னு மனசுக்குள்ள வேண்டாத நாள் இல்லப்பா, மாதா பிதா குரு தெய்வம்னு சொல்றதுல தெய்வம் கடைசி இல்லப்பா தாய்க்கும் தாயானவனா கடைசியில இருக்கறதப் போல முதன்மையா இருக்கார்ப்பா' சொன்ன அம்மாவின் முகம் பார்த்தான் வாசன். தாய் தொடர்ந்தார்.

'இப்படி வருத்தப்படறதில்ல அர்த்தம் இல்லப்பா, உள்ளுக்குள்ள நாராயணன் உன்னை என்னப் பண்றார்? எதிலயும் தெளிவா இருக்க பழகிகோக்கப்பா ஒரு விசயத்தை பத்தி தெளிவா முடிவுக்கு வந்ததற்கப்பறம் அந்த விசயத்தை பத்தி தேவையில்லாத குழப்ப ஆராய்ச்சிகெல்லாம் விடக்கூடாதுப்பா, உன்னை

இவ்வளவு நல்லவனா பார்க்குதே இந்த ஊருனு வருத்தப்படறியா இல்லை சந்தோசப்படறியா இதே ஊரு நாளைக்கே உன்னை தலைகீழா நினைச்சா அப்போ என்ன பண்ணுவ' வாசன் அம்மாவின் கண்களையே பார்த்துக் கொண்டு இருந்தான். தாய் மேலும் தொடர்ந்தார்.

'ஒவ்வொரு உயிரும் உயிரற்றதும் ஒரு வித காரண காரியத்துக்கே இங்கு உருவாவதும் அடுத்த நிலைக்கு மாறுவதும் காலம் காலமா நடந்து கொண்டு இருக்குறதுப்பா' வாசன் கண்களில் இருந்த நீர் மறையத் தொடங்கியது. பார்வை இனி தெளிவாக தெரியுமோ?

'உடல் அழியும்னு சொல்வாங்கப்பா ஆனா உடல் அழியறதில்ல எந்த ஒரு விசயமும் அழியறதில்ல எப்படி ஒரு சக்தியானது மற்றொரு சக்தியா மாறுதோ அதே போல இந்த உடல் மற்ற விசயங்களா மாறுது' தாயின் பேச்சை கேட்டதும் 'அம்மா அப்படின்னா இந்த உடல் அழியுதுன்னு தானே அர்த்தம் ஒரு சக்தி இன்னொரு சக்தியா மாறுறப்ப அந்த சக்திய மறுபடியும் பழைய நிலையில் இருந்த சக்திக்கு கொண்டு வந்துரலாம்மா ஆனா இந்த உடம்பை அப்படி கொண்டு வரமுடியாதேம்மா, கறந்த பால் மடி புகுமோ அம்மா' வாசனின் கேள்விதனை கேட்டு தாய் சொன்னாள். 'அந்த சக்தியானது திரும்ப அதே சக்தியா மாறுறப்ப சில மாறுபாடுகள் இருக்கும் அதே போல இந்த உடம்பு பல்வேறு வடிவங்களா மாறிடுது அப்படி பல்வேறு வடிவங்களா மாறுறப்போ அத்தனையும் ஒன்னு சேர்த்து திரும்பவும் உருவாக்குவது என்பது இயலாத காரியம் தான் அதுக்காக அழிஞ்சிருச்சுனு சொல்ல முடியாது இப்படி ஒரு உடம்பு மற்றொரு உடம்பில் இருந்துதான் மறுபடியும் உருவாகும், கறந்த பாலும்தான்'.அம்மாவின் கொள்கையில் வாசனுக்கு உடன்பாடில்லை. 'தப்பா தெரிஞ்சி வைச்சிருக்கீங்க அம்மா, இந்த உடல் அழியும் மா' என்றான். அம்மா சிரித்தார், இது தானே உன் சிந்தையில் தெளிய வேண்டும் என நினைத்து.

'நீ சொன்னத ஒரு நிமிசம் நினைச்சுப் பாருப்பா, அழியப் போற உடலுக்குள்ள அந்த நாராயணனை எப்படிப்பா அடக்கி நிறுத்துவா' தாயின் வாக்கியம் கேட்டதும் 'அம்மா, ஊன் உடம்பே ஆலயம் அதில் உள்ள உள்ளமே தெய்வம் தப்பா அம்மா' என்றான். 'என்னை பொருத்தவரைக்கும் தப்புத்தான்பா, காற்றில்லாத வெற்றிடம்

கூட உருவாக்கலாம் கடவுள் இல்லாத இடத்தை யாராலும் நினைச்சிக் கூடப் பார்க்கமுடியாதுப்பா' என தாய் சொன்னதும் 'எப்படிம்மா என்னை மட்டும் தெய்வப் பிறவின்னு சொல்றீங்க' வாசன் மீண்டும் அதே கேள்விக்குப் போனான், இந்த முறை தாய் தவறாகி விடுவாள் என எண்ணிக் கொண்டு. 'நீயே புரிஞ்சிக்குவப்பா ஆனா இதுக்குனு இப்படி நரம்பு தளர்ச்சினு ரொம்ப கற்பனை பண்ணிக்காத, காலம் வரப்ப தானா புரியும்' என்றார் தாய்.

'உனக்கு இரண்டு வயசா இருக்குறப்ப உன் தாத்தாவும் பாட்டியும் காலமாயிட்டாங்க, அவங்க உனக்கு எல்லா கதைகளும் சொல்வாங்க சொல்ற கதை எல்லாம் நாராயணன் பத்திதான் அப்போ என்கிட்ட வந்து சொல்வாங்க ஒரு தெய்வத்தை பெத்து எடுத்துருக்கேம்மான்னுட்டு, எனக்கு என்ன இப்படி சொல்றாங்கனு இருக்கும் ஆனா எந்த தாய்க்குத்தான் ஒரு கோசலையாவோ ஒரு தேவகியாவோ இருக்கப் பிடிக்காது ஆனா எனக்குப் பிடிக்கலப்பா' அம்மா நிறுத்தினார்.

'ஏன்மா' என்றான் வாசன். 'அந்த கதைகளைப் படிச்சி பாருப்பா மறுபடியும் நான் சொல்றதோட அர்த்தம் புரியும், இப்ப மனசுக்கு எப்படிப்பா இருக்கு' என்றார் தாய். 'அழியற உடம்புல நாராயணனை நிறுத்த முடியாது' வாசன் தீர்மானமாய் சொன்னான். 'இனி எதுக்குப்பா அந்த கவலை' என்றார் தாய். 'கவலை இல்லம்மா ஒரு உண்மைய தெரிஞ்ச சந்தோசம், எல்லாத்துக்கும் விடை கிடைச்சிருச்சும்மா' என்று கைகள் கூப்பியவனின் கைகளைப் பிடித்து 'நாளைக்கே நான் இப்ப சொன்னதையெல்லாம் மாத்தி சொல்லிட்டா, தெரிஞ்ச உண்மைக்கு களங்கம் வந்துருமேப்பா, மறுபடியும் அந்த தெய்வ நினைப்போட நீ வாழனும்ப்பா' தாயின் வாக்கியத்தின் உள் அர்த்தம் புரிந்தான் வாசன். 'உண்மை மாறாது மா, நீங்க இனி எப்படி வேண்டுமானாலும் சொல்லுங்க' என்றான் சந்தோசமாய். அன்பினை தருபவள் மட்டுமல்ல தாய், அறிவையும் சேர்த்துதான்.

தாய் தான் என்ன சொன்னாள் என அறிந்து கொள்ள முற்பட்டாள், நம்மை அறியாமல் வந்து விழும் வார்த்தைகள் பெரும் விவாதப் பொருளாகி விடும். ஆனால் எல்லாம் புரிந்து கொண்டவன் போல வாசன் நடந்து கொண்டது அம்மாவுக்கு ஆச்சரியம் தரவில்லை. தான் சொன்ன விசயங்களிலிருந்து எப்படி இவ்வளவு

சீக்கிரம் தெளிவு பெற முடிந்தது என எண்ணத் தோன்றவில்லை. கதைகள், புராணங்கள், சொற்பொழிவுகள், நாடகங்கள் பிறரது பேச்சுக்கள் எல்லாம் கேட்டு வாழ்ந்த வாசனுக்கு திடீரென எப்படி இப்படி எண்ணத் தோன்றியது. ஒவ்வொரு நிமிடமும் நாராயணனை தேட வேண்டும் என வேட்கை எப்படி அடங்கிப் போனது. தேடல் ஒன்று இல்லாமல் போய்விட்டால் இவ்வுலக வாழ்க்கை அர்த்தம் அற்றதாகி விடுமே!

தாய் சொன்ன விசயங்கள் ஒன்றும் தெளிவானவை அல்ல. உடலில் இறைவனை நிறுத்த முடியாது அதே வேளையில் கடவுள் இல்லாத இடத்தை நினைத்துக் கூடப் பார்க்கமுடியாது என்றால் நிச்சயம் குழப்பம் வரும். சர்வமும் அவன் என்ற பின்னர் இனம் பிரித்து பார்த்தல் தேவையில்லாதது. ராமம்மாள் வாசனை அழைத்தாள். 'இன்னைக்கு இங்க வேலை ஒண்ணும் செய்ய வேணாம், மண் உலரட்டும் நீ வீட்டுக்குப் போப்பா நாங்க தக்காளி பறிச்சிட்டு வரோம்' என்று அம்மா சொல்லியதும் 'சரிம்மா' என சந்தோசமாய் சொல்லிக் கொண்டு கிளம்பினான். வாசனின் மாற்றம் கண்டு வானம் வெளிச்சம் தர ஆரம்பித்தது.

வாசன் நடந்து கொண்டு இருக்கையில் மனதில் கவிதை வரிகள் ஓடியது. வேண்டாம் இப்பொழுது இதைப் பற்றி சிந்திக்க வேண்டாம் என நடந்தான். இன்னமும் முத்து கருப்பனுடன் ராசாத்தி பேசிக் கொண்டு இருந்தார். அவர்களை கடந்தான் வாசன். 'வீட்டுக்கு கிளம்பியாச்சா' என்றாள் ராசாத்தி. 'ஆம்' என கூறிவிட்டு அங்கிருந்து வேகமாக நடக்க ஆரம்பித்தான். 'என்ன ஓடுறார்' என்றார் முத்துகருப்பன். 'கொஞ்சம் வேலை இருக்குனே' என திரும்பி பார்த்து சொல்லிவிட்டு வாசன் பாதைகளின் ஓரத்தில் இருந்த புல்லின் மேல் விழுந்து இருந்த மழைத்துளிகளை காலால் சிதற செய்து கொண்டே பெரியவர் வீட்டினை அடைந்தான். வீடு பூட்டி இருந்தது.

பெரியவரின் தோட்டம் சென்றான். 'வா வாசா' என அழைத்தார். 'அய்யா எப்ப நாம திருவில்லிபுத்தூர் போறோம்' என்றான் வாசன். 'அடுத்த வாரம் போவோம், அங்க போய் ஒரு வாரமாவது தங்கி இருக்க வேண்டி இருக்கும் அதனால என்ன என்ன

வேலை செய்யனும் அப்படின்னு எல்லா விவரமும் சொல்லிட்டு இருக்கேன் இப்ப இருந்தே ஆரம்பிச்சாத்தான் நாம கிளம்பி போறதுக்குள்ள சரியாய் வரும்' என்றார் பெரியவர். 'ஒரு வாரமா' என ஆச்சர்யமாய் கேட்டான் வாசன். 'ஆமா வாசா இது அவ்வளவு லேசான காரியம் இல்லைன்னு சொல்லி இருக்கேனே போனோமா வந்தமான்னு இருக்கற காரியம் இல்ல ஒரு மாதம் கூட ஆகலாம்' என பெரியவர் சொன்னதும் காலையில போய் செடியை பறிச்சிகிட்டு வந்துரலாம்னு நினைச்சா இப்படி சொல்கிறாரே என இருந்தது வாசனுக்கு.

'அப்படின்னா அந்த செடிய தேடி தேடி அழையனுமா அய்யா' என்றான். சிரித்தார் பெரியவர். 'ஆமா தேடி தேடித்தான் பறிக்கனும், ஒரே இடத்தில மொத்தமா இருந்தா எதுக்கு நாம சிரமப்படனும்' என்றார் பெரியவர். இன்னைக்கு வீட்டுல சொல்லி பாக்கிறேன்யா' என்றான் வாசன். 'அய்யா செடி எப்படி இருக்கும் என்னமாதிரி வாசம் வரும் எல்லாம் தெரியுமா அய்யா' என்றவனை 'வீட்டுக்கு வா அந்த ரகசியம் எல்லாம் காமிக்கிறேன், நீயா கேட்கறவரைக்கும் சொல்லக்கூடாதுனு இருந்தேன் எப்ப உனக்குனு ஆர்வம் வருதோ அப்பத்தான் சொல்லனும்னு இருந்தேன்' என்றார் பெரியவர்.

வாசன் மிகவும் ஆவலுடன் 'உடனே நான் அந்த ரகசியம் பாக்கனும் அய்யா, இப்ப நான் ரொம்ப தெளிஞ்சிட்டேன்யா' என்றான் வாசன். 'நீ எப்பவும் தெளிவாத்தான இருக்க' என்றார் பெரியவர். 'இல்லை அய்யா இத்தனை நாள் மனசை போட்டு குழப்பிக்கிட்டு இருந்த அந்த நாராயணன் குழப்பம் இல்லாமா விளங்கிருச்சு அய்யா' என்றான் வாசன். 'ரொம்ப சந்தோசமான விசயம் ஆச்சே, சாமியைப் பத்தி எதுவும் பேசமாட்ட இப்போ எப்படி' என தெரிந்து கொள்ள ஆசைபட்டார் பெரியவர். 'அழியப் போற உடம்புக்குள்ள நாராயணனை நிறுத்த முடியாது' என்றான் வாசன். பெரியவர் கலகலவென சிரித்துவிட்டார்.

'இதை எத்தனை முறை படிச்சி இருப்ப, கேட்டு இருப்ப இன்னைக்கு மட்டும் இதுல என்ன புதுசா அர்த்தம் கண்டுபிடிச்சிட்ட' என்றார் பெரியவர். புரியாமல் இருப்பவனை புரிந்து கொள்ள வேண்டுமாம் அப்படி புரிந்து கொண்டுவிட்டால் தெய்வம் தெரியுமாம். வாசன் 'ஆமா அய்யா இத்தனை நாள் இந்த நாராயணனை

தேடி தேடி தவிச்சிட்டேன் உண்மையிலே இந்த நாராயணன் இருக்காரா இல்லையான்னு பெரிய கேள்வி எனக்குள்ள இருந்துகிட்டே வந்தது நீங்க செடி பத்தி சொன்னப்ப ஒரு பயத்தை உருவாக்க ஆரம்பிசிருச்சு அடுத்தவங்க செயல்களுக்கு விளக்கம் தர முடிஞ்ச எனக்கு என்னுடைய உள்ளுக்குள்ள இருக்குற இந்த கேள்விக்கு விடை தெரிய முடியாம கலங்கினேன் இப்போ அந்த கவலை எல்லாம் இல்லை அய்யா' என்றான் வாசன்.

'உடம்புக்குள்ள நாராயணனை நிறுத்த முடியும் எல்லா உடம்புக்குள்ளயும் நாராயணன் இருக்கார் அதை உணர்ந்தா பெருமையடையலாம் அப்படி உணருறவங்க சில பேர் தான். எவ்வளவோ மாற்றங்களும் வாழ்க்கை முறைகளும் நம்மளை உணர விடாம தடுக்குது இதை உணர்ந்ததால சொல்றேன் வாசா' என்றார் பெரியவர்.

வாசன் ஒன்றும் பேசவில்லை. 'என்ன வாசா உணர்தலை பத்தி பேசறேன் ஒண்ணும் சொல்ல மாட்ற' என்றார். 'சொல்றதுக்கு என்ன இருக்கு அய்யா, இப்பத்தான் ஒரு தெளிவான முடிவா இருக்கேன், நீங்க அப்படியே மாத்தி சொல்றீங்க என் முடிவை உடனுக்கு உடன் மாத்துறதுல எனக்கு எந்த பலனும் இல்லை அய்யா அப்படி ஒருவேளை நிறுத்த முடியும்னு தோணீச்சின்னா என் உடல்ல நிறுத்திட்டு அப்புறமா இதைப் பத்தி பேசறேன்யா அதுவரைக்கும் இந்த விசயத்தை பத்தி அதிகமா கவலைப்படறதில ஒரு அர்த்தமும் இருக்கான்னு எனக்கு படலை அய்யா' என்றான் வாசன். பெரியவரும் புன்னகைத்துக் கொண்டே 'உன் விருப்பம் போல செய் ஒரு நாள் நிச்சயம் இதை உணர்வ அந்த காலம் வெகு தொலைவில் இல்லை' என்றார்.

'அய்யா நாம இந்த செடிய பத்தி நிறைய பேசனும் என்ன என்ன செய்யப் போறோம் எப்படி எப்படி செய்யப் போறோம்னு நல்லா திட்டம் வகுத்து செய்யனும்' என்றான் வாசன். 'எல்லாம் சரியா இருக்கு வாசா, இன்னைக்கு சாயந்திரம் வா காமிக்கிறேன்' என்றார் பெரியவர். வாசன் சந்தோசமாய், அதே வேளையில் எப்பொழுது மாலைப்பொழுது வரும் என சூரியனைப் பார்த்தான். மேகங்கள் சூரியனை மறைக்கத் தொடங்கியது.

‘என்ன வாசா சாயந்திரம் வா அப்படின்னு சொன்னதும் இப்பவே சாயந்திரமாக்கப் பாக்குற’ என்றார் பெரியவர். வாசன் பெரியவரை வித்தியாசமாகப் பார்த்தான். ‘என்ன அய்யா சொல்றீங்க’ என்றான் வாசன். ‘இல்லை சூரியனை மேகங்கள் மறைக்கும்படியா பண்றீயே அதான் கேட்டேன்’ என்றார் பெரியவர். வாசன் அர்த்தம் புரிந்து கொண்டவனாய் ‘அய்யா இன்னைக்கு காலையில இருந்தே இப்படித்தான் மேக மூட்டமா இருக்கு அதுக்கு என் பார்வை என்ன செய்யும் அய்யா’ என்றான் வாசன். ‘ஓ சரி, சாயந்திரம் பார்ப்போம்’ என்றார் பெரியவர்.

வாசன் வீட்டிற்கு வந்தான். தங்கையும் மாதவியும் படித்துக் கொண்டு இருந்தார்கள். ‘அண்ணா உன் மொபைலுக்கு பாரதி போன் பண்ணி இருந்தா, நீ வந்ததும் பேசச் சொன்னா’ என்றாள் தேவகி. ‘என்ன விசயம்னு கேட்டியா’ என்றான் வாசன். ‘இல்லைண்ணா’ என்றாள். மாதவி வாசனை பார்த்து ‘மாமா உடனே பேசுங்க இல்லைன்னா ஊருக்கு கிளம்பி வரப் போறா’ என்றாள். ‘உங்ககிட்ட ஒண்ணுமே பேசலையா’ என்றான் வாசன். ‘நாங்க அவகிட்ட ரொம்ப நேரம் பேசினோம், இல்லையா தேவி’ என்றாள் மாதவி. ‘மாமா, எனக்கு இப்போ மழை வேணும் வர வைங்க பார்க்கலாம்’ என்றாள் மாதவி சிறு குழந்தையாய். வாசன் சிரித்துக் கொண்டே. ‘என்னை சித்து காமிக்கிறவனா மாத்த பாக்குறீங்க, அப்படித்தான’ என்றான் வாசன். ‘இல்லை மாமா எங்க மழை வர வைங்க பார்ப்போம், மழை வரவைச்சிட்டு உடனே போன் பண்ணுங்க உங்க கிட்ட பேசாம அங்க அவ அழுதுட்டு இருக்கா’ என்றாள் மாதவி. வாசன் தங்கையைப் பார்த்துவிட்டு ‘மாதவி படிப்பில் கவனம் பண்ணு, இன்னும் கொஞ்ச நேரத்தில மழை பெய்யும்’ எனக் கூறிவிட்டு போனை எடுத்து மாடிக்குச் சென்றான்.

‘பாரதி நான் வாசன்’ என்றான். ‘எப்படி இருக்க, உடம்புக்கு ஒண்ணும் இல்லையே உன்னோட பேசணும்னு தோணிச்சி அதான்’ கவலைப்பட்டவளாய் தென்பட்டாள். ‘என்ன ஆச்சு என் தங்கை எதுவும் சொன்னாளா’ என்றான் வாசன். ‘இல்லை நாங்க எங்க சின்ன வயசுல இருந்ததை பத்தி பேசினோம் அப்படியே படிப்பை பத்தி பேசினோம் அவங்களுக்குத்தான் மொபைல் இல்லையே உன்னை பத்தி

பேசலையே நாங்க' என்றாள் பாரதி. 'எனக்கு என்னமோ ஆன மாதிரி நீ வருத்தபட்டு பேசற மாதிரி இருந்தது' என்றான் வாசன்.

'நான் கனவு கண்டேன் வாசா, நீ நம்ம ஊரு பெருமாள் கோவிலுக்குள்ள போய் சாமி கும்பிட்டுட்டு இருந்த அப்புறம் அந்த சன்னதிக்குள்ள போய் மறைஞ்சிட்ட நான் அங்க நின்னு அழுதுட்டே இருக்கேன் யாருமே இல்லை வாசா' என்றாள் பாரதி. மழை பெய்ய ஆரம்பித்தது. 'மாமா மழை வந்துருச்சு' என உற்சாகமாய் கத்தினாள் மாதவி.

'கனவு தான, கவலைப் படாத எனக்கு ஒண்ணும் ஆகலை இப்போ ரொம்ப தெளிவா இருக்கேன் எந்த பிரச்சினையும் வராது நல்ல படி, இங்க என் கவிதை புத்தகம் சிலருக்கு கொடுத்தேன் எல்லாரும் நிறையப் பாராட்டினாங்க நன்றி பாரதி' என்றான் மாதவியின் குரல் காதுகளில் விழாதவனாய்.

'இன்னும் நிறைய பதிப்புகள் போடப்போறோம், பணம் அனுப்பி வைக்கிறேன். வாரத்துக்கு ஒரு தரம் எனக்கு போன் பண்ண முடியுமா, இல்லைனா எப்பவும் கையில போனை வைச்சிரு நான் பேசறேன் வாசா நீ பெருமாள் கோவில் எல்லாம் போக வேண்டாம்' என்றாள் பாரதி. 'என்ன நீ இப்படி வருத்தப்படற, சாமி படங்கள் எல்லாம் அதிகமா பார்ப்பியோ, அதான் இப்போ சீரியல்ல எல்லாம் இந்த மாதிரி காட்ட ஆரம்பிச்சிட்டாங்களாம் வேலை செய்றவங்க பேசிகிறாங்க மண் எடுக்கறதும் வேப்பிலை அடிக்கிறதும்' என சிரித்தான் வாசன். 'நீ பெருமாள் கோவில் போக வேண்டாம், அப்புறம் உன் விருப்பம் நீ போனா உன் மேல கோவப்படமாட்டேன்' என்றாள் பாரதி.

'நாங்க திருவில்லிபுத்தூர் போறோம் அங்க இருக்குற கோவில் கூட போகக்கூடாதா' என்றான் வாசன். 'ஏன் அங்க போற யார் யார் வரா' என்றாள் பாரதி. வாசன் சொன்னதை கேட்டதும் 'இல்லை இப்ப போக வேணாம் வாசா நான் பெரியப்பா கிட்ட பேசிக்கிறேன்' என்றாள் பாரதி. திருமால் முகவரியை கேட்டான் வாசன். அவள் வீட்டில் இருந்து 20 நிமிடங்கள் ஆகும் எனச் சொன்னாள் பாரதி. என்ன விவரம் கேட்டாள், வாசன் ஒருத்தர் அங்க இருக்கர் என கூறிவிட்டு அதைப்

பற்றி அதிகம் பேசவில்லை. சிறிது நேரம் பேசிய பின்னர் ‘எப்பவும் போன் கையில வைச்சிக்கோ’ என்று கூறி முடித்தாள்.

வாசன் இறங்கி வந்தான். ‘மாமா மழைனு சொன்னேன் காதுல விழலையா’ என்றாள் மாதவி. ‘மேகம் அப்பவே கூடிச்சி’ என்றான் வாசன். ‘இல்லை மாமா நீங்க சொல்லித்தான் மழை வந்தது’ என்றாள் மாதவி. ‘இப்போ நிறுத்துங்களேன் நின்றும்’ என்றாள் மாதவி. ‘சும்மா இருக்க மாட்டியா மான், எப்ப பார்த்தாலும் கிண்டல் பண்ணிக்கிட்டு’ என்றாள் தேவகி. ‘இல்லை தேவி, நான் சொல்றது உண்மைதான்’ என்றாள் மாதவி. வாசன் ‘அது நிக்கிறப்ப நிற்கும், வரப்ப வரும் பெய்யென சொன்னா பெய்ற மழைக்கு நான் என்ன பகவானா’ என்றான். ‘யார் கண்டா மாமா, இருக்கலாம்’ என்றாள் மாதவி. வாசன் தங்கையிடம் முதியவரின் காகிதம் வாங்கிக் கொண்டு பார்த்தான் ஆச்சரியம் எழுத்துக்கள் பளிச்சென தெரிந்தன. ‘தேவி என்ன பண்ணின’ என்றான் வாசன். ‘நான் தான் மாமா அது மேல எழுதினேன் எந்த ஒரு நல்ல விசயமும் அவ்வளவு லேசா தொலையக் கூடாதுல மாமா’ என்றாள் மாதவி. வாசன் அன்போடு அவளைப் பார்த்தான்.

வாசன் தங்கை தந்த புத்தகம் எடுத்து படிக்கலாம் என எண்ணி வைத்த இடத்தில் தேடினான். அங்கு புத்தகம் இல்லாததை கண்டு 'தேவி நீ வாங்கி தந்த புத்தகம் எங்க?' என்றான். தேவகி மாடிக்கு வந்தாள். 'அண்ணா அந்த புத்தகம் படிக்க வேணாம் அண்ணா' என்றாள் 'இன்னைக்கு நடந்ததை நினைச்சி பயப்படறியா, அப்படி எல்லாம் ஒண்ணும் இனிமே ஆகாது எங்க வைச்சி இருக்க எடுத்து தா தேவி' என்றான். 'அண்ணா உண்மையா நம்பலாமா அண்ணா' என்றாள் தேவகி. 'ம்ம், இனிமே கவனமா நடந்துக்கிறேன், புத்தகம் தா' என்றான் வாசன். தேவகி புத்தகங்களை எடுத்து வந்து தந்தாள்.

'எதுக்கு படிக்க வேணாம்னு சொல்றேன்னு தெரிஞ்சிக்கலாம' என்றான் வாசன். 'அண்ணா எண்ணங்கள் நமது உடல்ல ஹார்மோன்களை சுரக்க வழி செய்யும் அப்படி சுரக்கிற ஹார்மோன்களாலேயே சில செயல்கள் நடக்கும் அப்படி ஹார்மோன்கள் சுரக்கிற இந்த சுரப்பிகள் பல நம்ம உடம்புல இருக்கு நான் கொடுத்த புத்தகங்கள்ல படிச்சிருப்ப தான, ஆனா இந்த ஹார்மோன்கள் நரம்புகள்

போல அவசரமா மெசேஜ் அனுப்பி வேலை செய்றதில்ல, மெதுவாத்தான் வேலை செய்யும் அதே வேளையில ரொம்ப நேரம் அதனோட பாதிப்பு இருக்கும் அதனாலத்தான் சொல்றேன்னா' என்றாள் தேவகி.

எதற்கு கல்லூரிக்கும் பாடசாலைக்கும் செல்ல வேண்டும் என தெரிகிறதா? இதற்குத்தான். நாமாக ஒன்றை கற்றுக்கொண்டு அர்த்தம் கொடுப்பது வேறு, கற்றவர்கள் அதனை அவரது அறிவினால் கற்றுத் தந்து அதை நாம் கற்பது வேறு. உலகில் உள்ள எல்லா விசயங்களையும் வீட்டில் உட்கார்ந்து கொண்டு கற்றுக் கொள்ளலாம் ஆனால் சில செயல்முறை வடிவங்கள் என வரும்போது சிரமம்தான். படித்தவர்களுடன் உரையாடும்போது வரும் அனுபவ அறிவும் விசயங்களை தெளிவு படுத்த உதவும் இதனை பாடசாலைக்குப் போய்த்தான் கற்றுக் கொள்ள வேண்டும், வசதி இருந்தால் பிற வாயில்கள் மூலம் எல்லாம் படித்துக் கொள்ளலாம், விளங்கிக் கொள்வது வித்தியாசப்படும்.

இதற்குத்தான் தெய்வங்கள் சிலையாய் கோவிலின் சன்னிதியில் வைக்கப்பட்டனவோ? குருகுலம் கற்றுத் தந்த காரணத்தினால் மட்டுமே வேதங்களும் புராணங்களும் இதிகாசங்களும் அழியாப் புகழ் பெறுமாறு எழுதப்பட்டன. பள்ளிக்கே செல்லாதவர்கள் பற்றி அவர்களிடம் கேட்டுப் பாருங்கள், என்னதான் அவர்கள் சாதித்து இருந்தாலும், கௌரவ பட்டங்கள் பெற்றாலும் அந்த பள்ளிப் பருவ வாழ்க்கையும் கல்லூரிப் பருவ வாழ்க்கையும் கிடைக்காமல் போய்விட்டதே என ஏக்கம் கொள்ளாதவர்களாய் அவர்களால் இருக்க முடியாது.

தங்கையின் பேச்சைக் கேட்டு 'எண்ணம் எவ்வளவு வலிமை பெற்றதுனு புரியுதுமா, எல்லா உணர்வுகளுக்கும் இந்த ஹார்மோன்கள்தான் காரணம்னா கடவுளைப் பற்றிய உணர்வுக்கும் அதே ஹார்மோன்கள் தானம்மா' என்றான் வாசன். 'இருக்கும் அண்ணா, ஒருத்தர் மூளையை பற்றி ஆராய்ச்சி பண்ணி கடவுள் உணர்வினைத் தரும் இடத்தை கண்டு பிடிச்சிருக்காருண்ணா, நம்மளோட ஒவ்வொரு செயலுக்கும், உணர்வுக்கும் நம்ம உடம்புல சுரக்கிற கெமிக்கல்ஸ்தான் காரணம் அண்ணா, இதெல்லாம் புத்தகத்தில படிச்சிருக்க தானா?' என்றாள் தேவகி.

'படிச்சேன்மா ஆனா ஒருத்தர் சொல்லித் தந்து படிக்கிற சுகம் தனிதான் தேவி, அப்படின்னா எல்லாமே இந்த உடலில் ஓடுற கெமிக்கல்ஸ்தான்னு சொல்ல வர, ரொம்ப வசதியாப் போச்சு இந்த கெமிக்கல்ஸ் அதிகமா சுரப்பதலாதான் இப்படி நடந்து கொண்டேன் என்னை சோதித்து பார்க்கவும்னு சொல்லிக்கிரலாம் இல்லையா தேவி' என்றான் வாசன். 'அப்படி இல்லைன்னா இது அவ்வளவு சுலபமா சொல்ற விசயம் இல்ல, விளக்கி சொல்லனும்னா எனக்கு பரீட்சை முடியட்டும்னா இந்த எக்ஸாமுக்கு இது எல்லாம் இல்லை' என சொன்னாள். 'யாருமா மூளை ஆராய்ச்சி பண்ணினவரு' என்றான் வாசன். 'அவர் பேரு விஜயனூர் ராமச்சந்திரன்' என்றாள். 'நம்ம ஊரா' என்றான் வாசன். என்ன இவ்வளவு நேரம் தேவகியை காணவில்லை என மாதவி தேடி வந்த வேளையில் கடைசியில் வாசன் சொன்ன வார்த்தைகள் விழுந்தது. 'என்ன மாமா நம்ம ஊரானு சொந்தம் கொண்டாடுறீங்க, இந்த உலகத்துக்கு மூல அடிப்படையே இந்தியா தான் மாமா, எல்லா நாடுகளுக்கும் தாய் நாடு இந்த இந்தியா தான் மா' என்றாள். 'மான் உன்னோட கிண்டலுக்கு அளவே இல்லாம போச்சு' என்றாள் தேவகி. வாசன் அவர்களைப் படிக்கச் சொல்லிவிட்டு தானும் ரகசியம் படிக்க ஆரம்பித்தான்.

வாசனுக்கு புத்தகத்தில் உள்ளதை படிக்க பிடிக்கவில்லை, எடுத்து வைத்தான். இறந்த காலங்களைப் பற்றி ஆராய்ச்சி செய்து என்ன லாபம் எனப் பட்டதோ இல்லை, எழுதப்பட்ட எழுத்துக்கள் அவனது கவனம் ஈர்க்கவில்லையோ தெரியவில்லை புத்தகத்தை வைத்துவிட்டு முதியவருக்கு வந்த கடிதத்தினை திரும்பவும் படித்தான். நிச்சயம் இவரை பார்க்கவேண்டும் என மனதில் முடிவு செய்தான். முதலில் இந்த செடி விசயம் எல்லாம் நல்லபடியாய் முடிய வேண்டும் என நாராயணனை மனதில் வேண்டிக் கொண்டான்.

மழை நின்று வெகு நேரம் ஆகி இருந்தது. சமையல் வாசனை அடித்தது. யார் சமைக்கிறார்கள், அம்மா காலையில் சமைத்து சென்று விடுவார்களே என எண்ணிக் கொண்டு கீழே இறங்கி வந்தான். மாதவி சமைத்து கொண்டு இருந்தாள். 'என்ன இங்க சமையல் பண்ற' என்றான் வாசன். 'அத்தைதான் சமைக்க சொல்லி இருந்தாங்க' என்றாள் மாதவி. 'உங்க அம்மா அப்பாக்கு சாப்பாடு இங்க இருந்தா

இன்னைக்கு' என்றான் வாசன். 'இல்லை அம்மாவும் அப்பாவும் சாப்பாடு எடுத்துட்டுப் போயிட்டாங்க காலையிலயே' என்றாள் மாதவி. 'நான் சமைச்சா சாப்பிடக்கூடாதுனு எதுவும் விரதம் இருந்தா சொல்லிருங்க மாமா இப்பவே நிறுத்திறேன்' என்றாள் மாதவி. 'அப்படியெல்லாம் இல்லை, அதிசயமா சமைக்கிறியே அதான் கேட்டேன்' என்றான் வாசன்.

'தேவி நீ மாதவிக்கு உதவி பண்ணலையா' என்றான் வாசன். 'எல்லாம் அவளே பண்றேன்னு சொன்னா அதான் பண்ணட்டும்னு விட்டுட்டேன், புத்தகம் படிச்சியாண்ணா எப்படி இருக்கு' என்றாள் தேவகி. 'இல்லை தேவி, படிக்கலை இப்ப படிக்க வேணாம்னு தோணுது' என்றான் வாசன். அப்பொழுது பாலு வீட்டுக்கு வந்தான். 'என்ன பாலு பள்ளிக்கூடம் போகலையா' என்றான் வாசன். 'சாப்பாடுக்கு பெல் அடிச்சாங்க அதான் வந்துருக்கேன், பழனி ரெண்டு நாளா பள்ளிக்கூடத்துக்கு வரலை, ஏன்னு கேட்டா படிச்சி என்ன புண்ணியம் வாசன் அண்ணன் என்ன பன்னிரன்டுதானே படிச்சி இருக்கார் நமக்கு சொல்லித் தரலையா அவர் சொன்ன கதைய கேட்டதுல இருந்து படிப்பு மேல இருக்குற அக்கறையேப் போச்சுனு என்ன என்னமோ பேசறான் அவங்க வீட்டுல காய்ச்சல்னு பொய் சொல்லிட்டு படுத்து இருக்கான்' என்றான் பாலு.

'அண்ணா பார்த்தியா நாம ஒரு ரோல் மாடலா இருக்கனும் நல்ல விசயங்களை தெளிவா சொல்லனும் என்ன கதை சொன்ன அப்படி' என இடை மறித்தாள் தேவகி. 'இரு வந்து சொல்றேன் பெரிசா ஒண்ணும் இல்ல' என பழனியின் வீடு நோக்கி நடந்தான் வாசன். வாசனையும் பாலுவையும் பார்த்த பழனி படுக்கையில் எழுந்து உட்கார்ந்தான். வாசன் தனது நிலையை எடுத்து சொன்னான் தான் படிக்காததற்கு காரணம் விவசாயம் யார் பார்க்கப் போகிறார்கள் என்றும் இதனால் ஒரு தலைமுறைக்காவது இந்த விவசாயம் பார்க்கலாம் எனவும் முடிவு எடுத்ததாக கூறினான். 'ஏதொ அக்ரி படிப்பு இருக்காமே அது படிக்கலையாண்ணே' என்றான் பழனி.

வாசன் பழனியைப் பார்த்து 'இருக்குப்பா ஆனா மனசுக்கு கேட்கலை படிக்க வேணாம்னு முடிவு பண்ணிட்டேன் இப்போ நிறைய படிச்சி இருக்கேன் பரீட்சை

தான் எழுதனது இல்லை என்னை காரணம் காட்டி படிக்காம இருக்க வேணாம், நான் சொன்ன கதை வந்து ஒரு நல்ல விசயம் சொல்லத்தானே தவிர இப்படி தப்பா போகும்னு நினைக்கலைபா, அதே சட்டம் படிச்ச நண்பன் அந்த திருடன ஆளை கண்டுபிடிச்சி ஜெயிலுக்கு அனுப்பிட்டான்ப்பா' என நம்பிக்கை தர வேண்டி வரிகள் இணைத்தான் வாசன். பழனிக்கு படிப்பதில் ஆர்வம் இருந்தது அதே வேளையில் விவசாயம் ஒன்றும் எளிதான வேலை இல்லை எனவும் தெரியும். 'இனிமே பள்ளிக்கூடத்துக்கு போறேன், இப்படி எல்லாம் செய்யமாட்டேன் நல்லா படிச்சி பெரிய ஆளா வருவேன்' என வாசனுக்கு உறுதி சொன்னான் பழனி.

வாசன் வீட்டுக்கு வந்ததும் தங்கையிடம் கதையை சொன்னான் பழனியைப் பற்றியும் தான், மாதவியும் கேட்டாள். 'பையன் நிறைய தெளிவா இருப்பான் போல இருக்கு மாமா' என்றாள் மாதவி. பூஜை அறைக்குள் சென்றான் வாசன். மனசு மிகவும் எளிதாக இருந்தது. இறைவனை வேண்டினான். இம்முறை எந்தவித நடுக்கமும் இல்லாமல் வேண்டினான். தெய்வப் படங்களுக்கு தீப ஆராதனை காட்டினான். காலையிலும் மாலையிலும் தான் இறைவனை வழிபடவேண்டும் என யார் வகுத்தது. தங்கைக்கும் மாதவிக்கும் தீபம் காட்டினான். அவர்களும் பயபகிதியுடன் கும்பிட்டார்கள்.

சாப்பாடு தயார் ஆனது. மாதவி மிக நன்றாக சமைத்து இருந்தாள். மன நிம்மதியுடன் வாசன் சாப்பிட்டான். வாசன் சாப்பாடினை பற்றி என்ன சொல்வான் என ஆவலாய் எதிர்பார்த்துக் கொண்டு இருந்தாள் மாதவி. வாசன் சாப்பிட்டு முடித்துவிட்டு அங்கு இருந்த நாற்காலியில் அமர்ந்தான். பின்னர் அவர்கள் இருவரும் சாப்பிட்டார்கள்.

'மாதவி' என அழைத்தான் வாசன். 'சொல்லுங்க மாமா' என்றாள். 'சாப்பாடு பிரமாதமா இருந்தது, நல்லா சமைக்கிற குளத்தூர் வாசம் ஊரைவிட்டு நீ போய் படிச்சாலும் மாறலை பார்த்தியா' என்றான் வாசன். 'ம்ம் மாமா' என தனது கண்களில் எட்டிப் பார்க்கும் கண்ணீர்த் துளிகளை மறுபக்கம் திரும்பி துடைத்துக் கொண்டாள். வாசனது பாராட்டு மகிழ்வை தந்தது.

எனது முன்னேற்றத்திலும் எனது வளர்ச்சியிலும்
பெரும் அக்கறை கொண்டவன் நீ;
உனது ஒவ்வொரு வாக்கியமும் என்னை
ஒரு படி உயர்த்திக் கொண்டே போகிறது;
உனது உன்னத எண்ணங்களுக்குக் கட்டுபட்டவளாய்
நான் இருக்கிறேன் என நினைக்கும்போது
மனதுக்குள் மலர் ஒன்று சிரித்து ரசிக்கிறது
மடிந்து போவது என்பது அம்மலருக்கு கிடையாது;
உன்னைக் கண்டித்திடும் ஒரு தாயாய் இருந்திடக் கூடாதா
என தவம் இருக்க தோணுகிறது சில வேளைகளில்;
இவ்வுலகின் நாயகன் நீ என்ற உண்மை மட்டும்
எனக்குள் உறுதியாய் இருக்கிறது;
முதன் முதலில் நான் உன் கைகளில்தான் தவழ்ந்தேன்
என நினைத்து பார்க்கும்போதெல்லாம் கடினம் என்பது
என்னவென்று தெரியாமல் போகிறது;
உனது அர்த்தமுள்ள வாழ்க்கையால்
நான் மட்டுமல்ல இவ்வுலகமே
அர்த்தம் ஆகப் போகிறது;

'மான், கார்டியோ வாஸ்குலார் சிஸ்டம் பத்தி ஒரு டாக் கொடேன்' என மாதவியின் நினைவுகள் கலைத்தாள் தேவகி. மதிய வேளையிலுமா படிப்பார்கள், படிப்புக்கு ஓய்வு தாருங்கள் தோழிகளே சிறிது நேரமாவது.

25.

வாசன் மாடியில் அமர்ந்து வரவு செலவுகள் எல்லாம் எழுதிக் கொண்டு இருந்தான். தோடங்களில் என்ன என்ன செய்வது என்பது குறித்த தனது திட்டத்தை சீரமைத்துக் கொண்டும் இருந்தான். மாதவியும் தேவகியும் படிப்பினை பற்றி விவாதித்துக் கொண்டு இருந்தார்கள்.

'நான் காபி போட்டுட்டு வரேன்' என மாதவி எழுந்தாள். மணி நான்கு ஆகி இருந்தது. வாசனுக்கும் சேர்த்து காபி போட்டு எடுத்து வந்தாள். அப்பொழுது சிம்மராசன் வாசன் வீட்டுக்கு வந்து 'ஏம்மா வாசுத் தம்பி இருக்காராமா' என மாதவியினைப் பார்த்துக் கேட்டான். 'இருக்கார் என்ன விசயம் சொல்லுங்க' என்றாள். 'பெரிய அய்யா தம்பியை வீட்டுக்கு வரச் சொன்னார், சொல்லிரும்மா' என கூறிவிட்டு கிளம்ப இருந்தவனை 'இந்தாங்க காபி குடிங்க' என தன் கையில் இருந்த காபியினை அவனுக்கு தந்தாள். 'நன்றிமா' என காபியினை வாங்கிக் கொண்டான் சிம்மராசன்.

வாசனிடம் காபியை கொடுத்துவிட்டு பெரியவர் அழைப்பதாக தெரிவித்தாள் மாதவி. வாசனும் சரி என கூறிவிட்டு காபியை அருந்தினான். இம்முறை என்ன சொல்வான் வாசன் என மாதவி எதிர்பார்க்காவில்லை. மனதுக்கு பிடிப்பவர்கள் எது செய்தாலும் நமக்கு பிடிப்பது இயற்கையாய் அமைந்த விசயம்.

'இந்தா மான் உனக்கு பாதி எனக்கு பாதி' என தந்தாள் தேவகி. 'நீ குடி தேவி, நான் போட்டுகிறேன்' என்றாள் மாதவி. 'எனக்கு இவ்வள போதும்' என கூறிவிட்டாள் தேவகி. சிம்மராசன் காபியை குடித்துவிட்டு 'ரொம்ப அருமையா இருந்ததுமா' என கூறி விட்டு சென்றான். வாசன் அவசர அவசரமாக காபி அருந்திவிட்டு பெரியவர் வீட்டுக்கு கிளம்பினான்.

'தேவி நான் வர லேட்டா ஆனாலும் ஆகும், அம்மாகிட்ட சொல்லிரு' எனச் சொல்லிக் கொண்டு இருக்கும்போதே அம்மா ராசாத்தியுடனும் முத்துராசுவுடனும் வந்தார். 'அம்மா நான் பெரியவர் வீட்டுக்கு வரைக்கும் போய்ட்டு வரேன்மா' எனக் கிளம்பினான். 'தக்காளிப் பழங்கள் எல்லாம் இன்னும் அங்க இருக்கு உன் மாமா வண்டியில கொண்டு வரேன்னு சொல்லி இருக்கார் நாளைக்கு காலையில கத்தரிக்காய் பறிக்கனும்' என ஞாபகம் படுத்தினார் அம்மா. முத்துராசு வாசனுடன் நடந்தான்.

'அண்ணே, நீங்க திரும்பி தோட்டத்துக்கு போறீங்களா' என்றான். 'கொஞ்சமா இருக்கும்னு நினைச்சோம் நிறைய இருந்தது அவர் நிலத்தை உழுதுட்டு இருக்கார் உழுது முடிஞ்சதும் கொண்டு வரேன்னு சொல்லி இருக்கார் நான் ஆறு மணி போல போவேன் நீ வினாயகத்துக்கு செய்ற உதவிய செய்' என்றான் முத்துராசு. வாசனும் சரி அண்ணே என்றான்.

வாசன் பெரியவரின் வீடு அடைந்தான். பெரியவர் அவனை வரவேற்று குடிப்பதற்கு ஏதாவது தரவா என்றார். வாசன் தற்போதுதான் காபி குடித்ததாக கூறினான். பூஜை அறைக்குள் வாசனை அழைத்து சென்றார். எவ்வளவு முறை கணக்கு எல்லாம் சரி பார்க்க கொடுத்து இருப்பேன், இது மட்டும் உனக்கு நான் காமிக்கவே இல்லை' என ஒரு பெரிய நோட்டு புத்தகம்தனை எடுத்தார்.

'ஸ்ரீமன் நாராயணன் அருளி தந்தது' என முதல் பக்கத்தில் எழுதி இருந்ததார் பெரியவர். 'இதுலதான் எல்லாம் இருக்கு' என அந்த நோட்டினை வாசனிடம் தந்தார். 'வெளியில எடுத்துட்டுப் போகலாமா அய்யா' என்றான் வாசன். 'இல்லை வாசா எடுத்துட்டுப் போக வேண்டாம் இங்க வைச்சே பாரு' என்றார் பெரியவர். வாசன் அமர்ந்து கொள்ள இடம் தேடினான். இருந்த ஆவலில் அவசரப்பட்டு பார்க்க அவன் மனது இடம் தரவில்லை. அமர்ந்தான். நோட்டினை கீழ் வைத்தான். தீபம் ஏற்றினான். அகர்பத்திகளை ஏற்றினான். கற்பூரம்தனை ஏற்றி தெய்வங்களை வழிபட்டான். இதையெல்லாம் பார்த்துக் கொண்டே நின்றார் பெரியவர். பெரியவருக்கு கற்பூரம் காட்டினான் பின்னர் அவரது கால்களில் விழுந்து வணங்கினான். நோட்டின் முதல் பக்கம் திருப்பி அடுத்த பக்கம் திருப்பினான். "நெகாதம்" என எழுதி இருந்தது.

வாசன் 'அய்யா அது என்ன நெகாதம்' என்றான். 'அதுதான் செடியோட பெயர்' என்றார் பெரியவர். 'நீங்களா வைச்சதா' என்றான் வாசன். 'ஆமா நானா வைச்சதுதான்' என்றார் பெரியவர். 'நீங்களா வைச்சதா இருந்தா எதுக்கு ஸ்ரீமன் நாராயணன் அருளி தந்ததுனு எழுதனும் பின்வரும் சந்ததிகளுக்கு ஒரு பெரும் குழப்பம் வராதா' என்றான் வாசன். 'எதுக்கு குழப்பம் வரனும்' என்றார் பெரியவர். 'இப்படி நாராயணன் தந்ததுன்னு நீங்க எழுதி இருக்க விசயங்கள் எல்லாம்

நாராயணன் எழுதினதுனு ஆயிருமா' என்றான் வாசன். பெரியவர் இனியும் நின்று கொண்டு இருந்தார். அமரச் சொன்னதற்கு இல்லை நின்று கொண்டெ பேசுகிறேன் என கூறிவிட்டார்.

அடுத்த பக்கம் திருப்பினான். நெகாதாம் செடி அவ்வளவு அருமையாக வரையப்பட்டு இருந்தது. யாராவது பார்த்தால் உண்மையான செடியைத்தான் நோட்டு புத்தகத்தில் வைத்து இருப்பார்கள் என எண்ணுமளவிற்கு இருந்தது. 'அய்யா நீங்க உட்காருங்க நிறைய பேசனும்' என்றான் வாசன். 'இல்லை இருக்கட்டும் நீ கேட்க வேண்டியதை கேளு வாசா' என்றார் பெரியவர். 'இந்த படம் யார் வரைஞ்சது' என்றான் வாசன். 'நான் தான் வரைஞ்சேன்' என்றார் பெரியவர். இலைகள் இப்படித்தான் இருக்கும் வேர்கள் இப்படித்தான் இருக்கும்னு யார் சொன்னது, எப்பவுமே நீங்க இந்த செடியப் பார்த்தது இல்லை தான அப்படி இருக்கறப்ப இதனோட விதைகளை எப்படி கண்டுபிடிக்கிறது' என்றான் வாசன். 'இன்னும் பார்' என்றார் பெரியவர். விதை வேராக மாறும் அப்படி மாறியதும் செல்கள் விரிவடைந்து ஒரு தாவரமாக மாறும்.

ஒவ்வொரு பக்கத்திலும் பூ, காய், கனி வேர் என அவ்வளவு அருமையாய் வரையப்பட்டு இருந்தது. ஓவிய ஆசிரியர் இதைப் பார்த்தால் நிச்சயம் ஒரு மதிப்பெண் கூட குறைக்க மாட்டார் என உறுதியாகச் சொல்லலாம். வாசன் கனியுடன் நிறுத்தினான். 'இன்னும் பார் வாசா' என்றார் பெரியவர். பக்கம் திருப்பினான் விதை எப்படி இருந்தது எனப் பார்த்து அதிசயித்துப் போனான்.

'அய்யா என்ன அய்யா விதை இப்படி இருக்கு' என்றான் வாசன். 'பிரபஞ்சத்தின் தத்துவம்' என்றார் பெரியவர். 'விதையின் மேல் பகுதி எது அய்யா' என்றான் வாசன். 'காற்றைப் போல் எளிதாக இருக்கிறதா கண்ணுக்கு தெரிந்தும் தெரியாமல் இருக்கிறதே அந்த பகுதிதான்' என்றார் பெரியவர். மையபகுதி நீரால் ஆனாது போல் இருந்தது அடிப்பகுதி நெருப்பால் ஆனது போல் இருந்தது. 'அய்யா எப்படி அய்யா இப்படி வரைய முடிஞ்சது' என்றான் வாசன். அறையில் சுற்றி பார்த்தான். எங்குமே படம் வரைவதற்கான தேவையான பொருட்கள் கண்ணுக்கு படவில்லை. 'என்ன பார்க்கிற வாசா' என்றார் பெரியவர்.

'எப்போ வரைஞ்சீங்க எப்படி வரைஞ்சீங்க' என்றான் வாசன். 'அது இருக்கட்டும் இதுதான் விதையோட அமைப்பு நெருப்பு காற்று தண்ணீர் அதில் இருக்கும் மனசு சேர்த்துத்தான் நெகாதம்னு இந்த செடிக்கு பெயரை வைச்சேன் அதை கேட்டதும் நாராயணன் சிரிச்சிட்டார்' என்றார் பெரியவர். வாசன் உடனே 'நாராயணன் ஒளியாத்தான் தெரிந்தார்னு சொன்னீங்க எப்படி சிரிச்சது தெரிஞ்சது' என்றான் வாசன். 'சிரிப்புக்கு சப்தம் போதும் வாசா' என்றார் பெரியவர். 'ரகசியம் காமிக்கிறேன்னு இதனை விளக்கலைன்னா என்ன அர்த்தம் அய்யா' என்றான் வாசன். 'இன்னும் பக்கங்கள் இருக்கு பார்க்கலையா' என்றார் பெரியவர். 'இல்லை பார்க்கலை இது யார் வரைஞ்சா எப்ப எப்படின்னு சொல்லுங்க அய்யா அதுக்கப்பறம் நான் முடிவு பண்றேன்யா' என்றான் வாசன்.

இது சில வருடங்களுக்கு முன்னால நாராயணன் கனவுல வந்து சொல்லச் சொல்ல நானா வரைஞ்சது வீட்டுல அந்த சமயம் யாருமே இல்லை. இரவெல்லாம் நாராயணன் சொன்னதை வைச்சி ஒரு வாரமா இதே வேலையா இருந்து பண்ணினேன்' என்றார் பெரியவர். வாசன் பெரியவரையேப் பார்த்துக் கொண்டு இருந்தான்.

'எதுவும் இன்னும் தெரியனுமா' என்றார் பெரியவர். 'அப்படின்னா எங்க கிடைக்கும் எப்படி கிடைக்கும் எல்லாம் சொல்லி இருக்கனுமே அய்யா' என்றான் வாசன். 'மேலப் பார்' என்றார் பெரியவர். திருவில்லிபுத்தூரில் உள்ள மலையானது வரையப்பட்டு இருந்தது ஆனால் செடிகளோ விதைகளோ குறிப்பிடப்படவில்லை. பக்கங்கள் புரட்டினான் ஒவ்வொரு பக்கத்திலும் எப்படி செடி வரும் என்ன என்ன செய்ய வேண்டும் என விவரமாக எழுதி இருந்தது. 'அய்யா உங்க எழுத்து போல இல்லையே' என்றான் வாசன். 'கொண்டா எழுதி காமிக்கிறேன்' என வாங்கினார். 'சொன்னதைச் செய்யும்' என எழுதினார். இரண்டு எழுத்துக்களும் ஒரே மாதிரி இருந்தது. 'அய்யா கணக்கு வழக்கு எழுத்து...' என்ற வாசனிடம் 'ம்ம் தெய்வச் செயலுக்கு எப்பவும் தனிச் சிறப்பு இருக்கு வாசா' என்றார் பெரியவர். இனியும் நின்று கொண்டு இருந்தார். வாசன் இது எல்லாம் படிக்கவே இரண்டு நாள் ஆகுமே அய்யா' என்றான் வாசன்.

'எனக்கு எல்லாம் மனசுக்குள்ள இருக்கு' என்றார் பெரியவர். எல்லாப் பாகங்களையும் புரட்டியபின் கடைசி பக்கம் பார்த்தான் வாசன். வாசனுக்கு நடுக்கம் மறுபடியும் வந்தது, 'அய்யா என்ன அய்யா இது' என்றான் 'அந்த நாராயணனே அறிவான்' என்றார் பெரியவர். 'இல்லை அய்யா இது நீங்க உங்க சுயநலத்துக்கு எழுதினது அந்த நாராயணனுக்கு என்னை எப்படி தெரியும்' என்றான் வாசன். 'எல்லாம் அறிந்தவனுக்கு ஒரு துகளினும் துகளாய் இருக்கும் உன்னையவா தெரியாதுனு சொல்ற வாசா' என்றார் பெரியவர்.

கடைசி பக்கத்தில் அப்படி என்னதான் எழுதி இருந்தது என நமக்கு தெரியும் முன்னர் வாசன் அப்பக்கத்தை மூடிவிட்டான். நோட்டினை பெரியவரிடம் தந்தான். இப்படியா இத்தனை நேரம் அமர்ந்து இருந்தோம் என அப்பொழுதுதான் வாசன் மின்சார விளக்கு எதுவும் எரியாமல் இருப்பதை கண்டான். இத்தனை வெளிச்சம் இந்த தீபமா தந்தது. வாசன் பெரியவரின் கால்களை நடுக்கத்துடன் தொட்டுவிட்டு எழுந்தான்.

'எதுக்கு அய்யா நீங்க உட்காரலை' என்றான் வாசன். 'ஆசிரியர் சொல்லித் தரதும் மாணவன் அமர்ந்து இருந்து படிப்பதும் வழக்கத்தில் உள்ள ஒன்று தானே வாசா' என்றார். பெரியவரின் வீட்டை விட்டு வெளியே உடனடியாய் செல்ல வேண்டும் என முடிவு எடுத்தவனாய் 'அய்யா நான் நாளைக்கு பார்க்கிறேன் அய்யா' எனக் கிளம்பினான். பூஜை அறையில் இருந்து இருவரும் வெளியில் வந்தார்கள். தொலைபேசி அழைத்தது.

தொலைபேசியினை எடுத்தார் பெரியவர். பாரதிதான் பேசினாள். நலம் விசாரித்தார். நலம் விசாரித்தாள். 'பெரியப்பா நீங்க திருவில்லிபுத்தூர் போகப் போறீங்க வாசன் சொன்னார் இப்ப போக வேணாம் பெரியப்பா' என்றாள். 'என்னமா சொல்ற, அடுத்த வாரம் போகலாம்னு திட்டம் போட்டு இருக்கோம் அதுக்குள்ள இப்படி சொல்ற' என்றார் பெரியவர். 'இல்ல பெரியப்பா, வேணாம்' என மறுபடியும் பாரதி சொன்னாள். வாசனைப் பார்த்தார் பெரியவர். 'என்ன காரணம்' எனக் கேட்டார், 'வாசனோட உயிருக்கு ஆபத்து பெரியப்பா சொன்னா

கேளுங்க' என குரல் தழுதழுத்தது. 'ஆபத்தா, அப்ப எப்பத்தான் போகலாம்னு சொல்ல வரம்மா' என குழப்பத்துடன் பெரியவர் கேட்டார். 'இரண்டு மாசம் போகட்டும் பெரியப்பா' என்றாள் பாரதி. 'வாசன்கிட்ட பேசறியா' என வாசனை அழைத்து தொலைபேசியை தந்தார்.
'பேசிட்டேன் பெரியப்பாகிட்ட, நீ மீறிப் போகாத வாசா' என்றாள் பாரதி. 'ம்' எனக் கூறிவிட்டு தொலைபேசியை வைத்தான். வாசன் 'வரேன்யா' என கிளம்பினான். 'இரு வாசா' என்றார் பெரியவர்.

'என்ன நடக்குது, நாம திருவில்லிபுத்தூர் போகப்போறோம்னு சொல்லிருக்கறப்ப எதுக்கு இப்படி நடக்குது, உனக்கு ஆபத்துனு பாரதி சொல்றா' என்றார் பெரியவர். 'அய்யா அதை நாராயணன் சொல்லலையா செடியைப் பத்தி ஓவ்வொரு விசயமும் விலாவரியாச் சொல்லி இருக்கு என்னைப் பத்தி ஒரு பக்கம் சொல்லி இருக்கு ஆனா எனக்கு இப்படி நடக்கும் அப்படி நடக்கும்னு ஒண்ணும் இல்லையே, இந்த காலகட்டத்திலதான் போகனும் அப்படின்னு ஒண்ணும் சொல்லலையே' என்றான் வாசன்.

பெரியவர் வாசனைப் பார்த்து 'உனக்கு இந்த விசயத்தில விருப்பம் இல்லையா' என்றார். 'விசயத்தில விருப்பம் இருக்கு ஆனா நாராயணன்னு சொல்றதில்ல விருப்பம் இல்ல இது உங்களுக்கு மனதில தோன்றின செயலும் வடிவாக்கமும் அதுக்கு இப்படி ஸ்ரீமன் நாராயணன்னு அடைமொழி தரதில கொஞ்சம் கூட அர்த்தம் இல்ல நான் வீட்டுக்குப் போறேன் அய்யா ஆனா இந்த விசயத்துக்கு அந்த நாராயணனுக்குனு இல்லாட்டாலும் உங்களுக்காக நான் பாடுபடுவேன் அய்யா' என்றான் வாசன். பெரியவருக்கு மனதில் எப்படி வாசனுக்குப் புரிய வைப்பது என யோசனையில் ஆழ்ந்தார். 'சரி இரண்டு மாசம் கழிச்சேப் போகலாம் அப்ப ஊர்த் திருவிழா வரும் அதைக் கொண்டாடிட்டு போகலாம்' என்றார் பெரியவர். வாசன் வணங்கிவிட்டு வெளியேறினான்.

பாரதியை போனில் அழைத்து 'எனக்கு என்ன ஆபத்துனு சொன்ன அந்த கனவை கனவாத்தான நினைக்கச் சொன்னேன் ஏன் இப்படி பண்ற பாரதி ஒரு முக்கியமான விசயமா போக இருந்தோம் எனக்கு அது என்ன ஏதுனு பார்க்க ஆர்வமா இருக்கு

இப்படி பண்றியே' என சொன்னதும் பாரதி 'போ உன் விருப்பம் உன்னால அந்த ஆபத்தில இருந்து காத்துக்க முடியும்னா போ எதுக்கு திருவில்லிபுத்தூர் வரைக்கும் போற நம்ம ஊருல இருக்க பெருமாள் கோவிலுக்கு நாளைக்கு மறுநாள் போய்ப்பார் என்ன நடக்குதுனு எனக்குச் சொல்லு அப்புறம் இன்னைக்கு உன் சித்தப்பா சித்தி வராங்க அவங்ககிட்ட கடிதம் எழுதி இருக்கேன் படிச்சிக்கோ ஆனா இதைப்பத்தி எழுதலை' என்றாள் பாரதி. வாசன் வேறு விசயங்கள் பேசிவிட்டு யோசிக்க ஆரம்பித்தான்.

எதுவுமே விவரங்கள் சொல்லாமல் வெறும் கனவினை வைத்து பாரதி சொன்னது வாசனுக்கு கொஞ்சமும் விருப்பமில்லை. எப்படியும் பெருமாள் கோவில் போய்ப் பார்த்துவிடுவது என முடிவெடுத்தான். இடையில் ஒருநாள் மறித்துக் கொண்டு இருந்தது.

பெரியவர் வாசன் எப்படி இப்படி இருக்கிறான் அவனுக்குள் இருக்கும் அந்த பொறியை யார் எழுப்புவது என நினைத்து பாரதியிடம் திரும்பவும் பேசினார். பாரதி சொன்ன விசயம் பெரியவருக்கு பெரும் அதிர்ச்சியாய் இருந்தது, தனக்கு மட்டும் அறியத் தரப்பட்ட இரகசியம் பாரதிக்கு எப்படி தெரிந்தது 'நாராயணா' என்றார் பெரியவர். எப்படி வருவான் நாராயணன் எப்பொழுதும் நம்முடன் இருப்பவன் அல்லவா அவன்.

26.

குளத்தூரின் வீதிகள் பெரும் பரபரப்பு அடைந்து இருந்தன. மரங்கள் செடிகள் கொடிகள் கோவில்கள் மிகவும் பரபரப்பாகி கொண்டு இருந்தது. ஊரின் வடக்கில் உள்ள பெரியவரின் வீட்டில் இருந்து வாசன் அந்த பரபரப்பான வீதிகளில் பரபரப்புடன் வேகமாக நடந்தான். ஊரின் பொது கட்டிடம் விவரிக்க முடியா பரபரப்பில் இருந்தது.

ஊரின் தெற்கில் இருந்த தனது வீட்டினை அடைந்தான் வாசன். 'தேவி, மாதவி எங்க?' என்றான். 'மான் வீட்டுக்குப் போய்ட்டாண்ணே, அவ நீ போன பத்து

நிமிசத்துல கிளம்பி போய்ட்டா, என்னண்ணே எதுவும் சொல்லனுமா' என்றாள் தேவகி. 'இல்லை தேவி நான் பேசிக்கிறேன் வரேன்' என கிளம்பினான், 'வாசா என்ன வந்ததும் வராததுமா கிளம்பி போற' என அம்மா வந்தார். 'ஒண்ணும் இல்லம்மா, பிறகு வரேன்' வாசன் விரைந்தான், தேவகிக்கும் அம்மாவுக்கும் என்ன வாசன் இப்படி பரபரப்புடன் காணப்படுகிறான் என அவர்களுக்குள் நினைத்துக் கொண்டார்கள்.

'வாசா' அம்மா, வீதிகளில் கால் எடுத்து வைத்தவனை அழைத்தார். 'என்னம்மா' என திரும்பிப் பார்த்து கேட்டான் வாசன். 'தோட்டத்துக்கு போய் ஒத்தாசையா மாமாவுக்கு உதவி பண்ணுப்பா' என்றார் அம்மா. 'முத்துராசு அண்ணன் போறேன்னு சொன்னார்மா, நான் நேரம் இருந்தா போறேன்மா' என சொன்னதும் 'அப்படியே பூசணிக்காய் மூணு இருந்தது அதையும் பறிச்சிட்டு வந்துரு' என்று அம்மா சொன்னதும் 'சரிம்மா' என கூறிவிட்டு கிளம்பினான்.

மாதவியின் வீடு கிழக்கில், தென் கிழக்கில் இருந்தது. மாதவியின் வீட்டினில் நுழைந்தான் வாசன். 'வாங்க தம்பி' என்றார் கமலா. 'அத்தை, மாதவி இருக்காளா' என்றான் வாசன். 'மாடியில் இருக்கா தம்பி என்ன விசயம் சொல்லுங்க, இதோ கூப்பிடுறேன்' என்றார் கமலா. 'இல்லை அத்தை, நான் போய் பார்க்கிறேன்' என வாசன் சொன்னதும் 'என்ன தம்பி எதுவும் முக்கியமான விசயமா' என அறிந்து கொள்ள ஆசைப்பட்டாள். 'ஒரு சில விசயம் பேசனும் அப்படி ஒண்ணும் முக்கியமானது இல்லை' என மாடிப்படிகளில் ஏறினான். வாசனுக்கு இல்லாத உரிமையா?

வாசன் முதல் மாடியில் தேடிப் பார்த்தான், மாதவி இல்லை. மொட்டை மாடிக்குச் சென்றான். மாதவி அங்கு தியானத்தில் அமர்ந்து இருந்தாள். அவளது தியானத்தினை கலைப்பதா வேண்டாமா என எண்ணிக்கொண்டு கீழ் இறங்கி வந்தான். 'என்ன தம்பி அதுக்குள்ள பேசிட்டீங்களா' என்றார் கமலா. 'இல்லை அத்தை தியானத்தில இருக்கா, தியானம் முடிக்கட்டும் காத்து இருக்கேன்' என்றான் வாசன். 'காபி போட்டு வரேன் தம்பி' என சொன்ன கமலாவிடம் 'இல்லை அத்தை வேண்டாம்' என்றான் வாசன். தனது கணவரைப் பற்றி வாசனிடம் பேசலாமா

தனது மகளின் கல்யாண பேச்சை குறித்து பேசலாமா என நினைத்தார் கமலா. ஆனால் அது முறையாக இருக்காது அப்படி ஒரு எண்ணமே தனக்கு வந்து இருக்க கூடாது என்றும் எண்ணிக் கொண்டாள். நேரம் நகர்ந்தது. வாசன் மீண்டும் மாடியில் சென்று பார்த்தான்.

பெரியவருக்கு பாரதியின் கனவினை நினைக்க நினைக்க அவருக்குள் பெரும் அச்சம் எழுந்தது. பாரதி தெரிந்தே தான் நாராயணன் படம் வாங்கி தந்தாளா? ஜோதியுடன் ஜோதியாய் கலப்பது கேள்விப்பட்டு இருக்கிறார் பெரியவர். ஆனால் இது எப்படி சாத்தியம், இது வெறும் கனவு தான் ஆனால் வாசனுக்கு இவ்வாறு நிகழ வேண்டும் என பாரதிக்கு எப்படி ரகசியம் தெரியும் இன்னும் தீவிரமாக ஆழ்ந்த சிந்தனைக்குப் போனார்.

மாதவியின் தியானம் தொடர்ந்து கொண்டு இருந்தது. வாசன் மாடியிலே அமர்ந்தான். பூமியின் சுழற்சியின் காரணமாக வெளிச்சம் மறையத் தொடங்கி இருள் மெதுவாகப் படர தொடங்கியது. மாலைப் பொழுது ரசிக்க ரசிக்க மனதுக்கு இனிமை தரும் .

இனியும் காத்து இருப்பதா இல்லை செல்வதா என புரியாமல் அமர்ந்து இருந்தான் வாசன். அம்மா வேறு தோட்டம் சென்று வரச் சொல்லி இருக்கிறார். என்ன செய்வது தியானம் கலைக்கலாமா என எண்ணியவன் ஏனோ விரைவாக இறங்கி வந்து 'அத்தை நான் மாதவி கிட்ட பிறகு வந்து பேசறேன்' என்றான். தாய் சொல்லும் செயலை விட வேறு என்ன இந்த உலகத்தில் பெரிதாக இருக்கிறது செய்வதற்கு.

'தம்பி இருங்க தம்பி நான் கூப்பிடுறேன்' என சொல்லியும் வாசன் 'அத்தே எப்போ தியானம் முடிச்சி வராளோ அதுவரைக்கும் அவளை தொந்தரவு செய்ய வேண்டாம் நான் தோட்டத்தில் வேலைய முடிச்சிட்டு வந்து பேசறேன் அத்தை' என சொல்லிவிட்டு நடந்தான். வாசனின் வார்த்தையை பெரிதும் மதித்தார் கமலா,

மாதவியை தொந்தரவு செய்யவே இல்லை. இவரா வாசன் தனக்கு மருமகனாக வரக்கூடாது என நினைப்பார்.

வாசன் தோட்டம் சென்றான். அங்கு மாமா உழுது முடித்து இருந்தார். முத்துராசு அதற்கு முன்னமே அங்கு வந்து இருந்தான். 'என்ன தோட்டத்துக்கு வந்துட்ட' என முத்துராசு கேட்டான். 'உதவி பண்ணலாம்னு தான்' என்றான் வாசன். பொன்னுராஜ் 'என்ன மருமகனே நாங்க இரண்டு பேர் இருக்கோமே எதுக்கு இந்த நேரத்தில' என்றார். 'பூசணிக்காய் பறிக்கச் சொன்னாங்க அம்மா' என பூசணிக்காய் பறிக்கச் சென்றான் வாசன். தக்காளிப் பழக் கூடைகள் எல்லாம் ஏற்றப்பட்டன. வாசன் உதவிகள் புரிந்தான்.

பொன்னுராஜுவும் முத்துராசுவும் தோட்டத்தில் குளித்தார்கள். நாராயணன் சிலை கண்டு எடுத்த இடம் நோக்கிச் சென்றான் வாசன். 'ஏய் வாசா எதுக்கு இப்போ அங்க போற சீக்கிரம் வா இன்னைக்கு ஊர்ல ஒரு பிரச்சினை பண்ணிட்டு வந்து இருக்கேன் நிச்சயம் அது பொது திண்ணைக்கு வரும் என்ன நடக்குதுனு பார்க்கலாம்' என முத்துராசு கத்தினான். 'பிரச்சினையா' என்றார் பொன்னுராஜ். 'ஆமா அந்த மாரிமுத்து தான் ஊருக்கு வந்த தாத்தாவை கொன்னான்னு சொல்லி அவன் வீட்டுல சண்டை போட்டு வந்து இருக்கேன் இதை கேட்டு அந்த வினாயகம் பொது பேச்சு பேசுவார்ல' என்றான் முத்துராசு. 'எதுக்கு இப்படி அநாவசியமா வம்பு இழுக்கற' என்றார் பொன்னுராஜ். 'இப்படி பண்ணலைன்னா ஊரோட ஒற்றுமை குலைஞ்சிரும் திருவிழாவுக்குனு மட்டும் கூடாம இப்படி கூட்டம் போட்டாத்தான் எல்லாரும் எல்லாரையும் வந்து பார்ப்பாங்க' என்ற முத்துராசுவை என்ன சொல்வது என தெரியாமல் பார்த்தார் பொன்னுராஜ்.

வாசன் அந்த இடத்தில் நின்று கொண்டு ஒரு வாக்கியம் சொன்னான். 'உயிரினில் உயிராகி உண்மையாய் உண்மை மறைத்து காட்டும் உன் தயவு இனி எனக்கு வேண்டும்' கிளம்பினான். நாராயணனுக்கு செய்யாவிட்டாலும் எனச் சொன்னவன் யார் தயவை கேட்கிறான். தெளிவின் நிலைக்கு போனவன் தெளிதல் எளிதல் இல்லை என திரும்பி செல்வானோ? தெளிந்தோம் இனி அனைவரையும் தெளியச் செய்வோம் என எண்ணிக் கொண்டானோ? 'வாசா வாப்பா' என முத்துராசு

அழைத்தான்.

வாசன் தனது வீட்டினில் எல்லாம் இறக்கி வைத்துவிட்டு பொன்னுராஜுவுடன் அவரது வீடு சென்றான். முத்துராசு இன்றைய கூட்டம் எதிர்பார்த்தவனாய் அவனது வீட்டுக்குச் சென்று சாப்பிட்டு விட்டு வேடிக்கை ஆரம்பிக்க வேண்டும் எண்ணினான்.

மாதவி தியானம் கலைத்து இருந்தாள். தன்னை வாசன் தேடி வந்ததை அம்மா சொன்னதும் அதே வேளையில் தொந்தரவு செய்ய வேண்டாம் என கூறியதும் கேட்டு அவன் வரவிற்காக காத்துக் கொண்டு இருந்தாள். வாசன் மாதவியைப் பார்த்தான். மாதவி அகம் மலர்ந்தாள்.

'சாப்பிடுங்க தம்பி' என்றார் கமலா. 'இருக்கட்டும் அத்தை வீட்டுலப் போய் சாப்பிட்டுக்கிறேன்' என்றான் வாசன். 'சாப்பிடுங்க மருமகனே' என்று பொன்னுராஜுவும் சொன்னார். வாசன் அவருக்கும் மறுப்பு தெரிவித்துவிட்டு மாதவியிடம் 'மாதவி நீ எழுதி வைச்சிருக்க ''உருகும் உயிர்'' கதைப் பத்திரமா வைச்சிருக்கியா வைச்சி இருந்தா இப்போ எனக்கு வேணும் தரமுடியுமா' என்றான் வாசன். மாதவி 'பத்திரமா வைச்சிருக்கேன் மாமா வாங்க எடுத்து தரேன்' என்றாள் மாதவி.

இருவரும் மாடியில் இருந்த மாதவியின் அறைக்குச் சென்றனர். மாதவியின் அறை மிகவும் சுத்தமாக இருந்தது. எல்லாப் பொருள்களும் அழகாக அடுக்கி வைக்கப்பட்டு இருந்தன. மேசையில் வாசனும் மாதவியும் சேர்ந்து எடுத்துக் கொண்ட படம் அலங்கரித்துக் கொண்டு இருந்தது. அது மாதவி பத்தாவது படித்தபோது எடுத்த படம்.

'என்னது நம்ம படத்தை இவ்வளவு அழகா பிரேம் போட்டு வைச்சிருக்க இத்தனை நாள் இங்க இல்லையே' என்றான் வாசன். 'இந்த படத்தை எப்பவும் என்கூடவே நான் வைச்சிருப்பேன் மாமா எனக்கு இன்ஸ்பிரேசன் நீங்க தான்' என்றவளை புன்னகையுடன் பார்த்தான் வாசன். 'படிக்கிற இடத்தில ஒண்ணும் சொல்ல

மாட்டாங்களா' என்றான் வாசன். 'என்ன சொல்வாங்க பார்த்தவுடனே முறைப்பையன் அப்படின்னு அவங்களுக்கு எப்படி தெரியும் யாருடி இது இவ்வள அழகா இருக்கா அப்படினு கேட்பாங்க உங்க படத்தைப் பார்த்து என்னுடைய குரு அப்படினு சொல்வேன் தேவி சொன்னதில்லையா மாமா' என்றாள் மாதவி. 'குரு ?' எனப் புரியாமல் கேட்டான் வாசன். 'ம்ம்அது இருக்கட்டும் மாமா எதுக்கு இப்போ இந்த கதையை கேட்கறீங்க நான் எழுதி நீங்க படிக்கச் சொன்னப்ப படிக்கலை சாமியைப் பத்தி எங்கிட்ட பேச வேணாம்னு சொல்லாம அப்ப சொன்னீங்க தான' என்றாள் மாதவி. 'அப்ப சொன்னேன் இப்ப படிக்கனும்னு தோணுது தா மாதவி நாளைக்கே தந்துரேன்' என்றான் வாசன்.

இக்கதையை எழுதி முடித்ததும் முதலில் வாசனிடம்தான் தந்தாள். வாசன் கதையின் கரு என்ன எனக் கேட்டான். 'நம்ம ஊர் பெருமாள் கோவில்ல எப்படி பெருமாள் வந்தார் அப்படிங்கிறதைப் பத்திய கதை' என்று சொன்னதும் படிக்க மறுத்துவிட்டான் வாசன் ஆனால் பாராட்டத் தவறவில்லை நிச்சயம் ரொம்ப நல்லா இருக்கும் இன்னும் எழுது என உற்சாகம் தந்தான். மாதவி மனதோடு ஏற்றுக்கொண்டாலும் அத்தோடு அந்த கதையை பத்திரமாக எடுத்து வைத்தவள் தான் இதுவரைக்கும் யாரிடமும் காட்டவில்லை இக்கதை எழுதி இப்போது நான்கு வருடங்கள் ஆகிறது.

'நீங்களே பத்திரமா வைச்சிக்கோங்க மாமா' என அக்கதையினை எடுத்து தந்தாள். பைண்டிங் பண்ணி இருந்தாள். அக்கதையில் வேறு கைகள் இதுவரை படவே இல்லை என்பது அந்த தாள்களைப் பார்க்கும்போதே தெரிந்தது மாதவியின் எழுத்தே அச்சுப்பதித்தது போன்றுதான் இருக்கும். 'ரொம்ப நன்றி மாதவி வேற கதை எதுவும் எழுதி இருக்கியா' என்றான் வாசன். 'இல்லை மாமா எழுதுன ஒரு கதை இதுதான் அதுக்கப்பறம் எழுதனும்னு தோணலை படிக்கிறதுக்கே நேரம் போதலை மாமா' என்றாள் மாதவி. 'என்னாலதான் எழுதலையா? என்றான் வாசன். 'அப்படி இல்லை மாமா என்னை ஒரு டாக்டராப் பார்க்க அம்மாவும் அப்பாவும் ஆசைப்பட்டதும் எழுத்தெல்லாம் தள்ளி வைச்சிட்டேன் மாமா' என்றாள் மாதவி. 'ம்ம்' என்றான் வாசன்.

'மாமா' என்றாள் மாதவி. 'சொல்லு மாதவி என்ன' என்றான் வாசன். 'என்னோட

நாளனைக்கி நாணல்கோட்டை வரமுடியுமா சில பொருட்கள் வாங்கனும் அப்படியே மாரியம்மன் கோவிலுக்குப் போய்ட்டு வரனும்' என்றாள். வாசனுக்கு இது என்ன இவள் இப்படி திடீர் என கேட்கிறாள் எனப்பட்டது.

'எதுக்கு நாளனைக்குப் போகனும், நாளைக்கேப் போகலாமே' என்றான் வாசன். 'நாளைக்கு வேலன் மாமா சென்னையில் இருந்து வரார் அதனால நாம போறது நல்லா இருக்காது எனக்கு சில வேலைகள் வேற இருக்கு' என்றாள் மாதவி. 'ஓ அத்தை மாமாகிட்ட கேட்டியா?' என்றான் வாசன். 'சரின்னு அம்மா சொல்லிட்டாங்க அப்பா எப்பவும் என்னோட விருப்பத்துக்கு எதிராப் போகமாட்டார், பிறகு கேட்டுக்கிறேன் மாமா ஆனா என்கூட நீங்க கட்டாயம் வரனும் வரமுடியாதுனு சொல்லாதீங்க மாமா' என்றாள் மாதவி. 'ம் சரி அது எப்படி சித்தப்பாவும் சித்தியும் நாளைக்கு வரது உனக்குத் தெரியும் பாரதிகிட்ட பேசினியா' என்றான் வாசன்.

என்ன அறிவு என மனதுக்குள் நினைத்துக் கொண்டு 'பாரதிகிட்ட நான் பேசலை மாமா, அம்மா தான் சொன்னாங்க ஆனா என்னால நாளைக்கு போகமுடியாது மாமா, நாளனைக்கி 6.30க்கு போவோம்' என்றாள் மாதவி. 'என்னது 6.30க்கா அதுக்கு அவ்வளவு காலையில எந்த கடை திறந்து இருக்கும் மளிகைக் கடை தான் இருக்கும்' என்றவனிடம் 'ம்ம் கோவில் திறந்து இருக்கும் மாமா நாம போறதுக்கு எட்டு மணி ஆயிரும் தான' என்றாள் மாதவி. திட்டம் போட்டு வைத்தவள் போல் அல்லவா பேசுகிறாள். வாசன் யோசிப்பதைக் கண்டு 'மாமா எனக்கு நிறைய வேலை இருக்கு, ஒரு வாரத்தில பரீட்சைக்குப் போகனும்' என்றதும் கதையினை எடுத்துக் கொண்டு 'சரிப் போவோம' என சொல்லிவிட்டு கிளம்பினான்.

பெருமாள் கோவிலுக்கு போகவேண்டும் என நினைத்தவனுக்கு மாதவியின் பேச்சினைக் கேட்டதும் தட்டவும் முடியவில்லை, சரி தங்கையிடம் சொல்லிப் பார்ப்போம் என வீட்டிற்குச் செல்வதற்கு மாமாவிடமும் அத்தையிடமும் சொல்லிவிட்டு கிளம்பினான். மாதவி தனது கதையினை வழிய வந்து கேட்டு வாங்கிப் போகும் வாசனை மனதுக்குள் நினைத்துக் கொண்டாள்.

முத்துராசுவினை பெரியவரை வீட்டிற்கு அழைத்துப் போனார்கள். மாரிமுத்துவும் அங்கு இருந்தார். முத்துராசு பெரியவர் வீட்டிற்குப் போனதும் 'அய்யா, ஊர் பொதுக் கூட்டம் போட்டு பேசாம இப்படி வீட்டுல வைச்சி பேசினா என்ன அர்த்தம்யா' என்றான். 'இரு ராசு உன்னை ஒண்ணுமே கேட்கலை அதுக்குள்ள இப்படி முந்தினா எப்படி உட்கார் ராசு' என்றார் பெரியவர். பெரியவருக்கு வாசனைப் பற்றிய சிந்தனை வேறு. மாரிமுத்து அமைதியாக இருந்தார். 'இது ஒண்ணும் ஊர் கூட்டி பேசற விசயம் இல்லை, மாரிமுத்து அவர் கொன்னதாகவே இருக்கட்டும், போலிஸில சரண் அடையறேன்னு சொல்றான் என்ன சொல்ற' என்றார் பெரியவர். முத்துராசு திடுக்கிட்டுப் போனான். 'ஐயா நான் சும்மா விளையாட்டுக்குத்தான் பேசினேன் அப்படி எல்லாம் நம்ம ஊர் மானம் போக வேணாம் நாம எதுனாலும் நம்ம ஊர்லயே பேசி மூடிச்சிருவோம்தான் நீங்க சொன்னா சரிதான்யா அந்த கிழவருக்கு நேரம் வந்துருச்சுப் போய்ட்டாரு' என முத்துராசு சொன்னதும் பெரியவர் தனது சிந்தனை மறந்து சிரித்தார். 'இப்படித்தான் இந்த ராசு விளையாட்டாப் பேசி பேசி வில்லங்க ராசுனு பேரு வாங்கிட்டான்' என்றார் காசி. தனது தவறுக்கு வருத்தம் தெரிவித்துவிட்டு ஊரைக் கூட்ட தோது இல்லாம போச்சே இப்படியா போலீஸ்னு பேசுவான் என தன்னை தானே திட்டிக் கொண்டு பொது திண்ணைக்குப் போனான் அங்கு ஊர் கூடித்தானே இருக்கிறது என்ன ஒற்றுமை குறைந்தது என கண்டான் இந்த முத்துராசு.

பொன்னுராஜ் வந்தார். 'என்ன ராசு ஊரைக் கூட்டிட்டியா' என்றார். 'அட போப்பா அந்த மாரிமுத்து அதிகமா நன்றி விசுவாசமா இருக்கான் அந்த வினாயகம் பண்ணின உதவிய மனசில வைச்சிக்கிட்டு அவனை போலிஸில பிடிச்சுக் கொடுத்தாக் கூட பராவாயில்லைனு சொல்லிட்டான் என்னதான் இருந்தாலும் நம்ம ஊர்ல' என்றான் முத்துராசு. 'ரொம்பத்தான் அக்கறைப்படற ஆனாலும் நீ பேசறத நிறுத்தப் போறியா அதுமட்டும் மாட்ட' என்றார் பொன்னுராஜ். 'இனிமே குறைச்சிக்கிறேன்' எனச் சொல்லி முடித்ததும் யாரோ ஏதோ சொல்ல அவருடன் வாக்குவாதம் பண்ணினான் முத்துராசு. எவர் சொல்லி இவர் திருந்த.

வீட்டிற்குச் சென்ற வாசன் தந்தை அமர்ந்து இருப்பதைக் கண்டான். புன்னகை புரிந்தவாறே வாசன் தங்கையினை அழைத்தான்.

ராமமூர்த்தி வாசனை அழைத்தார். 'இந்தாப்பா எல்லா விபரமும் சரியா இருக்கா அப்படின்னு சரி பார்த்துட்டு கணக்கு எல்லாம் எழுதி வைப்பா, அப்புறம் சோலையரசபுரத்தில என்னோட நண்பன் இன்னைக்கு புது கடை திறந்து இருக்கான் காய்கறிகள் எல்லாம் அங்கேயே போடச் சொல்லி இருக்கான் ரொம்ப நாளா இப்படி பண்ணனும்னு ஆசை அவனுக்கு, இப்பத்தான் நேரம் வந்தது போல, ஏற்றுமதி பண்ணப் போறானாம் எனக்கு முன்னுரிமை தந்து இருக்கான் இனிமே விளையற விளைச்சல் எல்லாம் அவன் கடையில போட்டுரலாம் மனசுக்கு ரொம்ப சந்தோசமா இருக்குப்பா' என்றார். 'ரொம்ப சந்தோசமான விசயம்ப்பா' என வாசன் கூறினான்.

தேவகி வாசனை அழைத்ததை கேட்டு 'என்ன அண்ணே' என்று வந்தாள். 'தேவி இங்க வா' என தேவியை அழைத்துச் சென்றான் வாசன். 'நீ மாதவியோட நாளன்னைக்கி நாணல்கோட்டை வரைக்கும் போய்ட்டு வரமுடியுமா தேவி' என்றான் வாசன். 'என்னால போக முடியாதுண்ணே அதனாலத்தான் உன்னை வரச் சொல்லி இருக்கா, எனக்கு படிக்க வேண்டி இருக்குண்ணே இரண்டு பேரும் போனோம்னா அப்புறம் ஒரு நோட்சும் எழுத முடியாது அதனால அவளோட நீ போய்ட்டு வா அண்ணே' என்றாள் தேவகி. வாசனுக்கு இனிமேலும் தன் தங்கையை வற்புறுத்த விருப்பம் இல்லை. தந்தை கொடுத்த கணக்கு விபரங்களை எல்லாம் ஒழுங்காய் அடுக்கி வைத்து விட்டு நாளை எழுதலாம் என மாதவியின் "உருகும் உயிர்" படிக்க ஆரம்பித்தான்.

ஒவ்வொரு வரிகள் படிக்க ஆரம்பித்து தன்னையே மறக்க ஆரம்பித்து இருந்தான் வாசன். அம்மா சாப்பிட அழைத்தது கூட அவனது காதுகளில் விழவில்லை. ஒரு விசயத்தில் ஒன்றிப் போய்விடுவோமானால் நம்மைச் சுற்றி என்ன நடக்கிறது என்பது கூட நமக்கு தெரியாது. 'அண்ணே அம்மா சாப்பிட கூப்பிடறாங்க அப்பா காத்துகிட்டு இருக்கார் இங்க என்ன பண்ற' என தேவகி மாடிக்கு வந்து வாசனை

தட்டி அழைத்தாள். 'இதோ வரேன்' என கதையினை மூடி வைக்க மனம் இல்லாமல் வைத்துவிட்டு எழுந்து சென்றான். அனைவரும் அமர்ந்து சாப்பிட்டார்கள்.

சாப்பிட்டுவிட்டு திரும்பவும் மாடிக்குச் சென்றான் வாசன். கதையினை படிக்க ஆரம்பித்தான். அப்பா வந்தார், 'என்னப்பா கணக்கு எல்லாம் சரியா இருக்கா' என்றார். 'இன்னும் எழுதலைப்பா, எல்லாம் பண்ணிட்டு நாளைக்கு சொல்றேன்பா' என்ற வாசனை 'சரிப்பா' என கூறிவிட்டு சென்று விட்டார் ராமமூர்த்தி. கதையினை மீண்டும் ஆவலுடன் படிக்க ஆரம்பித்தான் வாசன்.

பெரியவர் சாப்பிட விருப்பம் இன்றி, சாப்பிட சொல்லியும் வேண்டாம் என கூறிவிட்டு பூஜை அறையில் தியானம் செய்யச் சென்றுவிட்டார். எல்லாம் வாசனைப் பற்றிய நினைவுகள் அவருக்கு பெரும் அழுத்தம் தர ஆரம்பித்து இருந்தன. எல்லாம் நாராயணனின் விருப்பத்தின் பேரில் நடக்கிறதெனில் எதற்கு மனம் கலக்கம் கொள்ளவேண்டும்.

வாசன் ஒவ்வொரு வரிகளில் உள்ள அர்த்தம்தனை ரசித்து படித்து கொண்டு இருந்தான்,எவ்வளவு சிறப்பாக எழுதி இருக்கிறாள் என மனதுக்குள் பாராட்டிக்கொண்டே கதையினை முழுவதும் படித்தான். இக்கதை உண்மையா அப்படி உண்மை எனில் இதை யார் மாதவிக்குச் சொன்னது என அறிந்து கொள்ள ஆசைப்பட்டு மாதவி வீட்டுக்கு செல்ல நினைத்து மணியை பார்த்தான் மணி 11 ஆகி இருந்தது இனி காலை தான் சென்று கேட்க வேண்டும், தூங்கி இருப்பாள் என நினைத்துக் கொண்டான் வாசன்.

வாசனுக்கு தூங்க விருப்பம் இல்லை, வேக வேகமாக தாள்கள் திருப்பி கதையின் ஒரு பகுதியை திரும்பவும் வாசிக்க ஆரம்பித்தான் "நாச்சாரம்மாள் வண்ணமயமான தெருவினில் நின்று கொண்டு மனதினில் நாராயணப் பெருமாளை நினைத்து வழிபட்டு கொண்டு இருந்தாள்.

27.

வாசன் தொடர்ந்து அந்த பகுதியினை வாசிக்க ஆரம்பித்தான். "ஊரில் உள்ள

மக்கள் எல்லாம் திரண்டு இருந்தனர். நடு இரவு ஆகியும் சிறு குழந்தைகள் முதல் முதியவர்கள் வரை அந்த அதிசய நிகழ்வினை காண்பதற்கு காத்துக் கொண்டு இருந்தனர். ஊரின் நாட்டாமையும் ஊரின் பூசாரியும் தகதகவென நெருப்பாய் பிரகாசித்துக் கொண்டு இருந்த நெருப்புக் கோளங்களை ஒரு சட்டியில் எடுத்து வரச்சொன்னார்கள். எரிக்கப்பட்ட கட்டையானது நெருப்புத் துண்டுகளாய் மாறி நெருப்புக்கோளங்கள் போன்று இருந்தது. நாச்சாரம்மாள் வழிபாட்டினைத் தொடர்ந்து கொண்டு இருந்தார். மூதாட்டிகள் அவரைச் சுற்றி ஒரு வளையம் மூன்று அடிகள் தள்ளி அமைத்து இருந்தனர்.

நாச்சாரம்மாளின் கண்களில் இருந்து கண்ணீர் சொட்டாய் தரையில் விழுந்தது அது பூமியினை பெரும் குளிர்ச்சி அடையச் செய்தது. பூசாரி நெருப்புக் கோளங்களை நெருப்புக் கடத்தா பொருளின் உதவியுடன் வாங்கிக் கொண்டு வளையம்தனை விளக்கி நாச்சாரம்மாளின் முன் வந்தார். 'தாயே சேலையைப் பிடிச்சி மடி ஏந்து' என்று சொன்னதும் ஊரில் உள்ள அனைவரும் கோவிந்தா கோவிந்தா கோவிந்தா நாராயணா நாராயணா நாராயணா பெருமாளே பெருமாளே பெரூமாளே என கோஷம் இட்டனர். பூசாரியின் கைகள் நடுங்கியது. அந்த அரும்பெரும் காட்சியினைக் காண ஒருவரையொருவர் முன்னும் பின்னும் தள்ளிக் கொண்டு கால்களை சிறகுகளாக மாற்றிகொண்டு இருந்தனர். முன் இருப்பவரின் தோள்களில் கைகள் வைத்து அழுத்தியது கூட உணராமல் மற்றவர்கள் தாங்கிக் கொண்டு இருப்பதைக் காணும்போது இந்நிகழ்ச்சி எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை உணர்த்திக் கொண்டு இருந்தது.

நாச்சாரம்மாள் சேலையின் மடியினை தாங்கிப் பிடித்தார், இம்முறை ஒவ்வொருவரும் அமைதியாய் பெருமாளே பெருமாளே என வேண்டிக் கொண்டு இருந்தனர், பூசாரி நெருப்புக் கோளங்களினை சேலையின் மடியில் போட்டார். 'கோவிந்தா' என்னும் கோஷம் விண்ணைப் பிளந்தது. நெருப்புக்கோளங்களை தனது சேலையில் நாச்சாரம்மாள் இன்னும் தாங்கிக் கொண்டு இருந்தார். ஒரு நெருப்புக் கூட சேலையினை எரிக்கவில்லை தரையில் விழவும் இல்லை. அந்த நிகழ்வினைக் கண்டு அனைவரும் 'தாயே' என விழுந்து வணங்கினர். பூசாரியும் விழுந்து வணங்கினார். 'நம்ம ஊர்ல தெய்வம் குடி இருக்கு' என அனைவரும்

கூறினர். பூசாரி நெருப்புக் கோளங்களினை சட்டியில் வாங்கிக் கொண்டார். ஊரெல்லாம் நாச்சாரம்மாளினை தெய்வம் என கொண்டாடியது. மறுநாள் காலையில் நாச்சாரம்மாள் வைகுண்டப் பதவி அடைந்தார். ஊரெல்லாம் சோகத்தில் மூழ்கியது".

வாசனுக்கு அந்த பகுதி படித்ததும் மிகவும் ஆச்சரியமாக இரூந்தது. இது எல்லாம் எப்படி சாத்தியம் ஒருவேளை அந்த சேலையானது நெருப்பு தாங்கும் பொருளால் செய்யப்பட்டு இருக்குமோ? என எண்ணும் போதே நாராயணா என வாசனின் மனதில் குரல் கேட்பது போல் இருந்தது.

பல கேள்விகளுடன் வாசன் உறங்கினான். அத்தனை கேள்விகளுக்கும் அவனது உறக்கத்திலா பதில் கிடைக்கப் போகிறது? பதில் இல்லா இரவாக கடந்தது. அதிகாலையிலே எழுந்து தோட்டம் சென்று கத்தரிக்காய் பறிக்கத் தொடங்கினான் வாசன். ராமமூர்த்தி, ராமம்மாள் மற்றும் பலர் சென்று இருந்தனர். மிகவும் கவனமாக நல்ல நல்ல கத்தரிகாய்கள் எல்லாம் தேர்ந்தெடுத்து மூட்டை கட்டினர். வேலன் தோட்டத்திலும் கத்தரிக்காய் பறிக்கப்பட்டது, இரு தோட்டங்களிலும் பல மூட்டைகள் தேறின. நல்ல விளைச்சல் தான். வாசனை இம்முறை தன்னுடன் வருமாறு ராமமூர்த்தி அழைத்துக் கொண்டு சோலையரசபுரம் சென்றார். அவர் அங்கு புதிதாக கடை திறந்து இருக்கும் தனது நண்பன் தர்மலிங்கத்திடம் வாசனை அறிமுகப்படுத்தினார். 'பையன் பெரியவனா வளர்ந்துட்டானே' என்றார் அவர். வாசனுக்கு முதன் முதலாய் வியாபார நுணுக்கம் கற்றுத் தரப்பட்டது, அப்பாவுடன் பல கடைகளுக்கும் சென்றான் வாசன். இருப்பினும் வாசனுக்கு நாளை பற்றிய நினைவுதான் இன்று இருந்தது. மதிய வேளை நெருங்கியது.

வேலனும் அவரது மனைவியும் சென்னையில் இருந்து வந்து இறங்கினார்கள். சுந்தரனைப் பற்றி நினைக்கையில் அவர்களுக்கு மிகவும் பெருமிதமாக இருந்தது. வாசன் சோலையரசபுரத்தில் இருந்து நேராக சித்தப்பாவின் வீட்டிற்குச் சென்று நலம் விசாரித்துக் கொண்டு பாரதி எழுதிய கடிதம்தனை பெற்றுக் கொண்டு தனது வீட்டிற்குச் சென்றான். சுந்தரனை நினைக்கையில் வாசனுக்கு மிகவும் சந்தோசமாக இருந்தது. அதுவும் சித்தப்பா சித்தி மனதில் தன்னைப் பற்றிய உயர்வான எண்ணம்

இருப்பதை கண்டு நெகிழ்ந்து போனான் வாசன். சுந்தரனின் திறமையால்தான் இது எல்லாம் வந்தது என சாரங்கன் கூறிய விசயத்தையும் கூறினான் வாசன். பெற்றவர்களின் மகிழ்ச்சி பெருமடங்கானது.

வீடு வந்ததும் கடிதம்தனை பிரித்தான். கவிதைப் புத்தகம் விபரமும் காசோலையும் இருந்தது. வழக்கமான விசாரிப்புகளைத் தவிர பாரதி கூறியது போல எதுவும் அவ்வளவாக எழுதவில்லை. அடிக்கடி பேசிக் கொள்வதால் என்ன எழுதுவது என நினைத்து இருக்கலாம் போலும். கடிதம்தனை மடித்து வைத்துவிட்டு குளிக்கச் சென்றான் வாசன்.

பெரியவர் காலையிலும் மதியமும் சாப்பிடவில்லை. தண்ணீர் கூட குடிக்கவில்லை. சிவகாமியும் பாண்டியும் எவ்வளவோ சொல்லியும் அவர் கேட்கவில்லை. பிடிவாதம் பிடிக்கிறாரே எனப் பட்டது அவர்களுக்கு. எதற்காக செய்கிறேன் என்பதை அவர் தெளிவாகச் சொல்லி இதனை வெளியில் சொல்ல வேண்டாம் என சொன்னதும் அவர்கள் புரிந்து கொண்டனர். காலையில் குளித்துவிட்டு மீண்டும் பூஜை அறைக்குள் சென்றவர்தான்! தெய்வங்களை முறையாக அணுகுவோமானால் எந்த துன்பங்களும் நம்மை நெருங்குவதில்லை.

பாரதி வாசனைப் பற்றிய சிந்தனையில் இருந்தாள். படிக்க விருப்பமின்றி கிருத்திகா கேட்ட கேள்விக்கு பதில் சொல்ல முடியாமல் திணறினாள். கிருத்திகாவும் பாரதியின் சிந்தனையினை திசை திருப்ப முயற்சி செய்தாள். பாரதிக்கோ நாளை ஒரு நாள் மட்டும் கழிந்து விடாதா என கவலையுடன் கடவுளை மனதில் வேண்டிக் கொண்டே இருந்தாள். மருத்துவ புத்தகங்கள் மந்திரப் புத்தகங்களாக இருந்திருக்கக் கூடாதா என மனதுக்குள் கேட்டுக் கொண்டாள். கிருத்திகா பாரதியின் நிலை கண்டு தானும் கவலையுற்றாள்.

குளித்துவிட்டு வந்த வாசனிடம் 'மாமா, நாளைக்கு காலையில நாணல் கோட்டைப் போறோம் தான மாமா' என்றாள் மாதவி. 'எங்க அண்ணா அப்பா?' என்றாள் தேவி. 'போவோம்' என மாதவிக்கு பதில் சொல்லிவிட்டு 'அப்பா அவர் நண்பரோட கடையில சேர்ந்து வியாபாரம் பண்றார் இனிமே அங்க இங்க அலையத்

தேவையில்லை நல்ல வசதியாப் போச்சு' என்றான் வாசன். 'நீங்க சித்தப்பா சித்தியை பார்த்தாச்சா' என்றதும் 'ம் பார்த்தாச்சு மாமா' என்றாள் மாதவி.

'மாதவி, நீ எழுதி இருக்க அந்த கதை இந்த ஊர்ல நடந்த உண்மையான விசயம்' என்றான் வாசன். மாதவி ஆச்சரியத்துடன் 'அப்படியா மாமா யார் மாமா உங்களுக்கு இந்த இரகசியம் சொன்னாங்க, எழுதுனது நான் அதுவும் ஒரு கற்பனை கதை எனக்கே இப்படி சொல்றீங்களா' என்றாள் மாதவி. 'எவ்வளவு பிரமாதமா ஒரு உண்மை விசயத்தை எழுதி இருக்க கற்பனை கதையா' என்றான் வாசன். மாதவி 'மாமா அது ஒரு கதை எப்படி பெருமாள் வந்து இருப்பாருன்னு கற்பனை பண்ணி எழுதினேன்' என்றாள். வாசன் கலகலவென சிரித்தான் 'அந்த நாச்சாரம்மாளுக்குனு வந்தது தான் இந்த பெருமாள் கோவில்னு ஒரு அழகான உண்மையச் சொல்லி இருக்க இப்ப சொல்லு மாதவி யார் உனக்கு இந்த விசயம் சொன்னாங்க' என்றான் வாசன். தேவகி இவர்கள் என்ன பேசுகிறார்கள் எனப் புரியாமல் பார்த்தாள். 'மாமா அது என்னோட கற்பனை கதை' என்றாள், 'இல்லை உனக்கு உண்மை தெரிஞ்சு இருக்கு, இதோ அந்த நாச்சாரம்மாள் வாழ்ந்த வீட்டை நான் காட்டுறேன் வா' என அழைத்தான் வாசன். மாதவிக்கு மனதுக்குள் பயம் வந்தது.

மாதவியினை அழைத்துக்கொண்டு நாச்சாரம்மாள் வாழ்ந்த இல்லத்திற்கு அழைத்துச் சென்றான் வாசன். வீடு மிகவும் சின்னதாக இருந்தது. பராமரிக்கப்பட்டு வருவது போல் இருந்தது. வீட்டினில் யாரும் தங்கி இருக்கவில்லை. ‘இதுதான் வீடு’ எனக் காட்டினான் வாசன். வீடு வடமேற்கில் இருந்தது. ஊரின் அந்த எல்லைக்கு அதுதான் கடைசி வீடு எனச் சொல்லலாம். வீட்டைச் சுற்றி கருவேல மரங்கள் இருந்தன, வீட்டிற்குள் செல்லும் பாதையும் இரண்டு அடி சுற்றளவும் சுத்தமாகத்தான் இருந்தது. அவ்வீட்டில் இருந்து ஒரு 300 மீட்டர் தள்ளித்தான் பல வீடுகள் இருந்தன. ‘இங்க யாரும் வரமாட்டாங்களா மாமா’ என்றாள் மாதவி. ‘வருவாங்க, இந்தப்பக்கமாத்தான் காட்டுக்கு எல்லாம் போவாங்க பாதை பளிச்சுனு இருக்கு பார்த்தா தெரியலையா ஊருக்கு வந்தா கோவில் வீடுனு மட்டும் இருக்கக்கூடாது ஊரெல்லாம் ஒரு சுத்தாவது சுத்திப் பார்க்கனும்’ என்றான் வாசன்.

‘அப்படின்னா அந்த நாச்சாரம்மாளுக்கு அவங்களோட சந்ததிங்க யாரும்

இருக்காங்களா மாமா' என்றாள் மாதவி. 'உண்மை தெரிஞ்ச உனக்கு தெரியாதா எனக்கு என்னத் தெரியும்' என்றான் வாசன். 'மாமா திரும்பவும் சொல்றேன், எனக்கு எதுவுமே தெரியாது நானா கற்பனை பண்ணி எழுதினேன் இந்த பெருமாள் எப்படி வந்தா எனக்கு என்ன இப்படியெல்லாம் ஒருத்தர் இருப்பாங்கனு எனக்கு எப்படித் தெரியும் அந்த கதையில வர நாச்சாரம்மாளும் இந்த நாச்சாரம்மாளும் ஒண்ணுதான்னு உங்களுக்கு எப்படித் தோணுச்சு மாமா' என்றாள் மாதவி.

'பேச்சிப்பாட்டி தான் இந்த விசயம் சொன்னாங்க நீ எழுதன மாதிரியே தான் இருந்தது அவங்க சொன்னதும். அந்த நாச்சாரம்மாளை எல்லாரும் மறந்துட்டாங்க என் வயசுக்காரங்களுக்கு ஒரு சிலருக்கு மட்டும் தான் தெரியும் என்னோட தாத்தா சொல்வார் அது என் மனசுக்குள்ள பதிஞ்சுப் போச்சு ஆமா உனக்கு எப்படி தெரிய வந்ததுனு அந்த பாட்டி கேட்டாங்க, நான் கதைப் படிச்சேன்னு சொல்லிட்டு தோட்டம் போய்ட்டேன்' என்றான் வாசன். 'ஓ பேச்சிப்பாட்டிக்கு நல்ல கதை சொல்லத் தெரியும் போல 150 வருசம் முன்னால நடந்த ஒரு விசயத்தை எந்த தாத்தா சொல்லி இவங்களுக்கு ஞாபகம் இருக்குதாம் விவரமான பாட்டி தான் மாமா' என்றாள் மாதவி. '150 வருசம்னு கணக்கெல்லாம் எப்படி நீ சரியா கதையில எழுதுன அதுவும் அந்த சேலை விசயம் எப்படி விவரிச்ச, ஒரு லாஜிக் இல்லாம கதை எழுதாத என்ன' என்றான் வாசன். 'லாஜிக் இருந்தா அது பேரு கதை இல்லை மாமா, உண்மையான விசயத்துக்குத் தான் லாஜிக் எல்லாம் பார்க்கனும், இப்போவாவது நம்புங்க அது கதை' என்றாள் மாதவி.

வாசன் மாதவியை அந்த வீட்டிற்குள் அழைத்தான். மாதவி உள்ளே செல்ல மறுத்துவிட்டாள். 'இப்போ உள்ளே வா' என மறுபடியும் அழைத்தான். வீடு மிகவும் சுத்தமாக இருந்தது. மாதவி தயங்கி தயங்கி வீட்டினுள் சென்றாள். 'என்ன மாமா இவ்வள சுத்தமா இருக்கு, யாரு இங்க வராங்க போறாங்க' என்றாள் மாதவி. 'இப்போ அந்த நாச்சாரம்மாள் இங்க தான் நிற்கிறாங்க' என்றான் வாசன். 'என்ன மாமா பயமுறுத்துறீங்க, எனக்கு ஒண்ணும் தெரியல ஒரு அடுப்படி தான் இருக்கு, ஒரு சின்ன அறை இருக்கு மாடி கூட இல்லையே மாமா' என சுற்றி சுற்றிப் பார்த்தாள். வாசன் கலகலவெனச் சிரித்தான். 'நான் பயமுறுத்துறேனா, அந்த சின்ன அறைக்குள்ளாறப் போய் நின்னு பாரு' என்றான். 'மாமா இருட்டா இருக்கு

லைட் இருந்தா லைட் போடுங்க இல்லைன்னா விளக்காவது ஏத்தி காமிங்க இப்படியே நிமிந்தே போனா தலையில இடிச்சிக்க வேண்டியதுதான் எதுக்கு இவ்வளவு சின்னதா ஒரு நிலை வச்சாங்க' என அறையை நோக்கிப் பேசிக் கொண்டு இருந்தவள் திரும்பிப் பார்த்தாள். வாசன் மௌனமாக நின்று கொண்டு இருந்தான். 'மாமா பதில் சொல்லுங்க' என்றாள். 'உள்ளப் போக விருப்பமில்லைன்னா வா வீட்டுக்குப் போகலாம்' என அழைத்தான் வாசன். 'இருங்க மாமா, உள்ளப் போய்ப் பார்க்கிறேன்' என்றாள். 'ம்ம்' என்றான் வாசன்.

மாதவி மெதுவாக அந்த அறைக்குள் நுழைந்தாள். அறையானது இருட்டாய் இருந்தது. அந்த இருட்டில் கூட அந்த விளக்கு பிரகாசமாக தெரிந்தது. அந்த விளக்கின் அருகில் தீப்பெட்டி இருந்தது. தீப்பெட்டியினை எடுத்து விளக்கில் தீபம் ஏற்றினாள். நிமிர்ந்து கூட நிற்க முடியாத அளவுக்கு 4 அடி உயரம்தான் அந்த அறை இருந்தது. தீபத்தின் வெளிச்சம் அறையெல்லாம் பரவியது. அகலம் 6 அடி தான் இருக்கும். நீளம் நான்கு அடி தான் இருக்கும். சுற்றும் பார்த்தாள், எங்குமே எதுவும் வைத்துக் கொள்ள வசதியின்றி ஒரு அலமாரியும் இல்லை. எந்த படங்களும் மாட்டி இருக்கவில்லை. விளக்கும் ஒரு எண்ணெய் பாத்திரமும் தீப்பெட்டியும் கொஞ்சம் திருநீறும் இருந்தது. மாதவி அங்கே அமர்ந்தாள். வாசன் வெளியில் நின்று கொண்டு இருந்தான். பத்து நிமிடங்கள் மேல் ஆகி இருந்தது. தியானத்தில் அமர்ந்துவிட்டாளோ என எண்ணினான் வாசன்.

சிறிது நேரம் கழித்து மாதவி அறையினை விட்டு வெளியில் வந்தாள். 'மாமா உள்ளே போனதும் மனசு எல்லாம் அமைதியா இருந்தது என்னை அறியாம ஏதோ ஒரு தெய்வ உணர்வு உள்ளுக்குள்ள வந்தது மாதிரி இருந்தது, நீங்க போய் பாருங்க மாமா' என்றாள் மாதவி. 'ஆம்பளைங்க யாரும் உள்ளப் போகக் கூடாது, இந்த அறையே அவங்க கட்டினதுதான் வெறும் செம்மண்ணும் கல்லும் குழைச்சி கட்டினது எத்தனை மழை வந்தாலும் எவ்வளவு காத்து அடிச்சாலும் இந்த வீடு இதுவரைக்கும் எதுவும் பாதிக்கப்பட்டது இல்லை மாதவி' என்றான் வாசன்.

'மாமா அவங்க அப்படி சொன்னாங்களா?' என்றாள் மாதவி. 'அவங்க சொல்லலை, அப்ப இருந்தவங்க பண்ணின முடிவு காலம் காலமா தொடர்ந்து வருது நிறையப்

பேருக்கு இவரை மறந்து போச்சு இந்த வீட்டை யாருமே இதுவரைக்கும் மாத்தி அமைக்கனும்னோ எதுவும் செய்யனும்னோ தோணலை. அப்படியே இருந்துட்டு வருது நீ சொல்ற மாதிரி எல்லாருக்கும் இந்த மாதிரி தெய்வ உணர்வு எல்லாம் உள்ள போனா வரது இல்லை நீ தான் சொல்ற புதுசா' என்றான் வாசன். 'உண்மைதான் மாமா, உள்ள போனதும் எனக்குள்ள ஏற்பட்ட அந்த உணர்வுகளை என்னால வார்த்தையால விளக்க முடியாது மாமா ஆனா இந்த வீடு எல்லாம் பத்தி என் கதையில நான் எழுதலையே மாமா, எனக்கு இவங்களைப் பத்தி உண்மையாவே தெரியாது மாமா' என்றாள் மாதவி. 'சரி நம்புறேன், நீ எங்கிட்ட எப்பவும் உண்மைதான் பேசுவ எனக்கு தெரிஞ்ச அளவுகூட உனக்குத் தெரியாதது ஆச்சரியமா இருக்கு அப்படி இருக்குறப்ப எப்படி இந்த உண்மையை எழுத முடிஞ்சதுனுதான் நான் கேட்டேன்' என்றான் வாசன். 'கற்பனையா எழுதறது சில நேரங்கள உண்மையோட ஒத்துப்போகிறதுக்கு அதிக வாய்ப்பு இருக்கு மாமா' என கூறிக்கொண்டே மாதவி வாசனின் நெற்றியில் திருநீறு இடப்போனாள். 'என்ன பண்ற' என கைகளைத் தட்டிவிட்டான். 'திருநீறு மாமா' என்றாள் மாதவி.

'அங்க இருக்கறதை ஆம்பளைங்க யாரும் அணியக்கூடாது' என்றவனை 'என்ன மாமா பழைமையில இப்படி ஊறிப்போயிருக்கீங்க, உள்ளப் போகக்கூடாது திருநீறு அணியக்கூடாது யார் மாமா இப்படி எல்லாம் சொன்னது நான் சொல்றேன் மாமா நீங்க திருநீறு வைச்சிக்கோங்க உள்ளேயும் போய்ப் பாருங்க' என்றாள் மாதவி. 'இல்லை, ஆம்பளைங்க தெரியாமக் கூட யாரும் உள்ள போனது இல்ல சின்னப்பையன்க கூட' என்றான் வாசன். 'அப்படி எல்லாம் ஒண்ணும் இல்ல மாமா எப்படியோ இதையெல்லாம் நம்பி வாழ்ந்துட்டு வரீங்க வாங்க மாமா வீட்டுக்குப் போகலாம்' என்றாள் மாதவி. மீண்டும் திருநீறினைக் காட்டினாள், வாசன் எடுத்துக் கொள்ளவில்லை. 'மாதவி, அவங்களோட சமாதி உள்ள தான் இருக்கு' என்றான் வாசன். 'சரி' என நடந்தாள்.

'யாரு அது' என ஒரு வீட்டின் திண்ணையில் அமர்ந்திருந்த ஆவுடையம்மாள் பாட்டி இவர்கள் இருவரையும் பார்த்துக் கேட்டாள். 'நான் தான் வாசு பாட்டி' என்றதும் 'யாரு ராமு பையனா, எங்க நாச்சாரம்மாளைப் பார்த்துட்டு வரீகளா?' என்றார்.

‘மாமா நீங்க போங்க நான் அந்த பாட்டிகிட்ட பேசிட்டு வரேன்’ என்றவளை ‘நானும் வரேன்’ என பாட்டியிடம் சென்றனர்.

‘பாட்டி இது என் முறைப்பொண்ணு பேரு மாதவி பட்டணத்தில படிக்கிறா’ என வாசன் அறிமுகப்படுத்தினான். ‘பொன்னுராசு மக தான, மகராசி’ என தலையில் சொடுக்கிக் கொண்டார். ‘அந்த வீட்டைப் பராமரிக்கிறது என் பேத்தி தான் அப்படி ஒரு மகராசி நம்ம ஊர்ல இனிப் பிறக்கவாப் போறா, சின்ன வயசுலயே அந்த பெருமாளோட ஐக்கியமாயிட்டா’ என்றார். ‘அந்த மகராசி நம்ம ஊர்ல மறுபடியும் பிறந்துருக்காங்க பாட்டி’ என்றான் வாசன். ‘நாடகத்தில பேசற மாதிரி பேசறயா பேராண்டி’ என தலையினை தடவினார். ‘உன் மாமன் வேசம் கட்டினா அந்த கடவுளைப் பார்க்க மாதிரியில இருக்கும்’ என்றார் அவர். ‘பாட்டி அந்த நாச்சாரம்மாளைத் தெரியுமா’ என்றாள் மாதவி. ‘நான் பார்த்தது இல்லை என்னோட தாத்தா காலத்தில வாழ்ந்த மகராசி இப்ப எல்லாம் நம்மளைச் செய்யச் சொன்னா நாம அந்த நெருப்புல பொசுங்கிப் போவோம்’ என்றார் அவர். வாசன் சிரித்தான். வாசன் சொன்னதையெல்லாம் பாட்டியிடம் கேட்டாள், அதற்கு அவர் ‘என்ன பேராண்டி உள்ளப் போறதுக்கு பயந்துட்டு அப்படிச் சொன்னியா’ என்றவுடன் ‘மாமா’ என்றாள் மாதவி. ‘இல்லை பாட்டி நான் கேள்விப்பட்டதைத் தான் சொன்னேன்’ என்றான் வாசன். ‘ஒவ்வொருத்தர் ஒண்ணு சொல்றாங்க ஆனா அவளோட முழு சரித்திரம் யாருக்கும் தெரியாது அப்படியெல்லாம் ஒண்ணும் இல்லை யாரும் போகலாம் வரலாம், ரொம்ப பேருக்கு அவரைத் தெரியாது அது எல்லாம் கதைன்னு சொல்வாங்க, ஆனா அந்த மகராசி பண்ணினதை நேராப் பார்த்தவங்க இந்த ஊர்லதான் வாழ்ந்து இருக்காங்க இப்ப யாரும் இல்ல’ என்றார். பாட்டி குடிப்பதற்கு மோர் கொண்டு வந்தார். இருவரும் குடித்துவிட்டு நடந்தனர்.

‘மாமா, ஏன் மாமா சில நேரத்தில என்ன பேசறீங்கன்னு தெரியாம என்ன சொல்றோம்னு தெரியாம நடந்துகிறீங்க’ என்றாள் மாதவி. ‘என்ன சொல்ற’ என்றான் வாசன். ‘அந்த நாச்சாரம்மாள் இங்க மறுபடியும் பிறந்து இருக்காங்கனு சொன்னீங்கதான’ வாசன் சிரித்தான். ‘நீ தான் அந்த நாச்சாரம்மாள் உங்க அம்மா கிட்ட போய் கேளு நான் உனக்கு ஒரு சேலை வாங்கி தந்தேனே ஞாபகம் இருக்கா அதை கட்டிகிட்டு இன்னைக்கு என் வீட்டுக்கு வா நெருப்பைப் போட்டு

நிரூபிச்சிரலாம், நான் இப்போ பெரியவர் வீட்டுக்குப் போய்ட்டு வரேன்' என்றான் வாசன். 'முறைப்பொண்ணாம், அதான் இப்படி பேசறீங்களோ? என கூறிவிட்டு நடந்தாள். வாசன் பெரியவரின் வீட்டினை அடைந்தான்.

பெரியவர் இனியும் பூஜை அறையில் அமர்ந்து இருந்தார். வாசன் பெரியவரின் வீட்டினுள் சென்றான். 'அய்யா பூஜை அறையில இருக்காங்க' என்றார் சிவகாமி. வாசன் பூஜை அறைக்குச் சென்றான். பெரியவர் வாசனைப் பார்த்தார். 'வா வாசா' என உள்ளே அழைத்தார். வாசனும் உள்ளே சென்றான். 'நாளைக்கு எங்க போற' என்றார். 'நாணல்கோட்டைக□கு போறேன் அய்யா, என்ன வேலை எதுவும் இருக்கா அய்யா' என்றான் வாசன். 'வேலை இல்லை, எத்தனை மணிக்கு வருவ' என்றார். 'எப்படியும் சாயந்திரம் ஆயிரும்னு நினைக்கிறேன் அய்யா' என்றான். பெரியவரின் மனம் சந்தோசமானது. 'அப்படின்னா நாளைக்கு ஊரிலேயே இருக்க மாட்டியா' என்றார். 'இருக்க மாட்டேன் அய்யா, என் மாமா மகளுக்கு துணையா போறேன், அய்யா உங்களுக்கு பல வருசங்களுக்கு முன்னால இந்த ஊரில வாழ்ந்த நாச்சாரம்மாள் பத்தி எதுவும் தெரியுமா அய்யா' என்றான். 'அவ்வளவா தெரியாது ஆனா தெய்வபக்தியானவங்கனு கேள்விப் பட்டு இருக்கேன், அவங்க பரம்பரை அவங்களோட முடிஞ்சிருச்சு என்ன திடீருன்னு அவங்களைப் பத்தி கேட்கற' என்றார். 'இல்லை அய்யா கேள்விப்பட்டேன் அதான்' என்றான் வாசன்.

'ம்ம் அவங்களைப் பத்தி யாருக்கும் அவ்வளவா உண்மை தெரியாது வாசா, இந்த ... என ஏதோ சொல்ல வந்தவர் அந்த நோட்டு வேணுமா படிக்கப் போறியா' என்றார். 'இல்லை அய்யா இருக்கட்டும் பிறகு படிக்கிறேன் எங்க அப்பா புதுசா அவரோட நண்பரோட சேர்ந்து கடை ஆரம்பிச்சிருக்காரு உங்க நிலத்தில வரது எல்லாம் அங்க அனுப்பினா உதவியா இருக்கும் இன்னும் நிறைய பேரை பாத்துச் சொல்லனும்' என்றதும் 'ஓ ரொம்ப நல்ல விசயம் ஆச்சே, எந்த ஊருல' என□றார் 'சோலையரசபுரம் அய்யா' என்றான் வாசன். 'ம்ம் எப்ப கனகன் நிலத்தில ஆஸ்ரமம் கட்டப் போற' என்றார் பெரியவர். 'அதுக்கு பணம் சேர்க்கனும் திட்டம் எல்லாம் போடனும் இன்னும் கொஞ்ச காலம் போகட்டும்னு இருக்கேன் அய்யா' என்ற வாசனிடம் 'பணத்துக்கு நான் உதவி பண்றேன், ஆரம்பி வாசா' என்றுக் கூறிக்கொண்டே பணம் எடுக்கச் சென்றார்.

'அய்யா நேத்துல இருந்து சாப்பிடலை வாசுத் தம்பி' என்றார் சிவகாமி. 'ஓ ' என்றான் வாசன். 'வாசா இதுல பத்தாயிரம் இருக்கு இப்போதைக்கு சேர்த்து வைச்சிக்கோ இன்னும் நிறைய தாரேன்' என்று பணத்தை தந்தார். 'இருக்கட்டும் அய்யா, ஆரம்பிக்கிறப்ப வாங்கிக்கிறேன்' என்றான். 'பிடி' எனத் தந்தார். 'அய்யா நீங்க சாப்பிடலையா' என்றவனை 'இதோ சாப்பிடப் போறேன்' என சாப்பிட சென்றார். வாசனையும் அழைத்தார், வாசன் பணத்தை வாங்கிக் கொண்டு நடந்தான். ஊரில் உள்ளவர்களிடம் எல்லாம் தனது தந்தையின் நண்பர் கடையினைப் பற்றிச் சொன்னான். இந்த ஊரிலேயே ஆரம்பிச்சிருக்கலாமே என சொன்னவர்களிடம் தர்மலிங்கம் சோலையரசபுரத்துக்காரர் என்பதால் அங்கு வைத்துக் கொண்டார் எனக் கூறி சமாளித்தான், தனது தந்தைக்கு ஆற்றும் உதவியாகவும் இருந்தது.

பாரதிக்கு மனது மிகவும் கலக்கமானது. வாசனிடம் பேசலாமா என நினைத்தவள் கோவிலுக்குச் சென்று வேண்டிக் கொண்டாள். உயிருக்கு ஆபத்து என்றால் அப்படி என்ன அந்த பெருமாள் கோவிலில் இருக்கிறது அதுவும் நாளை என்ன அப்படி நடக்க இருக்கக் கூடும். இந்த விசயத்தை சொல்லாமல் இருந்து இருந்தால் கூட வாசனோ அல்லது பெரியவரோ பெருமாள் கோவில் பற்றி சிந்தித்து இருக்கப் போவதில்லை. ஆபத்து இதனால் தான் வருகிறது என தெரிந்து கொண்டால் ஆபத்தே இல்லாவிட்டால் கூட மனது அந்த ஆபத்து வருவது போல் உருவகம் செய்து கொள்ளும். எதிர்காலம் அறிந்து வாழ்வதில் ஒரு சுவாராஸ்யம் இருக்காது. அடுத்த விநாடியில் என்ன நடக்கும் என தெரியாமல் வாழும் வாழ்க்கை எவ்வளவு அர்த்தம் உள்ளது. முக்காலம் உணர்ந்த ஞானிகளை விட எல்லாம் உணர்ந்தவர்களை விட நாம் வாழும் வாழ்க்கைதான் உன்னதமானது எனச் சொல்லலாமா எனத் தோன்றுகிறது. நம்மைப் போன்ற மனிதர்கள் தான் இந்த தெய்வங்கள் வாழ்வதற்கு மிகவும் உதவியாக இருக்கிறோம். நாளைக்கு அடுத்து என்னவெல்லாம் நடக்கும் என பாரதிக்கு தெரியாமல் போனது ஏன் பெரியவருக்கு தெரியாமல் போனது ஏன்? இந்த நாளை தான் வாசனுக்கு முற்றுப்புள்ளியா? மாதவி செய்வது எல்லாம் பார்த்தால் அவளுக்கு ஏதோ அவளை அறியாமலே தெரிந்து

இருக்கிறது. இல்லை த□ரிந்து கொண்டே தான் செய்கிறாளா? பாரதி நிம்மதியாக வீடு திரும்பினாள்.

மாலை நேரம் முடிந்து இரவு நெருங்கிக் கொண்டு இருந்தது. அப்படியே நேராக சோலையரசபுரம் சென்றுவிட்டான் வாசன். அப்பாவுடன் வீடு திரும்பினான். அப்பா புது வியாபாரம் பற்றி மிகவும் பெருமையாக பேசினார். அவருக்கு எவ்வளவு திருப்தியாக இருக்கிறது என அறிந்து கொண்டான் வாசன். சந்தோசமாக வீடு சேர்ந்தனர். வீட்டில் கண்ட காட்சியால் வாசனது கண்களின் இமைகள் இமைக்க மறுத்தது.

அப்பா கை கால்கள் முகம் அலம்பிக் கொண்டு தனது மனைவியிடம் சென்று வியாபாரம் பற்றி பேசினார். தேவகி வாசனிடம் 'அண்ணே ஒரு மணி நேரத்தை இன்னைக்கு வேஸ்ட் பண்ணிட்ட மாதவிய வெளியில கூப்பிட்டுப் போய், அதான் இனியும் இங்க இருக்கா' என்றாள். தங்கையிடம் மன்னிப்புக் கோரிவிட்டு மாதவியை அழைத்தான் வாசன், பின்னர் அவளைப் பார்த்து 'என்ன மாதவி இது' என்றான். 'நீங்க தான மாமா நீங்க வாங்கித் தந்த சேலையைக் கட்டிக்கிட்டு வரச் சொன்னீங்க அதான் கட்டிட்டு வந்து இருக்கேன் இவ்வளவு நேரம் எங்க போனீங்க நான் இன்னைக்கு இங்க தான் தூங்கப் போறேன் துணியெல்லாம் எடுத்துட்டு வந்துட்டேன் காலையில இங்க இருந்தே கிளம்பிப் போகலாம்' என்றாள். 'சரி சரி, நெருப□பு எல்லாம் எடுத்துப் போடச் சொல்லாத அது அந்த காலத்தில நடந்தது இப்ப எல்லாம் சரிப்பட்டு வராது எனக்கு நீ தான் அந்த நாச்சாரம்மாள். ஆமா என் தங்கச்சிகிட்ட அம்மாகிட்ட எதுவும் அந்த வீட்டைப் பத்தி சொன்னீயா' என்றான் மெதுவாய். 'இல்லை மாமா, சொல்லலை, நான் நாச்சாரம்மாள்னா நீங்க தான் நாராயணனா' என்றாள் மாதவி. 'பேசுவ பேசுவ, சரி நாளைக்குப் பேசுவோம் அப்பா வரார் நீ போய் மனசை குழப்பாம படி நான் தான் அவசரப்பட்டு ஏதோ ஏதோ பேசிட்டேன்' என்று சொல்லிக் கொண்டு இருக்கும்போதே 'என்னப்பா மருமக என்ன சொல்றாங்க' என்றார் ராமமூர்த்தி. வாசன் ஒண்ணும் இல்லை என தலையாட்டிக் கொண்டு அம்மாவிடம் சென்றான். 'பத்திரமா நாளைக்குப் போய்ட்டு வாங்கப்பா' என்றார் அம்மா.

இரவு மெதுவாக நகர்ந்து கொண்டு இருந்தது. ‘மான் தூக்கமா வருது, தூங்கலாமா’ என்றாள் தேவகி. ‘ம்ம் நாளைக்கு முடிஞ்சவரைக்கும் நோட்ஸ் எழுது திருப்பி திருப்பி எத்தனை தடவை தான் படிக்கிறது, இப்பவே எக்ஸாம் வைச்சாக்கூட எழுதிரலாம் போல இருக்கு தேவி’ என்றாள் மாதவி. ‘என்னோட லிஸ்ட் எல்லாம் வைச்சிருக்கத் தான, வீட்டுக்கு சாயந்திரத்துக்குள்ளாற வந்துரு மான்’ என்றாள் தேவகி. இருவரும் உறங்கச் சென்றார்கள். வாசன் உறங்கி வெகு நேரம் ஆகி இருந்தது.

ஊரில் நடு இரவில் சலங்கைச் சத்தம் கேட்கும், எல்லா கிராமங்களிலும் இந்த சலங்கைச் சத்தம் கேட்கும். ஊர்க் காவல் தெய்வம் ஊரைச் சுற்றி வருமாம். எவ்வளவு பாதுகாப்பாக வாழப்பட்ட வாழ்க்கை, இப்போதெல்லாம் ஏனோ சலங்கை சத்தம் கேட்பதாக யாரும் சொல்வதில்லை.

அதிகாலையில் வாசன் எழுந்து குளித்து கிளம்பி இருந்தான். மாதவி உறங்கிக் கொண்டு இருந்தாள். சேவலும் கோழியும் எழுந்து இருந்தன. பால் கறப்பவர்கள் பால் கறந்து கொண்டு இருந்தனர். அம்மா வழக்கம் போல எழுந்து வாசல் பெருக்கி தண்ணீர் தெளித்து கோலம் போட்டு வைத்து இருந்தார். ‘மணி ஆகுது மாதவி கிளம்பலையா’ என்றார் அம்மா. ‘எழுப்பி கிளம்பச் சொல்லும்மா இதோ வந்துரேன்’ என வெளியில் சென்றான் வாசன்.

‘மாதவி மாதவி எழுந்திரும்மா, நேரம் ஆகுது நீ கிளம்ப சரியா இருக்கும்’ என எழுப்பி விட்டார், தூக்கம் கலையாமல் எழுந்தாள். ‘அத்தை மாமா எங்க’ என்றாள் மாதவி. ‘வெளியிலப் போய் இருக்கான், அவன் அப்போதே கிளம்பிட்டான்’ என்றவுடன் பதட்டமானாள் மாதவி. அவசர அவசரமாக கிளம்பினாள்.

வாசன் பூசாரியின் வீட்டுக்குச் சென்றான். ‘பூசாரி அய்யா’ என அழைத்தான். ‘என்ன தம்பி இவ்வளவு அதிகாலையில’ என்றார் அவர். சுமதி நன்றாக உறங்கிக் கொண்டு இருந்தாள். ‘பூசாரி அய்யா எனக்கு பெருமாள் கோவில் சாவி வேணும்’ என்றான். ‘என்ன விசயம் தம்பி, அதுவும் இந்த நேரத்துக்கு எதுனாலும் ஏழு

மணிக்கு மேல ஆகட்டும் தம்பி' என்றார். வாசன் அவரை எப்படி எழுப்புவது எனப் புரியாமல் எழுப்பி இப்பொழுது சாவியை நேரடியாய் கேட்டு அவர் தர மறுப்பதைக் கண்டு தேவையில்லாமல் பண்ணுகிறோமோ எனப் பட்டது. 'இன்னைக்கு நாணல் கோட்டை போறேன் வரதுக்கு நேரம் ஆயிரும் அதான் அதுக்கு முன்னால பெருமாள் கோவில் போகலாம்னு கேட்டேன்' என்றான் வாசன். 'யார்கிட்டயும் இந்த சாவியை தரதில□ல, நான் குளிச்சி கிளம்பறதுக்குள்ள நேரம் ஆயிரும், கருவறையை திறந்துட்டு உடனே மூடவும் கூடாது தம்பி' என்றார் பூசாரி. வாசன் எவ்வளவோ கேட்டும் ஊர் கட்டுப்பாட்டை மீறியது போல ஆகிவிடும் என மறுத்து விட்டார்.

'என்ன அத்தே மாமாவை இன்னும் காணோம், மாமா வந்தா பஸ்ஸுக்கு வரச் சொல்லுங்க' என்று சொல்லிவிட்டு வெளியில் வந்தாள். 'காபி குடிச்சிட்டு போம்மா' என்றார் ராமம்மாள். 'இதோ வரேன் அத்தை' என நேராக பெருமாள் கோவிலுக்குப் போனாள் மாதவி. வாசன் கோவிலின் வாசலில் நின்று கொண்டு இருந்தான். 'மாமா' என அழைத்தாள் மாதவி. 'இன்னும் பேருந்துக்கு நேரம் இருக்குத்தான அதுக்குள்ள என்னைத் தேடி எதுக்கு இங்க வந்த மாதவி யார் நான் இங்க இருக்காங்கனு உனக்குச் சொன்னது' என்றான் வாசன். 'ஜெயமணி தான் சொன்னாங்க நீங்க பெருமாள் கோவில் பக்கம் போறதா, இன்னும் 30 நிமிசம் தான் இருக்கு அதுக்குள்ள கோவிலுக்கு வராட்டா என்ன, பூட்டி இருக்க கதவை உடைச்சி உள்ளப் போகப் போறீங்களா வம்பை எதுக்கு மாமா நீங்களே போய் வாங்குகிறீங்க' என அழைத்தாள். 'அப்படி என்ன வம்பு இருக்கு' என்றான் வாசன். 'மாமா, அத்தை காபி போட்டு வைச்சிருக்காங்க வாங்க குடிச்சிட்டு கிளம்பலாம் நாளைக்கு வந்து பெருமாளைப் பாருங்க மாமா' என்றவளை 'என்ன வம்புனு சொல்லு மாதவி' 'கதவை உடைச்சா வம்பு தான, அதைச் சொன்னேன் மாமா, இப்போ என்னோட வரப்போறீங்களா இல்லையா' என்றாள் மாதவி. அவளின் வார்த்தைகளுக்கு கட்டுப்பட்டவனாய் அவளுடன் நடந்தான். 'மாமா நான் எது சொன்னாலும் செய்வீங்களா' எனக் கேட்டாள். 'ம்ம் செய்வேன் உனக்காகத்தான் இப்போ இந்த கோவிலுக்கு உள்ள கூட போகாம வரேன் இல்லைன்னா இன்னைக்கு இந்த பெருமாள் கோவில்ல அப்படி என்ன எனக்கு நடக்கும்னு பார்த்துரனும்னு இருந்தேன்' என்ற வாசனிடம் 'யார் என்ன சொன்னாங்க மாமா'

என்றாள் மாதவி. பாரதியின் கனவும் அவளது அச்சம் பற்றியும் சொன்னான் வாசன்.

‘ஓ அதுதான் இங்க வந்தீங்களா, என்ன மாமா இவ்வள அசடா இருக்கீங்க யாராச்சும் எதாச்சும் சொன்னா உடனே என்ன ஏதுனு யோசிக்கிறது இல்லையா கவிதை எழுதறதோட நிறுத்திக்கோங்க, வாழ்க்கைய கற்பனைக்கு இரையாக்கிறாதீங்க மாமா’ எனப் பேசிக் கொண்டே வீடு வந்தனர். அம்மா காபியை சூடு பண்ணி தந்தார். குடித்துவிட்டு வந்து பேருந்தில் ஏறிக் கொண்டனர். வாசன் குளத்தூரைத் தாண்டியதும் உலகமே நிம்மதி அடைந்தது போல் இருந்தது.

நாணல்கோட்டையில் இறங்கியதும் நேராக மாரியம்மன் கோவிலுக்குள் சென்றனர். அர்ச்சனை தட்டு வாங்கிக் கொண்டாள். நேர்த்திக் கடன் என வேண்டியது நடந்தது என அதுபோல பொருள்கள் செய்து எல்லாம் வாங்கி வைத்து இருந்தனர். வாசன் இந்த கோவிலுக்கு வந்து பல வருடங்கள் ஆகிறது. மாதவி அழைத்ததாள் அவளுடன் உள்ளே சென்றான். ‘என்ன வேண்டுதல்’ என்றான் வாசன். ‘வேண்டுதல் எல்லாம் ஒண்ணும் இல்லை, ஊருக்கு வந்தா இந்த கோவிலுக்கு வராமப் போகமாட்டேன் தான மாமா’ என்றவளிடம் பெரியவர் சொன்ன எல்லா விசயங்களையும் சொல்ல வேண்டுமென மனதில் பட்டது வாசனுக்கு.

மாதவி அர்ச்சனை தட்டுடன் சென்று மாரியம்மனை வழிப்பட்டாள். வாசன் மாரியம்மன் சிலையினைப் பார்த்துக் கொண்டே இருந்தான். அர்ச்சனை தட்டினை பூசாரியிடம் தந்து ‘வாசன், ரோஹிணி நட்சத்திரம்’ எனக் கூறிவிட்டு அவ்வளவுதான் என தலையை ஆட்டினாள். வாசன் மாதவியை ஆச்சரியமாகப் பார்த்தான். பூசாரி அர்ச்சனை செய்யச் சென்றார். வாசன் மாதவியிடம் எதுவும் கேட்கவில்லை. மாதவி மிகுந்த பயபக்தியுடன் அம்பாளை வேண்டிக் கொண்டு இருந்தாள். அர்ச்சனை செய்த பூசாரி தீப ஆராதனை காட்டிவிட்டு அங்கு இருந்த அனைவருக்கும் பிரசாதம் தந்தார். பிரசாத தட்டினை பெற்றுக் கொண்ட மாதவி வாசனுடன் கோவிலின் ஒரு பகுதியில் சென்று அமர்ந்தாள்.

‘என் பேருக்கு அர்ச்சனை பண்ணின எதுக்கு, இந்த உலகத்தில என் பேரு மாதிரி எத்தனையோ பேரு இருக்குமே, அந்த அம்பாளுக்கு இந்த வாசன் இந்த ஊர்க்காரன் இந்த நட்சத்திரத்துக்காரன் அப்படினு எப்படித் தெரியும் இது எல்லாம் வேண்டாத வேலையாப் படலையா’ என்றான் வாசன். ‘அந்த அம்பாளுக்கு எல்லாம் தெரியும் மாமா, சாதனையாளர்கள் எப்படி சாதனையாளர்களாக மாறுறாங்க தெரியுமா மாமா, சரியான இடத்தில் சரியான தருணத்தில் இருப்பவர்க்கு கிடைக்கிற வாய்ப்புகளைப் பொறுத்துத் தான், இது கோவில் மாமா ரொம்ப புத்திசாலியாப் பேசறோம்னு பேசாதீங்க” என்றாள் மாதவி.

ஆலயத்தின் வரலாறு எல்லாம் தெரியாது. கூடிப்பேசவா கோவில்? குழப்பம் தீர்க்கவா இல்லை குழப்பம் உருவாக்கவா கோவில்? அமைதியினை உணர்ந்து கொள்ளவா இல்லை அச்சம் அகற்றி வாழ்ந்து காட்டிடவா? எதற்கு கோவில்? சிலைதனை கடவுளாக காட்டி அதற்கு என மந்திரங்கள் எல்லாம் வகுத்து தெய்வம் நெஞ்சம் குளிர்ந்துவிடும் என அழகிய பாடல்கள் இசைத்து அதற்காகவே வழிவழியாக தொடரப்பட்ட உண்மை பக்தி மாறி தொழில் முறையாகிப் போன கோவில் இனியுமா கோவில்? பராமரிக்கப்படாத ஆலயங்கள் எத்தனை? பார்ப்பாரின்றி பரிதவிக்கும் தெய்வங்கள் எத்தனை? இவையெல்லாம் வரலாற்றுச் சின்னங்களாக மாறிக் கொண்டு வருகிறது; வாழும் தெய்வம் வேறு வழி தேடிப் போய்விட்டதோ? சாத்திரங்கள் சம்பிராதயங்கள் எதன் வழி வந்தது, யாரை திருப்திப் படுத்த செயல்முறை படுத்தப்பட்டது? கண்களில் கண்ணீர் பனித்து வணங்கும் மனிதர்கள் இல்லாமல் இல்லை, கோவிலின் உள்ளே சென்றதும் ஒரு உண்மை உணர்வு உள்ளுக்குள் வந்து செல்லும் அந்த உண்மை உணர்வினை உணர்ந்து வாழும் மனிதர்கள் இல்லாமல் இல்லை! எதற்கு கோவில் என்ற வினா எழும் போதே எதற்கு நாம் என ஒரு சிந்தனை வந்து செவிப்பறையை கிழித்துவிட்டுப் போகும், காணத் தெரியாதே கண்ணே என சிந்தனை களிப்பாட்டம் இடும்!

வாசன் அமைதியாக அமர்ந்தான். மாதவி வாசனையேப் பார்த்துக் கொண்டு இருந்தாள். ஒருவித சலனமும் வாசனின் முகத்தில் தெரியவில்லை. இருவரும் சிறிது

நேரம் அமைதியாக அமர்ந்துவிட்டு கோவிலில் இருந்து வெளியே வந்தனர். 'மாமா, நான் சொன்னதுனால எதுவும் கோவமா?' என்றாள் மாதவி. 'இல்லை மாதவி, உன் மேல எனக்கு எந்த காலத்திலும் கோவம் வராது, கோவம் வரவேண்டிய அவசியமும் இல்லை நீ சொன்னதை யோசிச்சுப் பார்த்தேன், அப்படின்னா திறமையானவங்க எல்லாம் சாதிக்கிறது இல்லைங்கிறது இதனால தானா?' என்றான் வாசன். 'சரியாக வாய்ப்பை பயன்படுத்தாது தான், செயல்படுத்தாம இருக்கிறது தான், ஒழுங்கா நீங்க படிச்சி இருந்து ஒரு நரம்பியல் நிபுணரா இன்னைக்கு நீங்க மாறி இருக்கலாம் இல்லையா உங்களுக்குரிய அரிய வாய்ப்பை நழுவவிட்டது உங்களோட தவறு தானே ஆனா இதுதான் இப்படி வாழறது தான் உங்களுக்குப் பிடிச்சிருக்கு அப்படிங்கிற பட்சத்தில உங்களுக்கு இது சரியானதுனு படும் ஆனா உங்களைத் தெரிஞ்ச நிறையப் பேருக்கு நீங்க பண்ணிக்கிட்டு இருக்கிறது பைத்தியக்காரத்தனம்னு தோணும்' என்றதும் வாசன் சிரித்துவிட்டான். 'நான் உன் மேல கோவப்பட்டுருவேனோன்னு ரொம்ப ஜாக்கிரதையாப் பேசறியா' என்றான் வாசன். உண்மையை சொல்லும் விதம் தனிதான். பிறர், வார்த்தையில் குறுக்கும் நெடுக்கும் காண்பவர்களிடம் கூட, மனம் நோகாதவாறு பேசத் தெரிந்த மனிதர்கள் திறமைசாலிகள்,. பேசுவது ஒரு கலை என வகுத்ததும் இதற்குத்தான்?

'உங்களுக்கு இல்லாத உரிமையா' என்றாள் மாதவி. கடையில் சென்று பொருள் வாங்கிவிட்டு மதியத்துக்குள் ஊருக்குத் திரும்பிவிடலாம் போல இருக்கிறதே என நினைத்துக் கொண்டு இருந்தான் வாசன். இதற்கா இவ்வளவு காலையிலே கிளம்பி வந்தோம் என இருந்தது.

வாசனும் மாதவியும் கடைகளில் சென்று வேண்டியது எல்லாம் வாங்கிக் கொண்டனர். நேரம் அதிகம் செலவழிக்காமல் என்ன வாங்க வேண்டுமோ அதனை எங்கு எங்கு வாங்க வேண்டுமோ அங்கு சென்று வாங்கிக் கொண்டாள். மதிய நேரம் ஆனது. நன்றாக வெயில் வேறு. 'எல்லாம் வாங்கியாச்சா இன்னும் ஏதும் வாங்கனுமா' என்றான் வாசன். அனைத்துப் பொருட்களுக்கும் வாசனே பணம் தந்தான். 'இன்னும் இரண்டு கடைக்குப் போகனும் அங்கப் போய்ட்டு வாங்கிட்டா எல்லாம் வாங்கியாச்சு' என தான் எழுதி வைத்து இருந்ததைப் பார்த்துச் சொன்னாள். 'அப்படின்னா மதியச் சாப்பாட்டுக்கு ஊருக்குப் போயிரலாம்தானே'

என்றான் வாசன். 'என்ன அவசரம் மாமா, என்னோட பேசறப்ப எல்லாம் உங்க நினைவு எங்கோ இருக்கே' என்றாள் மாதவி. 'அதெல்லாம் ஒண்ணும் இல்லை' என்றவன் தனது செல்போனை எடுத்து வர மறந்து போனதை அப்பொழுதுதான் பார்த்தான். 'என்ன மாமா தேடுறீங்க' என்றாள். '◌ஃபோன்' என்றான். 'இப்ப எதுக்கு ◌ஃபோன்' என்றாள். 'இல்லை பாரதி என்கிட்ட பேச நினைப்பா அதான் எனக்கு என்னமோ ஏதோன்னு நினைப்பாள்ல என்னை பெருமாள் கோவிலுக்குப் போகச் சொல்லிட்டு என்ன நடக்குதுன்னு போன் பண்ணச் சொன்னா' என்றதும் மாதவி 'அதோ அங்க போய் பண்ணலாம் வாங்க என தொலைபேசி கடைக்குச் சென்றார்கள். 'நம்பர் ஞாபகம் இல்லை மாதவி' என்றவனிடம் 'வீட்டுக்கு போன் பண்ணி தேவிக்கிட்ட வாங்கி அப்புறம் பேசுங்க மாமா பதட்டமா இருந்தா ஒண்ணும் யோசிக்க முடியாது' என்றவளை நன்றியுடன் பார்த்துவிட்டு பாரதி எண்களை வாங்கி பாரதியிடம் பேசினான். பாரதி தன்னை தொடர்பு கொள்ள முயற்சித்ததை தெரிந்து கொண்டான். வாசன் ஊரில் இல்லாதது கண்டு சந்தோசம் அடைந்ததாக தெரிவித்தாள் பாரதி. 'அப்படி என்ன நடக்கும் சொல் பாரதி' என்றான் வாசன். 'ஊருக்கு எப்பப் போவ' என்றாள் பாரதி, 'இன்னும் கொஞ்ச நேரத்தில போகப் போறோம்' என்றான் 'சரி ஆனா பெருமாள் கோவிலுக்குப் போகாத' என சொல்லியவள் மாதவியிடம் பேச வேண்டும் என்றாள்.

மாதவி பாரதியிடம் சொன்னாள் 'இந்த விசயத்தை நீ சொல்லி இருக்க வேண்டிய அவசியமில்லை பாரதி அவர் அதிகமா கோவிலுக்குப் போறதில்ல நீ சொல்லியதிலிருந்து என்ன ஏதுன்னு பரபரக்கிறார் அப்படி என்ன இரகசியம் இப்போக் கூட மாரியம்மன் கோவிலுக்குப் போய்ட்டு வந்தோம்' என்றதும் திருவில்லிபுத்தூர் பற்றிச் சொன்னாள் பாரதி. 'அதனால என்ன வேற சொல்லி சமாளிக்க வேண்டியது தான, நாளைக்குப் போனா ஒண்ணும் ஆகாதுன்னா எதுக்கு இரண்டு மாசம் கெடு' என்றாள் மாதவி. மாதவியின் கேள்விகளுக்கு பதில் சொல்ல முடியாமல் திணறினாள் பாரதி. 'சொன்னா கேளு மாதவி' என்றாள் பாரதி. 'பாரதி நீ தேவை இல்லாம குழப்பத்தை உண்டு பண்ணி இருக்க நீயும் குழப்பமா இருக்க வெறும் கனவை நம்பி எதுக்கு இப்படி பண்ற' என்றதும் 'ஒரு முக்கியமான விசயம் கேளு' என்றாள் பாரதி. 'என்ன விசயம் எதைப் பத்தி சொல்ல வர இப்போ' என்றாள். என்ன இது பேசிக் கொண்டே இருக்கிறாள் எப்பொழுது வெளியில்

வருவாள் என பார்த்துக் கொண்டே இருந்தான் வாசன். பசிக்க வேறு ஆரம்பித்தது.

வாசன் என்ன சொன்னானோ அதையே மாதவியிடம் பாரதி சொன்னாள். 'அது கனவு தான' என்றாள் மாதவி திரும்பியும். 'அப்படின்னா எதுக்கு வாசனை நீ நாணல் கோட்டை இன்னைக்குக் கூப்பிட்டு வந்த இந்த விசயம் உனக்கு தெரிஞ்சு இருக்குத்தானே' என்றாள் பாரதி. மாதவி சிரித்தாள் 'என் மாமாவுக்கு எதுவும் ஆகாது பாரதி இதுக்காக இவ்வளவு தூரம் வரனுமா என்ன, என்னோட வார்த்தை போதும் நீ இப்படி தேவையில்லாம மனசை குழப்பிக்காத அவருக்கு ஒண்ணும் ஆகாது நீ தைரியமா இரு' என்றவளிடம் 'ஊருக்கு இப்பவேவா போகப் போறீங்க' என்றாள் பாரதி. 'இல்லை' என்று சொல்லி போனை வைத்துவிட்டு வெளியில் வந்தாள். பணம்தனை தந்துவிட்டு 'சாப்பிடலாமா மாமா' என்றாள் மாதவி. வாசன் மறுப்பேதும் சொல்லாமல் சரி என்றான்.

சாப்பிட்டுவிட்டு வீட்டுக்குப் போக வேண்டும் என வாசன் சொன்னதும் மாதவி 'பெருமாள் கோவிலுக்குப் போய்த்தான் ஆகனுமா' என்றாள். 'அப்படி என்னதான் நடக்குதுன்னு தெரிய வேணாமா வாழப்போறது இந்த ஒரு வாழ்க்கை தான் அதுல என்ன ஏதுன்னு கூட தெரியாம வாழறது எனக்குப் பிடிபடல' என்றதும் 'சரி நீங்க போங்க மாமா நான் சாயந்திரம் வரேன் ஒரு முக்கியமான வேலை இருக்கு' என்றாள் மாதவி. 'என்னை பெருமாள் கோவிலுக்குப் போகவிடக்கூடாதுன்னுட்டு தான இப்படி வேணும்னு பண்ற' என்றதும் 'கோவம் வருதா மாமா' என்றதும் 'இல்லை, கோவம் இல்லை நான் பண்ண நினைக்கிறத பண்ண முடியலையேன்னு ஒரு ஆதங்கம்' என்றான் வாசன். 'அப்படின்னா என்னோட நிர்பந்தத்துக்கு நீங்க கட்டுப்பட்டு வரவேண்டிய அவசியம் ஏதும் இல்லை, ஏன் வந்தீங்க' என்றதும் 'உதவின்னு எப்பவும் நீ கேட்டது இல்லை, இப்போ நீ கேட்டதும் மறுக்க முடியலை அதான் வந்தேன்' என்றான் வாசன். 'சரி அந்த பை எல்லாம் தாங்க நான் வரும்போது கொண்டு வரேன் நீங்க போங்க பெருமாள் கோவில் தான் முக்கியம் இல்லையா மாமா' என்றாள் மாதவி. வாசன் என்ன செய்வது என வானத்தையும் பூமியையும் பார்த்தான்.

வாசன் பைகளை தர மனமின்றி நின்று கொண்டு இருந்தான். ‘எதனாலும் முடிவு எடுங்க மாமா, நான் இன்னும் சில பொருட்களை வாங்கிட்டு காயத்ரி குழந்தைகள் காப்பகம் போகனும்’ என்றதும் ‘அங்க எதுக்கு இப்ப போகனும் கோவிலுக்கும் கடைக்கும் தான போகனும்னு சொன்ன மாதவி’ என்றான் வாசன். ‘இதுக்குனு இன்னொரு நாளைக்கு வரமுடியுமா மாமா, ஊருக்குப் போக சாயந்திரம் ஆகும்னு தெரிஞ்சுதானே வந்தீங்க இப்போ அந்த பெருமாள் கோவில் பத்தியே நினைச்சிட்டு இருந்தா என்ன அர்த்தம் நீங்க போங்க மாமா நான் ஒண்ணும் தப்ப நினைக்கமாட்டேன்’ என்றாள் மாதவி. எப்பொழுதும் உடன் வருவது அந்த நாராயணன் தான், இன்பத்திலும் இணைந்து இருப்பான், துன்பத்திலும் துணை இருப்பான், ஒரு கணமும் நம்மை விட்டு அகல மாட்டான்; பாரதி கண்ட கனவு போல ஆலயத்தில் சென்று தான் ஐக்கியம் ஆக வேண்டுமா இந்த வாசன், எவ்விடத்திலும் அனைவரையும் ஐக்கியப்படுத்திக் கொள்ளும் அந்த பரமபிரானை இன்னுமா வாசன் தெளிந்து கொள்ளவில்லை. என்ன தெளிந்ததாய் சொன்னான் பிறகு?

வாசன் சிந்தித்தான். பின்னர் வாசன் மாதவியிடம் ‘உன்னோட நான் வரேன், இப்படி உன்னோட வந்துட்டு உன்னைத் தனியா விட்டுப் போக எனக்கு ஒண்ணும் பெருமாள் பெரிசு இல்ல மாதவி, வா கடைக்குப் போகலாம்’ என்றதும் ‘மாமா மனசோட தான் வரீங்களா இல்லை செய்யனுமேன்னு செய்றீங்களா’ என்றாள் மாதவி. ‘மனசோட தான் வரேன், அப்படி பெருமாள் முக்கியம்னு நினைச்சி இருந்தா நீ சொன்ன மாதிரி இங்க நான் வந்துருக்க தேவையில்லை தான்’ என்றான் வாசன். மாதவியின் மனதில் புன்னகை புரிந்தாள், வாசன் முகத்தில் புன்னகை தெரிந்தது. வாழ்க்கைச் சூழலில் விருப்பம் இல்லா செயல்கள் புரியும் மனிதர்களாக வாழும் வாழ்க்கைக்குத் தள்ளப்பட்டவர்கள் எத்தனை பேர் அச்செயல்களை விருப்பமுடையதாய் மாற்றிக் கொண்டு இவ்வுலக வாழ்க்கையின் அர்த்தம் புரிந்து சந்தோசமாக ஆம் சந்தோசமாக வாழப் பழகிக் கொண்டுள்ளனர், இதனை இந்த வாழ்க்கையினை தெளிதல்தான் அனைவருக்கும் கடினம்.

பெரியவர் காலையில் எழுந்து குளித்துவிட்டு பத்து மணியளவில் பெருமாள் கோவிலுக்குச் சென்றார். அங்கு அவர் கண்ட காட்சி ஒரு நிமிடம் அவரை

நினைவிழக்கச் செய்தது. கோவிலின் பூசாரி மூர்ச்சையாகி கீழே விழுந்து இருந்தார். உடலில் எங்கும் காயம் எதுவும் இல்லை. அக்கம் பக்கத்தில் யாரும் இல்லை. தண்ணீர் எடுத்து பூசாரி மேல் தெளித்தார் பெரியவர். பூசாரி நினைவுக்கு திரும்பினார். பூசாரி சுற்றும் முற்றும் பார்த்தார். பெரியவரைப் பார்த்தார். 'என்ன நடந்தது' என்றார் பெரியவர். பூசாரி கைகளை வெறுமனே அசைத்தார். குடிக்க தண்ணீர் தந்தார் பெரியவர். தண்ணீரைக் குடித்துவிட்டு பெரியவரின் கைகளைப் பிடித்து எழுந்து நெற்குவியலில் கிடத்தி வைக்கப்பட்ட சிலையை காண்பித்தார். அங்கு சிலையை காணவில்லை. பெரியவர் நெற்குவியலில் நன்றாகத் தேடினார். சிலை காணவில்லை. 'என்ன நடந்தது பேசுங்க பூசாரி' என்றார் பெரியவர்.

தடுமாறி தடுமாறி விசயம்தனை சொன்னார். 'எந்த ஊர்க்காரங்கனு தெரியலை நான் காலையில கோவில் கதவைத் திறந்து எல்லா அபிஷேகமும் பண்ணிட்டு நாலாயிர திவ்விய பிரபந்தம் வாசிச்சிக்கிட்டு இருந்தேன் கொஞ்ச நேரத்துக்கு முன்னால திடீருன்னு சிலர் வந்து என்னை தள்ளிவிட்டுட்டு இந்த சிலையைத் தூக்கினாங்க அதுக்கப்பறம் என்ன நடந்ததுனு தெரியல' என்றார் பூசாரி. பெரியவர் பூசாரியிடம் 'சிலை போனதைப் பத்தி கவலைப்பட வேணாம்' என்றார். 'வாசன் வந்து காலையில கோவில் சாவியை கேட்டப்ப நான் தரலை' என்றார் பூசாரி. 'ம் நல்ல காரியம் செஞ்சீங்க' என்ற பெரியவர் கோவில் கதவினைச் சாத்திவிட்டு பூசாரியை தன்னுடன் வரச் சொன்னார். ஊருக்குள் சென்று நடந்த விசயம்தனை சில பெரியவர்களிடம் சொன்னார். அங்கு இருந்தவர்கள் மட்டும் திரண்டனர். 'வாசனை விசாரிச்சிட்டு இரண்டு பேர் ஒரு அரை மணி நேரம் முன்னாடி இங்க வந்தாங்க, வாசன் ஊர்ல இல்லைன்னு சொன்னேன், நீங்க யாருனு கேட்டப்ப வாசனுக்கு வேண்டியவங்கனு சொல்லிட்டு ஊர் பேர் சொல்லலை அய்யா' என்றார் 30 வயதான குமரகுரு. 'அடையாளம் தெரியுமா' என்ற பெரியவரிடம் 'சுத்துப்பட்டி ஆளுங்க மாதிரி தெரியலை அய்யா' என்றார். இவ்விசயம் தோட்டம் காடெல்லாம் பரவியது. பெரியவர் பூசாரியிடம் என்ன செய்வது என ஆலோசனையில் இறங்கினார். குமரகுருவினை அழைத்து உடனே சேட்டுர் கோபாலனை வரச்சொன்னார்.

கடைகளுக்குச் சென்றுவிட்டு குழந்தைகள் காப்பகம் சென்றனர். அங்கு அந்த மதிய

வேளையினையும் மாலைப்பொழுதையும் கழித்தனர். அங்கு இருந்த குழந்தைகளுடன் சந்தோசமாக பொழுதை கழித்தாள் மாதவி. வாசனுக்கு இங்கு வந்தது சந்தோசமாக இருந்தது, பல விசயங்கள் சேகரித்துக் கொண்டான், வெளியில் சென்று இருந்த மேலாளர் வந்தார். தனது விருப்பத்தை அங்கு இருந்த மேலாளரிடம் தெரிவித்தான் அவரும் மிகவும் ஆர்வமுடன் கேட்டுக் கொண்டார். அனைத்துக்கும் உதவுவதாக உறுதி சொன்னார். ஆதரவற்றவர்களுக்கு ஒரு ஆதரவாக வாழும் வாழ்க்கை தனக்கு பெரும் திருப்தியை தருவதாக கூறினார். 'உங□கள் திருப்திக்காகவா இந்த காரியம் செய்கீறீர்கள், அது சுயநலம் ஆகாதா' என்றான் வாசன். 'மாமா' என வாசன் காலினை மெதுவாக மிதித்தாள் மாதவி. என்ன என்பது போல் மாதவியைப் பார்த்தான் வாசன். வாசனது கேள்வி அந்த மேலாளரை யோசிக்க வைத்து இருக்கக் கூடும், வாசனையே பார்த்துக் க□ண்டு இருந்தார். மாதவி மேலாளரைப் பார்த்து புன்னகைத்தாள். அவரும் புன்னகைத்துக் கொண்டு 'சுயநலம் இல்லாம யாருமே பொதுநலம் கருதி வாழமுடியாது வாசன், ஆனா இங்க என் சுயநலத்தைவிட பொதுநலம்தான் மேலோங்கி இருக்கு எனது ஒருத்தன் திருப்திக்கு எத்தனை இதயங்கள் சந்தோசமா இருக்குப் பாருங்க இதோ எனது அறையும் அந்த குழந்தைகள் இருக்கற அறைகளுக்கும் என்ன வித்தியாசம் இருக்குப் பாருங்க, நான் சாப்பிடற சாப்பாடும் அவங்க சாப்பிடற சாப்பாடும் வாங்க பாருங்க வாசன், வாங்க' என்றார். ஒவ்வொன்றாக காண்பித்தார். வாசன் மாதவியைப் பார்த்தான். உதடுகளை அசைத்தாள். 'தப்பா கேட்டு இருந்தா மன்னிச்சிக்கோங்க சார்' என்றான் வாசன். 'விவரம் கேட்கறது ஒண்ணும் தப்பு இல்ல வாசன், எனது திருப்தி ஒரு சுயநலம்னா இருந்துட்டுப் போகட்டுமே ' என வாசனைத் தழுவினார். வாசன் சங்கடமாக உணர்ந்தான்.

காயத்ரி குழந்தைகள் காப்பகத்திலிருந்து வெளியில் வரும்போது இருட்டிவிட்டது. இன்னும் அரைமணி நேரத்தில் ஊருக்குச் செல்லும் பேருந்து கிளம்பிவிடும் அதை விட்டால் சோலையரசபுரத்தில் இருந்து நடந்துதான் செல்ல வேண்டும், எனவே வேக வேகமாக கிளம்பினார்கள். இவர்களை அன்புடன் அனுப்பி வைத்தார் மேலாளர் கணபதி. வாசனும் மாதவியும் நன்றி சொல்லிக் கொண்டார்கள். 'எப்ப வேணும்னாலும் வாங்க வாசன்' என வாசனிடம் சொன்னார். வாசனும் இனிமேல் நாணல்கோட்டை வந்தால் கட்டாயமாக வந்து பார்த்துவிட்டுச் செல்வதாக

கூறிவிட்டு விடை பெற்றுக் கொண்டான். மாதவி இரண்டு விசயங்களை சாதித்தாள். ஒன்று வாசனை குளத்தூரை விட்டு இன்று வெளிவரச் செய்தது மற்றொன்று அவன் ஆரம்பிக்க இருக்கிற ஆஸ்ரமத்திற்கு அஸ்திவாரம் போட்டது. ஓய்வுக்காலங்களில் எல்லாம் செய்து கொள்ளலாம் என நினைப்பவர்கள் தயவு செய்து நல்ல விசயங்களை இப்பொழுதே செய்யத் தொடங்குங்கள், உங்கள் ஓய்வுக்காலம் ஓய்வுக்காகவே இருக்கட்டும்.

வாசனும் மாதவியும் ஊர் வந்து சேர்ந்தனர். ஊர் மிகவும் பரபரப்பாக இருந்தது. சேட்டூர் கோபாலன் குளத்தூரிலேயே இருந்தார். எப்படி நடந்தது என்ன நடந்தது என இதனை இப்படியே விடக்கூடாது எனவும் பேசிக்கொண்டு இருந்தனர். எல்லா ஊர்களுக்கும் ஆட்களை அனுப்பி இருந்தார் விநாயகம். எவராவது இது குறித்து தெரிந்து இருக்கின்றனரா என அறிய முனைந்தார். சிலை திருடிச் செல்லும் அளவுக்கு யார் தைரியம் உடையவர்கள், வாசனை ஏன் அவர்கள் கேட்க வேண்டும் என யோசனையில் ஆழ்ந்தார்.

வாசன் வந்து விபரம் அறிந்தான். பெரியவரிடம் சென்றான். 'ஐயா, யாரையாவது சாரங்கன் அய்யாவைப் போய் பார்த்து வரச் சொன்னீங்களா' என்றான் வாசன். பெரியவருக்கு மனதுக்கு என்னமோ மாதிரி இருந்தது வாசன் சொல்வதைக் கேட்டு. 'என்ன சொல்ற வாசா, அவருக்கு இது எல்லாம் செய்யத் தெரியாது அதுவும் உன்னை...' என்றவர் 'ம் சொல்லுங்க அய்யா, என்னை' என்றவன் புரியாமல் பார்த்தான். 'உன்னை எதுக்கு அவங்கத் தேடனும்' என்றார் பெரியவர். 'அதான் அய்யா சொல்றேன் நீங்க சாரங்கன் அய்யாவை கேளுங்க' என்றான் வாசன்.

பல இடங்களுக்குச் சென்றவர்கள் திரும்பினர். ஒரு தகவலும் சரியானதாக இல்லை. பெரியவர் சிலை போனதை பற்றி பெரிதாக கவலை கொள்ளவில்லை ஆனால் போன முறை குறித்துத்தான் கவலைப் பட்டார். சேட்டூர் கோபாலன் கிளம்பினார். பெரியவர் கோபாலனிடம் உதவி புரியுமாறு கேட்டுக்கொண்டார். அவரும் எல்லா உதவியும் புரிவதாக சொல்லிவிட்டு வாசனிடம் வந்தார். 'கோவில் கட்டச் சொன்னேன், இப்ப பாரு என்ன நடந்துருச்சுன்னு' என சொல்லிவிட்டு சென்றார்

கோபாலன்.

ஒவ்வொருவரும் ஒன்று ஒன்றாக பேசினர். வாசன் தான் பெருமாள் கோவிலுக்குப் போய்த்தான் ஆக வேண்டும் என்றான், பெரியவர் பூசாரியிடம் சாவி வாங்கி வாசனிடம் தந்தார். யாரும் என்னோட வர வேண்டாம் என அந்த இரவில் தனியாகச் செல்வதாக கூறினான். ஊரில் உள்ளவர்கள் தடுத்தார்கள், பெரியவர் போகட்டும் என விடச் சொன்னார். இது ஆபத்தில் முடியும் என எச்சரித்தார்கள். ஆபத்தைக் கண்டு ஒதுங்கி வாழ்வது வாழ்க்கையல்ல, அதே வேளையில் ஆபத்தினை வெல்ல முடியாத பட்சத்தில் ஒதுங்கி நிற்பது நல்லது, வெல்வதும் வெல்ல முடியாததும் அந்த ஆபத்து என்னவென்று தெரிந்தால்தான் கூற முடியும். வாசன் பெருமாள் கோவில் நோக்கி நடந்தான். மனதில் நாச்சாரம்மாளையும் நாராயணனையும் நினைத்துக் கொண்டான். கோவிலை நெருங்க நெருங்க இனம் புரியாத தைரியம் வந்தது. இவ்விசயம் கேள்விப்பட்டு மாதவி ஓடி வந்தாள்.

ஊர், பெரியவரின் வார்த்தைக்குக் கட்டுப்பட்டு நின்றது. கோவிலின் வாசல் அடைந்தான் வாசன். வெளியில் சிறு மின் விளக்கு எரிந்து கொண்டு இருந்தது. கதவினை திறந்தான் வாசன். நாலாபுறமும் பார்த்தான். உள்ளே நுழைந்தான். கருவறையை பூசாரி தான் திறக்க வேண்டும். கருவறையைத் திறக்க மனது இடம் கொடுக்கவில்லை. கோவிலினைச் சுற்றி வந்தான். சிலை இருந்த நெற்குவியலைப் பார்த்தான். நெற்மணிகளை ஒவ்வொன்றாகத் தொட்டான். ஊரில் இருந்தவர்கள் என்னமோ ஏதோ என படபடப்புடன் இருந்தனர். பெரியவரிடம் நாம் கோவிலுக்குப் பக்கத்தில போறது நல்லது என கூறினார்கள். மாதவி கோபமாக இருந்தாள். அப்பாவிடம் உடனே வாசனை அழைத்து வருமாறு சொன்னாள். பொன்னுராஜ் பெரியவரிடம் வந்து சொன்னார். பெரியவர் யாருடைய விருப்பத்திற்கும் செவி கொடுக்கவில்லை. மாதவி ராமமூர்த்தியிடம் சொன்னாள். அவர் ஏதும் செய்ய முடியாது என கூறிவிட்டார்.

மாதவி நேரடியாக பெரியவரிடம் போனாள். பெரியவரைப் பார்த்து ‘இப்போ என் மாமாவை வரச் சொல்லுங்க தயவு செய்து வரச் சொல்லுங்க அப்பா’ என்றாள் மாதவி. பெரியவரை ஊரில் உள்ள பலர் அய்யா என அழைத்தாலும் மாதவி நேரில்

அழைக்கும்போது அப்பா என்றுதான் அழைப்பாள். 'கொஞ்ச நேரம் ஆகட்டும் மா' என்றார் பெரியவர். காத்து இருப்பது நல்லது இல்லை என மாதவிச் சொல்லியதும் சரியெனப் பெரியவர் கோவிலினை நோக்கி நடந்தார். அவருடன் ஊர் நடந்தது.

வாசன் கோவிலினை விட்டு வெளியில் வந்தான். வாசன் வந்து இருக்கேன் என்று கூவினான். பின்னர் அங்கு இருந்த கல்லில் அமர்ந்தான். இருவர் வாசனிடம் வந்தார்கள். 'நீ தான் வாசனா' என்றார்கள். 'ம்' என்றான் வாசன். வேறு ஒருவர் கோவிலுக்குள் சென்றார். பட்டென விழும் சப்தம் கேட்டது. 'உனக்காக இன்னைக்கு எல்லாம் காக்க வைச்சிட்டியே எங்களை' என்றவாரே ஓங்கி அடிக்கப் போனான் ஒர□வன், வாசன் கலகலவென சிரித்தான். கோவிலுக்கு வெளியில இருக்கேன் கோவிலுக்கு உள்ள போவோம் அங்க வைச்சி அடிங்க என்றவன் உள்ளே சென்றான் அவர்களும் உள்ளே சென்றனர், பட்டென விழும் சப்தங்கள் கேட்டது இதுதான் சமயம் என வாசன் வெளியில் வந்து கதவினைச் சாத்தி தாழிட்டான் இது மின□னல் மின்னி மறையும் மில்லி விநாடியில் நடந்தது.

பெரியவரும் ஊர் மக்களும் கோவிலுக்கு அருகில் வந்தனர். வாசன் பெரியவரிடம் வந்து மூன்று பேர் கோவிலுக்குள் விழுந்து கிடப்பதாகவும் சிலையானது திரும்பவும் வந்துவிட்டதாகவும் கூறினான். பெரியவர் வாசனை கதவைத் திறக்குமாறுச் சொன்னார். அதற்கு வாசன் கோவிலின் வாயிலில் எண்ணெய்தனை கொட்டி இருப்பதாகவும் அதன் மூலமே அவர்களை விழச் செய்ததாகவும் கூறி உள்ளே செல்பவர்கள் கவனமுடன் வடக்குப் புறம் கால் வைத்து உள்ளே செல்லுமாறு கூறினான். பூசாரியிடம் சாவியினைத் தந்தான் வாசன். ஊர் இளைஞர்கள் உள்ளே சென்று மயக்கத்தில் இருந்த அம்மூவரையும் தெளிவு படுத்தி வெளியில் கொண்டு வந்தனர்.

வாசன் பெரியவரிடம் அவர்களிடம் எந்த விசாரணையும் செய்யாது அனுப்புமாறு கூறினான். ஆனால் ஊரில் இருந்தவர்கள் அவ்வளவு சாதாரணமாக விடமுடியாது என கூறினர். அமைதியான இரவு தனது அமைதியினை இழந்து கொண்டு இருந்தது. பெரியவர் அனைவரையும் அமைதியாக இருக்கச் சொன்னார். பூசாரி தான் சிலையை நெற்குவ□யலில் போட்டுவிட்டதாகவும் சிலையில் எந்தவித

பாதிப்பும் இல்லையெனவும் கூற எண்ணெய் எல்லாம் துடைத்து எடுக்கப்பட்டதாக வந்து சிலர் கூறினார்கள்.

மூவரும் அமைதியாக நின்று கொண்டு இருந்தனர். வாசனைப் பார்த்தார் பெரியவர். 'அவங்களை அனுப்புங்க அய்யா' என்றான் வாசன். ஊர் பெரியவர் ஒருவர் 'என்ன வாசா சொல்ற நீ, சிலைய திருட வந்து இருக்காங்க, உன்னைத் தாக்க முயற்சி செஞ்சிருக்காங்க சும்மா விடச் சொன்னா எப்படி என்ன ஏதுனு விசாரிக்கமா அனுப்ப முடியுமா இப்படியே விட்டா பயமில்லாமப் போயிரும் யாரும் எதுவும் செய்யலாம்னு ஆயிரும்' என்றார். வாசன் பெரியவரிடம் ஓரிரு வார்த்தைகள் சொன்னான். 'பயந்து கெட்ட காரியங்கள் பண்ணாம இருக்கறவங்களை விட அது கெட்ட காரியம் அதை பண்ணக் கூடாதுனு தைரியமா திடமா இருக்கறவங்கதான் பிறருக்கு தீங்கு இழைக்கிற காரியங்கள் செய்ய மாட்டாங்க அதனால இவங்களை தண்டிக்கிறதால இவங்க திருந்துவாங்கன்னா அந்த தண்டனையை இவங்களை மன்னிச்சி விடறதுல தரலாம், இவங்களை மாதிரி ஆளுங்க தண்டிக்கப்படறத பார்த்து தப்பு செய்றவங்க திருந்தி வாழ்வாங்கனு இருந்தா எதுக்கு இந்த பூமி இனியும் இப்படி இருக்கு' என்றார் பெரியவர். வாசனை அம்மூவரும் நன்றியுடன் நடுங்கிக் கொண்டேப் பார்த்துக் கொண்டு இருந்தனர். 'என்ன வழவழனு பேசிக்கிட்டு நாலு அடிக் கொடுத்து காலு கைய ஒடிச்சா எல்லாம் சரியாப் போகும்' என்றான் முத்துராசு வழக்கமாக இதுவரைக்கும் யாரையும் அவன் அவ்வாறு செய்ததில்லை எனபது வேறு விசயம்.

'எந்த ஊரு என்ன காரணம்னு கேளுங்க சும்மா நின்ன□ எப்படி' என்றார் ஒருவர். 'எதுவும் அவங்களைக் கேட்க வேண்டாம், அனுப்புங்க அய்யா' என்றான் வாசன். கைகள் கட்டி அவர்கள் பயந்து நின்று கொண்டிருப்பதை பார்க்க பரிதாபமாக இருந்தது. 'அவங்களுக்கு வழி விடுங்க போகட்டும்' என்றார் பெரியவர். 'என்ன இது நாளைக்கு நம்ம ஊர்ல இதை காரணம் காட்டி தப்பு செய்யமாட்டாங்களா' என்றார் ஒருவர். 'நீங்க இதை காரணம் காட்டி தப்பு செய்வீங்களா' என கேள்விக் கேட்டவரை கேட்டார் பெரியவர். 'மாட்டேன், தர்மத்துக்கு கட்டுப்பட்டு வாழறவன் நான்' என்றதும் 'உங்களை மாதிரி எல்லாரும் தர்மத்துக்கு கட்டுப்பட்டு

வாழறவங□கதான்னு நினைங்க, ஏதோ உந்துதல்ல இப்படி வந்துட்டாங்க இனிமே தப்பு பண்ணமாட்டாங்க' என்றார் பெரியவர்.

'எங்களை மன்னிச்சிருங்க அய்யா' என்று பெரியவரின் கால்களில் அம்மூவரும் விழுந்தனர். 'எழுந்திருங்க எழுந்திருங்க, பத்திரமா ஊருக்குப் போங்க, இல்லைனா இங்க தங்கிட்டு காலையில போங்க' என்றார் பெரியவர். 'இப்ப போறோம் அய்யா' என வாசனை வணங்கிவிட்டு நடந்தனர். முத்துராசு அவர்களிடம் சென்று 'எந்த ஊரு, வாசன் உங்களுக்கு பகையாளியா' என்று கேட்டான். 'ராசு அவங்க போகட்டும் விடு' என்றார் பெரியவர். முத்துராசு முணுமுணுத்தான். ஊர் அசையாமல் நின்றது. வாசன் பெரியவரை வணங்கினான். குளத்தூரில் ஏதாவது தவறு நேரும்படி ஏற்பட்டால் அதனை பெரிதாக்கமல் அந்த தவறானது திரும்பவும் ஏற்படாமல் ஊரினை அமைதியாக கொண்டு செல்பவர் பெரியவர் விநாயகம். பூசாரியினை அழைத்து விரைவில் சிலைக்கு மண்டபம் கட்ட ஏற்பாடு செய்யச் சொன்னார். தை பிறக்கட்டும் என்றார் பூசாரி. உத்திராயணம் ஆரம்பம்.

கூட்டம் கலைந்தது. இந்த விநாயகம் விட்டாலும் நம்ம ஊர் பெருமாள் அவங்களை சும்மா விடமாட்டார். அதான் பயந்து போய் சிலையை திருப்பிக் கொண்டு வந்துட்டாங்க என அவர்கள் அவர்கள் வீடு சென்றனர்.

வாசன் தனது வீட்டிற்கு வந்தான். அவனது உறவினர்கள் வீட்டில் இருந்தனர். 'உனக்கு சோதனைக் காலம்' என்றார் அம்மா. 'மருமகனே உன்னை யாரும் ஒன்னும் செய்ய முடியாது' என்றார் பொன்னுராஜ். 'மன்னிச்சி அனுப்பச் சொல்லிட்டப்பா' என கண்கள் கலங்கி மகனை கட்டித் தழுவினார் தந்தை. 'நல்லவங்களுக்கு எப்பவும் நல்லதுதான் நடக்கும்' என்றார் சித்தப்பா. ஆறுதல் வார்த்தைகளும் அன்பு வார்த்தைகளும் சொல்லப்பட்டன. இதையெல்லாம் மாதவி ஓரமாக நின்று பார்த்துக் கொண்டு இருந்தாள். சிறிது நேரம் கழித்து அனைவரும் சென்றனர். மாதவி இன்றும் இங்கு உறங்கப் போவதாக கூறினாள்.

பாரதிக்கு நடந்த விசயங்களைப் பெரியவர் தொலைபேசி மூலம் தெரிவித்துவிட்டு வாசனிடம் நாளைப் பேசிக்கொள் என கூறினார்.

மாதவியிடம் வந்து ‘என்னைக் காப்பாத்தினதுக்கு நன்றி’ என அவளை வணங்கினான் வாசன். ‘எந்த பிரச்சினையும் வராம எப்பவும் தொடராம முழுவதுமா உங்களை நீங்களே காப்பத்திட்டீங்க மாமா, நான் எங்க காப்பாத்தினேன்’ என்றாள் மாதவி. ‘உனக்குத் தெரியுமா இப்படியெல்லாம் நடக்கும்னுட்டு’ என்றான் வாசன். ‘தெரியாது மாமா’ என கண்கள் கலங்கினாள் மாதவி.

தான் உறங்கப் போவதாக சொல்லிவிட்டு வாசன் தனது அறைக்குச் சென்று அமர்ந்து கொண்டான். 'மான் போன வேலை நல்லபடியா முடிஞ்சிருச்சா? எல்லாம் வாங்கிட்டியா நான் நோட்ஸ் எல்லாம் எழுதி வைச்சிருக்கேன் இன்னும் நாலு நாள்தான் இருக்கு ஒரு இரண்டு நாளைக்கு முன்னால போயிரலாம்' என்றதும் 'போவோம்' என்றாள் மாதவி.

'என் அண்ணனை பத்தி ரொம்ப கவலைப் படறியா' என்றாள் தேவகி. 'இல்லை, மாமா எனக்கு எல்லாம் தெரியும்னு நினைக்க ஆரம்பிசிட்டார் இனிமே நான் செய்ற ஒவ்வொரு செயலும் தெரிஞ்சேதான் செய்றென்னு நினைப்பார்னு நினைக்கிறப்பதான் கொஞ்சம் சங்கடமா இருக்கு தேவி, நீ எப்படி பதட்டப்படாம வீட்டிலேயே இருந்த' என்றாள் மாதவி. 'நீ இருக்கறப்ப என்ன கவலை நாம படிக்கப் போனதுல இருந்து நாம ஊருக்கு வரப்ப எல்லாம் வருசத்துக்கு ரெண்டு தரம் இப்படி நடக்குது இது ஆறாவது தடவை' என்றாள் தேவகி. 'அதான் எனக்கும் புரியல தேவி, சரி நீ படிச்சிட்டு தூங்கு நான் மாமாகிட்ட பேசிட்டு பிறகு வரேன்' என்றவளிடம் 'இனி என்ன படிக்க நான் தூங்கப் போறென், அண்ணா தான் தூங்கப் போறேன்னு போனான் எதுக்கு இப்போ தொந்தரவு பண்ணப் போற மான்' என்றாள் தேவகி. 'முழிச்சி இருந்தா பேசிட்டு வரேன் இல்லைன்ன வரேன், நீ தூங்கு' என வாசன் அறைக்குச் சென்று கதவினை தட்டினாள்.

வாசன் 'என்ன மாதவி' என தன் முகத்தினை துடைத்தவாறு கேட்டான். 'மாமா தூங்கப் போறீங்களா இல்லை கொஞ்ச நேரமாகுமா' என்றதும் 'நேரமாகும்' என்றான் வாசன். 'அப்படின்னா நான் பேசனும் உங்ககிட்ட மாமா' என்றாள்

மாதவி. 'சரி வா உட்கார் என நாற்காலியினை காட்டினான். 'பரவாயில்ல மாமா கீழேயே உட்காந்துக்கிறேன்' என அமர்ந்தாள்.

'சொல்லு மாதவி என்ன விசயம்' என்றான். 'மாமா எனக்கு எதுவுமே தெரியாது மாமா, என்னை அறியாம சில விசயங்கள் சொல்றேன் சில வியங்கள் செய்றென் எதுக்கு செய்றோம் ஏன் செய்றொம் எதுக்கு இப்ப செய்யனும் அப்படின்னு எல்லாம் யோசிக்க நேரம் கிடைக்கறதில்ல மாமா எதையும் திட்டம் போட்டு செய்றதில்ல மாமா' என்றாள் மாதவி. வாசன் அமைதியாய் கேட்டுக் கொண்டு இருந்தான். 'ம்ம் அதை பத்தி என்ன பேசறது, எனக்கு என்னமோ உனக்கு நடக்கப் போற எல்லா விசயங்களும் தெரிஞ்சு இருக்கு ஆனா தெரிஞ்சமாதிரி காட்டிக்காம நீ நடந்துக்கிறனுதான் படுது எத்தனை விசயங்களை குறிப்பிட்டு சொல்லனும் மாதவி, நம்ம தாத்தா சாகறதுக்கு முன்னாடி நீ என்ன என்கிட்ட வந்து சொன்ன 'தாத்தாவை காப்பாத்து மாமா, உன்னால முடியும் மாமா' னு நீ சொல்லலை 'அதெல்லாம் முடியாதுனு நான் சொன்னப்பா என்ன நீ சொன்ன ஞாபகம் இருக்கா' என்றான் வாசன். மாதவி கண்களில் கண□ணீர் வந்து எட்டிப் பார்த்தது. 'சொல்லு மாதவி, என்ன சொன்ன' 'வேணுமின்னு சொல்லலை மாமா, நான் செத்துட்டா... ' வார்த்தைகள் வெளி வர மறுத்தது, அழுகையை அடக்க முடியவில்லை மாதவியால். 'சரி அழாத அப்படியெல்லாம் நீ சீக்கிரம் இந்த உலகத்தை விட்டு போகமாட்ட ஆனா இறக்கிற உயிரை பிறப்பிக்கிற சக்தியெல்லாம் எனக்கு இல்லை மாதவி' என்றதும் 'இருக்கு மாமா' என்றாள்.

வாசன் சட்டென எழுந்தான். மாதவி என்ன என பார்த்தாள். 'மாதவி எழுந்திரு' என்றான் வாசன். மாதவியும் 'என்ன மாமா' என எழுந்தாள். 'நீ என்ன பேசறென்னு தெரிஞ்சுதான் பேசறியா, இல்லை தெரியாம பேசறியா' என்றான் வாசன். 'என்ன மாமா அப்படி பேசிட்டேன் இப்போ, உங்களை நீங்க இன்னும் புரிஞ்சிக்கலை மாமா இப்போ எதுக்கு என்னை எழுந்திருக்கச் சொன்னீங்க' என்றாள் மாதவி. 'சுய நினைவுலதான் பேசறியான்னு பார்க்கத்தான்' என்றான் வாசன். மாதவி தனக்கு எதுவும் தெரியாது என சொல்லிவிட்டு உறங்கப் போனாள். வாசன் அன்றைய தினத்தில் என்னவெல்லாம் நடந்தது என நினைத்துக் கொண்டே இருந்தான்.

வாசன் தூங்கக் கூடாது என முடிவு எடுத்தவனாய் விசயங்கள் அசை போட்டு கொண்டு இருந்த போது பெருமாள் கோவிலில் அவ்வளவு எண்ணையை யார் அன்று வைத்தது? என தனக்குள் கேட்டுக் கொண்டான் எப்படி எண்ணை கொட்ட வேண்டும் எனவும் அந்த மனிதர்கள் அங்கு இருக்கிறார்கள் என்று அறிந்து கொண்டு எண்ணை கொட்ட வேண்டும் என எண்ணம் தனக்குள் வந்து விழுந்தது என யோசித்தான் அப்படியென்றால் மாதவி சொல்வது கூட ஒருவகையில் உண்மையாகுமா? தன் மேல் அளவிலா அன்பு வைத்து இருப்பவளின் மனம் நோகும்படி பேசிவிட்டோமோ என நினைத□துக்கொண்டான் வாசன். நாளை நடப்பவை எல்லாம் அறிந்து கொண்டா இன்றைய தினப் பொழுது கழிகிறது? வாசன் மேல் மாடிக்குச் சென்றான்.

பொன்னுராஜ் வீட்டினில் முத்துராசு காத்து கொண்டு இருந்தான். 'என்ன ராசு இங்க நின்னுகிட்ட இருக்க, தூங்கலையா' என்றார் பொன்னுராஜ். 'இல்லைப்பா உன் மருமகனை நினைச்சேன் மனசுக்கு கேட்கலை அதான் உன்கிட்ட ஒரு விசயம் பேசிட்டு போகலாம்னு வந்தேன் இல்லைனா ராத்திரி எல்லாம் தூக்கம் வராது' என்றவன் தனது மனைவியை வீட்டுக்குள் போகச் சொல்லிவிட்டு 'வீட்டுக்குள்ளாற பேசுவோம் வா' என்றார். 'இல்லைப்பா இங்கயே நின்னு பேசிட்டு போறென் நாளைக்கு நான் வேலைக்கு வரலை ஒரு முக்கிய ஜோலியா ஒரு இடம் போக வேண்டி இருக்கு' என்றதும் 'எங்க போற' என்றார் பொன்னுராஜ். 'உன் மருமகன் பட்டணத்தில இருந்து வந்ததும் அந்த பெரியவர்கிட்ட சாரங்கனை விசாரிங்கனு சொன்னார் அதான் நான் போய் என்ன ஏதுனு கேட்டுட்டு வந்துரேன் எனக்கு மனசு கேட்கலைப்பா' என்றான்.

'ராசு என்ன நீ மருமகன் பெரியவர் அப்படின்னு ரொம்ப மரியாதையா பேசற, நீதானா வெளிச்சத்துக்கு வா' என இழுத்தார். 'நான் தான் பா என் குரல் தெரியலையா, நான் போய்ட்டு வந்துறேன் இது பெரியவருக்கு தெரிஞ்சா பெரிய பிரச்சினை ஆயிரும் இந்த விசயம் பத்தி மேற்கொண்டு எதுவும் பேசக்கூடாதுனு சொன்னப்பறம் யாரும் எதுவும் செய்யமாட்டங்க ஆனா எனக்கு மனசு கேட்கலை' என்றான் முத்துராசு. 'வேணாம் ராசு வம்புல மாட்டிக்காத நாளைக்கு விசயம் வெளியில தெரிஞ்சா நானும் உன்னோட சேர்ந்து செஞ்சதாகதான் இருக்கும்

உன்னை மட்டும் காட்டிட்டு நான் வெளியில நிற்கமாட்டேன் நேரா போறதை விட வேற வழியில யோசி' என்றார். 'எனக்கு வேற வழி தோணலை, உன்கிட்ட சொல்லிட்டு செய்வோம்னு செய்றேன் அவ்வளதான் யார் என்ன சொன்னாலும் நான் போகத்தான் போறேன்' என்றான் முத்துராசு. பொன்னுராஜ் பலமுறை சொல்லிப் பார்த்தார். முத்துராசு கேட்பதாய் இல்லை. மனைவியிடம் விசயம் சொன்னதும் போய்ட்டு வரட்டும் விடுங்க என்றார். 'உனக்கு எதுவும் ஆயிறாம ராசு, வேணுமின்னா நானும் வரேன்' என்றார் பொன்னுராஜ். 'இல்லைப்பா வேண்டாம்' என்றான் முத்துராசு.

மாதவி எழுந்து வந்தாள். 'என்ன மாமா தூங்கலையா' என்றதும் 'இல்லை மாதவி நீ என்னை மன்னிச்சிரு' என்றான் வாசன். 'என்ன மாமா எதுக்கு மன்னிப்பு' என்றாள் மாதவி. 'உன்னை நம்புறேன் உனக்கு எதுவும் தெரியாதுனு நீ சொல்றதை நான் நம்புறேன்' என்றான் வாசன். 'அப்படி எல்லாம் இல்லை மாமா, இப்பவாவது புரிஞ்சிகிட்டிங்களே' என புன்னகை புரிந்தாள். 'போய் தூங்குங்க மாமா' என கூறிவிட்டு மாதவி சென்றாள். வாசன் தனது குழந்தை பருவத்தை நினைத்துப் பார்த்தான். உதவிகள் என அடிக்கடி கோராமல் வாசனிடம் அன்புடன் வலம் வரும் இந்த மாதவி உறவு தந்த நெருக்கமா? உள்ளம் தந்த நெருக்கமா?

பெரியவர் பூஜை அறையில் சென்று அமர்ந்து வாசன் பற்றிய குறிப்புகளை அந்த நோட்டு புத்தகத்தில் ஆராய்ந்தார். இது குறித்து ஒன்றுமே எழுதி இருக்கவில்லை. ஒரு வேளை வாசனுக்கு எதுவும் நடந்து இருந்தால் இந்த பணி செய்யவே முடியாமல் போய்விடுமோ என நினைத்தார். எதற்கும் வேறு யாரையும் அணுகலாமா என யோசிக்கக் கூட பெரியவரால் முடியாதபோது வாசனுக்கு எதுவுமே ஆகாது என அப்பொழுதுதான் உணர்ந்தார். பெரியவருக்கு சாரங்கனைப் பார்த்தால் நல்லது என தோன்றியது அதே வேளையில் இன்று நடந்தது குறித்து பேசக் கூடாது எனவும் எண்ணினார். நன்பராக சென்று பார்த்து வரலாம் என மனதுக்குப் பட்டது.

இரவு வேகமாக நகர்ந்தது. காலையில் வாசனுக்கு பாரதியிடம் இருந்து அழைப்பு வந்தது. நலம் விசாரித்தாள். நல்ல வேளை என்றாள். 'இந்நேரம் நீ அங்க காலையில போய் இருந்தா என்ன ஆயிருக்கும் நேரம் கழிச்சி போனதால தப்பிக்க முடிஞ்சது இல்லையா வாசன்' என்றாள். வாசன் சிரித்தான். இறந்த காலம் அப்படித்தான் நடக்கிறது எனில் அப்படித்தான் நடக்கும் இதை இப்படி செய்து இருந்தால், நீ இப்படி படித்து இருந்தால் என தயவு செய்து அப்படியெல்லாம் நினைப்பதை தள்ளிப் போடுங்கள். 'காலையில போயிருந்தாக் கூட இதே மாதிரிதான் நடந்து இருக்க கூடாதுனு என்ன இருக்கு பாரதி' என்றான் வாசன். 'அப்படின்னா உனக்கு எந்த ஆபத்தும் இல்லைன்னு சொல்ல வரியா' என்றாள் பாரதி. 'நீ சொன்னதை நினைச்சி பாரு கோவிலுக்குள்ள போ என்ன நடக்குதுன்னு உன்கிட்ட சொல்ல சொல்லி இருந்த, அந்த வாசகத்திலே இருந்து தெரியலையா எனக்கு எந்த ஆபத்தும் இல்லைன்னு அப்படி உயிருக்கு ஆபத்துனு இருந்தா எப்படி உன்னோட பேச முடியும் சொல்லு' என்றான் வாசன்.

எதிர்கால பயம் மனிதனை வாட்டுகிறது, இறந்தகாலம் நகைப்புக்கு உள்ளாகிறது. ஒரு விசயத்தில் இருந்து தப்பித்து வந்தவுடன் அப்பாடா என எண்ணத் தோன்றுகிறது ஆனால் மற்றொரு விசயம் காத்து இருக்கிறது என உணராமலா இருக்கிறோம்? மற்றொரு விசயம் வரும் முன்னே சிறிது இளைப்பாறுதல் போலவா இது. ஏதாவது ஒன்று இடறிக் கொண்டே இருக்கும்! அது எல்லாம் இடறல் இல்லை என எவர் அறிகிறாரோ அவரே இறைவனை உணரும் நிலைக்குச் செல்கிறார். பாரதி வாசனின் வார்த்தையினால் சிறிது வருத்தம் ஆனாள். 'என்ன சொல்ற வாசா, அப்படின்னா நாளைக்கே கூட திருவில்லிபுத்தூர் போ யார் வேணாம்னு சொன்னா உனக்கு எதுவும் ஆகிறக் கூடாதுன்னுதான் நான் நினைக்கிறேன்' என்றவளிடம் 'அப்படி என்ன ஆயிரும்னு நினைக்கிற இன்னமும், இதோட அந்த கனவுக்கு அர்த்தம் முடியலையா இல்லை இன்னும் எதுவும் இருக்கா பாரதி'

'இருக்காது என் மனசுக்கு இப்போ சந்தோசமா இருக்கு உனக்கு வந்து பிரச்சினை போயிருச்சினு தோணுது, ஆனா நீ பேசறது பார்த்தா நான் வேணுமின்னு சொன்ன மாதிரி சொல்ற என் மேல கோவமா' என்றாள் பாரதி. 'கோவமா? நீ கண்ட கனவுனால ஒரு விசயத்தை புரிஞ்சிகிட்டேன் பாரதி, என்னைப் பத்தி உனக்கு

ஏதாவது தோணீச்சினா எனக்கு உடனே பேசு ஊர் திருவிழாக்கு அப்புறம்தான் திருவில்லிபுத்தூர் போறோம் நல்லா படி' என பேசிவிட்டு வெளியில் வந்தான்.

'அண்ணே உங்களை பெரியவர் உடனே வரச் சொல்றார்' என கேட்டதும் உடனே பெரியவர் வீட்டிற்கு சென்றான் வாசன். 'வாசா என்கூட இன்னைக்கு சாரங்கன் ஊருக்குப் போகனும் வரமுடியுமா' என்றார் பெரியவர். 'எதுக்கு அய்யா நான் சொன்னதை வைச்சி கேட்கலாம்னு நினைக்கிறீங்களா நாமதான் பேசியாச்சே இந்த விசயம் பத்தி எதுவும் மேற்கொண்டு பண்ண வேண்டாம்னு' என்றான் வாசன். 'இல்லை நான் நண்பன்கிற முறையில பார்த்துட்டு வரலாம்னு இருக்கேன் அதனால நான் போய்ட்டு வரேன் இதை பத்தி பேசமாட்டேன்' என்றார் பெரியவர். வாசன் 'அய்யா ஒரு ஒரு மணி நேரம் அந்த நோட்டு புத்தகம் படிச்சிட்டு போறேன்' என்றான். 'ம்ம் படி நான் பாண்டியை கூப்பிட்டுப் போய்ட்டு வரேன்' என்றார்.

வாசன் படிக்க ஆரம்பித்தான். அவனை பற்றிய குறிப்பினை வாசித்தான். ஒரு பக்கமே இருந்தது. எடுத்த முதல் வாக்கியமே இப்படித்தான் ஆரம்பித்தது. வாசன் இந்த அரும் செயல் செய்ய துணை இருப்பான். வாசன் ஒருவனே இணையானவான். வாசன் மட்டுமே இதனை அறிவான். வாசனால் மட்டுமே உணர்ந்து கொள்ள முடியும். வாசன் அல்லாது வேறு எவரும் இதன் உன்னதம் உணர மாட்டார்கள். இந்த வாசன் நீ கொண்ட பிறப்பிடத்தை பிறப்பிடமாக கொண்டவன். வரிக்கு வரி வாசன் என்று எழுதாவிட்டால் என்ன என தோன்றியது வாசனுக்கு. வேறு பக்கங்கள் பார்த்தான்.

முத்துராசு சாரங்கன் வீட்டினை அடைந்தான். சாரங்கன் முத்துராசுவைப் பார்த்ததும் 'அதிசயமா இருக்கே வா வா' என அழைத்து உள்ளே சென்றார். பல விசயங்கள் பேசினர். பெரியவர் வினாயகத்தின் மேல் தான் இன்னும் கோபமாக இருப்பதாக கூறினார் சாரங்கன். இனிமேல் அந்த ஊர் பக்கமே வரப்போவதில்லை எனவும் கூறினார். முத்துராசுவை உணவு அருந்த சொன்னார்கள். இல்லை வேண்டாம் என கூறிவிட்டு தான் வந்த விசயத்தை சொன்னான் முத்துராசு. சாரங்கன் 'யார் என்னை விசாரிக்க சொன்னது, வினாயகமா' என்றார். 'உங்களுக்கு இதை பத்தி தெரியுமா தெரியாதானு கேட்க நானத்தான் வந்தேன் உங்க பேரு

அடிபட்டுச்சு' என்றான் முத்துராசு. 'என்ன பேசற அப்படி காரியம் செய்ய வேண்டிய அவசியம் எனக்கு எதுக்கு, எதையும் நேரிடையா பேசி தீர்த்துக்குவேன் ஆனா வாசனை அடிக்கிற அளவுக்கு யார் போனா' எனக் கூறிக் கொண்டு இருக்கும்போதே சாரங்கனின் மகளும் மனைவியும் வெளியில் இருந்து வந்தார்கள்.

முத்துராசு இந்த விசயத்தை சும்மா விடப் போவதில்லை என தெரிவித்தான் சாரங்கனிடம். சாரங்கன் தன்னால் முடிந்தால் உதவுவதாக சொன்னார். முத்துராசு வெளியில் கிளம்பும் முன் சாரங்கன் மனைவியிடம் நடந்ததைக் கூறினான். 'அப்பவே சொன்னேன் கேட்டிகளா' என்றார் சாரங்கன் மனைவி. முத்துராசு திகைத்து பார்த்தான். பெரியவரும் பாண்டியும் சாரங்கனின் வீட்டு வாசலில் நின்றனர்.

பெரியவரை பார்த்ததும் மேலும் திகைத்துப் போனான் முத்துராசு. 'இப்போ எதுக்கு இங்க வந்த என் மேல கொலை முயற்சி போடலாம்னு நினைக்கிறியா' என்றார் சாரங்கன் பெரியவரைப் பார்த்து. பெரியவர் தனது காதுகளா இப்படி வார்த்தைகளை சாரங்கனிடம் இருந்து கேட்கிறது என புரியாமல் பாண்டியையும் முத்துராசுவையும் பார்த்தார். முத்துராசு மனதுக்குள் நடுங்கி கொண்டு இருந்தான். என்ன உள்ள கூட வரச் சொல்லாம இப்படி பேசறீங்க என தன் கணவனை கண்டித்தவாறே பெரியவரை உள்ளே வரச்சொன்னார் சாரங்கன் மனைவி. பெரியவர் உள்ளே காலை எடுத்து வைத்தார். சாரங்கன் 'உள்ள வராத' என்றார். முத்துராசு என்ன ஆச்சு உங்களுக்கு என சாரங்கனை கேட்டான். 'நண்பன் நண்பன்னு சொல்லி என்கிட்ட எல்லா விசயங்களையும் மறைச்சி எனக்கு முக்கியத்துவம் தராம யார் யார்க்கோ முக்கியத்துவம் தந்து என்னுடைய நட்பை கேவலப்படுத்திட்டல்ல அதோட என்னை ஊருல இருக்க விடாம பண்ணிட்டல்ல அப்புறம் எதுக்கு என்னை பார்க்க வந்த' என்றார் சாரங்கன். பெரியவர் நிலைகுலைந்து போனார்.

முத்துராசு 'அய்யா என்னை மன்னிச்சிருங்க அய்யா நம்ம ஊர் கட்டுபாட்டை மீறிட்டேன்யா' என்றான். பெரியவர் 'இந்நேரம் என்னை நீ பார்க்காம இருந்து இருந்தா இதை சொல்லி இருப்பியா, மறைச்சி இருப்பியில்ல இரு சேர்ந்தே

ஊருக்குப் போவோம்' என்றார் பெரியவர் வார்த்தைகள் தடுமாறியவாறு. 'சாரங்கா நிலம் வாங்கறப்ப பணம் பணம்னு பேசினப்ப உனக்கும் பணம் தந்து இருந்தேன் உனக்கு என்ன குறை வைச்சேன் சொல்லு இப்படி என்னை அவமரியாதையா பண்ற அளவுக்கு நான் அப்படி என்ன நடந்துகிட்டேன்னு நினைக்கிற. எவ்வளோ சொல்லியும் நீ கேட்கலை ஊரை விட்டு வெளியில வந்துட்ட அதுக்கு நான் எப்படி பொறுப்பாக முடியும் உன்னை மட்டமா நடத்தனும்னு நினைச்சி எதுவும் செய்யலை சாரங்கா நீ இப்படி நினிக்கிற மாதிரி நான் செஞ்சு இருந்தா என்னை மன்னிச்சிரு' என்றார் பெரியவர். 'அய்யா என்ன அய்யா இவர்கிட்ட மன்னிப்பு கேட்டுகிட்டுநல்லவங்களொட சேர்ந்தா நல்லது வரும் ஆனா என்னை மாதிரி இப்படி இவர் ஆயிட்டதை நினைக்கிறப்ப எனக்கே அவமானமா இருக்கு அய்யா நம்ம ஊருல நடந்ததுக்கு இவர்தான்யா காரணம்' என்றான் முத்துராசு. சாரங்கன் இதை சற்றும் எதிர்பார்க்கவில்லை.

பெரியவர் முத்துராசுவையும் பாண்டியையும் அழைத்துக் கொண்டு திரும்பினார். சாரங்கனை மனைவியும் மகளும் கண்டித்தனர், சென்று அழைத்து வரச் சொன்னபோது மறுத்துவிட்டார். 'ராசு அப்படி பாவம் செய்றவன் நான் இல்ல' என கத்தினார் சாரங்கன். தன்னை உற்ற நண்பனாய் மதித்து பல விசயங்கள் பேசி சிரித்து மகிழ்ந்து வாழ்ந்த த□டி வந்த ஒரு உன்னத நண்பனை தேவையில்லாத காரணங்கள் காட்டி தனது சுயநலத்துக்கென அவருடன் ஒட்டி உறவாடி தனக்கு மரியாதை இல்லையென உருவகம் செய்து வீட்டிற்குள் கூட விடாமல் திருப்பி அனுப்பியதை விடவா வேறு பாவம் இந்த சாரங்கன் செய்து இருக்க முடியும். எந்த ஒரு காலகட்டத்தில□வது இப்படி ஒரு நிலை வருமானால் நட்பின் நிலை என்னவாகும் அப்படியெனில் நட்பானது எல்லாம் தேடலை, தேவையைப் பொறுத்தா அமைகிறது! நிச்சயம் இந்த சாரங்கன் ஒரு நாள் உணர்வார். எதிர்பார்த்தது கிடைக்கவில்லை எனும் ஆதங்கம் வரும்போது நட்பு அடிபட்டு போய்விடுமா அப்படி போகும் நட்பு உண்மையிலே ஒரு நட்பா? நட்பின் தன்மை இவ்வுலகில் உண்மையிலே குறைந்து போனதா? புரிந்து கொள்ள முடியாத நிலையில் வார்த்தைகளும் செயல்களும் மௌனம் காக்கும் எனில் உண்மை நட்பு நிலைப்படும். பெரியவர் சாரங்கன் மேல் வைத்து இருந்த நட்பு அவரை அமைதியாய் மன்னிப்பு கேட்கவைத்துவிட்டு திரும்பி போக வைத்தது.

முத்துராசு சாரங்கன் சொன்னதை கேட்டு திரும்பினான் 'அதே பெருமாள் கோவில்ல வந்து நீ பண்ணினது தப்புத்தான்னு விழுந்து மன்றாடுவ அப்போ இதே பாவத்தை செய்யலைனு சொல்லு' என கூறிவிட்டு பெரியவருடன் நடந்தான். 'ஊரிலதான் வில்லங்கம் பண்ணுவ, இங்கயுமா அவன் பண்ணியிருக்கமாட்டான் ராசு' என்றார் பெரியவர். முத்துராசு வழக்கம் போல முணுமுணுத்தான். திருந்திவிட்டார் என்றல்லவா நினைத்து இருந்தோம். பாண்டி அமைதியாய் பெரியவருடன் நடந்தான். 'என்ன பாண்டி அமைதியா வர' என்று பெரியவர் கேட்டதும் கண்கள் கலங்கி இருந்த ப□ண்டி விசும்பினான். பெரியவர் 'என்ன பாண்டி' என்றார். வணங்கினான். பெரியவர் பாண்டியை தழுவினார். சில நேரங்களில் வார்த்தைகள் தேவையில்லை.

வாசன் புத்தகத்தை பூஜை அறையில் பத்திரமாக வைத்துவிட்டு பூசாரியை பார்க்கச் சென்றான். வாசன் பூசாரியிடம் எண்ணெய் பற்றி கேட்டான். பூசாரி யார் வைச்சாங்கன்னு தெரியாது என்றார். வீட்டிற்கு வந்தான் 'எங்கப்பா போன' என்றார் அம்மா. விவரம் சொன்னான். 'ஓ அதுவா என் மருமகதான் முந்தா நாள் போய் வைச்சிட்டு வந்தா, என்கிட்ட சொல்லிட்டுத்தான் போனா' என்றார் அம்மா. வாசன் கண்களை மூடி 'நாராயணா' என்றான்.

வாசன் மாதவியிடம் எதுவும் கேட்காமல் தோட்டத்திற்கு சென்றான். வாசன் நாராயணா என சொல்வதை கேட்கும்போதெல்லாம் ராமம்மாள் மிகவும் சந்தோசம் அடைந்தார். வாசனைக் கண்டதும் பொன்னுராஜ் 'இன்னைக்குள்ள சில முக்கியமான வேலை எல்லாம் செய்யனும், இப்படியே விட்டுட்டு போனா நேரம் ஆயிரும்' என்றார். 'ராசு அண்ணன் எங்க மாமா' என்றான் வாசன். மருமகனிடம் பொய் பேச விரும்பாதவராய் 'சாரங்கனைப் பார்க்க போயிருக்கான் மருமகனே' என்று சொன்னதும்தான் தாமதம் வாசன் 'பெரியவரும் அங்கதான் போறேன்னு சொன்னார் மாமா ஆனா பாண□டியை கூப்பிட்டு போறததான் சொன்னார்' என்றதும் பொன்னுராஜ் 'என்னது பெரியவரா?' பொன்னுராஜ் நடந்த விசயத்தை வாசனிடம் சொல்லவும் 'எதுக்கு மாமா இதெல்லாம், ராசு அண்ணன் எதாவது வம்பு பண்ணி பிரச்சினை பெரிசா ஆயிருச்சினா' என்றான். 'அதெல்லாம் ஆகாதமாதிரி

பண்றேன்னு சொன்னான் ஆனா பெரியவர் பார்த்துட்டா...' என்ற பொன்னுராஜுவிடம் 'நான் பார்த்துகிறேன்' என்றான் வாசன். வாசன் தோட்டத்து வேலைகளை கவனிக்கலானான்.

பெரியவரும், பாண்டியும் மற்றும் முத்துராசுவும் ஊர் வந்து சேர்ந்தனர். முத்துராசு பெரியவர் வீடு சென்றான். 'அய்யா என்ன தண்டனை கொடுத்தாலும்...' என்றவனிடம் 'என்ன தண்டனை தரச் சொல்ற, அடுத்த ஊர் போயிட்டதால சாரங்கன் வேற ஊர் ஆளுனு ஆயிருமா அவருக்கும் இந்த ஊருக்கும் தொடர்பு இருக்கு அதனால நீ அவர்கிட்ட பேசினது ஒண்ணும் ஊர் கட்டுபாட்டை மீறினதுனு ஆகாது ஆனா அவர்தான்னு எந்த ஆதாரமும் இல்லாம குற்றம் சுமத்தின பாரு அதுக்கு வேணுமின்னா உனக்கு தண்டனை தரலாம்' என சிரித்தார் பெரியவர். 'போப்பா போய் வேலையை கவனி' என முத்துராசுவை பாண்டி போகச் சொன்னார். 'அய்யா அப்படின்னா எனக்கு தண்டனை இல்லையா' என்றான் முத்துராசு. பெரியவர் மறுபடியும் சிரித்தார் 'தண்டனை அப்படிங்கிறது அவ்வளவு சாதாரணமா போச்சு அதான் பயம் இல்லாம தவறு செய்ய ஆரம்பிச்சிட்டாங்க' என்றார் பெரியவர். தப்பித்துவிட்டோம் என்று மனசு சந்தோசமானது முத்துராசுவுக்கு. 'ரொம்ப நன்றி அய்யா' என கிளம்ப இருந்தவனை 'சாப்பிட்டு போ ராசு' என்றார். முத்துராசு 'அய்யா இனிமே ஊருல ஒரு விசயம் பேசினா அதை பாதுகாப்பேன்யா' என்றான். பெரியவர் முத்துராசுவுடன் அமர்ந்து சாப்பிட்டார். வாசனுக்கு பொன்னுராஜின் கேள்விக்கு என்ன பதில் சொல்வதென்று தெரியவில்லை. எதற்காக திடீரென கேட்கிறார் எனவும் பட்டது. 'மருமகனே இந்தா சாப்பிடு எதுக்கு இன்னும் யோசனையில இருக்க வீட்டுக்குப் போய்தான் சாப்பிடனும்னு எதுவும் இருக்கா என்ன' என்றார். 'இல்லை மாமா இருக்கட்டும் உங்களுக்கே சாப்பாடு காணாது' என்றான் வாசன். 'என்ன மருமகனே கேள்விக்கும் பதில் சொல்ல மாட்ற, சாப்பிடவும் மாட்ற' என்றார் பொன்னுராஜ். 'உங்க கேள்விக்கு என்ன பதில் சொன்னா சந்தோசப்படுவீங்க' என்றான் வாசன். 'சரி' அப்படிங்கிற பதில் தான் என்றதும் வாசன் 'அப்படின்னா சரி மாமா' என்றான் வாசன்.

வாசனின் செல்பேசி அழைத்தது. 'அண்ணா சாப்பிட வீட்டுக்கு வரியா, இல்லை

தோட்டத்துக்கு சாப்பாடு கொண்டு வரனுமா, அம்மா கேட்க சொன்னாங்க' என்ற தேவியிடம் 'அம்மாவா, அம்மாகிட்ட கொடு தேவி' என்றான் வாசன். 'இல்லைண்ணா தோட்டத்துக்கு எடுத்து வரச் சொல்லவா' என்றாள் மறுபடியும், 'வேண்டாம் நானே வந்து சாப்பிட்டுக்கிறேன் அம்மாகிட்ட கொடு போனை' என்ற வாசனிடம் 'அம்மா இப்பத்தான் கடைக்கு போயிருக்காங்க' என சொல்லிவிட்டு வைத்துவிட்டாள்.

'யார் மருமகனே' என்றார் பொன்னுராஜ். 'தங்கை சாப்பாடு கொண்டு வரனுமான்னு அதிசயமா அம்மா கேட்கச் சொன்னதா சொல்றா' எனச் சிரித்தான். முத்துராசு தோட்டம் வந்து சேர்ந்தான். எல்லா கதையும் சொல்லி முடித்ததும் வாசன் சொன்னான் 'என்னதான் இருந்தாலும் நீங்க சாரங்கன் அய்யாவைப் பார்த்து அந்த வார்த்தை சொல்லி இருக்க கூடாது அண்ணே' என்றதும் ராசு கோபமானான். 'இது நிசம் வாசு, நிரூபிக்கிறேன் உன்னை எவனும் எதுவும் செய்யனும்னா என்னை எதுவும் செஞ்சாத்தான் முடியும்' என்றான் முத்துராசு. 'ரெஸ்ட் எடுக்கலாம்ல எதுக்கு இங்க அரக்க பரக்க ஓடி வந்த' என்றார் பொன்னுராஜ். 'எனக்கு வேலை செய்யலைன்னா தூக்கம் வராது, வாசு நீ வீட்டுக்குப் போ' என்றான் முத்துராசு.

வாசன் வீட்டிற்கு சென்று சாப்பிட்டுவிட்டு அம்மாவிடம் பொன்னுராஜ் கூறிய விசயம் சொன்னான். 'உனக்கு ஒண்ணும் இதில இரண்டு மனசு இல்லையே' என்றார் அம்மா. 'இல்லைமா' என்றான் வாசன். மாதவியின் காதுகளுக்கு விசயம் எட்டியது, எந்தவித சலனமும் இல்லாமல் இருந்தாள்.

நாட்கள் நகர்ந்தது. மாதவியும் தேவியும் கல்லூரிக்குக் கிளம்பினார்கள். பேருந்துக்குச் செல்லும் முன் மாதவி வாசனிடம் 'என்னை ஆசிர்வாதம் பண்ணுங்க மாமா' என்றாள். வாசன் ஆசிர்வதித்தான். 'உன்கிட்ட ஆசிர்வாதம் வாங்கினாத்தான் அவளுக்கு திருப்தி இன்னைக்கு நேத்து வந்த பழக்கமா' என்றார் பொன்னுராஜ். வாசன் கண்களோடு மனதும் நனைந்து இருந்தது.